# தாஇகளின் அழைப்பு மொழியில் இஸ்லாம்

அறபு மூலம்: அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி
தமிழில்: உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

# தாஇகளின்
## அழைப்பு மொழியில்
# இஸ்லாம்

(தெளிவடைய வேண்டும் தேய்வடையலாகாது)

அறபு மூலம்: அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி
தமிழில்: உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

**வெளியீடு**
இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
கொழும்பு, இலங்கை

▮ Book Title: Daa'yihalin Azhaipu Mozhi (Translation of 'Khithabuna Al Islami Fee Asril Awlama' (Arabic) ▮ Author: Dr. Yusuf AlQardhawi ▮ Translated by: Rasheed Hajjul Akbar ▮ Layout : M.I.M. Harees ▮ Cover Design : M.S.M. Sinan ▮ First Edition: October 2016, Muharram 1438 ▮ Published by: Sri Lanka Jama'athe Islami, 77, Sri Vajiragnana Mawatha, Colombo 00900, Sri Lanka ▮ Printed by: IPC Printing Press, 23, De Vaas Lane, Grandpass, Sri Lanka. ▮ ISBN 978-955-0787-06-7 ▮ Pages: 164+XIII ▮ Price: 250.00 SLR

▮ நூல்: தாஇகளின் அழைப்பு மொழி ▮ மூல நூல் : 'ஃகிதாபுனா அல்இஸ்லாமி ஃபீ அஸ்ரில் அவ்லமா' (அரபு) ▮ ஆசிரியர்: ஷெய்க் யூஸுப் அல்கர்ழாவி ▮ மொழிபெயர்ப்பு: உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் ▮ பக்க வடிவமைப்பு : எம்.ஐ.எம். ஹரீஸ் ▮ அட்டை வடிவமைப்பு : எம்.எஸ்.எம். ஸினான் ▮ முதற் பதிப்பு : ஒக்டோபர் 2016, முஹர்ரம் 1438 ▮ வெளியீடு: இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி, 77, ஸ்ரீவஜிரஞான மாவத்தை, கொழும்பு 00900, இலங்கை ▮ அச்சகம்: ஐபீஸீ அச்சகம், 23, டி வாஸ் ஒழுங்கை, கொழும்பு 01400, இலங்கை ▮ பக்கங்கள்: 164+XIII ▮ விலை: ரூபா 250.00 ▮ ச.த.நூ.இல: 978-955-0787-06-7

# பொருளடக்கம்


**இஸ்லாமியப் பேச்சு மொழி என்றால் என்ன?............................ 01**

**பேச்சு மொழி மாற வேண்டும் என்பதற்கு அல்குர்ஆனும் ஓர் எடுத்துக்காட்டே!........................................ 06**

**அல்குர்ஆன் வரைந்த இஸ்லாத்தின் பேச்சு நெறி........................... 10**

**இஸ்லாமியப் பேச்சு மொழியின் சிறப்புத் தன்மைகள்..................... 22**

01. அல்லாஹ்வை விசுவாசித்து மனிதனை நிராகரிக்காத மொழி........................................ 24

02. வஹியை ஈமான் கொண்டு பகுத்தறிவை மறுக்காத மொழி........................................ 30

03. ஆன்மிகத்தை வலியுறுத்தி பௌதிகத்தைப் புறக்கணிக்காத மொழி................................................ 42

04. வணக்க வழிபாடுகளை வலியுறுத்தி நற்குணங்களைப் புறக்கணிக்காத மொழி........................... 52

05. அகீதாவின் மகிமையை உயர்த்தி அன்பையும் தாராளத்தன்மையையும் மறந்து போகாத மொழி................. 60

06. உன்னதத்தின்பால் அழைத்து யதார்த்தத்தை மறந்துவிடாத மொழி................................................ 69

07. சீரியஸ்னஸின் பால் அழைத்து உல்லாசத்தை மறந்துவிடாத மொழி.................................... 75

08. சர்வதேசத் தன்மையைப் பேசி, வாழும் சூழலை மறுத்துவிடாத மொழி.................................... 81

09. பூர்வீகத்தைப் பற்றிப் பிடித்து சமகாலத்தை
மறுத்துவிடாத மொழி........................................ 90

10. நேற்றுக்குள் மூழ்கி நாளையை
மறந்துவிடாத மொழி........................................ 96

11. தீர்ப்பை இலகுபடுத்தி அழைப்பை
அழகுபடுத்தும் மொழி........................................ 105

12. மாறாத அடிப்படைகள் மீது உறுதியாக நின்ற வண்ணம்
மாறுகின்ற அனைத்திலும்
இஜ்திஹாதுக்கு அழைப்பு விடுக்கும் மொழி........................................ 114

13. அனுமதிக்கப்பட்ட போராட்டத்திற்கும் தடுக்கப்பட்ட
வன்முறைக்கும் இடையில் அழைப்பு மொழி........................................ 132

14. ஆண்களை மேன்மைப்படுத்தி
பெண்களைத் தாழ்த்தாத மொழி........................................ 143

15. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்து
பெரும்பான்மையைப் புறக்கணிக்காத மொழி........................................ 154

# முன்னுரை

இஸ்லாம் தெளிவானது; தூய்மையானது; மயக்கமற்றது என்பதில் அணுவளவும் சந்தேகமில்லை. எனினும், அதனை முன்வைப்பவர்களது பேச்சுக்கள் தெளிவின்மைகளையும் மயக்கங்களையும் தோற்றுவிக்கின்றன. அதன் காரணமாக இந்தத் தலைப்பும் அதற்கான விளக்கமும் முக்கியத்துவம் பெறுகின்றன.

எமது அழைப்பாளர்கள் இஸ்லாத்தைப் பேசிக் கொண்டே இருக்கிறார்கள். வாரம் தோறும், நாள் தோறும், மணித்தியாலம் தோறும் அவர்களது குரல்கள் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. இந்தப் பேச்சுக்களின் இறுதியில் செவிமடுப்போருக்குக் கிடைப்பது என்ன?

அழைப்பாளர்களது பேச்சுக்களால் மக்களது உள்ளங்களில் இஸ்லாம் பற்றிய தெளிவு ஏற்பட்டிருக்கின்றதா அல்லது புகை மூட்டம் போல் மயக்கம் தெளியாத ஒரு நிலை தொடருகின்றதா?

தெளிவு கிடைத்திருந்தால் முஸ்லிம் சமூகத்தின் நிலை பிரகாசமாக இருந்திருக்கும். அதில் குழப்பங்கள், மோதல்கள், முரண்பாடுகள், உட்பூசல்கள், பொறாமைகள், இஸ்லாத்தின் பெயராலேயே பிளவுகள், கழுத்தறுப்புக்கள், இழுபறிகள் என அசிங்கங்களின் பட்டியல் நீண்டிருக்காது. சில இடங்களில்... சில மட்டங்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை மகிழ்ச்சி தருகின்றன என்பது உண்மையானாலும் சமூகத்தின் பொதுவான மன நிலையில் மகிழ்ச்சி தரும் மாற்றங்கள் நிகழவில்லை என்பதே நிதர்சனம்.

மார்க்கத்தில் தெளிவா அல்லது குழப்பமா என்பதைத் தீர்மானிக் கும் முக்கியமானதொரு காரணிதான் மார்க்கத்தை முன்வைக்கும் அழைப்பாளர்களது மொழி. அழைப்பாளர்கள் எதைப் பேசுகிறார் கள்; எப்படிப் பேசுகிறார்கள்? அவர்கள் பேசும் விடயத்திற்கும் அல்லாஹ்வின் மார்க்கத்திற்கும் நெருக்கம் அதிகமா; தூரம் அதி கமா? மார்க்கத்தின் இயல்பை, குணாதிசயங்களை, சிறப்பம்சங் களை அவர்களது பேச்சுக்கள் பிரதிபலிக்கின்றனவா; அல்லது அந் நியப்படுத்துகின்றனவா? மார்க்கத்தின் நடுநிலைத்தன்மை அந்தப் பேச்சுக்களில் இழையோடியிருக்கிறதா; அல்லது கடும்போக்கும் தீவிரமும் அவற்றில் விரவி நிற்கின்றதா? இதைத்தான் இந்த நூல் ஆராய்கின்றது.

பேசும் மொழி உண்மையில் அற்புதமானது. அது அல்லாஹ் வின் அத்தாட்சிகளுள் ஒன்று என அல்லாஹ் கூறுகின்றான். உலகில் வரலாறு படைத்த கொள்கைகள், நாகரிகங்கள் ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் ஒரு மொழியின் வல்லமையும் அதன் தாக்கமும் இருந் திருக்கின்றன. இன்னும் சொன்னால், வாழ்ந்தவர்கள் மனிதர்கள் என் றால் அவர்களின் வரலாறுகள் மொழியாகத்தான் இருந்திருக்கின்றன.

எனினும், வரலாற்றில் வாழ்ந்த பல்வேறு கொள்கைகளும் நாகரி கங்களும் காலாவதியாகி விட்டன; அவற்றின் மொழிகளும் வழக் கொழிந்து விட்டன. இஸ்லாம் மட்டும் மிலேனியம் தாண்டியும் சூடு குறையாத பேசுபொருளாக உலகை வலம் வந்து கொண்டே இருகின்றது. காரணம், இஸ்லாத்திற்குப் பின்னால் அதனைத் தாங்கி நிற்கும் அற்புதமான மொழியொன்று வாழ்ந்து கொண்டிருக்கின் றது. அதன் மூலமொழி அறபாக இருப்பினும், உலகின் அனைத்து மொழிகளிலும் பேசுபொருளாக இடம் எடுத்துக் கொள்ளும் அளவு அற்புதமான கொள்கைகளையும் நடைமுறைகளையும் அது தன்ன கத்தே கொண்டிருக்கின்றது.

அதனால்தான் தினமும் அதனைப் பேசுவோர் பற்றியும் அவர் களது பேச்சுக்களது உள்ளடக்கம் மற்றும் பிரதிபலிப்புக்கள் பற்றி யும் பேச வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இஸ்லாத்தின் தன்னிகரில்லாத கொள்கைகளையும் நடைமுறை களையும் குர்ஆனும் சுன்னாவும் பேசுகின்றன. குர்ஆன் மற்றும்

சுன்னாவினது மொழித்தரத்தை... விடயதானத்தை... எளிமையை... இன்றுவரை உலகில் எவராலும் எட்டிப் பிடிக்க முடியவில்லை. அதனால் அந்த இரண்டு மூலங்களையும் வீழ்த்த முடியாது இஸ்லாத்தின் எதிரிகள் திணறுகின்றார்கள்.

எனினும், அந்தக் குர்ஆனிலிருந்தும் சுன்னாவிலிருந்தும் தங்களது பேச்சுகளுக்கு விடயதானங்களைச் சேர்க்கும் இஸ்லாமிய அழைப்பாளர்கள் குர்ஆனும் சுன்னாவும் சொல்ல விரும்புவதைச் சொல்கிறார்களா; அல்லது அவற்றோடு தங்களது உற்பத்திகளையும் கலவை செய்து தாம் விரும்பியதொரு மார்க்கத்தைப் போதிக்கிறார்களா என்பதுதான் இன்றுள்ள பிரச்சினை.

அந்தப் பிரச்சினையை அலசுகிறது இந்த நூல். அதாவது, ஒரு விடயத்தை குர்ஆனும் சுன்னாவும் எப்படிப் பார்க்கின்றன; முன்வைக்கின்றன, தாஇகள் அதனை எப்படிப் புரிந்து கொள்கிறார்கள்; முன்வைக்கிறார்கள், அதனால் இஸ்லாத்திற்கு கண்ணியமும் உயர்வும் கிடைக்கிறதா; அல்லது தாழ்வும் அபகீர்த்தியும் ஏற்படுகிறதா என்பதை இந்நூல் தெளிவுபடுத்துகிறது.

இந்த நூலைப் படிக்கின்ற தாஇகள் இஸ்லாமிய அழைப்புப் பணியில் மொழிக்குரிய இடத்தையும் பங்கையும் அந்தஸ்த்தையும் புரிந்து கொள்வார்கள் என்று நம்பலாம். அது மட்டுமல்ல, தமது மொழி இஸ்லாத்தின் விடயதானங்களை அவற்றின் இயல்பு மாறாமல் எவ்வாறு உள்ளடக்கியிருக்க வேண்டும் என்பதையும் அவற்றைப் பிரஸ்தாபிக்கும்போது செவிமடுப்போர் இஸ்லாம் குறித்துப் பெறுகின்ற விளக்கம் எப்படியிருக்க வேண்டும் என்பதையும் புரிந்து கொள்வார்கள் என்றும் கூற முடியும்.

இஸ்லாத்தின் விடயதானங்களை அவற்றின் இயல்புகளோடு உள்வாங்கி எளிமையாகவும் அறிவுபூர்வமாகவும் முன்வைக்கும் மொழியை தாஇகள் விருத்தி செய்து கொண்டால் அவர்கள் பேசும் மொழியால் உள்ளங்கள் தூய்மையாகும்; தீய குணங்கள் மறையும்... ஜாஹிலிய்ய சிந்தனைகள், மௌட்டீகங்கள் வேரறுந்து போகும்; குழப்பங்கள் தெளிவடையும்... சந்தேகங்கள் நீங்கும்; அன்பு சகோதரத்துவம் வளரும்... புரிந்துணர்வுகள் அதிகரிக்கும்... கருத்து

வேறுபாடுகள் கருத்து வேறுபாடுகளாகவே இருக்க, பிளவுகள் பிணைப்புகளாக மாறும்... இருப்பு பலப்படும்... முன்மாதிரிகள் மலரும்... இஸ்லாம் பற்றிய பிழையான புரிதல்கள் முஸ்லிம் அல்லாதவர்களைத் தவறான வழிகளில் இட்டுச் செல்லாத சூழல் உருவாகும்.

மேலே கூறப்பட்டவாறு அழைப்பாளர்கள் தங்களது அழைப்பு மொழி விடயத்தில் உரிய கவனம் செலுத்தத் தவறினால் எதிர்பார்க் கப்படும் நன்மைகள் அத்தி பூத்தாற்போன்றுதான் இருக்கும். இன் றும் நிலைமை அவ்வாறுதான் இருக்கிறது. அதனை மாற்றப் போகி றோமா அல்லது தொடரப் போகிறோமா என்பதை தாஇகளே தீர்மானிக்க வேண்டும். அந்தத் தீர்மானத்தில் அல்லாமா யூசுப் அல்கர்ழாவி அவர்கள் எழுதிய இந்நூல் நிச்சயம் பாரியதொரு தாக் கத்தை ஏற்படுத்தும் என நம்புகிறோம், இன்ஷா அல்லாஹ்.

''பூமிப் பந்து ஒரு கிராமமாகிவிட்ட யுகத்தில் எமது அழைப்பு மொழி'' என்ற மகுடம் தாங்கி எழுதப்பட்ட அல்லாமா யூஸுப் அல் கர்ழாவி அவர்களது நூலின் தமிழ் வடிவமே இப்போது உங்களது கைகளில் இருக்கிறது.

வரிவரியாக மொழிபெயர்த்து வாசகர்களின் வாசிப்புச் சுவை யைக் கெடுப்பதில் எனக்கு எப்போதுமே உடன்பாடு இருந்த தில்லை. மாறாக, விடயதானங்களை சுவைபடச் சொந்த மொழிக் குள் கொண்டுவர வேண்டும் என்பதே மொழிபெயர்ப்பில் எனது நிலைப்பாடாகும். அந்த முயற்சியையே இந்த மொழியாக்கத்திலும் நான் மேற்கொண்டுள்ளேன். விடயதானங்களை முடியுமானவரை இலகுபடுத்தி உள்ளடக்குவதில் கவனம் செலுத்தியுள்ளேன்.

இன்றைய தாஇகளின் அழைப்பு மொழியை அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி அவர்கள் இந்த நூலில் படம்பிடித்துக் காட்டும் பாணி யும் அதனை நெறிப்படுத்துவதற்கு அவர்கள் கையாண்டிருக்கும் வழிமுறையும் அற்புதமானது! அது நிச்சயம் தாஇகளின் அழைப்பு மொழியில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என்று நம்பு கின்றேன்.

அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி அவர்களின் பணிகள் அளப்பரி யவை. அவர் போன்றவர்களது வழிகாட்டல்கள் இன்றைய தஃவா

களத்தின் பாரிய இடைவெளிகளை நிரப்பவல்லன. அவற்றால் தொடர்ந்தும் பயன்பெறுகின்ற வாய்ப்பை எமக்கு அல்லாஹ் தந் தருள வேண்டும். அதேவேளை, அன்னாரின் ஆயுளை நீடித்து, பணி களுக்கு வலுவூட்டி, பயன்பெறுவோரையும் பன்மடங்காக்கி, மறு மையின் கூலிகளையும் நிறைவாக அல்லாஹ் அவருக்கு வழங்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறோம்.

இதிலுள்ள குறைகள் என்னைச் சேரும்; நிறைகள் அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி அவர்களையும் அவரை அவரது இடத்தில் அமர்த்த அருள்புரிந்த அல்லாஹ்வையும் சேரும். அல்லாஹ் எம் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக!

ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்
அமீர்,
இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
முஹர்ரம் 1438, ஒக்டோபர் 2016

## அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி அவர்களின் முன்னுரை

உலகம் ஒரு பூகோளக் கிரமமாகிவிட்ட இக்காலத்தில்... நாகரிகங்கள் சங்கமித்து அவற்றின் தனித்தன்மைகளை இழந்து நிற்கும் தருணத்தில்... அறிவியலும் தொழில்நுட்பமும் வாழ்க்கைப் போக்கைத் திசை திருப்பி விட்ட யுகத்தில்... இன்னும், முஸ்லிம்களின் சிந்தனைகளும் பேச்சு மொழியும் மாறவில்லை. அவர்கள் தாம் வாழும் யுகத்தை நோக்கி மீளவில்லை. அவர்கள் தமது சூழலையும் அதன் பிரச்சினைகளையும் புரிந்து கொள்ளவில்லை... அந்த சூழல் ஏற்றுக் கொள்ளும் விதமாக இஸ்லாத்தை முன்வைக்க அவர்களால் முடியவில்லை.

இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு முஸ்லிம் சமூகத்திற்கான வழிகாட்டல்கள் முன்வைக்கப்பட வேண்டும். முஸ்லிம்களது சிந்தனைகளிலும் அவற்றை முன்வைக்கும் மொழியிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். குறிப்பாக, முஸ்லிம்கள் மார்க்கத்தைப் பேசுகின்ற மொழி கண்டிப்பாக மாற்றத்துக்குள்ளாக வேண்டும் என்ற கோஷம் அண்மைக் காலமாக பலராலும் எழுப்பப்படுகின்றது.

இவ்வாறு கோஷம் எழுப்புபவர்கள் வேறு யாருமல்ல, தமது மார்க்கத்தில் ஆழ்ந்த பற்றும் விசுவாசமும் உடையவர்கள் தாம். அவர்கள் இன்றைய உலகுக்கு ஏற்றாற்போல் இந்த மார்க்கம் முன்வைக்கப்படவில்லையே என்ற கவலையை சுமந்தவர்கள்; அந்தக் கவலையைப் போக்க வழிதேடுபவர்கள்.

அதேநேரம், மற்றுமொரு சாராரும் மண்ணின் மேற்பரப்பில் இருக்கிறார்கள். அவர்களும் இஸ்லாம் என்ற மார்க்கத்தை இன்றைய

உலகுக்கு ஏற்றாற்போல் முன்வைக்க வேண்டும்; அந்த முன்வைப் பிலும் முன்வைக்கும் முறைகளிலும் மாற்றங்கள் கொண்டு வரப் பட வேண்டும் எனக் கருதுகிறார்கள். அவர்கள் இஸ்லாத்தின்மீது கொண்ட அன்பினால் அவ்வாறு கூறவில்லை. மாறாக, அவர்கள் ஒரு புதிய இஸ்லாத்தையே கொண்டுவர விரும்புகிறார்கள்.

அவர்கள் விரும்புவதெல்லாம், இந்தக் காலத்துக்கு அவசிய மற்றவை எனக் கருதுபவற்றை இஸ்லாத்திலிருந்து நீக்கிவிட்டு, நவீன உலகம் எதிர்பார்க்கின்ற சில புதுமைகளை அதனுள் புகுத்தி மறுசீரமைக்கப்பட்ட ஒரு இஸ்லாத்தையே! அவர்கள் உண்மையில் அமெரிக்க இஸ்லாம் ஒன்றை உலகுக்கு அறிமுகம் செய்யவே விரும்புகிறார்கள். இத்தகையவர்களும் முஸ்லிம்களின் சிந்தனை களிலும் பேச்சு மொழியிலும் மாற்றம் வேண்டும் என்கிறார்கள். மாற்றத்தை எதிர்பார்க்கும் இந்த இரு சாராரும் ஒரு பின்னணியைக் கொண்டவர்களல்லர். இரு சாராருக்குமிடையில் மலைக்கும் மடு விற்குமிடையிலான வேறுபாடு இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மேற்கின் கவர்ச்சிகளால் ஈர்க்கப்பட்டு அவர்கள் விரும்பும் ஒரு இஸ்லாத்தை உலகுக்கு அறிமுகம் செய்யும் முயற்சியில் ஈடுபட் டிருக்கின்றவர்கள் ஒரு புறமிருக்க, எமது சமூகத்திற்குள் மற்று மொரு சாரார் அதேவிதமான ஆபத்தை வேறு ஒரு வழியினூடாக வரவழைக்க முயற்சிக்கின்றனர். அவர்கள்தான் தீவிரத்தையும் கடும்போக்கையும் ஆதரிக்கும் முஸ்லிம்களாவர்.

இவர்கள் அல்லாஹ் இலகுவாக்கியதை கஷ்டப்படுத்துகிறார் கள்; அல்லாஹ் நெகிழ்வாக வைத்திருப்பவைகளை இறுக்கமாக்கு கின்றார்கள்; அல்லாஹ் மன்னித்தவற்றிற்குத் தண்டனை கொடுக் கிறார்கள்; அனைவரோடும் போரிடத் தயாராகிறார்கள்; முரண்படு கின்ற முஸ்லிமாக இருந்தாலும் சரி முரண்படாத பிற சமூகத்தவர் களாக இருப்பினும் சரி, அவர்களைத் தயவு தாட்சண்யமின்றி எதிர்க் கிறார்கள்.

இத்தகையவர்களால் முஸ்லிம் சமூகம் அனுபவிக்கும் இன்னல் கள் இஸ்லாத்தின் எதிரிகளால் அனுபவிக்கும் இன்னல்களை விடக்

குறைந்தவை அல்ல. இவர்கள் இஸ்லாத்தின் உருக்குலைந்த ஓர் உருவத்தையே உலகிற்கு எடுத்துக் காட்ட விரும்புகிறார்கள். இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாம் பற்றியும் முஸ்லிம்கள் பற்றியும் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை இவர்கள் தமது நடைமுறைகளால் உண்மைப்படுத்திக் கொண்டுமிருக்கிறார்கள்.

மேற்கின் கவர்ச்சிகளால் உந்தப்பட்டவர்கள் குர்ஆனைப் புறக்கணித்து... சுன்னாவைக் கைவிட்டு... எமது அறிவுப் பாரம்பரியங்களையும் இஸ்லாமிய உம்மத்தை காலத்திற்குக் காலம் வழிநடத்திய பேரறிஞர்கள், இமாம்கள் போன்றோரது பொக்கிஷங்களையும் காலாவதியாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்க, எமது சமூகத்தில் இருக்கும் கடும் போக்காளர்களோ, குர்ஆன்-சுன்னாவின் திறவுகோல்களுக்கே பூட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகையதொரு சூழலில் இஸ்லாமிய உம்மத்தை வழிநடத்த வேண்டிய தாஇகள் மற்றும் அறிஞர்கள் அல்லாஹ்வின் செய்திகளை (தெளிவாக) எத்தி வைத்து விட வேண்டும்; அல்லாஹ்வைத் தவிர அவர்கள் வேறு ஒருவருக்கும் அஞ்சாதிருக்க வேண்டும் *(அல்அஹ்ஸாப்: 39).*

இங்கு நாம் ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டும். கோட்பாட்டிலும் நடைமுறையிலும் இஸ்லாம் நடுநிலையானதே என்பதை இன்று முஸ்லிம் சமூகம் முன்பு இருந்ததைவிட அதிகம் உணர்ந்திருக்கிறது. இஸ்லாத்தின் நடுநிலைத் தன்மையைப் பிழையாக விளங்கி அதனை ஒரு கோழைத்தனம் என்று நேற்று நினைத்திருந்தவர்கள், இன்று அதனை இஸ்லாத்தின் ஓர் அடிப்படையாக விசுவாசித்து அதனைப் பிரசாரம் செய்யவும் முனைந்துள்ளனர், அல்ஹம்துலில்லாஹ்.

இந்நிலையில் எமது இஸ்லாமியப் பேச்சு வழக்கும் நடுநிலையானதே என்பதை நாம் உறுதிபட எடுத்துரைக்க வேண்டும். இன்றுள்ள முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது எமது கடமை என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதேவேளை, அமெரிக்கா விரும்பும் வகையில் எமது இஸ்லாமியப் பேச்சு வழக்கை நாம் மாற்ற வேண்டியதில்லை என்பதையும் நாம் உறுதியாக எடுத்துக் கூற வேண்டும்.

எங்களது இஸ்லாமியப் பரிபாஷையும் பேச்சு வழக்கும் மாற வேண்டும் என்று கோரிக்கை விடுப்பவர்கள் அவர்களது பேச்சு வழக்கை ஏன் பரிசீலனை செய்யக் கூடாது? அவர்கள் முஸ்லிம் உலகம் தொடர்பில் வெளியிடும் நச்சுக் கருத்துக்களும் அவற்றை ஊதிப் பெருப்பிக்கும் அவர்களது மீடியாக்களும் முஸ்லிம் உல கிற்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படும் அவர்களது மிலேச்சத்தனங் களும் அப்படியே இருக்கும்போது எங்களது பரிபாஷையை மாற்று மாறு கேட்கும் உரிமை அவர்களுக்கு எங்ஙனம் வரமுடியும்!

எங்களது பரிபாஷை எவ்வாறு இருக்க வேண்டும்; எவ்வாறு இருக்கக் கூடாது என்பதைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல்கள் எம்மிடம் இருக்கின்றன. அதனை நாங்கள் செய்து கொள்கிறோம். முஸ்லிம் உலகம் தொடர்பில் உங்களது பரிபாஷையும் போக்கும் நோக்கும் கபடத்தனம் நிறைந்ததாக இருப்பதை நீங்கள் முதலில் உணருங்கள். முஸ்லிம் உலகம் தொடர்பிலான உங்களது பரிபா ஷையை எந்த மனித தர்மமும் ஏற்க மாட்டாது. அதில் மாற்றம் செய்ய விரும்பாத நீங்கள் உங்களுக்கு விருப்பமான வகையில் எமது இஸ்லாமியப் பரிபாஷையை மாற்றியமைக்குமாறு கேட்க என்ன அருகதை இருக்கிறது!

எமது பரிபாஷை மனித தர்மத்தின்பாற்பட்டது. மனித தர்மத்தை உணராத எமது சமூக உறுப்பினர்களை நாங்கள் திருத்துகிறோம்; உங்களை நீங்கள் திருத்துங்கள். அதுவே உலக அமைதிக்கு வழி!

யூஸுப் அல்கர்ழாவி

# இஸ்லாமியப் பேச்சு மொழி என்றால் என்ன?

இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம்களை விளித்து... அல்லது முஸ்லிமல்லாதவர்களை விளித்து... பொதுவாக உலகை விளித்துப் பேசப்படும் அல்லது எழுதப்படும் அத்தனை விடயங்களுக்குமான மொழி அல்லது பரிபாஷை எவ்வாறிருக்க வேண்டும் என்பதையே இந்தத் தலைப்பில் நாம் அலசவுள்ளோம். பேசப்படும் விடயம் இஸ்லாத்தின் கோட்பாடுகளாக... சட்டங்களாக... வணக்க வழிபாடு களாக... பண்பாடுகளாக... வியாபாரக் கொடுக்கல்-வாங்கல் தொடர் பானதாக... நடத்தைகளாக... சிந்தனைகளாக... உபதேசங்களாக... பல்வேறு நிலைமைகள் சூழல்கள் தொடர்பான நிலைப்பாடுக ளாக... வழிகாட்டல்களாக... தனிமனித-குடும்ப-சமூக விவகாரங்க ளாக... அரசியலாக... போராட்டமாக இன்னோரன்ன விடயங்கள் எதுவாகவும் இருக்கலாம். இந்த விவகாரங்களை இஸ்லாத்துடன் இணைத்துப் பேசும்போது பேசப்படுகின்ற மொழி குறித்து நாம் தீவிர கவனம் செலுத்தியாக வேண்டும்.

சிலர் நினைப்பதுபோல ஆன்மிகத்தோடும் மறைவானவைக ளோடும் சம்பந்தப்பட்ட பேச்சுக்கள் மட்டும்தான் இஸ்லாம்; ஏனைய துறைகள், விவகாரங்கள் பற்றிய பேச்சுக்கும் இஸ்லாத் திற்கும் தொடர்பே இல்லை என்பது சுத்த அறியாமையாகும். இத் தகையவர்கள் இஸ்லாம் பற்றிய விளக்கத்திலும் சரி; அந்த விளக் கத்திற்கேற்ப தமது சூழலை அணுகுவதிலும் சரி விவகாரங்களை மேலும் கீழுமாக குழப்பிக் கொள்வார்களே தவிர, இஸ்லாத்தின் அழகை எடுத்துக் காட்ட இவர்களால் முடியவே முடியாது. இறு தியில் இவர்களது செய்கைகளுக்கு இரையாகிச் செல்வது அப் பாவி சமூகமும் அல்லாஹ்வின் மார்க்கமும்தான்.

இஸ்லாமிய மொழி அல்லது பாஷை என்பது அறபு மொழியல்ல. இஸ்லாத்தை எந்த மொழியில் பேசினாலும் அது இஸ்லாத்தின் மொழிதான். இஸ்லாத்தின் சிறப்பம்சங்களைப் பிரதிபலிக்கும் வகையில் ஒருவர் பேச வேண்டும்; எழுத வேண்டும்; உரையாட வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும். கதை, கவிதை, கட்டுரை, நாடகம் என எந்த வடிவத்தை அது பெற்றாலும் அதில் இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள் பிரதிபலிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவற்றின் மொழிகளை நாம் இஸ்லாத்தின் மொழி எனக் கூற முடியாது.

மனிதனைப் பற்றிப் பேசும்போது அவனது சிந்தனை, அறிவு, ஆன்மா, உடல் என்பவற்றில் ஒன்றைப் புறக்கணித்து ஒன்றை உயர்த்திப் பேசுவது இஸ்லாமியப் பேச்சு அல்ல.

குடும்பத்தைப் பற்றிப் பேசும்போது ஆண்களை மறந்து விட்டு பெண்களின் ஒழுக்கம், கற்பு போன்றவற்றை மட்டும் பேசுவது இஸ்லாமியப் பேச்சு அல்ல. சமூகத்தைப் பற்றிப் பேசும்போது தலைமைத்துவம், கட்டுப்பாடு, கட்டமைப்பு, அன்பு, சகோதரத்துவம், நல்ல பண்புகள், வியாபாரம் திருமணம், குடும்ப வாழ்க்கை, அரசியல் போன்றவற்றில் சிலவற்றை நல்லடக்கம் செய்து விட்டு சிலதை மட்டுமே தொடர்ந்தும் உயிர்ப்பிப்பது இஸ்லாமியப் பேச்சு அல்ல.

ஒரு பேச்சில் ஆன்மிகம்... மற்றொரு பேச்சில் சட்டம்... மற்றொன்றில் தத்துவம்... மற்றொன்றில் தஃவா... என பேசுபொருள்கள் ஒன்றுக்கொன்று வேறுபடலாம். அவ்வாறு வேறுபடும்போது ஒரு துறையை உயர்த்தி மற்றொரு துறையைத் தாழ்த்தும் வகையில் பேசுவது இஸ்லாமிய மொழியல்ல. அதேநேரம், தான் பேசாத ஒரு துறை பற்றி மற்றொருவர் பேசுவதை இஸ்லாத்திற்கு அப்பாற்பட்டதாக எவரும் கருதிவிடவும் கூடாது. இஸ்லாத்தின் உள்ளடக்கங்களில் ஒன்றைப் புறக்கணித்து ஒன்றைச் சரி காண்பது இஸ்லாமியப் பேச்சு மொழிக்குரிய சிறப்பம்சமல்ல.

**பேச்சு வழக்கு காலத்துக்குக் காலம் மாற்றம் பெறுமா?**

கோடை, மாரி, உஷ்ணம், குளிர் போன்ற காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப அணியும் ஆடைகள் மாறுவது போன்று காலத்துக்குக்

காலம் பேச்சு மொழியிலும் மாற்றம் வேண்டுமா? இஸ்லாம் என்பது காலத்தால் மாறும் ஒன்றல்லவே! அவ்வாறாயின், அதன் மொழி ஏன் மாற வேண்டும் என்று கேட்பவர்களும் இல்லாமல் இல்லை.

ஆம், இது ஓர் அறிவுத் தேடலுக்கான வினா. இதற்கான விடையில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய முதலம்சம் இஸ்லாத்தில் மாற்றம் இல்லாதவையும் உண்டு; மாற வேண்டியவையும் உண்டு என்பதாகும். இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள், பண்பாடுகள், இஜ்மாவான சட்டங்கள் என்பவற்றில் மாற்றம் கொண்டு வருவதற்கு எந்தத் தேவையுமில்லை. நாம் இங்கு கூறுவதெல்லாம், அவற்றை முன்வைக்கும் மொழியிலும் பேச்சிலும் மாற்றம் தேவை என்பதனையே.

முஸ்லிம்களுக்கு சொல்லப்பட வேண்டியவை சிலபோது முஸ்லிமல்லாதவர்களுக்குப் பொருத்தமற்றவையாக இருக்கலாம். ஒரு புதிய முஸ்லிமுக்கு சொல்லப்பட வேண்டிய விடயங்களல்ல, பிறந்த முஸ்லிமுக்கு சொல்லப்பட வேண்டியவை. ஸாலிஹான ஒரு மனிதருக்கு எடுத்துரைக்கப்படும் விடயங்கள் ஒரு பாவியின் முன்னால் பேசுவதற்குப் பொருத்தமற்றதாக இருக்கலாம். முஸ்லிம் பெரும்பான்மை சமூகத்தில் இருப்பவருக்கு சொல்லப்படும் ஒரு விடயம் முஸ்லிம் சிறுபான்மையாக இருக்கும் ஒரு சூழலுக்குப் பொருத்தமற்றதாக இருக்கலாம். பெண்களுக்குச் சொல்ல வேண்டியதை ஆண்களுக்கு எடுத்தோதி எந்தப் பயனுமில்லை. பணக்காரர்களுக்குச் சொல்ல வேண்டியதை ஏழைகளுக்கு எடுத்துரைப்பதனால் நன்மைகள் விளைய மாட்டாது. யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு சூழலில் பேசப்பட வேண்டியதை அமைதி நிலவும் ஒரு சூழலில் பேச வேண்டியதில்லை. பூகோளக் கிராமமாகிவிட்ட யுகத்தில் 18ஆம் நூற்றாண்டுக் கதைகளை மீட்டுவது அறிவுடைமையே அல்ல!

எல்லோருக்கும் எல்லாக் காலத்திலும் பேச வேண்டிய பொதுவான விடயங்கள் இஸ்லாத்தில் இருப்பது உண்மையே. எனினும், அவற்றைக் கூட ஆளறிந்து அவரின் நிலைமையறிந்து... அறிவுத் தரத்தை அறிந்து பேச வேண்டும். அவற்றோடு ஒவ்வொருவருக்கும்

வித்தியாசமாகவும் பிரத்தியேகமாகவும் பேச வேண்டியவை களும் உண்டு என்பதை இஸ்லாம் பேசுகின்றவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

'மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல்' என்ற தலைப்பில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு மாநாட்டில் ஒரு கடும் போக் காளர் எழுந்து, அவ்வாறான ஒரு கலந்துரையாடல் அவசியமில்லை; எங்களுக்கிருப்பது ஒரு மார்க்கம் மட்டுமே. அல்லாஹ்விடம் ஏற் றுக் கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் (3: 19) இருக்கும்போது மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று அவசியமற்றது எனப் பொரிந்து தள்ளினார்.

அவர் அந்த இடத்தில் பேசியது இஸ்லாமியப் பேச்சு அல்ல. அல்குர்ஆன் வேதங்களை உடையவர்களோடு மிக அழகிய முறை யில் வாதிடுமாறு கூறுகிறது (அந்நஹ்ல்: 125). வேதத்தையுடைய வர்களைப் பார்த்து உங்களது மார்க்கத்தில் நீங்கள் தீவிரப் போக்கு டையவர்களாக இருக்காதீர்கள் என்று கூறுகின்றது (5: 77). இவற் றோடு ஏனைய அனைத்து மதங்களையுடையவர்களையும் விளித்து உங்களுக்கு உங்களது மார்க்கம்; எனக்கு எனது மார்க்கம் என்றும் அல்குர்ஆன் எடுத்துரைக்கிறது. ஏனைய மதங்களின் இருப்பை குர்ஆனே அங்கீகரித்திருக்கும்போது... குர்ஆனே அவர்களோடு அழகிய முறையில் கலந்துரையாடுமாறு கூறும்போது... குர் ஆனுக்கு மாற்றமாக மற்றுமொரு குர்ஆன் வசனத்தை மேற்கோள் காட்டிப் பேசுவது எங்ஙனம் இஸ்லாமியப் பேச்சு மொழியாக இருக்க முடியும்!

இஸ்லாமியப் பேச்சு மொழி என்பது மனிதர்களைக் கவரும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அவர்களை வெருண் டோடச் செய்யும் மொழியால் எப்படி இஸ்லாத்தின் அழகை பிறருக்கு எடுத்துக் காட்ட முடியும் என்பதை இவர் போன்றவர் கள் சிந்திப்பதேயில்லை. இடப் பொருத்தம், காலப் பொருத்தம் சந்தர்ப்பப் பொருத்தம் போன்றவை இஸ்லாத்தின் சிறப்பம்சங் கள் என்பதை அறிவு குருடானதால் இவர்களைப் போன்றவர்கள் விளங்கிக் கொள்வதில்லை.

ஒரு தாஇ வளர்ந்த பாசறையைப் பொறுத்து அவரது மொழி மற்றொருவருடைய மொழியிலிருந்து வேறுபடும் என்பதில் இரு

கருத்து இல்லை. எனினும், தனது பாசறையிலும் கூட இஸ்லாத்தின் சிறப்புக் குணங்களுக்கு முரண்படாத வகையில் தனது பேச்சு மொழியைப் பயிற்றுவித்துக் கொள்வது ஒவ்வொரு தாஇயினதும் கடமையாகும்.

ஸூபி, ஸலபி, ஹதீஸ் ஆய்வாளர், தப்ஸீர் விற்பன்னர், சட்டத்துறை நிபுணர், சட்டத்துறை நிபுணர்களிலும் மத்ஹப் ஒன்றைச் சார்ந்திருப்பவர், மத்ஹப்கள் அனைத்தையுமே கற்றவர், நவீன கலைகளைக் கற்றவர், பாரம்பரிய நூல்களோடு மட்டும் தனது வாசிப்பறிவை மட்டுப்படுத்திக் கொண்டவர்... என ஒவ்வொரு வரது கற்கை முகாம்கள் வேறுபட்டாலும் இஸ்லாமியப் பேச்சு மொழியின் சிறப்பியல்புகளைப் பேணிக் கொள்வதில் அவர்கள் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

# பேச்சு மொழி மாற வேண்டும் என்பதற்கு அல்குர்ஆனும் ஓர் எடுத்துக்காட்டே!

மக்காவில் குர்ஆன் பேசிய மொழிக்கும் மதீனாவில் குர்ஆன் பேசிய மொழிக்குமிடையிலான வேறுபாடுகள் உலூமுல் குர்ஆன் எனும் குர்ஆனியக் கலைகளை கற்றவர்களுக்குத் தெரியும்.

மொழி நடை, வசன அமைப்பு, விடயதானங்கள், சுருதி போன்ற அனைத்திலும் மக்கா வசனங்கள் மதீனா வசனங்களிலிருந்து வேறு படுகின்றன.

ஏகத்துவத்தையும் அதனோடு சார்ந்த கோட்பாடுகளையும் நிறுவுதல், நபித்துவம், ரிஸாலத் என்பவற்றில் ஆழ்ந்த பற்றை ஏற்படுத்தல், மறைவானவை மீது, குறிப்பாக மறுமை வெகுமதிகள் மீது ஆழமான விசுவாசத்தை ஏற்படுத்தல், நற்செயல்கள், நற்குணங்கள் என்பவற்றின்பால் அழைத்தல், மேற்கூறப்பட்ட விடயதானங்களை மெருகூட்டும் வகையில் முன் சென்ற நபிமார்களது சமூகங்களின் வரலாறுகளை எடுத்துக் கூறுதல் போன்ற அம்சங்கள் மக்கா வசனங்களில் பரவியிருக்க...

இஸ்லாமிய சமூக அமைப்பைக் கட்டமைத்தல், அதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகம் செய்தல், யுத்தம், சமாதானம், ஒப்பந்தம், குற்றங்கள், தண்டனைகள், முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சியை கருவறுக்கும் புல்லுருவிகளான நயவஞ்சகர்கள் மற்றும் எதிரிகளின் சூழ்ச்சிகள், முஸ்லிம் சமூகத்தில் இருக்க வேண்டிய பலங்கள், இருக்கக் கூடாத பலவீனங்கள் போன்றவை மதீனா வசனங்களில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

இதன் பொருள்- யாருக்கு எந்த சூழலில் எதைப் பேச வேண்டும் என்பதை அல்லாஹ்வே கற்றுத் தருகின்றான் என்பதாகும். அதன்

மூலம் பேச்சு நாகரிகத்தையும் அல்லாஹ் எமக்குக் கற்றுத் தந்திருக் கின்றான். சில பிரயோகங்களை சில இடங்களில் முற்றாகத் தவிர்த் திருப்பதை அல்குர்ஆனில் காணும்போது, ஒவ்வொரு சொல்லுக்கும் எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஓர் அதி சயமாகவே பார்க்கத் தோன்றுகிறது. உதாரணமாக يا ايها الذين آمنوا (விசுவாசம் கொண்டவர்களே!) என்ற பிரயோகத்தை மக்காவில் ஒரு முறையேனும் அல்குர்ஆன் பயன்படுத்தவில்லை. அவ்வா றாயின், மதீனாவில் பயன்படுத்தப்பட்ட அந்த சொற்றொடருக்கு ஒரு விஷேட இடப் பொருத்தம் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மதீனாவில் ஸ்தாபிக் கப்பட்ட முஸ்லிம் சமூகத்தையே அந்தப் பிரயோகத்தினூடாக அல்லாஹ் விளித்துப் பேசுகின்றான்; மக்காவிலிருந்த ஈமானியத் தனிமனிதர்களை அல்ல.

**மார்க்கப் புனர்நிர்மாணம் (تجديد) ஒரு கடமை**

இஸ்லாத்தின் பேச்சு மொழி காலத்திற்குக் காலம் மாற வேண் டும் என்பதை வலியுறுத்தும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக பின் வரும் நபிமொழி அமைந்திருக்கிறது. **''நிச்சயமாக அல்லாஹ் ஒவ் வொரு நூறு வருடங்களுக்கொரு முறை இந்த உம்மத்தின் மார்க் கத்தை அதற்குப் புத்தாக்கம் (புனர்நிர்மாணம்) செய்து கொடுப்ப வர்களை அனுப்புவான்.'' (அபூதாவூத், அல்ஹாகிம், அல்பைஹகி)**

அல்லாஹ்வின் மார்க்கம் புத்தாக்கம் செய்வதற்குரியதல்ல; அது என்றுமே மாறாத தன்மை கொண்டது என்ற ரீதியில் இந்த நபி மொழியை மறுப்பவர்கள் இருக்கிறார்கள். இது முறையான கார ணியல்ல. மார்க்கத்தைப் புத்தாக்கம் செய்தல் என்றால் ஒரு புதிய குர்ஆனை அச்சிடுதல் என்று பொருளா?

இந்த நபிமொழி எமது மார்க்கத்தின் சிறப்பம்சம் ஒன்று பற்றிய ஓர் அற்புதமான விளக்கத்தைத் தருகிறது. இஸ்லாத்தில் என்றும் மாறாத 'ஸவாபித்' (ثوابت) எனும் நிலையானவை உண்டு. அகீதா எனும் கோட்பாடுகள், இபாதா எனும் வணக்க வழிபாடுகள், அஹ்லாக் எனும் நல்ல-தீய குணங்கள், தீர்க்கமாக முடிவு செய் யப்பட்ட சட்டங்கள் போன்றவற்றில் புத்தாக்கம் அவசியமில்லை. மாறாக, அவற்றை முன்வைக்கும் மொழியில் காலத்துக்குக் காலம் மாற்றம் தேவைப்படலாம்.

அதேநேரம், காலத்தால் மாற்றமடைகின்ற கிளையம்சங்களும் இஸ்லாத்தில் இருக்கின்றன. அவற்றையே இஜ்திஹாதிற்குரியவை என இஸ்லாமிய சட்டவாக்கத்துறை எமக்குக் கற்றுத் தருகின்றது. இஜ்திஹாத் என்பதன் பொருள் குர்ஆன், சுன்னாவின் அடிப்படைகளுக்கு முரண்படாமல் அவ்வக்கால புதிய பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய மூலாதாரங்களின் துணையுடன் தீர்வுகளைக் கண்டறிதலாகும்.

இஸ்லாமிய சட்டத்துறையில் இவ்வாறு இஜ்திஹாதுக்கு உட்பட்ட அம்சங்கள் எமது அறிவுப் பாரம்பரியங்களை நிறைத்திருக்கின்றன. இன்றும் இதேபோன்று இஜ்திஹாத் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு புதிய பிரச்சினைகள் எமக்கு முன்னால் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகள் எமது முன்னோர்களின் காலத்தில் இருக்கவில்லை. சட்டத்துறை, மருத்துவத்துறை மற்றும் அரசியல், பொருளியல் துறைகள் போன்ற இன்னோரன்னவற்றில் பல்வேறு புதிய பிரச்சினைகளை எதிர்கொண்ட வண்ணம் எமது புதிய சந்ததிகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர்களை அவர்களது மார்க்கத்தில் ஸ்திரப்படுத்துவதானால், அவர்கள் எதிர்கொள்ளும் நவீன பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை இஸ்லாம் முன்வைக்கிறது என்பதை அவர்கள் நம்ப வேண்டும். அப்போது இஸ்லாத்தின் மீதான அவர்களது பற்று அதிகரிக்கும். எனவே, அவர்களால் புறமொதுக்க முடியாத இத்தகைய பிரச்சினைகள் குறித்த இஸ்லாமியத் தீர்வுகளை புதிய ஆய்வுகள் (இஜ்திஹாத்கள்) மூலம் முன்வைக்க வேண்டிய கடமை இன்றைய அறிஞர்களுக்கு இருக்கின்றது.

### சமகால இஸ்லாமிய எழுச்சியை நெறிப்படுத்தல்

இந்த நோக்கத்தை கருத்தில் கொண்டு பல்வேறு நூல்களை நான் எழுதியிருக்கின்றேன் (என அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி அவர்கள் கூறுகின்றார்கள்).

அவற்றுள் முக்கியமானது 'இஸ்லாமிய எழுச்சி அதன் கட்டிளமைப் பருவத்திலிருந்து முதிர்ச்சியை நோக்கி' என்ற நூலாகும். கட்டிளமைப் பருவத்துக்குரிய கற்பனைகள், கனவுகள், வேகங்கள், துடிப்புகள் என்பவற்றிலிருந்து முதிர்ச்சியைப் பிரதிபலிக்கும்

ஆய்ந்தறிதல், நிதானம், அமைதி என்பவற்றின்பால் நவீன இஸ்லாமிய எழுச்சியை வழிநடத்தும் பத்து விஷேட வழிகாட்டல் தத்துவங்களை அதில் நான் விளக்கியுள்ளேன்.

1. வெளிப்படைகளிலிருந்து வேர்களை நோக்கி
2. பேச்சிலிருந்து செயலின் பக்கம்
3. உணர்ச்சிப் பிரவாகத்திலிருந்து அறிவுடமைக்கு
4. கிளைகளிலிருந்து அடிப்படைகளின் பக்கம்
5. சிரமப்படுத்தல், ஓடவைத்தல் என்பவற்றிலிருந்து இலகுபடுத்தல், உற்சாகமூட்டல் என்பவற்றின்பால்
6. கண்மூடித்தனத்திலிருந்து இஜ்திஹாதை நோக்கி
7. அடைபட்டுக் கிடக்கச் செய்யும் வெறிகளிலிருந்து திறந்த மனங்களை உருவாக்கும் தாராளத் தன்மையின் பால்
8. தீவிரவாதத்திலிருந்து நடுநிலையின் பக்கம்
9. வன்முறைகள், பழிவாங்கல் போன்றவற்றிலிருந்து மென்மை, கருணை என்பவற்றிற்கு...
10. பிளவுபட்டுச் சீரழிவதிலிருந்து இணங்கி ஒத்துழைப்பதன்பால்...

---

(இஸ்லாமிய எழுச்சியை நெறிப்படுத்தும் இந்த வழிகாட்டல்களை அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி அவர்கள் குறிப்பிட்ட அந்த நூலில் குர்ஆன், சுன்னா மற்றும் வரலாறு என்பவற்றினூடாக அழகுறத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அந்த நூலும் இந்த நூலோடு இணைத்து வாசிக்கப்பட வேண்டும். இஸ்லாமியப் பேச்சு மொழியை நெறிப்படுத்துவதில் இந்த இரண்டு நூல்களும் ஒன்று மற்றொன்றுக்குப் பக்க பலமாக இருக்கின்றன. (மொழி பெயர்ப்பாளர்)

# அல்குர்ஆன் வரைந்த இஸ்லாத்தின் பேச்சு நெறி

பின்வரும் இரண்டு அல்குர்ஆனிய வசனங்கள் இஸ்லாத்தின் பேச்சு நெறியை முழுமையாக வரைந்து காட்டுகின்றன:

*1. நபியே! உமதிரட்சகனின் பாதை நோக்கி அறிவுபூர்வமாகவும் அழகிய உபதேசம் கொண்டும் அழைப்பு விடுப்பீராக! மேலும் அவர்களுடன் மிக மிக அழகான (வார்த்தை நாகரிக) முறைமைகள் கொண்டு வாதிடுவீராக. (16: 125)*

*2. நபியே! கூறுங்கள். இதுவே எனது பாதை (இப்பாதையில்) நானும் என்னைப் பின்பற்றியவர்களும் (தூர நோக்கு மிக்க) அகப் பார்வையுடன் அல்லாஹ்வின் பால் அழைக்கிறோம்... (12: 108)*

1. அறிவுபூர்வமான அழைப்பு (ஹிக்மா)
2. அழகிய உபதேசம் (அல்மவ்இழதுல் ஹஸனா)
3. மிக அழகான வார்த்தை நாகரிகம் (பில்லதி ஹிய அஹ்ஸன்)
4. அகப்பார்வையோடு கூடிய விளக்கம் (பஸீரத்)

ஆகிய அனைத்தும் உள்ளடங்கலான அழகிய மொழியின் மூலம் அல்லாஹ்வின்பால் அழைப்பு விடுப்பதனையே மேற்குறித்த வசனங்கள் விளக்கியிருக்கின்றன. இவற்றோடு அந்த மொழிக்குத் தேவையான மற்றோர் அம்சத்தையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

*''நீங்கள் இலகுபடுத்துபவர்களாகவே அனுப்பப்பட்டுள்ளீர்கள்; சிரமப்படுத்துபவர்களாக அனுப்பப்படவில்லை.'' (அல்புகாரி)*

அதாவது, நீங்கள் முன்வைக்கும் மார்க்கம் மக்களை கவரக் கூடியதாகவும் அவர்களது விவகாரங்களை இலகுபடுத்துவதாகவும் இருக்க வேண்டும். நீங்கள் அமர்த்தப்பட்டுள்ள பணி மக்களை வெருண்டோட வைப்பதல்ல.

இத்தகைய நோக்கங்கள் அனைத்தையும் அடையும் விதமாகப் பணி செய்வதற்கு பிரதான ஊட்டச்சத்தை வழங்குவதுதான் நாம் பேசும் மொழியாகும். மனிதனைப் படைத்து அவனுக்குப் பேசக் கற்றுக் கொடுத்த ரஹ்மான் அந்தப் பேச்சால் அவனது மார்க்கம் அசிங்கப்பட்டுப் போவதை எப்படி விரும்புவான்?

## இஸ்லாமியப் பேச்சு மொழியின் சிறப்பம்சங்கள்

### 1. அல்லாஹ்வின்பால் அழைத்தல்

அழைப்பாளர்கள் அனைவரும் ஒரே விதமாகப் பேச வேண்டும் அல்லது எழுத வேண்டும் என்பது இஸ்லாத்தின் எதிர்பார்ப்பல்ல. ஒவ்வொருவரும் தமது திறமைகள், ஆற்றல்களுக்கேற்ப தமது பேச்சு வடிவத்தைத் தீர்மானிக்கலாம். வகுப்பு நடத்துதல், விரிவுரை செய்தல், கலந்துரையாடுதல், விவாதித்தல், காட்சிப்படுத்தல், புத்தகம் எழுதுதல் என அழைப்பு முயற்சிகள் வேறுபடலாம்.

எனினும், அல்லாஹ்வின்பால் அழைத்தல் என்ற அம்சம் அனைத்திலும் பிரதிபலிக்க வேண்டும். சிலரது பேச்சுக்கள் இந்தத் தன்மையை இழக்கின்றன. அவர்களது பேச்சிலிருக்கின்ற தூய்மையற்ற தன்மைகள் காரணமாக அவர்கள் அவர்களை நோக்கியே மக்களை அழைக்கிறார்கள். தங்களை மேன்மைப்படுத்தி மக்களைப் பாவிகள் போல் சித்திரித்து சிலரை நரகத்திற்கும் சிலரை சுவர்க்கத்திற்கும் அனுப்புகின்ற தொனியில் பெருமையாகப் பேசுகின்றபோது அந்த அழைப்பு எங்ஙனம் அல்லாஹ்வை நோக்கியதாக இருக்க முடியும்! (அத்ஊ இலல்லாஹ்) நான் அல்லாஹ்வின்பால் அழைக்கிறேன் என்ற உண்மையை மறந்து விட்டவர்கள்தான் இவ்வாறு தடம் புரளுகின்றனர்.

**''வேதத்தையும் ஞானத்தையும் நபித்துவத்தையும் அல்லாஹ் கொடுத்திருந்த நிலையில் ஒரு மனிதன் மக்களை நோக்கி (என்னை வணங்குங்கள்) எனது அடியார்களாக இருங்கள் என்று (எவ்வாறு**

கூற முடியும்? அவ்வாறு அக்கிரமமாக ஒருவர்) கூறுவதற்கில்லை'' (2:79) என இந்த அநியாயத்தை அல்லாஹ் சுட்டிக் காட்டியிருப் பதும் இங்கு நோக்கத்தக்கது.

### 2. அறிவுடைமை நிறைந்த அழைப்பு

இஸ்லாமியப் பேச்சு மொழியின் அடுத்த சிறப்பம்சம் அது அறிவுடைமைமிக்கதாக இருப்பதாகும். மனிதனது பகுத்தறிவு ஏற்றுக் கொள்ளத்தக்க ஆதாரங்கள், தர்க்கங்கள், நிறுவல்கள் அதில் காணப் படும். சந்தேகங்களைத் தீர்த்து... நன்மை தீமைகளைத் துல்லிய மாக வேறுபடுத்தி... அடிப்படைகளையும் கிளையம்சங்களையும் குழப்பிக் கொள்ளாமல்... மக்கள் புரியும் பாஷையில் எளிமையாக விளக்கும் பாணியை அந்தப் பேச்சு மொழி உள்ளடக்கியிருக்கும்.

அறிவுடைமையில் கவனிக்க வேண்டிய மற்றோர் அம்சம், மக்களுடன் அவர்களது பாஷையில் பேசுவதாகும். சீனர்களுடன் சீன மொழியிலும் ஜப்பானியர்களுடன் ஜப்பானிய மொழியிலும் பேசுவது மட்டுமல்ல இதன் பொருள். மாறாக, படித்தவர்களுடன் படித்தவர்களது பாஷையிலும் பாமரர்களுடன் அவர்களது பாஷை யிலும் மேற்கத்தேயர்களோடு அவர்களது பாஷையிலும் பேசுவதன் அவசியத்தையே இது வலியுறுத்துகின்றது.

அறிவுடைமை சார்ந்த மற்றொரு விடயம், மனிதர்களை மென் மையாக அணுகி அவர்களது சிந்தனைக்கு மார்க்கத்தை சிரமமற்ற தாக முன்வைப்பதாகும். அல்லாஹ்வுடைய மார்க்கம் இலகுவா னது என்ற சிறப்பம்சத்தை விளங்கிக் கொள்ளாதவர்களால் இந்த அணுகுமுறையைப் பின்பற்றுவது எளிதல்ல. அவர்கள் கடுமை யான அணுகுமுறையைப் பின்பற்றவே செய்வார்கள்.

செயல்களின் தராதரங்கள், அந்தஸ்த்துகள் போன்றவற்றை சரி யாக மட்டிடுவதும் அறிவுடைமையைச் சாரும். சிறியதைப் பெரிய தாக்கி, முக்கியமற்றதைப் பெரிதுபடுத்தி, முற்படுத்த வேண்டிய தைப் பிற்படுத்தி, பாரதூரமானதை பரிகாசத்திற்குள்ளாக்குவது இஸ்லாமியப் பேச்சு மொழியை அசிங்கப்படுத்தும் அவலட்சணங் களாகும். ஏவல்களிடையே பல்வேறு தராதரங்கள் இருக்கின்றன. விலக்கல்களிலும் அவ்வாறே தராதரங்கள் வேறுபடுகின்றன.

ஒவ்வொன்றுக்கும் அதன் இடத்தை வழங்குவதும் இஸ்லாமியப் பேச்சு மொழியில் கவனிக்க வேண்டிய அறிவுடைமையே.

எம்மில் சிலர் அடிப்படைகளான உஸூல்களுக்குக் கொடுக்காத முக்கியத்துவத்தை கிளை அம்சங்களுக்கு வழங்குகிறார்கள். மக்கள் பர்ளுகளைப் புறக்கணிக்கின்ற வேளையில் நபில்களை செய்வதற்கு ஆர்வமூட்டுகின்றார்கள்; உடன்பாடான விடயங்கள் ஆயிரம் இருக்க, கருத்து வேறுபாடான விடயங்களில் மும்முரத்தை வளர்க்கிறார்கள்.

இன்றைய தாஇகளின் பேச்சு மொழி இஸ்லாத்தை உருக்குலைத்து சின்னாபின்னப்படுத்தியிருக்கிறது என்பதை கவலையுடன் தெரிவித்தேயாக வேண்டும். இஸ்லாத்தின் அழகை அசிங்கப்படுத்தும் இத்தகைய பேச்சு மொழிகளால் இஸ்லாம் மாசுபடுத்தப்படுகிறதே தவிர தூய்மைப்படுத்தப்படுவதில்லை.

3. அறிவுடைமை சார்ந்த இஸ்லாமியப் பேச்சு மொழியின் மற்றுமோர் அம்சம் அழைப்புப் பணியில் படிமுறையைப் பேணுவதாகும். எங்கிருந்து துவங்கி எந்தக் கட்டங்களைக் கடந்து எதன்பால் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதை அறிந்த நிலையில் தாஇகள் இஸ்லாம் பேச வேண்டும்.

'குன்' என்ற வார்த்தையால் தான் நாடியதை சாதிக்கும் வல்லமை படைத்தவன் அல்லாஹ் என்பதை நாம் ஈமான் கொண்டிருக்கிறோம். அவ்வாறிருந்தும், நாம் எம்மைச் சூழ இருக்கும் வானம் பூமியில் காண்பவை அனைத்தையும் அல்லாஹ் படிமுறைத் தத்துவத்திற்கு ஏற்பவே சிருஷ்டித்திருக்கிறான் என்பதை நாம் உணர வேண்டும். ஸாலிஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது ஒட்டகம் போல, மூஸா (அலைஹிஸ்ஸலாம்) ஓட வைத்த பாம்பைப்போல திடீரென உருவானவற்றை இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காண்பதற்கில்லை.

---

'பிக்ஹுல் அவ்லவிய்யாத்' எனும் முன்னுரிமைகள் பற்றிய விளக்கம், 'இறை மறுப்புக்கும் தீவிரவாதத்திற்குமிடையில் இஸ்லாமிய எழுச்சி' ஆகிய அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி அவர்களின் நூற்கள் இந்தத் தலைப்புகளை விரிவாக ஆராய்கின்றன. (மொழி பெயர்ப்பாளர்)

ஒரு குழந்தை படிமுறைகளைத் தாண்டி பத்து மாதங்கள் கரு வறையில் வளர்ச்சியடைகின்றது. ஒரு மரம் வளர்ந்து கனி தருவ தற்கு பல்லாண்டுகள் செல்கின்றன. இஸ்லாம் என்ற பயிரும் உல கில் விதைத்த உடனே விருட்சமாகி கனி தந்து விடாது என்பதை தாஇகள் உணர்ந்திருக்க வேண்டும். மிம்பரில் ஏறும் ஓர் ஆலிம் சமூகத்தைத் திருத்திவிட்டே இறங்குவேன் என்பது போன்ற தொனியில் பேசும்போது அந்தப் பேச்சு படிமுறைத் தத்துவத்தைப் புறக்கணிக்கின்றது. அதனால் இஸ்லாம் அசிங்கப்படுத்தப்படுகிறது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் 23 வருடம் செய்த இஸ்லாமியப் பணி இந்தப் படிமுறைத் தத்துவத்தையே பிரதிபலிக்கின்றது. அதனைப் படிக்காதவர்கள் இஸ்லாம் பேசாம லிருப்பதே நல்லது.

ஆடையிலிருந்து... தாடியிலிருந்து... குனூத்திலிருந்து... கருத்து வேறுபாடுகளுக்கு உரியவற்றிலிருந்து... இஸ்லாமியப் பணியை ஆரம்பிப்பவர்களது பேச்சு மொழி இஸ்லாத்தின் மகிமையை மங்கச் செய்யுமே தவிர, மேலோங்கச் செய்ய மாட்டாது.

முஸ்லிம் உம்மத்தின் மத்தியில் இத்தகையவர்கள் உருவாகி இஸ்லாத்தின் மகிமையை அவர்களே மங்கச் செய்ய வேண்டும் என்பதில் இஸ்லாத்தின் எதிரிகள் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். எனினும், இந்த உண்மை எமது சமூகத்தில் அழைப்பாளர்களுக்கு விளங்காதிருக்கின்றமை கவலையானதே.

4. இஸ்லாமியப் பேச்சு மொழியின் நான்காவது சிறப்பம்சம் அழகிய உபதேசமாகும். அறிவுபூர்வமான பேச்சு மனிதனது சிந் தனா சக்தியை விழிப்படையச் செய்யும்போது அழகிய உபதேசம் மனிதனது உள்ளத்தையும் உணர்வுகளையும் தட்டியெழுப்புகின் றது. அறிவும் உணர்வும் மனிதனின் இரண்டு அகக் கண்கள் ஆகும். அவை இரண்டும் சரியாகத் தொழிற்படும்போது மனிதன் நேரிய வழியில் செல்கிறான். அவை இரண்டில் எதனைப் புறக்கணித் தாலும் குருட்டுத் தன்மையால் மனிதன் பாதிக்கப்படுகின்ற வாய்ப்புண்டு. அல்லாஹ் கூறுகின்றான்:

**''நிச்சயமாக பார்வைகள் குருடாவதில்லை; நெஞ்சங்களில் இருக்கின்ற இதயங்களே குருடாகின்றன.'' (22: 46)**

அறிவோடு அழைப்பு விடுக்க வேண்டும் என்று கூறுகின்ற குர்ஆன், ஹிக்மா என்ற ஒற்றைச் சொல்லினால் அதனைச் சுட்டிக் காட்டியிருக்கிறது. எனினும், உபதேசத்தை அவ்வாறு குறிப்பிடாமல் 'அழகிய' என்ற அடைமொழியையும் இணைத்துக் கூறியிருக்கிறது. காரணம், அறிவுக்கு அடைமொழி அவசியமில்லை. எனினும், உபதேசம் அனைத்தும் உபதேசம் அல்ல; அழகானதாக இருந்தாலே அன்றி.

உபதேசம் எப்போது அழகாக இருக்கும்?

❖ பேசப்படுகின்ற மக்களுக்குப் பொருத்தமான விடயதானமாக இருந்தால்...

❖ அவர்கள் விளங்கும் வகையில் எளிமையான மொழியாக இருந்தால்...

❖ நேரத்திற்கும் இடத்திற்கும் பொருத்தமாக இருந்தால்...

❖ கேட்போரைத் தூங்க வைக்காமல் இதயங்களைத் தட்டி எழுப்புமாக இருந்தால்...

❖ மனிதனது பலவீனங்களை உணர்ந்து அவன் மீது அன்பு காட்டி அவனது தவறுகளை விட்டு அவனைக் கைதூக்கி விடுமாக இருந்தால்...

❖ அச்சமூட்டுவதிலும் ஆர்வமூட்டுவதிலும் குர்ஆன் சுன்னாவினது நடுநிலைப் போக்கைப் பிரதிபலிக்குமாக இருந்தால்...

❖ இழுபறிகளையும் பிணக்குகளையும் ஊக்குவிக்காமல் இணக்கப்பாட்டையும் அன்பு சகோதரத்துவத்தையும் வளர்க்குமாக இருந்தால்...

எனினும், இன்றைய பேச்சுக்களில் அழகிய உபதேசத்திற்குரிய இந்தத் தன்மைகள் பிரதிபலிப்பது மிகவும் குறைவாகவே இருக்கின்றன. ஆதாரமில்லாத கதைகள், அளவுக்கு அதிகமான பயமுறுத்தல்கள், பாவங்களுக்கு எதிரான கடும் சாடல்கள், நுணுக்கங்களை எடுத்துக் காட்டாத நுனிப்புல் மேய்ச்சல்கள், அறிவியல் தொழில்நுட்ப யுகத்தின் தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத பாமரத் தனம், மகாஸிதுஷ் ஷரீஆ எனும் ஷரீஆவின் நோக்கங்களுக்கு முரணான விளக்கங்கள், சமகாலத்தோடு பொருந்திப்போகாத, எதிர்காலம்

பற்றி எதிர்வு கூறாத, இறந்த காலங்களின் படிப்பினைகளை எடுத்துக் காட்டாத சொற்சமர்கள் போன்றவையே இன்றைய அதிகமான பேச்சுக்களை அலங்கரிக்கின்றன.

மக்கள் விழிப்படையாமல்... அதிகம் சிந்திக்காமல்... அறிவு ஆராய்ச்சிகளில் ஈடுபடாமல்... கேள்விகள் கேட்டு விளக்கம் பெறுவதற்கு அவகாசம் கொடுக்கப்படாமல்... ஒரே சாராரின் ஒரே வகையான பேச்சுக்களை மட்டுமே செவிமடுப்பதற்கு அவர்கள் பழக்கி வைக்கப்பட்டிருப்பதால் உபதேசங்கள் அழகிழந்து, அழுகிப் போயிருப்பது மக்களுக்கும் புரிவதில்லை; தாஇகளும் தங்களது உபசேங்களை அழகிய உபதேசங்களாக மாற்றுவதற்கு அதிகம் சிரமப்பட்டுக் கொள்வதுமில்லை.

5. இஸ்லாமியப் பேச்சு மொழியின் அடுத்த சிறப்பம்சம் முரண்படுபவர்களோடு அழகிய விவாதம் செய்தலாகும். இதற்கு முன் உபதேசம் பற்றிக் குறிப்பிட்ட குர்ஆன், அது அழகான உபதேசமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியதைக் கண்டோம். அதனை அடுத்து, விவாதம் பற்றிக் குறிப்பிடுகையில் ஒரு படி மேலே சென்று மிக அழகிய விவாதம் செய்யுங்கள் என்று கூறியிருப்பதைப் பார்க்கின்றோம். விவாதம் எனறு வந்து விட்டால் அது அழகானதாக இருப்பது கூடப் போதாது; மிக மிக அழகானதாக இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது அல்குர்ஆன்.

முரண்பட்டவர்களோடுதான் வழமையில் விவாதம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இந்நிலையில் முரண்பாடு இன்னும் அதிகரித்து இடைவெளி விரிந்து விடாமல் இருப்பதற்கும் முன்பிருந்ததை விட உள்ளங்கள் இணங்கி நெருங்குவதற்குமான

ஒரு தாஇ தனது அறிவுப் பின்னணிகளை பல கோணங்களில் வளர்த்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார். இது பற்றி அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி அவர்களது 'ஸகாபதுத் தாஇயா' (இஸ்லாமியக் கல்வி) எனும் நூல் தெளிவானதொரு விளக்கத்தை முன்வைத்திருக்கிறது. ஆறு வகையான அறிவுப் பின்னணிகளை ஒரு தாஇ கொண்டிருக்க வேண்டும் என அந்நூலில் அவர் குறிப்பிடுகிறார். மார்க்கம், மொழி, வரலாறு, மனிதவியல் (உளவியல்), விஞ்ஞானம், தற்கால உலகம் என்பனவே அந்த ஆறுமாகும். இது போன்ற அறிவுப் பின்னணிகளைக் கொண்டிராதவர்களுக்கு அழகிய உபதேசம் சரிப்பட்டு வராது. (மொழி பெயர்ப்பாளர்)

வழியையே அல்லாஹ் எமக்கு இங்கு சுட்டிக் காட்டியுள்ளான். அதுதான் மிக மிக அழகிய விவாதமாகும்.

அவ்வாறாயின், மிக மிகக் கவர்ச்சியான சொற்கள், உள்ளத்தைக் கவரும் வார்த்தைப் பிரயோகங்கள், உணர்வுகளை மதிக்கும் மறுப்புக்கள், அன்பை வெளிப்படுத்தும் அடைமொழிகள் போன்றன இல்லாமல் விவாதம் நடைபெறவே கூடாது என்பதையே அல்குர்ஆன் அழுத்திக் கூறியிருக்கிறது. ஆம், இத்தகைய அழகிய விவாதம் பகைவர்களையும் நண்பர்களாக்கிவிடும் அளவு நிச்சயம் கவர்ச்சியானதாக இருக்கும் என அல்குர்ஆன் மற்றுமோர் இடத்தில் கூறுகின்றது.

**''மிக அழகிய முறையில் மறுப்புக் கூறுங்கள். அப்போது யாருடன் உங்களுக்குப் பகைமை இருந்ததோ அவர் (உங்களது) உற்ற நண்பன் போலாகி விடுவார்.''** *(41: 34)*

விவாதத்தில் இரு தரப்புக்குமிடையிலான உடன்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். முரண்பாடுகளின் எல்லை சுருக்கப்பட்டு பூதாகரமாக அவற்றை சித்திரிக்கும் நிலை தவிர்க்கப்பட வேண்டும் என்பதையே மறைமுகமாக இந்த வசனம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

வேதத்தையுடையவர்களோடு மிக அழகிய முறையிலன்றி விவாதம் செய்யவே வேண்டாம் எனக் கட்டளையிட்டிருக்கின்ற *(29: 46)* வசனம் இரு சாராருக்குமிடையில் உள்ள உடன்பாடுகளைக் கூறுமாறு வலியுறுத்துகின்றது. **''கூறுங்கள்... உங்களுக்கு இறக்கப்பட்டதையும் எங்களுக்கு இறக்கப்பட்டதையும் நாங்கள் ஈமான் கொள்கிறோம். எங்களதும் உங்களதும் இரட்சகன் ஒருவனே நாங்கள் அவனுக்கே கட்டுப்படுகிறோம்''** என்று அந்த வசனம் முடிவடைந்திருக்கிறது.

ஆக, எதிர் விவாதம் புரிகின்றவர்கள் தமது மானமும் கண்ணியமும் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உணரும் வகையில் விவாதம் இடம்பெற வேண்டும். தங்களை வெற்றி பெறச் செய்து ஏனையவர்களை வாயடைக்கச் செய்யும் நோக்கில் விவாதம் நடைபெறவில்லை. மாறாக, உண்மையை வெளிக் கொணரும் இங்கிதமான

அணுகுமுறையே விவாதத்தில் மேலோங்கியிருக்கிறது என்பதை அவர்கள் உணர வேண்டும். அப்போதுதான் பகைவர்கள் நண்பர்களாக மாறுவார்கள்.

எனினும், இன்றோ நண்பர்களையும் பகைவர்களாக்கும் வகையிலேயே தாஇகள் பேசக் கற்றிருக்கிறார்கள். இங்கிதம் அறியாமல் கடும் சுபாவத்தோடு வீர வசனங்கள் பேசுவதை அவர்கள் ஒரு தஃவா கலை என நினைக்கிறார்கள். அதன் மூலம் தங்களை அஞ்சா நெஞ்சம் கொண்ட துணிகரமான போராளிகள் எனத் தப்புக் கணக்குப் போடுகிறார்கள். பிறரைத் தலைகுனிய வைப்பதை தஃவாவுக்குக் கிடைத்த மகத்தானதொரு வெற்றியாகப் பார்க்கிறார்கள்.

அல்குர்ஆனின் நேரிய வழிகாட்டலை விட்டு நெறி பிறழ்ந்த இதுபோன்ற சிந்தனைகளுக்கு இன்று பெரு வரவேற்புக் கிடைத்திருப்பது கவலையானதே.

**பிரார்த்தனை மொழி**

இஸ்லாமியப் பேச்சு மொழியில் முஸ்லிம்களது பிரார்த்தனை மொழியையும் நாம் அலட்சியம் செய்ய முடியாது. சிலபோது நாம் செய்யும் பிரார்த்தனைகள் இஸ்லாத்தின் மாண்புகளைப் பேணுவதாக இல்லை.

சிலர் பிரார்த்தனை செய்யும்போது யூதர்கள், கிறிஸ்தவர்கள் அனைவரையும் அழித்து விடுமாறு கேட்கிறார்கள். அவர்களது குழந்தைகளை அநாதையாக்கி, அவர்களது பெண்களை விதவையாக்குமாறு இவர்கள் கேட்பது போன்ற பிரார்த்தனைகளை குர்ஆனிலோ சுன்னாவிலோ நாம் காணவில்லை. மாறாக, பொறுமையைத் தருமாறும் எமது பாதங்களை ஸ்திரப்படுத்துமாறும் எதிரிகளுக்கெதிராக எமக்கு உதவி செய்யுமாறும் அநியாயக்காரர்களின் சோதனைகளுக்கு ஆளாக்காதிருக்குமாறும் எதிரிகளிடமிருந்து பாதுகாக்குமாறும் கேட்கப்படுகின்ற பிரார்த்தனைகளையே அல்லாஹ் கற்றுத் தருகிறான். *(2: 250, 10: 85-86)*

நபிகளாரின் பிரார்த்தனைகளும் நாங்கள் கேட்பது போல் இருக்கவில்லை. மாறாக "**வேதத்தை இறக்கியவனே, மேகத்தை ஓட்டுபவனே, படைகளைத் தோற்கடிப்பவனே, அவர்களைத் தோற்கடித்து**

எமக்கு உதவி செய்வாயாக! மேலும் அவர்கள் மீது நாங்கள் உன்னைச் சாட்டுகிறோம். அவர்களது தீங்குகளிலிருந்து எம்மைப் பாதுகாப்பாயாக!''

என்று தம்மோடு போராட வருகின்ற, தம்மை அழிக்க விரும்பு கின்ற அணிகளை மட்டும் குறிப்பிட்டதாக அல்லாஹ்வின் தூதருடைய பிரார்த்தனைகள் இருந்ததைப் பார்க்கிறோம்.

**மாற வேண்டிய சொற் பிரயோகங்கள்**

இஸ்லாத்தின் பேச்சு மொழியில் கவனம் செலுத்த வேண்டிய மற்றுமோர் அம்சம் எமது பிரயோகங்களாகும். 'காபிர்கள்' என்ற பிரயோகத்திற்குப் பதிலாக முஸ்லிமல்லாதவர்கள் என்ற சொல்லை நாம் பயன்படுத்த வேண்டும்.

அல்குர்ஆன் இரண்டு இடங்களில் மட்டுமே நிராகரிப்பாளர் களைப் பார்த்து ''காபிர்களே!'' என்று விளித்திருக்கிறது. அவற்றில் ஒன்று மறுமையில் அவர்களை விளித்துப் பேசும் 66: 7 வது வசனம்; மற்றையது உலகில் அவர்களை விளித்துப் பேசும் 109 ஆவது அத்தியாயம்.

உலகில் அவ்வாறு அவர்களை விளித்துப் பேசியமைக்குக் கார ணம் நிராகரிப்பாளர்கள் நபியோடு பேரம் பேசியதற்குப் பதில் கூறுவதற்காகவே. ஒரு வருடம் நாம் உங்களது இறைவனை வணங்கு கிறோம்; இன்னுமொரு வருடம் நீங்கள் எமது கடவுள்களை வணங்குங்கள் என அவர்கள் கூறினார்கள். சமரசம் செய்வதற்கு இடமே இல்லாத இஸ்லாத்தின் அத்திவாரத்தோடு சம்பந்தப்பட்ட தொரு விடயத்தில் தீர்க்கமான ஒரு முடிவை இறுதியாகவும் உறுதியாகவும் அவர்களிடம் சொல்லிவைப்பதற்காகவே குர்ஆன் அவர்களை அவ்வாறு விளித்துப் பேசியிருக்கிறது. வேறு விடயங் களை அவர்களோடு பேசும்போதெல்லாம் இந்தக் கண்டிப்பான தொனியில் பேசுவதைத் தவிர்த்து மனிதர்களே! எனது அடியார் களே! ஆதமுடைய சந்ததிகளே! வேதத்தையுடையவர்களே! என்று இரக்கத் தொனியிலேயே விளித்துப் பேசியிருக்கிறது.

இந்த ரீதியில் காபிர்கள் என்ற சொல்லைத் தவிர்த்து முஸ்லி மல்லாதவர்கள் என்று குறிப்பிடுவதே சாலச் சிறந்தது.

வார்த்தை நாகரிகத்தில் அனைவரும் ஏற்றுக் கொண்டதொரு மரபுதான் பிறரைத் துன்புறுத்தாமல் அவர்களைக் கவரும் விதமாகப் பேசுவதாகும். இதனை அல்குர்ஆனும் வலியுறுத்துகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்:

**''மிக அழகான வார்த்தைகளைப் பேசுமாறு எமது அடியார்களுக்குக் கூறுங்கள். (காரணம்) நிச்சயமாக ஷைத்தான் மனிதர்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்துகிறான். நிச்சயமாக ஷைத்தான் மனிதனின் பகிரங்க விரோதியாகவே இருக்கிறான்.'' *(17: 53)***

பிறரைத் துன்புறுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தி குரோதத்தை வளர்ப்பதற்கு ஷைத்தான் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் போது அவனுக்கு உதவி செய்பவர்களாக ஏன் நாங்கள் இருக்க வேண்டும்?

**அவர்கள் அழைக்கும் தெய்வங்களை ஏச வேண்டாம் *(6: 108)*, வேதத்தையுடையவர்களோடு மிக அழகான முறையிலன்றி விவாதிக்க வேண்டாம் *(29: 46)*** என்பன போன்ற வசனங்களும் எமக்குணர்த்துவது இந்த உண்மையையே.

நாங்கள் பயன்படுத்த வேண்டிய மற்றுமொரு பிரயோகத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். அதுதான் பிற சமூகத்தவர்களை சகோதர சமூகத்தவர்கள் என்று குறிப்பிடுவதாகும்.

அல்லாஹ் மனிதர்களை ஒரே தாய் தந்தையரிலிருந்து படைத்து சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் மாற்றியதாகக் கூறுகின்றான். *(49: 13)* ஒரே ஆன்மாவிலிருந்து படைத்துப் பரவலாக்கியதாகவும் *(4: 1)* கூறுகின்றான்.

ஒரு அறபுக் கவிஞர் இத்தகைய பூர்வீகத்தைப் பிரஸ்தாபிக்கும் போது,

''எனது மூலம் மண்ணாக இருந்தால் இந்த மண்ணுலகம் அனைத்தும் எனது தாய் பூமியே. மண்ணுலக மாந்தர் அனைவரும் எமது சொந்தங்களே'' என்று பாடுகிறார்.

எமக்கு மனிதர்களோடு மூன்று சகோதரத்துவங்கள் இருக்கின்றன. 1. இரத்த உறவின் மூலமான சகோதரத்துவம் 2. ஈமானால்

கிடைத்த சகோதரத்துவம் 3. மனிதன் என்ற ரீதியில் முழு மனித சமூகத்துடனும் கிடைக்கப் பெற்றுள்ள சகோதரத்துவம்.

நபிமார்களை நிராகரித்து அழிந்துபோன சமூகங்கள் பற்றி அல் குர்ஆன் பேசுகின்றது. அதேவேளை, அந்த சமூகங்களுக்கு அனுப் பப்பட்ட நபிமார்கள் அவர்களது சகோதரர்கள் என்றும் குறிப்பிடு கிறது. உதாரணமாக,

நூஹின் சமூகம் இறைத்தூதர்களைப் பொய்ப்படுத்தியது. அவர் களின் சகோதரர் நூஹ் நீங்கள் (அல்லாஹ்வை) அஞ்சக் கூடாதா என்று கூறியபோது... *(26: 105-107)*. ஹூத், ஸாலிஹ், லூத், ஷுஐப் (அலைஹிமுஸ்ஸலாம்) போன்ற நபிமார்கள் விடயத்திலும் அவர் களை நிராகரித்த சமூகத்திற்கு அவர்கள் சகோதரர்களாகவே இருந் தார்கள் என அத்தியாயம் 26 இன் பின்வரும் வசனங்கள் கூறு கின்றன. *(123-126, 141-142, 160-161, 176-177)*

இவ்வாறு முஸ்லிம்களின் பேச்சு மொழியில் கண்டிப்பாக இருக்க வேண்டிய மற்றும் தவிர்க்க வேண்டிய பிரயோகங்கள் பற்றி நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு கூறும்போது, ஏனைய சமூகத்தவர்களைப் புண் படுத்திவிடும் என்ற காரணத்தால் குர்ஆனிலும் சுன்னாவிலும் காணப் படுகின்ற பல பிரயோகங்களை நாம் அழித்துவிட வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது. எனது வாதம் அதுவல்ல. அந்த வேலையை செய்ய வேண்டும் என யாராவது கூறினால் அதற்கு மறுப்புக் கூறும் முதல் மனிதர்களாக நாங்களே இருப்போம்.

உண்மை யாதெனில், காலம், இடம், சூழல் என்பவற்றுக்குப் பொருத்தமாகவே குர்ஆனும் சுன்னாவும் சொற்களையும் பிரயோ கங்களையும் கையாண்டிருக்கின்றன. எனவே, எந்த நேரத்தில் எந்த இடத்திற்கு எந்தச் சொல்லைப் பயன்படுத்தினால் அது பொருத்த மாக இருக்கும் என்பதை நாம் நுணுக்கமாகக் கற்க வேண்டும். அந்த அறிவு முஸ்லிம் சமூகத்தை வழிநடத்தாத காரணத்தால்தான் இவ்வாறு அது பற்றிப் பேச வேண்டிய தேவை எமக்கேற்பட்டுள்ளது.

எமது மொழி நாகரிகமாக இருக்க வேண்டும் என்பதற்காக வேறு ஒரு நாகரிகத்தின் மொழியை நாம் பின்பற்ற வேண்டியதில்லை. எமது இஸ்லாமிய மரபுகளுக்கேற்ப எமது அடிப்படைகளுக்கு முரணாகாத, எமது சூழலுக்குப் பொருந்துகின்ற மொழியை குர்ஆன், சுன்னாவின் வழிகாட்டல்களிலிருந்து நாமே வளர்த்தெடுக்க வேண்டும். அது பற்றிய விளக்கத்தையே இதுவரை சுருக்கமாகத் தந்தோம். இனி, எமது காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற எமது இஸ்லாமியப் பேச்சு மொழியின் உள்ளடக்கம் பற்றியும் அதில் இருக்க வேண்டிய, இருக்கக் கூடாத விடயங்கள் பற்றியும் பல்வேறு சிறப்புத் தலைப்புக்களில் நோக்குவோம், இன்ஷா அல்லாஹ்.

# இஸ்லாமியப் பேச்சு மொழியின் சிறப்புத் தன்மைகள்

இஸ்லாத்தின் செய்தியை ஒவ்வொரு கால மக்களும் அக்கால மொழி மூலமாகவே புரிந்து கொள்கிறார்கள். எமது கால மொழியில் இன்றைய மக்களுக்கு இஸ்லாத்தின் செய்தியை நாம் தெளிவாக முன்வைத்து விட்டோமா என்ற வினாவுடன் இப்பகுதியை நான் துவங்குகிறேன்.

''தெளிவாக எத்திவைப்பதைத் தவிர ரஸூல்மார்களுக்கு வேறு (பொறுப்பான) வேலை இருந்ததா?'' (16: 35) என அல்லாஹ் கேட்கிறான். அந்த நபிமார்களின் வாரிசுகளான எமக்கும் பொறுப்பான வேலை- அது தவிர வேறு என்ன இருக்கிறது?

இன்று இஸ்லாம் பேசுகின்றவர்கள் எதைப் பேசுகின்றோம் என்று தெரியாமல் பேச்சுப் போகின்ற திசையில் எதையாவது பேசிவிட்டுப் போகின்றார்கள். யாரை விழித்துப் பேசுகின்றோம் என்பதையும் அலட்டிக் கொள்வதில்லை. இஸ்லாத்தின் முக்கியமானதொரு செய்தியை அந்தப் பேச்சிலிருந்து எவரும் பெற்றுக் கொள்வார்களா என்பது பற்றியும் அவர்கள் முன்கூட்டியே தீர்மானிப்பதில்லை.

இன்றைய சூழலில் பேசப்படும் ஒரு செய்தி பேசப்படுகின்ற நேரத்திலேயே கண்டம் விட்டுக் கண்டம் சென்று விடுகின்றது. ஏராளமானோர் அதனை செவிமடுத்து அவதானித்து தரம்பிரித்து மட்டிட்டும் விடுகின்றனர். பேசப்பட்ட பேச்சில் எடுப்பதற்கு ஒன்றுமே இல்லை என்றோ நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட செய்திகளைப் பேசுகின்றார் என்றோ காலத்துக்குத் தேவையானதைப் பேசியிருக்கின்றார் என்றோ மக்கள் தீர்மானித்து விடுகின்றனர்.

இந்நிலையில் ஒருவரது பேச்சு எத்தகைய சிறப்புத் தன்மைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று சிந்திப்பது இஸ்லாத்தை எத்திவைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்போருக்கு இன்றியமை யாத ஒன்றாகும். அந்தக் கடமைப்பாட்டின் அடிப்படையில் பதி னைந்து சிறப்புத் தன்மைகளை முன்வைக்கிறேன். பேச்சு எந்த வடிவத்தில் வெளியானாலும் அதில் இஸ்லாத்தின் சிறப்பியல்புகள் வெளிப்பட்டாக வேண்டும் என்பதையே அவை உங்களுக்கு உணர்த்துவதாக இருக்கும், இன்ஷா அல்லாஹ்.

# 01

# அல்லாஹ்வை விசுவாசித்து மனிதனை நிராகரிக்காத மொழி

ஒரு சிலர் பேசுகிறார்கள். அந்தப் பேச்சில் அல்லாஹ் நிறைந் திருக்கிறான். அதேவேளை, மனிதனும் அவனது சுயமும் அந்தப் பேச்சில் மறுக்கப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு விடுகின்றன. இன்னும் சிலர் பேசுகிறார்கள். அவர்களது பேச்சில் மனிதன் நிறைந் திருக்கிறான்; மனிதனின் இரட்சகன் மறைக்கப்பட்டு விடுகின்றான். இரண்டும் இஸ்லாமியப் பேச்சு அல்ல.

இஸ்லாமியப் பேச்சு, அல்லாஹ்வை உரிய முறையில் அறிமுகம் செய்வதாகவும் மனிதனின் கண்ணியத்தையும் மகிமையையும் வெளிப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். இது இஸ்லாமியப் பேச்சு மொழியின் முதல் சிறப்புத் தன்மை என்பதை தாஇகள் மறந்துவிடலாகாது.

இஸ்லாமிய அழைப்பு மொழியில் அல்லாஹ்வின் அறிமுகம் இருக்க வேண்டும். அல்லாஹ் ஒருவன், தனித்தவன், தேவையற்ற வன், ஒப்புவமையமற்றவன், அவன் பிறக்கவுமில்லை; யாரையும் பெற்றெடுக்கவுமில்லை. மாறாக அவனே அனைத்தினதும் படைப் பாளன், சொந்தக்காரன். அவன் வீணாக எதனையும் செய்வதில்லை. அவன் அனைத்தின் மீதும் பேராதிக்கம் உடையவன். அவனது வல்லமையை மீறி வானத்திலோ பூமியிலோ எதுவும்நடக்க மாட் டாது. அவ்வாறு நடக்குமாயின் பிரபஞ்ச ஒழுங்கு சீர்குலைந்து விடும். பிரபஞ்ச ஒழுங்கை வகுத்தவனால் மட்டுமே அதனை சீராக இயக்கவும் முடியும்; செயலிழக்கச் செய்யவும் முடியும்.

அவன் யாவற்றையும் அறிந்தவன்; வெளிப்படையானவன்; மறைவானவன்; இரகசியமானவன்; பரகசியமானவன். அவனது

அறிவுக்கு எதுவும் மறைவதில்லை. நேற்று, இன்று, நாளை என்பன அனைத்தும் அவனது அறிவு வெளிச்சத்தில் ஒன்றே. அணுவும் அவனது பார்வையிலிருந்து தப்பாது. அண்டங்கள் அவனது பிடியிலி ருந்து விலகாது.

அவன் தனது அருள்களால் வானம் பூமியை நிறைத்திருக்கிறான். நல்லவர்களுக்காக அவை மடை திறப்பதுமில்லை; கெட்டவர் களுக்காக அவை மூடிக் கொள்வதுமில்லை. பயன்படுத்துபவர்கள் யாராயினும் அவற்றால் பயன்பெறுவதற்கு அவன் தடை விதிப்பது மில்லை. அவன் ரஹ்மான்; பேரருளாளன்.

அவன் சொரிந்த அருள்களில் நிகரில்லாப் பேரருள் மனிதர்க ளைப் படைத்து அவர்களுக்கு உன்னதமான ஒரு வாழ்க்கை வழியை காட்டிக் கொடுத்ததே. மனிதன் என்ற படைப்பும் அவனது உன்னத மான வாழ்வும் அவனது நேசத்திற்குப் பாத்திரமான முதன்மைப் பேறு கொண்டவை. தவறிப்போன மனிதனும் தடம் புரண்ட அவனது வாழ்வும் சீர்பெறுவதை விட அவனது மகிழ்ச்சியைத் தூண்டும் மற்றொன்றில்லை.

எனவே, அந்த இரட்சகனுக்குக் கட்டுப்பட்டு அவனையே நாம் வணங்கி வழிபட வேண்டும். அவனுக்கு எந்த ஒன்றையும் இணை யாக்க எமக்கு அனுமதியில்லை. உடலும் அதன் உறுப்புக்களும் அவனையே குனிந்து சிரம் பணிந்து வணங்க வேண்டும். உள்ளங் கள் அச்சத்தோடும் அளப்பரிய ஆர்வத்தோடும் அவனையே துதி செய்ய வேண்டும்.

இவ்வாறு, இஸ்லாமிய அழைப்பு மொழி அல்லாஹ்வை அவ னது மேன்மை குறையாமலும் மகத்துவம் குன்றாமலும் பண்புகள் திரிபடையாமலும் அறிமுகம் செய்ய வேண்டும்.

அதேநேரம், அந்த அழைப்பு மொழி மற்றுமொன்றை மதிப் பிறக்கம் செய்யாதிருக்கவும் வேண்டும். அதுதான் மனிதன். மனி தனுக்குரிய அந்தஸ்த்து, கௌரவம், மகிமை என்பவற்றைக் குறைக் கின்ற அல்லது அலட்சியப்படுத்துகின்ற மொழி இஸ்லாமிய அழைப்பு மொழியல்ல.

மனிதனை மிருகமாகவும் பாவியாகவும் தீண்டத்தகாதவனாக வும் அசுத்தமானவனாகவும் மலத்தை சுமந்த ஜடமாகவும் இந் திரியத் துளிக்கும் அந்திம நேரத்திற்குமிடைப்பட்ட நடைப்பிண மாகவும் ஜடமாகவும் சித்திரிக்க முடியாது இஸ்லாமிய அழைப்பு மொழி!

மனிதனை மிக அழகான அமைப்பில் அல்லாஹ் படைத்துள் ளான் *(55: 4)*, அவனை பூமியின் பிரதிநிதியாக அல்லாஹ் ஆக்கினான் *(2: 30)*, கடலிலும் தரையிலும் கண்ணியமாக வாழும் நிலையை அல்லாஹ் அவனுக்கு ஏற்படுத்தினான் *(17: 70)*, வானம் பூமியிலி ருக்கும் அனைத்தையும் அவனுக்கு வசப்படுத்திக் கொடுத்தான் *(31: 20)*, எண்ணிலடங்காத அருள்களை அவன் மீது அல்லாஹ் சொரிந்துள்ளான் *(14: 34)*, பேசும் கலையை அல்லாஹ் கற்றுக் கொடுத்து குர்ஆனும் போதிக்கப்பட்ட உன்னத படைப்பே மனிதன் *(55: 1-4)*, அவனுக்காக மலக்குகள் சுஜூது செய்ய வைக்கப்பட் டார்கள் *(38: 71-72)*, மனிதன் மலக்குகளை விட அந்தஸ்த்தால் உயர்ந் ததற்குக் காரணம் அவனுக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட அறிவே *(2: 31)*, அல்குர்ஆனில் இறக்கப்பட்ட முதல் வசனங்கள் மனிதனுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்ட இரண்டு அறிவுகளைப் பிரஸ்தாபித்தவாறே அருளப்பட்டுள்ளன *(96: 125)*, மனிதனின் இயல்பான உடலாசைகளை நோன்பு கால புனித இரவுகளில் கூட தீர்த்துக் கொள்ள அல்லாஹ் அனுமதி வழங்கியுள்ளான் *(2: 187)*, மனிதனுக்கு அனுமதிக்கப்பட்ட எந்தவொன்றையும் (ஹராமாக்கி) தடை செய்வதற்கான உரிமையை அல்லாஹ் எவருக்கும் வழங்க வில்லை *(7: 31-32)*, ஒரு மனித உயிர் முழு மனித சமூகத்திற்கும் சமமானது *(5: 32)*, மனிதனை இழிவுபடுத்தும் பரிகாசம், பட்டப் பெயர், தப்பெண்ணம், துருவி ஆராய்தல், புறம் பேசுதல் போன்ற அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன *(49: 11-12)*, இறந்தவர்க ளைக் கூட ஏச வேண்டாம்; அவர்கள் செய்தனுப்பியவற்றின்பால் சென்று விட்டார்கள் (அல்புகாரி)... என்றெல்லாம் போற்றப்பட்ட, பாராட்டப்பட்ட ஜீவனே மனிதனாவான்.

இனம், குலம், நிறம், கோத்திரம் என்பவற்றால் அவன் கண் ணியம் இழப்பதில்லை. *(49: 13)*, ஒரே ஆன்மாவிலிருந்தும் ஒரே

தாய் தந்தையரிலிருந்தும் பரவிச் சென்றவனே மனிதன் (4: 1), தொழுகையின் வரிசையிலும் ஹஜ்ஜின் ஆடையிலும் ஆண்டி-அரசன் வேறுபாட்டைக் களைந்து அவனது கௌரவத்தைப் பாது காத்தது இஸ்லாம். பாரசீகத்தின் சல்மானையும் உரோமின் சுஹை பையும் ஹபஷாவின் பிலாலையும் மக்காவின் அபூபக்ரையும் ஒன்று சேர்த்து கௌரவித்திருக்கிறார்கள் நபியவர்கள்.

இத்தனை கௌரவங்களுக்குட்பட்ட மனிதனை அவனது செயல் கள் காரணமாக இழிவுபடுத்தவோ, தண்டிக்கவோ, தரக்குறைவா கப் பேசவோ, தூற்றவோ, பரிகாசம் பண்ணவோ மற்றொரு மனி தனை அல்லாஹ் நியமிக்கவில்லை.

எனவே, மனிதர்களின் விவகாரங்களை மதிப்பீடு செய்து புள்ளி யிட்டு உயர்த்தவும் தாழ்த்தவும் வந்தவர்களல்ல அழைப்பாளர்கள் என்ற உண்மையை அவர்களின் அழைப்பு மொழி உலகுக்கு உணர்த்த வேண்டும்.

அல்லாஹ்வை ஈமான் கொண்டு மனிதனை நிராகரிக்கும் மொழி யால் இஸ்லாத்தின் உன்னதத்தை உலகிற்கு எடுத்து வைக்க முடியாது.

இன்று மனிதனைப் பற்றிப் பேசுபவர்கள் அவன் செய்ய வேண் டிய கடமைகளைப் பேசுமளவு, அவனது கண்ணியத்தை... அவனது சுதந்திரத்தை... அவனது உரிமைகளை... அவன் எதிர்கொள்ளும் மானுசிகமான மற்றும் வெளிப்படையான பிரச்சினைகளை... அவன் மீது போடப்பட்டுள்ள விலங்குகளை... அவனது விடுதலையை... மொத்தத்தில், அவனது நிம்மதியான வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதில்லை.

மனிதர்கள் இன்று சுதந்திரத்தினுள் சிறை வைக்கப்பட்டிருக் கிறார்கள். அனைத்தும் வழங்கப்பட்ட நிலையில் அமைதி பறிக்கப் பட்டவர்களாக இருக்கிறார்கள். இலட்சியத்தை அறியாமல் பரபரப் பாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அடைய வேண்டிய இலக்கை அடையாமல் அவசரமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இத்த கையவர்களின் பரிதாபத்திற்காக இரங்கும் நிலையில், இவர்களின் உள்ளங்களுக்கு ஒத்தடம் கொடுக்கும் வகையில் இன்றைய

அழைப்பு மொழி இல்லை. மாறாக, அவர்களைச் சாடி நையப் புடைக்கும் மொழி மூலமாகவே இஸ்லாம் அவர்களுக்கு எடுத் தோதப்படுகிறது.

இது மரத்தால் விழுந்தவனை மாடு குத்தியது போல்தான். மாடு குத்துவதைப் போல் மனிதர்களின் கண்ணியத்தைக் குத்திக் குதறும் மொழியால் இஸ்லாத்தின் மகிமையை உலகுக்கு எடுத்துக் காட்ட விழையும் தாஇகளும் ஒன்றுதான்; கத்தியால் குத்தி எடுத்து குழந் தையின் வாயில் உணவை உட்புகுத்துவதும் ஒன்றுதான். இரண்டு பேராலும் நன்மையடைய வேண்டியவர்கள் நிச்சயம் பாதிப்பு களுக்கே ஆளாவார்கள்.

## 02

# வஹியை ஈமான் கொண்டு பகுத்தறிவை மறுக்காத மொழி

இஸ்லாமிய அழைப்பு மொழியின் அடுத்த சிறப்புத் தன்மை அது மக்களை வஹியின்பால் அழைப்பதாக இருக்க வேண்டும். அதேநேரம், பகுத்தறிவின் வகிபாகத்தை மறைக்காமலும் மறுக்காமலும் இருக்கவும் வேண்டும்.

வஹியின்றி மார்க்கமில்லை என்பது எமது ஈமானாகும். இறை மார்க்கம் என்பது நபிமார்களின் உற்பத்தியல்ல. நபிமார்கள் அல்லாஹ்வின் தூதுவர்கள். அவர்கள் அல்லாஹ்வின் வழிகாட்டல்களை உலகிற்கு சுமந்து வந்த காவலர்கள். அவர்கள் தமது சொந்த சிந்தனைகளை விற்பனை செய்ய வந்தவர்களல்லர். தமது மனோ இச்சைப் பிரகாரம் மொழி பேசியவர்களல்லர்; (53: 3-4) நபிமார்கள் அல்லாஹ்விடமிருந்து வந்தவற்றையே பிரசாரம் செய்தார்கள். *(5: 67)*

நம்பிக்கைக் கோட்பாடுகளாக இருக்கட்டும்... வணக்க வழிபாடுகளாகட்டும்... பண்பாடுகள், நடத்தைகள், சட்டங்கள், தண்டனைகள், சலுகைகள், உணவு, குடிப்பு, ஆடை, அணி கலன்கள் தொடர்பானவையாகட்டும்... திருமணம், வியாபாரம், குடும்ப வாழ்க்கை, உறவினர்கள், அயலவர்கள், சொத்துப் பங்கீடு, பொருளாதாரம், கல்வி, சமூகம், அரசியல், யுத்தம், சமாதானம், சகவாழ்வு, ஆட்சியாளர்-குடிமக்கள் மற்றும் அவ்விரு சாராருக்குமிடையிலான உறவுகளாகட்டும்... அனைத்தையும் அவர்கள் வஹியினூடாகவே பேசினார்கள்.

அந்த வகையில் அனைத்திலும் வஹியைப் பின்பற்றியே ஒழுக வேண்டும் என நாம் ஏவப்பட்டுள்ளோம். மேற்கூறப்பட்ட இன்னோரன்ன விவகாரங்களில் வழிகாட்டவோ, தீர்ப்பளிக்கவோ

அல்லாஹ்வின்பாலும் அல்லாஹ்வினது தூதரின்பாலும் நாம் அழைக்கப்பட்டால் கேட்டோம் அடிபணிந்தோம் என்று கூறுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை *(24: 51), (33: 36)*. இந்த அழைப்புக்கு பதிலளிக்கத் தவறுபவர்கள் தெளிவான வழிகேட்டையே தெரிவு செய்கின்றனர் *(33: 36)*.

நபியும் கூட அல்லாஹ் இறக்கியவற்றைக் கொண்டு மட்டுமே வழிகாட்டவோ தீர்ப்பளிக்கவோ முடியும். அதிலிருந்து அணுவளவேனும் விலகிச் செல்ல நபிக்கும் அனுமதியில்லை *(5:49)*. அது மட்டுமல்ல, அல்லாஹ்வின் வழிகாட்டலில் சிலதை ஏற்று சிலதை நிராகரிக்கும் உரிமையும் எவருக்கும் வழங்கப்படவில்லை. அவ்வாறு ஓர் உரிமை தமக்கிருப்பதாகக் கருதுவோர் சாபத்துக்குரியவர்களே *(2: 85)*.

மொத்தமாகச் சொன்னால், வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் அல்லாஹ்வின் ஏவல் விலக்கல்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதே எமது கடமை என்பதை ஈமான் கொண்டு செயல்படுத்துபவர்கள்தாம் நாங்கள் என்பது இஸ்லாமிய அழைப்பு மொழியில் பிரதிபலிக்க வேண்டிய முக்கிய அம்சமாகும். அதேநேரம், அந்த அழைப்பு மொழி மற்றுமொன்றை மறைக்கவோ மறுக்கவோ முற்படாதிருக்க வேண்டும். அதற்குரிய வகிபாகத்தை விளம்பரப்படுத்தவும் வேண்டும். இஸ்லாமிய அழைப்பு மொழியில் மறுக்கப்படக் கூடாத அந்த அம்சமே பகுத்தறிவு.

இஸ்லாம் பகுத்தறிவையும் சிந்தனா சக்தியையும் கௌரவிக்கின்றது. காரணம், பகுத்தறிவின் துணை கொண்டுதான் நாம் வஹியை விளங்குகிறோம். பகுத்தறிவு இல்லாதிருந்தால் வஹியின் சூட்சுமங்கள் எமக்குப் புரிந்திருக்காது. அவற்றை ஈமான் கொண்டு செயல்படவும் எம்மால் முடிந்திருக்காது.

அல்லாஹ்வை வஹி அறிமுகம் செய்தது; எமது பகுத்தறிவு அதனை ஏற்றுக் கொண்டது. மறுமை வாழ்வை வஹி எமக்கு எடுத்தியம்பியது; பகுத்தறிவு அதனை சரி கண்டது. அல்லாஹ் தனது தூதர்களை காலத்துக்குக் காலம் அனுப்பியதாகவும் அவர்கள் ஊடாக மனித சமூகத்திற்கு இறை வழிகாட்டல் எனும் வஹியை

அருளியதாகவும் ஒருவரது பகுத்தறிவு உணர்ந்த பின்னரே இறுதி நபியையும் அன்னார் கொண்டு வந்த குர்ஆனையும் அவர் ஈமான் கொள்கிறார். அதன் பின்னரே அல்லாஹ்வின் ஏவல்களையும் விலக்கல்களையும் தனது வாழ்வில் ஒருவர் கடைப்பிடிக்கின்றார்.

இஸ்லாத்தின் மேற்சொன்ன கோட்பாடுகளை மட்டுமல்ல, இஸ்லாமிய வாழ்வின் நடைமுறைகளை விளங்குவதற்கும் அவற்றைப் பிற நடைமுறைகளோடு ஒப்பிட்டு வேறுபடுத்துவதற்கும் சரிகாண்பதற்கும் பகுத்தறிவு இன்றியமையாதது.

அல்லாஹ் சில வாழ்வியல் நடைமுறைகளை கோடு கீறித் தெளிவாக விளக்கி விட்டான். இன்னும் சிலவற்றை அவனது வழிகாட்டல்களுக்கு (குர்ஆன்-சுன்னாவுக்கு) முரண்படாமல் பகுத்தறிவின் துணை கொண்டு இஜ்திஹாத் செய்வதற்கு விட்டு விட்டான்.

இதனை உணர்த்தும் நபிமொழியொன்று அல்ஹாகிமில் பதிவாகியுள்ளது.

**''அல்லாஹ் தனது வேதத்தில் ஹலாலாக்கியவை ஹலாலாகும்; அவன் ஹராமாக்கியவை ஹராமாகும். அவன் பேசாமல் விட்டவை அவன் விட்டு வைத்த மிச்சங்களாகும். அவற்றை அவனிடமிருந்து ஏற்றுக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எதனையும் மறப்பதற்கில்லை. பின்னர் ''உமது இரட்சகன் மறப்பவனல்லன்'' *(19: 64)* என்ற வசனத்தை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஓதிக் காட்டினார்கள்.**

மனித வாழ்க்கையில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் விருத்திகளுக்கும் புதுமைகளுக்கும் ஏற்ப அவ்வப்போது இஜ்திஹாத்கள் செய்து நிரப்ப வேண்டிய ஒரு பகுதியையே ஷரீஆவில் அல்லாஹ் கோடு கீறாமல் விட்டு வைத்துள்ளான். அந்தப் பகுதியை குர்ஆன் சுன்னாவுக்கு முரண்படாமல் நிரப்பும் வேலை பகுத்தறிவுக்கே கொடுக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல, தெளிவான சட்ட வசனங்களுக்குள்ளிலிருந்து பல்வேறு சட்ட நுணுக்கங்களை வெளிக் கொணர்வதற்கும் எமது

முன்னோர்கள் வகுத்த சட்ட அடிப்படைகளுக்கமைய அந்த வச னங்களில் பொதித்துள்ள சட்ட விளக்கங்களைப் பெறுவதற்கும் பகுத்தறிவின் துணை இன்றியமையாதது.

சட்ட வசனங்களை இந்த ரீதியில் ஆராய முற்படும்போதே எமது சட்ட வல்லுனர்கள் வேறுபட்ட அணுகுமுறைகளைக் கையாளு கின்றனர். சிலர் வசனத்தின் வெளிப்படையான கருத்திற்கு முக் கியத்துவம் கொடுக்கின்றனர்; மற்றும் சிலர் ஷரீஆவின் நோக்கங்க ளோடு முரண்படாமல் முடிவுகளைப் பெறுவதில் கவனம் செலுத்து கின்றனர்; இன்னும் சிலர் தமது சமகால அறிவியல்களை அடிப் படையாக வைத்து சட்ட வசனங்களுக்கு விளக்கமளிக்கின்றனர்.

இறுதியில் இஸ்லாமிய ஷரீஆ எனும் கருவூலம் இத்தகைய அனைவராலும் வளம் பெற்றுச் செறிவடைகிறது. அத்துடன் வேறு பட்ட அணுகுமுறைகளைக் கொண்ட ஒவ்வொருவரது முயற் சிக்கும் ஷரீஆவின் நெகிழ்வுத் தன்மை இடமும் தருகிறது.

பகுத்தறிவின் வேலை ஷரீஆ சார்ந்த இத்தகைய முயற்சிகளோடு முற்றுப் பெறுவதில்லை. அல்லாஹ் தனது படைப்புக்களை தனது அத்தாட்சிகளாக வானம் பூமி எங்கும் பரவச் செய்திருக்கின்றான். அந்த அத்தாட்சிகளில் படிப்பினைகளையும் அவன் வைத்திருக் கின்றான். அவற்றை சிந்தித்துணருமாறும் அவற்றுக்குப் பின்னா லிருக்கின்ற அல்லாஹ்வின் வல்லமைகளையும் பேராற்றல்களை யும் புரிந்து கொள்ளுமாறும் அல்குர்ஆன் அறைகூவல் விடுத்துக் கொண்டே இருக்கிறது. இந்த அறைகூவலுக்கு மனிதன் தனது பகுத்தறிவினால் அன்றி வேறு எதனால் பதில் சொல்ல முடியும்?

வானம் பூமியில் பரவிக் கிடக்கின்ற அல்லாஹ்வின் படைப்புக் களை ஆராய்ந்து இரண்டு வகையான பயன்களை மனிதன் அடைய வேண்டும்.

1. அல்லாஹ்வின் பேராற்றலை உணர்வதன் மூலம் அவன் மீதுள்ள மகத்துவத்தையும் விசுவாசத்தையும் அதிகரித்துக் கொள்ளல். இதனை *3: 190-194* வசனங்கள் அற்புதமாக விளக்குகின்றன. அல்லாஹ்வின் படைப்புகள் பற்றி சிந்திக்கும்போது அந்தப்

படைப்புக்கள் ஈமானின் பக்கம் அழைப்பு விடுப்பது போன்ற உணர்வை மனிதனுக்குள் ஏற்படுத்துவதாக அவ்வசனங்கள் கூறுகின்றன.

2. அல்லாஹ்வின் படைப்புக்களது பேரியக்கத்தை வழிநடத்தும் இறைநியதிகளைக் கண்டறிதலும் அந்த இறைநியதிகளால் பயன்பெறுதலும் பகுத்தறிவின் மற்றுமொரு வேலையாகும். இன்றைய மனிதன் விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகள் அனைத்திலும் சாதித்திருக்கின்ற பெரும் சாதனைகள் அல்லாஹ் வின் படைப்புக்கள் அனைத்திலும் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவேயன்றி வேறில்லை. தொடர்ச்சியான அந்த ஆய்வுகள் வானம் பூமியை வளப்படுத்தவும் அவற்றிலுள்ள இரகசியங் களை வசப்படுத்தவும் அவற்றை மனித வாழ்வின் நலனுக்காக பயன்படுத்தவும் வழிசெய்திருக்கின்றன.

இத்தனையும் பகுத்தறிவின் சாதனைகள் தாம். இயற்கையின் பொக்கிஷங்களை வெளிக் கொணர்ந்து... வானம், பூமி, கடல், தரை, காடு, களனி, மலை, பள்ளத்தாக்கு அனைத்தையும் வசப்படுத்தி... சந்திரனில் கால் பதித்து... செய்மதிகளால் நிர்வாகம் செய்யுமளவு சாதித்துள்ள பகுத்தறிவை முஸ்லிம்கள் எவ்வாறு தரம் குறைத்துப் பேச முடியும்!

அணுவைப் பிளந்த அறிவை இகழ்வது மதியிழந்த செயலாகும். பகுத்தறிவை அல்லாஹ் தந்ததன் நோக்கமே பகுப்பாய்வதும் சிந்திப்பதும் ஆராய்ச்சியில் ஈடுபடுவதும் எடுகோள்கள், கருது கோள்கள் போன்றவற்றை உருவாக்குவதும் அவற்றினடிப்படை யில் முடிவுகளுக்கு வருவதும் தான்.

பகுத்தறிவை அல்லாஹ் வழங்கியதன் நோக்கம் கண்மூடித்தன மாக ஒன்றைக் கேட்டுப் பின்பற்றுவதற்கல்ல. ஆராயாமல், ஆதாரம் தேடாமல் ஒன்றைக் கேட்பதும் கேட்டவுடனேயே நம்புவதும் இஸ்லாத்தில் மிக மிக வெறுக்கப்பட்ட ஒரு செயலாகும்.

கேட்டவை அனைத்தையும் திருப்பிப் பேசுவது ஒன்றே ஒரு மனிதன் பொய்யனாக இருக்கப் போதுமானது என நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய செய்தி இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

இஸ்லாத்தின் எதிரிகள் பேசிய அர்த்தமற்ற கூற்றுக்கள் அனைத்திற்கும் ஆதாரங்கள் கொண்டு வாருங்கள் என அல்குர்ஆன் சவால் விட்டதை பல்வேறு வசனங்களில் நாம் பார்க்கிறோம் *(27: 64, 6: 143, 46: 4, 6: 148, 2: 111)*.

இமாம் இப்னுல் ஜவ்ஸி கூறுகிறார்கள்: ''கண்மூடித்தனமான பின்பற்றல் சிந்தனையை செயலிழக்கச் செய்கிறது. பகுத்தறிவை அல்லாஹ் தந்ததன் நோக்கமே ஒன்றை ஆய்ந்தறிவதற்குத்தான். தன்னிடமிருக்கும் விளக்கை அணைத்து விட்டு இருளில் நடப்பவனை விட தனக்கு இழிவைத் தேடிக் கொள்பவன் வேறு யாராக இருப்பான்?!'' (தல்பீஸு இப்லீஸ்)

பகுத்தறிவை அடகு வைத்துவிட்டு சிந்தனா சக்தியை சிறையில் அடைத்து விட்டு இன்றைய முஸ்லிம் உலகம் மேற்கின் கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது எம்மைப் பிடித்திருக்கும் மற்றுமோர் அவலமாகும். வேறு வார்த்தைகளில் சொன்னால், மேற்கு நாகரிகம் என்ற சிலையை வணங்கி அதன் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளை வாழ்க்கை நெறியாகப் பின்பற்றும் துர்ப்பாக்கியம் என இதனை வர்ணிக்கலாம்.

மேற்கின் சிந்தனைச் சிறையிலிருந்து எமது பகுத்தறிவு விடுதலை பெற வேண்டும். மேற்கின் வாழ்க்கைத் தத்துவங்கள், வாழ்வியல் நடைமுறைகளை இஸ்லாத்தின் கோட்பாடுகளது வெளிச்சத்தில் நின்று ஆக்கபூர்வமாக விமர்சிக்க எம்மால் முடியுமாக இருக்க வேண்டும்.

அதேபோன்று, கிழக்குச் சிறையிலும் எமது பகுத்தறிவு மற்றும் சிந்தனா சக்தி என்பவற்றை நாம் அடைத்து விடாதிருக்க வேண்டும். கிழக்குச் சிறை என்பது வேறு யாருடையதுமல்ல. அது எங்களுடைய சிறைதான். ஆறு, ஏழு, எட்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட எமது அறிவுப் பாரம்பரியங்கள் சிலவற்றை வாசித்தால் போதும்; இக்காலத்தை ஏறெடுத்தும் பார்க்காமல்... இக்காலத்திற்குரிய பிரச்சினைகளுக்கு அவசியமான இஜ்திஹாத்களை மேற்கொள்ளாமல் என்பதுதான் அது. இக்கால மக்களுக்கு இக்கால மொழியில் பேசத்

தெரியாமல் நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட செய்திகளை வாசித்து மொழிபெயர்த்துச் சொல்லிவிட்டுப் போவதும் அறிவை சிறை வைக்கும் ஒரு கைங்கரியம்தான்.

இவ்வாறு கூறும்போது எமது முன்னோர்களின் அறிவுப் பாரம் பரியங்கள் அனைத்தையும் தூக்கி முதுகுக்குப் பின்னால் எறிந்து விட வேண்டும் என்று கூறுவதாக நினைக்க வேண்டாம்.

எமது முன்னோர்கள் வகுத்த 'உஸூல்' (أصول) எனும் அடிப் படைகளும் 'கவாஇத்' (قواعد) எனும் விதிகளும் 'மகாஸித்' (مقاصد) எனும் நோக்கங்களும் இன்றும் எம்மை வழிநடத்துகின்ற கலங் கரை விளக்குகள் தாம். அவற்றின் வெளிச்சத்தில் பயணிப்பவர் களாகவே நாம் என்றும் இருப்போம். எனினும், எமது காலம் வேறு; அவர்களது காலம் வேறு. எமது பிரச்சினைகள் அவர்களது காலப் பிரச்சினைகளை விட வேறுபட்டவை. எமது கால, சூழல், வர்த்தமான, கட்டமைப்புப் பின்னணிகள் அவர்களது பின்னணிகளை விட முற்றிலும் வேறுபட்டவை.

எம்மை அல்லாஹ் இக்காலத்தில் படைத்திருப்பது இக்காலத் திற்காக சிந்திப்பதற்கும் செயல்படுவதற்குமே. எல்லாக் காலத்திற் கும் பொதுவான அம்சங்கள் தொடர்பில் நாம் எமது முன்னோர் களை அப்படியே பின்பற்றலாம். எமது காலத்திற்குரிய பிரச்சினை கள் தொடர்பில் தீர்வுகளைக் கண்டறிய நாமே கடமைப்பட்டிருக்கி றோம். குர்ஆனையும் சுன்னாவையும் எமது சூழலுக்கு வழிகாட்டும் விதமாகவும் எமது காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்லும் விதமாகவும் முன்வைக்க வேண்டிய பொறுப்பு எமக்கேயுரியது. இந்தப் பாரிய பணிக்காக இன்றைய முஸ்லிம்களின் சிந்தனைகள் அவற்றை அடைத்திருக்கும் சிறைகளிலிருந்து வெளிவர வேண்டும்.

இஸ்லாமிய வரலாற்றில் ஒரு காலம் இருந்தது. முஸ்லிம் அறி ஞர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் கிரேக்க தத்துவங்கள், தர்க்க வியல்கள் என்பவற்றின் கவர்ச்சிக்குட்பட்டு தங்களது சிந்தனைகளை அவற்றால் சிறைப்படுத்தியிருந்தனர். அந்தச் சிறையை உடைத்து இஸ்லாமிய சிந்தனையை அக்காலத்தில் பாதுகாத்தவர்தான் மாமேதை இமாம் கஸ்ஸாலி ஆவார். இமாமவர்கள் எழுதிய 'ஸஹாபதுல் பலாஸிஃபா' என்ற நூல் அவர்களது தத்துவ மொழி

மூலமாகவே அவர்களது தத்துவக் கெடுபிடிகளைத் தளர்த்தியது. பின்னர் வந்த இமாம் இப்னு தைமியா எஞ்சியிருந்த தத்துவச் சிறைகளையும் நிர்மூலமாக்கி கிரேக்க ஆதிக்கத்திலிருந்து முஸ்லிம் சிந்தனையை முற்றிலும் விடுவித்தார் என்றே கூற வேண்டும்.

இன்றும் அவ்வாறு சிறைப்படுத்தப்பட்டிருக்கும் முஸ்லிம்களின் சிந்தனைகளுக்கு விடுதலை பெற்றுத்தர வேண்டியவர்கள் தேவைப் படுகிறார்கள். இந்த விடுதலை நாம் பெற வேண்டிய ஏனைய விடு தலைகள் அனைத்திற்கும் அடிப்படையானது.

அதனால்தான் போலும் எமது முன்னோர்கள் சொன்னார்கள்: ''சில பொழுதுகள் சிந்தனையில் ஈடுபட்டிருப்பதானது சில மாதங் கள் வணக்கத்தில் ஈடுபட்டிருப்பதை விடச் சிறந்தது'' என்று.

மத நம்பிக்கைகளுக்கும் பகுத்தறிவுக்கும் தொடர்பில்லை என முன்னைய சமூகத்தவர்கள் கருதியிருந்தனர். இன்றும் அவ்வாறு கருதுவோர் பலர் இருக்கின்றனர். அவர்களது கூற்றுப்படி ஒருவர் ஈமான் கொள்வதன் விளக்கம் பின்வருமாறு அமையும்:

''நான் இந்தக் கோட்பாட்டை ஈமான் கொள்கிறேன். காரணம் இந்தக் கோட்பாடு பகுத்தறிவுக்குப் பொருந்த மாட்டாது.''

ஈமானையும் பகுத்தறிவையும் வேறுபடுத்துவதே அவர்களது நம்பிக்கையின் சிறப்பம்சமாகும். எனினும், இஸ்லாம் அதனை அங்கீகரிப்பதில்லை. இஸ்லாத்தைப் பொறுத்தவரை அறிவு ஏற்றுக் கொண்டதன் பின்னரே ஈமான் தோற்றம் பெறுகிறது. பின்வரும் அல்குர்ஆன் வசனத்தைப் படித்துப் பாருங்கள்.

**''அறிவு கொடுக்கப்பட்டவர்கள் இது நிச்சயமாக உமது இரட்ச கனிடமிருந்து வந்த சத்தியமே என்பதை அறிந்து அதனை ஈமான் கொள்ள வேண்டும். அப்போது அவர்களது இதயங்கள் அந்த சத் தியத்தின் முன்னால் பணிந்து விடும்.'' *(22: 54)***

அறிவு ஈமானுக்கு இட்டுச் செல்கிறது; ஈமான் கட்டுப்பாட்டுக்கு இட்டுச் செல்கிறது என்பதையே இந்த வசனம் தெளிவுபடுத்தியி ருக்கிறது.

எமது அறிஞர் பரம்பரை ஏற்றுக் கொண்ட விதிகளில் ஒன்றுதான் களங்கமற்ற 'நக்ல்' (نقل எனும் இறைவழிகாட்டல்) உம் குழப்பமற்ற 'அக்ல்' (عقل எனும் மனித சிந்தனையும்) ஒன்றோடொன்று முரண் படுவதற்கில்லை என்பதாகும். முரண்பாடுகள் எப்போதாவது, ஏதாவது ஒரு விடயத்தில் ஏற்படுமானால் அதனைத் தீர்த்து வைக்கும் வகையிலான 'தஃவீல்' (تأويل) எனும் விளக்கமொன்று இல்லாதிருக்க மாட்டாது.

ஷரீஆ சார்ந்த கலைகளும் பகுத்தறிவினூடாக வளர்க்கப்பட்ட துறைகளும் ஒன்றை ஒன்று வேண்டி நிற்கின்றன என்ற கருத்தை எமது அறிஞர் பரம்பரையில் எண்ணற்றவர்கள் வலியுறுத்தியிருக் கிறார்கள். இங்கு இமாம் கஸ்ஸாலி அவர்கள் இது தொடர்பில் கூறியுள்ள சில கருத்துக்களை இஹ்யா உலூமித்தீனிலிருந்து தரு கின்றேன்.

''அறிவைப் பயன்படுத்தாமல் ஆதாரமறியாத பின்பற்றுதல் 'தக்லீத்' (تقليد) போதும் என்று கூறுபவன் அறிவீனனாவான். குர்ஆனையும் சுன்னாவையும் புறக்கணித்துவிட்டு தனது பகுத் தறிவு போதும் என்று கூறுபவன் அறிவுப் பித்தனாவான். இரண்டு நபர்களாகவும் நீ இருந்து விடாதே. இரண்டு அறிவுகளையும் இணைத்துப் பயன்படுத்துபவனாகவே இருக்க முயற்சி செய்...''

''பகுத்தறிவினூடாக வளர்க்கப்பட்ட அறிவியல் துறைகள் உணவைப் போன்றதாகும். வேத அறிவோடு சார்ந்து வளர்ந்த ஷரீஆ கலைகள் மருந்து போன்றதாகும். நோயுற்றவர்கள் உணவை மாத் திரம் உட்கொண்டால் நோயின் பாதிப்பு அதிகரிக்கவே செய்யும். மருந்தையும் உட்கொண்டால்தான் உணவின் சீரான பயன்பாட்டை நோயாளி பெற முடியும்.''

உள நோயாளிகளது நிலையும் இது போன்றதே. அறிவியல் துறைகள் மட்டும் அவர்களது நோய்களைக் குணப்படுத்தி விடாது. வேத அறிவும் அவர்களுக்குக் கிடைக்கின்றபோது நோய்களற்ற ஆரோக்கியமான உள்ளமொன்றையும் சீரான வாழ்வையும் அவர்கள் பெற முடியும்.

சிலர் ஷரீஆ கல்வியும் ஏனைய அறிவியல்களும் ஒன்றோடொன்று முரண்படுவதாக நினைக்கிறார்கள். இது அல்லாஹ்விடமிருந்து நாம் பாதுகாப்புத் தேடவேண்டிய ஓர் அறிவீனமாகும்.

இத்தகையவர்கள் ஷரீஆ கல்விக்குள்ளேயே ஒரு பகுதி மற்றுமொரு பகுதியோடு முரண்படுவதாக நினைப்பவர்கள். (உதாரணமாக அகீதாவும் தஸவ்வுபும் ஒன்றோடொன்று முரண்படுவதாக இவர்கள் நினைக்கிறார்கள். அகீதா அங்கீகரித்த தஸவ்வுப் எது என்பதை அறியாததால் வந்த விளைவே இது) தங்களது அறியாமையை மார்க்கத்தில் உள்ள ஒரு குழப்பமாக இவர்கள் மாற்றிவிடுகிறார்கள்.

அறிவியலுக்கும் அல்குர்ஆனுக்கும் மற்றுமோர் அழகான உதாரணத்தை முன்வைக்கிறார்கள் இமாம் கஸ்ஸாலி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள்.

''அறிவியல் என்பது தெளிவானதொரு கண்பார்வையாகும். அல்குர்ஆன் சூரிய ஒளியாகும். ஒன்றில்லாமல் மற்றொன்றினால் பயன்பெற முடியாது. குர்ஆனின் பிரகாசம் மட்டும் போதுமானது என்று நினைப்பவர் சூரிய வெளிச்சத்தில் கண்ணை மூடிக் கொண்டவர் போலாவார். அறிவியல் மட்டும் போதுமானது என்று நினைப்பவர் காரிருளில் கண்ணைத் திறந்திருப்பவராவார். இருவரும் இறுதியில் குருடர்களாகவே வாழ்ந்துவிட்டுச் செல்வார்கள்.''

இங்கு நாம் கவலையோடு குறிப்பிட வேண்டிய ஒரு செய்தி இருக்கிறது. முஸ்லிம்களில் அதிகமானோர் தமது மூளைகளைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விட்டார்கள். அல்லது அவற்றிற்கு விடுமுறை வழங்கி ஓய்வு கொடுத்திருக்கிறார்கள். வானமும் பூமியும் தமக்கு சார்பாக கராமத்துக்களை வெளிப்படுத்தும் நாளொன்றுக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள். நியதிகள், நியமங்கள், ஒழுங்குகள் என்பவற்றை மீறி காரியங்கள் நடக்கும் என்று அவர்கள் நினைப்பதால் சிந்தனைக்கு வேலை கொடுத்து என்ன பயன் என அவர்கள் நினைக்கிறார்கள் போலும்.

எனவே, முஸ்லிம்கள் பின்னடைவை சந்திப்பதும் ஏனையவர்கள் உலகில் முன்னேறிச் செல்வதும் தொடர்கதையாகவே இருக்கப்

போகிறது. இவர்கள் தூங்க அவர்கள் விழித்திருக்கிறார்கள். இவர்கள் அசைவற்றுக் கிடக்க அவர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இறந்த காலத்தைக் நோக்கிச் செல்ல அவர்களோ எதிர்காலத்தை நோக்கி நகர்கிறார்கள்.

முஸ்லிம்கள் மத்தியிலிருக்கின்ற ஆலிம்களுக்குக் கூட தங்களது சமகால நியமங்களுக்கேற்பவும் தேவைகளுக்கேற்பவும் சிந்தித்து வழிகாட்டும் துணிவு வருவதில்லை. தங்களது சிந்தனைப் பெட்டகத்தை மூடி வைத்துவிட்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஆலிம்கள் சொன்ன ஏதாவது செய்தியொன்றைத் தேடிக் கொண்டு வந்து ஒப்புவிப்பவர்களாகவே அவர்கள் காணப்படுகிறார்கள். யாராவது ஓர் ஆலிம் தனது சமகால சூழலுக்குப் பொருந்தும் வகையில் ஓர் ஆய்வை அல்லது முடிவை முன்வைத்து விட்டால் ஏனையோர் அவர் மீது கரி மழையைப் பொழிந்து விடுகிறார்கள். அப்போது அவர் தனது சிந்தனை மற்றும் ஆய்வுகள் போன்றவற்றை முற்றாகத் துடைத்துக் கழுவி சுத்தம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார். இறுதியில் தனது மூளைக்கு விடுமுறை வழங்கி அதனைக் குளிர்சாதனப் பெட்டியில் வைக்க வேண்டிய அவலம் அவருக்கும் ஏற்பட்டு விடுகிறது.

இன்றைய எமது அழைப்பு மொழி பகுத்தறிவை ஒதுக்கி வைத்த ததன் விளைவாக மாசுபட்டிருப்பதைக் காண முடிகிறது. மனிதனுக்கு அல்லாஹ் வழங்கிய அந்த அறிவினூடாக மார்க்கத்தை விளங்கவும் நாம் தவறியுள்ளோம்; எம்மைச் சூழவுள்ள உலகை விளங்கவும் நாம் தவறியுள்ளோம். பழையதைக் கேட்டு புதியவர்களுக்கு ஒப்புவிப்பது ஒன்றைத் தவிர இன்றைய எமது அறிவுக்கு வேலையில்லை என்றே கூற வேண்டும். பழையவற்றையும் சரி பிழை பார்க்காமல் ஒப்புவிப்பதுதான் எமது வேலை.

அறிவுக்கு விடை கொடுத்ததனால் உருவாகியிருக்கும் புதிய தோற்றப்பாடுகளில் ஒன்றாக அரபுத் தேசமெங்கும் ஓதிப்பார்க்கும் கடைகள் முளைத்திருக்கின்றன. குர்ஆன் நிவாரணம் என்று அதற்குப் பெயரும் இடப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் மாநபியின் காலத்தில் இந்தக் கடைகள்

இருக்கவில்லை என்பது சிலவேளை அவர்களது அறியாமையாக இருக்கலாமோ தெரியவில்லை. இவர்கள் அதனைக் கண்டுபிடித் திருக்கிறார்கள்.

நபியவர்களின் செயல் இதற்கு மாறாகவே இருந்தது. அவர்கள் மருந்து எடுத்துக் கொள்ளுங்கள்; ஒவ்வொரு நோய்க்கும் ஒரு மருந்து இருக்கிறது என்றே கூறினார்கள். நபியவர்களும் நோய்களுக்கு மருந்து செய்திருக்கிறார்கள். அன்று பிரபல்யம் பெற்றிருந்த ஹாரிஸ் பின் கில்தா என்ற வைத்தியரிடம் செல்லுமாறு நோயாளிகளைப் பணித்தார்கள். ''மருந்துகள் அல்லாஹ்வின் (கத்ர் எனும்) ஏற் பாட்டை மாற்றுமா?'' என்று நபித்தோழர்கள் கேட்டதற்கு ''மருந்து களும் அல்லாஹ்வின் கத்ர்தான்'' எனப் பதில் அளித்தார்கள்.

இத்தகைய மார்க்கத்தையுடைய எம்மவர்கள் மருந்துத் தொழிற் சாலைகளை உருவாக்குவதற்குப் பதிலாக. ஓதிப்பார்க்கும் கடை களைத் திறந்திருப்பது அறிவுக்கு விடுமுறை கொடுத்ததன் விளைவு தானே!

அறிவுக்கு விடுமுறை கொடுத்ததன் விளைவை இதுபோன்ற நடைமுறை உதாரணங்களில் மட்டுமல்ல, மார்க்கத்தின் பெயரால் நிகழ்த்தப்படும் ஒவ்வொரு சொற்பொழிவிலும் நாம் காணக் கூடி யதாக இருக்கிறது. அந்த சொற்பொழிவுகளில் குர்ஆன் சுன்னாவின் வரிகள் வந்து போகின்றன. எனினும், அவை இரண்டையும் நுட்ப மாக விளங்க வேண்டிய பகுத்தறிவின் வாசத்தை அவற்றில் காண முடியவில்லை.

வேத வரிகளை ஈமான் கொண்டு ஆறாவது அறிவையும் புறக் கணிக்காத மொழி இன்றைய அழைப்பியலுக்கு இன்றியமையாதது என்பதை தாஇகள் உணர வேண்டும்.

## 03

# ஆன்மிகத்தை வலியுறுத்தி பௌதிகத்தைப் புறக்கணிக்காத மொழி

இஸ்லாமிய அழைப்பு மொழியின் மூன்றாவது சிறப்புத் தன்மை இதுவாகும்.

அது ஆன்மிகத்தை வலியுறுத்தும் மொழி. ஏனெனில், வஹியின் அத்திவாரமாக ஆன்மிகம் இருக்கிறது. ஆன்மிகத்தை மதிக்காத... உயர்த்தாத... மேம்படுத்தாத அழைப்பு இஸ்லாமிய அழைப்பே அல்ல.

அதேநேரம், இஸ்லாமிய அழைப்பு மொழி பௌதிகம் எனும் உலகத்தையும் அதன் பயன்பாடுகள் மற்றும் தேவைகளையும் புறந்தள்ள மாட்டாது.

மனிதன் படைக்கப்பட்டிருப்பதே ஆன்மிகம், பௌதிகம் இரண் டையும் கலந்து தான். அல்லாஹ்வின் பூமியிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பிடி மண், அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஊதப்பட்ட ஓர் ஆன்மா ஆகிய இரண்டினதும் கலவையே மனிதன் *(38: 71-72)*.

ஆன்மா அல்லாஹ்விடம் மனிதனது அந்தஸ்த்தை உயர்த்தி மலக் குளை சுஜூது செய்ய வைத்தது. மண், இந்தப் பூமியை நிர்வகிக்கும் பொறுப்புகளுக்கு அவனைத் தகுதியாக்கியது.

ஆன்மாவின் பக்கம் உயர உயர மனிதன் மலக்குகளின் சந்நிதானம் நோக்கிச் செல்கிறான். மண்ணின் பக்கம் தாழத் தாழ அவன் தனது அந்தஸ்த்தை கீழ் நோக்கி இழுத்துச் செல்கிறான் *(25: 43-44)*. இந்த வகையில் இஸ்லாமிய வாழ்வின் அடிப்படை ஆன்மிகமே. ஏனைய அனைத்தும் அதற்குத் துணையாகவே தொழிற்பட வேண்டும்.

ஆன்மிகம் எதனைக் குறிக்கின்றது?

அல்லாஹ்வை ஈமான் கொண்டு அனைத்திலும் அவனை ஏகத்து வப்படுத்தி... அவனையே வணங்கி வழிபட்டு... அவனிடமே உதவி கேட்டு... அவனது கட்டளைகளுக்கு அடிபணிந்து... அவனது அருள்களுக்கு நன்றி செலுத்தி... முற்றிலும் எல்லா நிலைகளிலும் அவனைச் சார்ந்திருத்தலே ஆன்மிகம் ஆகும்.

நிரந்தர வீடாகிய மறுமையையும் அங்கு கிடைக்கவிருக்கும் வெகுமதிகள், தண்டனைகள் போன்றவற்றையும் ஆழமாக நம்புதல் *(79: 37: 41) (99: 7-8)*...

பர்ளுகளை நிறைவேற்றி... கிரியைகளைக் கடைபிடித்து... ஏவல் விலக்கல்களுக்கு அடிபணிந்து பெற்றோரைக் கௌரவித்து... ஹலாலை ஹலாலாக்கி... ஹராமை ஹராமாக்கி... வாழ்தல் *(51: 56)*...

தவ்பா, இஸ்திஃபார், துஆ, தஸ்பீஹ், திக்ர், காலை மாலை ஓதல்கள் சந்தர்ப்ப துஆக்கள், இஃதிகாப் போன்றவற்றில் ஈடுபாடும் கவனமும் செலுத்துதல் *(33: 41-42) (3: 191)*...

உள்ளத்தை உலக ஆசை, இணைவைப்பு, பகட்டு வாழ்க்கை, பெருமை, பொறாமை போன்ற கெட்ட குணங்கள், உள நோய்கள் என்பவற்றிலிருந்து தூய்மைப்படுத்தல் *(26: 87-89) (50: 31-33)*...

முடியுமான அனைத்து நன்மைகள் மற்றும் உபகாரங்கள், உதவிகள், சேவைகள் என்பவற்றில் ஈடுபடுதல், துயர் துடைக்கும் பணிகளில் ஆர்வத்தோடு பங்கேற்றல் *(76: 8-9)*, உயிரினங்களிடத்தில் அன்பாகவும் கருணையுடனும் நடந்து கொள்ளல்...

சுருக்கமாகவும் மொத்தமாகவும் சொன்னால்... அல்லாஹ்வின் திருப்திக்காக வாழ்வின் அனைத்துக் கருமங்களிலும் அவனை மையப்படுத்தி அவனது சன்மானங்களை எதிர்பார்த்து அவனது தண்டனைகளை அஞ்சி செயல்படுதலே ஆன்மிகம்.

இவ்வாறு ஆன்மிகத்தை வலிமையாக்கி ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதில் பாரிய கவனம் ஒன்றை ஒவ்வொரு முஸ்லிமும்

கொண்டிருக்க வேண்டும். ஆன்மிகம் நலிந்து போனால் ஏனைய அனைத்தும் வலிமை பெற்றாலும் அது மனிதனுக்குப் பயன் தரப் போவதில்லை. அத்திவாரத்தைப் பலவீனப்படுத்தி விட்டு கட்டிடம் எழுப்புவது அறியாமையல்லவா?

அதேநேரம், மனிதனது இரண்டாவது கூறாகிய பௌதிகத்தை மறந்து விடவும் முடியாது. மனிதன் ஆன்மாவால் மட்டுமல்ல களிமண்ணினாலும் படைக்கப்பட்டுள்ளான். அது எதற்காக என் பதையும் விளங்கிப் பேசும் மொழியாக எமது அழைப்பு மொழி இருக்க வேண்டும். வேறு விதமாகச் சொன்னால், ஆன்மிகத்தை உயர்த்தி பௌதிகத்தை நாம் புறந்தள்ள முடியாது. மறுமையை நாம் உறுதியாக நம்ப வேண்டும். எனினும், உலகை நாம் ஒதுக்கி விட முடியாது.

உலகை இஸ்லாம் அற்பமாகக் கருதுவது இரண்டு நிலைகளில் மாத்திரமே.

1. இலட்சியத்தை விட... மறுமையை விட... செய்ய வேண்டிய கடமைகளை விட... உலகை ஒருவர் மேலாகக் கருதும்போது இஸ்லாம் அத்தகையோரின் உலக ஈடுபாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்தகைய பண்பை உடையோர்களைப் புறக் கணிக்குமாறு அல்லாஹ் தனது நபிக்குக் கூறுகிறான் *(53: 29-30)*. நல்லவர்களது பண்பு அவ்வாறிருக்காது என்பதையும் குர்ஆன் சுட்டிக்காட்டுகிறது *(24: 37)*. உலகத்தை இலட்சியமாகக் கொண்ட வர்களது வாழ்க்கை விளையாட்டும் கேளிக்கையுமே என்று அது வர்ணிக்கின்றது *(51: 20)*.

2. பிறருக்கு அநீதியிழைத்து அபகரிக்கப்பட்ட உலகத்தையும் அதன் உடமைகள் மற்றும் செல்வங்களையும் இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. அதேபோன்று ஹராமான வழிகளில் ஈட்டப் பட்ட உலக செல்வங்களை இஸ்லாம் கடுமையாக வெறுக் கின்றது. மார்க்கத்தையும் சமூகத்தையும் விற்றுப் பிழைக்கும் பணத்தை நெருப்பு என வர்ணிக்கின்றது குர்ஆன் (2: 174). அநாதைகளின் அபகரிக்கப்பட்ட சொத்துக்களையும் நெருப்பு என்றே குர்ஆன் எச்சரிக்கின்றது *(4: 10)*. தீய வழிகளில் செலவு

செய்யப்படுகின்ற, நல்வழிகளுக்குப் பயன்படாத செல்வங்களால் அவற்றின் சொந்தக்காரர்கள் மறுமையில் உருக்கி ஒத்தடம் கொடுக்கப்படுவார்கள் என அல்குர்ஆன் எச்சரிக்கின்றது *(9:34-35)*. வட்டியையும் இதேபோன்று பயங்கரமாகக் கண்டிக்கின்றது அல்குர்ஆன் *(2: 279)*.

உலகம் பற்றி இஸ்லாம் கூறுவதென்ன?

**''அவன்தான் பூமியிலிருந்து உங்களைப் படைத்தான். மேலும் (அதனை நிர்வகிக்கும் பொருட்டு) அதில் உங்களை வாழச் செய்துள்ளான்.''** *(11: 61)*

ஆக, பூமியை நிர்வகித்து வாழ வேண்டும்.

இதற்காக வானம் பூமியிலுள்ளவற்றை மனிதனுக்கு வசப்படுத்திக் கொடுத்து வெளிப்படையாகவும் அந்தரங்கமாகவும் மனிதன் மீது அல்லாஹ் தனதருள்களை சொரிந்துள்ளதாக 31: 20 வசனம் கூறுகின்றது. மழை பெய்து பயிர்கள் செழிப்பதும், கடலைக் கப்பல்கள் ஊடறுத்துச் செல்வதும், நதிகள், சூரியன், சந்திரன், இரவு, பகல் அனைத்தையும் வசப்படுத்தித் தந்ததும், எண்ணிலடங்காத அருள்களை இந்த மண்ணில் சொரிந்திருப்பதும் இந்த மனிதனுக்காக அல்லாஹ் செய்த ஏற்பாடு என எடுத்தியம்புகிறது 14: 32:34 வசனங்கள்.

இந்த வசனங்களின்படி, உலகம் என்ற செயற்களத்தை வசப்படுத்தி உபயோகித்துப் பயன்பெறுவதை இஸ்லாம் தடை செய்திருப்பதாக எவரும் கூற முடியாது. மாறாக, அதனை அபிவிருத்து செய்து நிர்வகிக்கும் பொறுப்பை சுமந்தவனாகவே மனிதன் படைக்கப்பட்டுள்ளான். அதுமட்டுமல்ல, உலகிலும் நல்லதைத் தந்து மறுமையிலும் நல்லதைத் தருவாயாக *(2: 201)* என்று பிரார்த்திப்பவனாகவும் அவன் இருப்பான். இந்தப் பிரார்த்தனை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அதிகமாக விரும்பிக் கேட்ட ஒரு பிரார்த்தனையாகும்.

நபிமார்களில் யூஸுப், தாவூத், சுலைமான் (அலைஹிமுஸ்ஸலாம்) போன்றவர்கள் உலகின் ஆட்சி அதிகாரங்களும் பெரும் சொத்து

சுகங்களும் கொடுக்கப்பட்டவர்களாவர். இறுதி நபி முஹம்மத் (ஸல்லல்லஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் மகத்தான தோர் ஆட்சியை நிறுவிய உலகின் முதல் தரமான வரலாற்றுப் புருஷர். இறுதி நாள் வரை அன்னாரை முந்திச் செல்லும் மற்று மொருவர் வரலாற்றில் தோன்றிட முடியாது.

அதேபோன்று சுவனத்தைக் கொண்டு நன்மாராயம் கூறப்பட்ட விஷேட பத்துப் பேர்களில் அபூபக்ர், உஸ்மான், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப், சுபைர் இப்னுல் அவ்வாம் (ரழியல்லாஹு அன்ஹும்) போன்றவர்கள் பெரும் சொத்துக்களை உடையோராக இருந்துள் ளனர். இன்றுவரை எண்ணற்ற நற்பணிகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கின்ற செல்வந்தர்களும் இருந்து கொண்டே இருக்கிறார்கள்; இனியும் இருப்பார்கள். இத்தகையவர்களது கைகளில் உலகின் செல்வங்களை அல்லாஹ் கொடுத்ததனால் நன்மைகளே அதிகம் விளைந்துள்ளன.

கிறிஸ்தவம் சொல்வது போன்று செல்வம் பற்றிய ஒரு தத்து வத்தை இஸ்லாம் சொல்லவில்லை. பணக்காரன் அல்லாஹ்வின் பிரதேசத்தில் (சுவனத்தில்) நுழைவதை விட ஒரு ஒட்டகம் ஊசிக் காதில் நுழைவது எளிதானது என்ற கிறிஸ்தவக் கூற்றுக்கு நேர் எதிராகவே இஸ்லாத்தின் தத்துவம் காணப்படுகிறது. நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். ''சிறந்த செல்வம் ஸாலிஹான மனிதனிடத்தில் இருக்கும் செல்வமே.'' (அஹ்மத்)

புத்தி பேதலித்தவர்களது செல்வத்திற்கான பாதுகாப்பு (4: 5), கடன் கொடுக்கல் வாங்கல் நடைமுறைகள் (2: 282), பணம் ஓரிடத்தில் தேங்கிக் கிடக்காமலிருப்பதற்கான வழிமுறை (59: 8), அநாதைகளின் சொத்துக்களுக்கு உத்தரவாதம் (17: 34), வியாபாரப் பொருட்களின் சீரான அளவை நிறுவை (17: 35), ஊதாரித்தனமின்றி உரியவர்களுக்கு அவரவர்களின் செல்வப் பங்கை வழங்குதல் (17: 26- 27)... என பணத்தோடு தொடர்பான எண்ணற்ற சட்டங்களை அல்குர்ஆன் பேசிக் கொண்டிருப்பது உலக செல்வங்களைப் புறக்கணித்ததன் விளைவா?

கைத்தொழில், விவசாயம், வியாபாரம், தரிசு நிலைங்களைப் பராமரித்தல் என்பவற்றோடு தொடர்பான சட்டங்கள் எமது சட்ட நூல்களின் ஒரு பெரும் பகுதியாகும்.

''தனது கையால் உழைத்து உண்பதைவிட சிறந்த உணவு வேறு எதுவுமில்லை. நபி தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) தனது கையால் உழைத்து உண்டார்கள்'' எனும் நபிமொழி, ''தாவூதுக்கு இரும்பை உருக்கிக் கொடுத்தோம்'' *(24: 10)*, ''மேலும் அவருக்கு கவசங்கள் உற்பதி செய்யும் முறையைக் கற்றுக் கொடுத்தோம்'' *(21: 80)* என்ற அல்குர்ஆன் வசனங்கள், ''ஒரு மனிதன் ஒரு பயிரை அல்லது மரத்தை நட்டு அதிலிருந்து மனிதனோ, பறவையோ மிருகமோ, எது உண்டாலும் அவனுக்கு அது ஒரு தர்மமாகும்'' என்ற நபி வாக்கு அனைத்தும் கூறுவது மறுமையைப் பற்றியல்ல; மறுமையின் விளை நிலம் உலகத்தைப் பற்றியே.

அவ்வக் காலத்திற்கு அவசியமாகும் உற்பத்திகளில் முஸ்லிம் சமூகம் ஈடுபடுவது பர்ளு கிபாயாவாகும். அந்த உற்பத்திகளில் ஈடுபடாத வேளை முஸ்லிம் சமூகம் பாவியாகிறது என்ற கருத்தை எமது சட்ட வல்லுனர்கள் விரிவாக விளக்கியிருக்கிறார்கள். இதன் படி, எமது சமகால உலகத்திற்கு அவசியமான உற்பத்திகள் பற்றி என்ன சொல்ல இருக்கிறது- எமது பிள்ளைகளுக்கு அவசியமான விளையாட்டுப் பொருட்களிலிருந்து அனைத்தையும் ஏனையோரே எமக்காக உற்பத்தி செய்கிறார்கள் என்ற வெட்கக்கேடான செய்தியை விட!

எமது சமகாலத்தை இரும்பின் யுகம் என்று கூறுகின்றனர். இந்த யுகத்தில் ஏற்பட்ட இரும்புப் புரட்சி வரலாற்றையே தலைகீழாக மாற்றிப் போட்டு விட்டது. அதனைக் கைத்தொழில் புரட்சி என்றும் குறிப்பிடுகின்றோம். அத்தகையதொரு காலப்பகுதியில் வாழும் எமக்கு இரும்பின் அத்தியாயத்தை அல்குர்ஆனில் ஓத முடிகிறதே தவிர, இரும்பினால் ஒன்றையும் சாதிக்க முடியவில்லை என்பது எத்துணை வேதனையானது! அந்த வேதனையில் உலகம் பற்றிய எமது பிழையான பார்வைக்கும் பங்கிருக்கின்றது.

உலகம் செத்த பிணத்திற்கொப்பானது; அதனை நாய்கள் தவிர வேறு எந்தப் படைப்பும் தேடுவதில்லை என்ற பார்வை

கொண்டவர்கள் இரும்பு யுகத்தில் வாழ்வதற்கே தகுதியற்றவர் களாகி விடுகின்றனர். இஸ்லாத்தின் பிரதான நான்கு வணக்க வழி பாடுகளில் இரண்டு (ஸகாத்தும் ஹஜ்ஜும்) உலக செல்வங்களால் நிறைவேற்றப்பட வேண்டியவை என்பதை இவர்கள் அங்கீகரித் திருப்பதானது உலகம் பற்றிய இவர்களது பார்வையில் ஏற்பட்ட ஒரு முன்னேற்றம் என்றுதான் கருத வேண்டியிருக்கின்றது.

ஆன்மிகம், பௌதிகம் என்ற இரண்டு அம்சங்களுக்கிடையே பேண வேண்டிய நடுநிலைத் தன்மையையும் தெளிவான பார்வை யையும் இழந்ததனால் பலர் பேசுகின்ற இஸ்லாமிய மொழி தடம் புரண்டு காணப்படுகின்றது. அவர்கள் பேசுகின்ற குழப்பமான மொழியால் இஸ்லாத்தின் மகிமை சிதைவுறுகின்றது. ஒவ்வொன்றுக் கும் உரிய இடத்தை வழங்கிப் பேசத் தெரியாத காரணத்தால் ஆன் மிகம் சிலபோது லௌகிகத்தை விழுங்கி விடுகிறது. அதன் எதிர் விளைவாக ஆன்மிகம் வேண்டாம் என அதனைத் துறந்து செல் வோர் இன்று அதிகரித்திருக்கின்றனர்.

இன்றைய தாஇகள் பேசுகின்ற மொழியால் அதிகமாகத் தூக்கி எறியப்பட்டிருப்பது உலகமே. அவர்கள் கொடுக்கும் இஸ்லாம் பற்றிய விளக்கத்தில் உலகத்திற்கு இடமேயில்லை. அதேநேரம், அவர்கள் வாழும் வாழ்க்கையில் ஆன்மிகத்திற்கும் இடமில்லை. இந்தப் பரிதாபத்தில் உழன்று கொண்டிருக்கும் ஒரு சமூகம் ஆன் மிகத்திலும் எதனையும் சாதிக்கப் போவதில்லை; லௌகிகத்திலும் எதனையும் சாதிக்கப் போவதில்லை.

இந்த அவலத்தை இஸ்லாத்தைப் போதிக்கின்றவர்கள் உணர வேண்டும். அவர்கள் பேசும் மொழி இரண்டிற்கும் உரிய இடத்தை வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஒன்றை அளவுக்கு அதிக மாக உயர்த்தி மற்றொன்றைத் தாழ்த்தும் வேலையை அவர்களது பேச்சுக்கள் செய்துவிடக் கூடாது.

உலகின் எந்தவோர் ஆகுமாக்கப்பட்ட அலங்காரத்தையும் ஹராமாக்குகின்ற அதிகாரம் எவருக்கும் கொடுக்கப்படவில்லை என்று திட்டவட்டமாக 7: 32 வசனம் கூறுகின்றது. தொழுகின்ற

வேளைகளில் தொழுகையாளிகள் தங்களை அலங்கரித்துக் கொள்ளு மாறு அதற்கு முந்திய வசனம் கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது.

உலகில் ஒரு கருமத்தை ஆற்றுகின்றபோது அதனை வினைத் திறன்மிக்கதாக செய்து முடிக்குமாறு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறுகின்றமை உலகம் பற்றிய பார்வைக்கு இன்னுமொரு பரிமாணத்தைக் கொடுக்கின்றது. **''உங்களில் ஒருவர் ஏதாவது ஒரு செயலைச் செய்தால் அதனை வினைத்திறன் மிக்கதாக செய்வதையே அல்லாஹ் விரும்புகின்றான்''** என்ற நபிமொழி மார்க்க மற்றும் உலக விவகாரங்களில் அசிரத்தை, அலட்சியம் என்பவற்றை அல்லாஹ் வெறுக்கிறான் என்று புலப்படுத்தவில்லையா?

**''அடுத்த நிமிடம் மறுமை வரப்போகிறது. அவ்வேளை ஒருவர் தனது கையில் ஒரு ஈச்ச மரக் கன்றை வைத்திருக்கிறார். மறுமை நாள் வருவதற்கு முன்னால் அவர் அதனை நட்டுவிட முடியுமாக இருந்தால் நட்டு விடட்டும்'' (அஹ்மத்)** எனும் மற்றுமொரு நபி மொழி இது விடயத்தில் வந்திருக்கும் ஓர் அற்புதமான செய்தியா கும். உலகில் ஒரு மரத்தை நடுவதும் அல்லாஹ் விரும்புகின்ற ஒரு நற்செயல் என்பதை உணர்த்துகின்றது அந்தச் செய்தி. மறுமை வரப்போகும் நேரத்தில் மரத்தை நட்டு யார் கனி பறிக்கப் போகிறார் என்ற கேள்வியை அர்த்தமற்றதாக்கும் ஓர் உலகியல் செயல்பாடல்லவா அது!

அதுபோன்று, உலகம் பற்றிய பார்வைக்குப் பெறுமானம் வழங் கும் மற்றுமொரு நபிமொழி இவ்வாறு வருகிறது: **''நிச்சயமாக அல்லாஹ் ஒரு மனிதன் மீது சொரிந்த அருளின் வெளிப்பாட்டை அவனில் காண விரும்புகிறான்.'' (அத்திர்மிதி)**

மனித சமூகம் முதற் தடவையாக மத வட்டாரங்களில் செவி மடுக்கும் ஒரு நபித்துவ செய்தி பின்வருமாறு முரசொலிக்கிறது: **''உனது உடலுக்கு நீ ஆற்ற வேண்டிய கடமை இருக்கிறது; உனது கண்களுக்கு நீ கொடுக்க வேண்டிய உரிமை இருக்கிறது; உனது மனைவிக்கு நீ வழங்க வேண்டிய உரிமை இருக்கிறது; உன்னை சந்திக்க வருபவர்களுக்கு நீ செய்ய வேண்டிய கடமை இருக்கின்றது.'' (அல்புகாரி, முஸ்லிம்)**

நோய் வருவது அல்லாஹ்வின் ஏற்பாடாகும். எனவே, அந்த ஏற்பாட்டைப் பொருந்திக் கொள்ள வேண்டும். மருந்து உட்கொண்டு அந்த ஏற்பாட்டை நிராகரித்து விடக் கூடாது என்றொரு மாயை மத வட்டாரங்களை ஒரு காலத்தில் ஆக்கிரமித்திருந்தது. மருந்து உட்கொண்டால் கத்ரை அது போக்கிவிடுமா என ஒரு நபித் தோழர் அதனைக் கேட்கவும் செய்தார். இந்தப் பிரச்சினைக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விவாதத்திற்கிடமில்லாமல் முற்றுப்புள்ளி வைத்தார்கள். சொன்னார்கள்: **''மருந்தும் அல்லாஹ்வின் கத்ர் தான்.''**

இவ்வாறு லௌகிகம், ஆன்மிகம் பற்றிய பார்வையை நடுநிலையாக நின்று விளக்குவதற்கும் அந்தப் பார்வையில் இதுவரை ஏற்பட்டுள்ள மயக்கங்கள், குழப்பங்கள் போன்றவற்றை நீக்குவதற்கும் அழைப்புப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் தமது மொழியைத் தயார்படுத்த வேண்டும். கத்ரை ஒரு அடக்குமுறையாகவும் பற்றற்ற தன்மையாகவும் துறவறமாகவும் காரணிகளைப் புறக்கணித்து கருமமாற்றுவதை தவக்குலாகவும் அவர்கள் சித்திரிக்காதிருக்க வேண்டும்.

இத்தகைய பிழையான சித்திரிப்புக்கள் முஸ்லிம் சமூகத்தைப் பாதாளம் நோக்கியே இட்டுச் சென்றிருகின்றன. விவகாரங்கள் அனைத்தும் அதனதன் போக்கில் நடந்து கொண்டிருக்கட்டும்; நீ திட்டமிட்டு சாதிக்கப்போவது ஒன்றுமில்லை. அனைத்தும் முன்னமேயே திட்டமிடப்பட்டுள்ளன. எனவே, நடப்பது நடந்தே தீரும்; அதனை மாற்ற உன்னால் முடியாது; அதுதான் கத்ர் என்ற விளக்கம் முஸ்லிம் சமூகத்தை முன்னேற்றப் பாதையில் எப்போதாவது இட்டுச் சென்றுள்ளதா?

பூமியை வளப்படுத்தி நிர்வகித்து அதன் பொக்கிஷங்களை உன்னதமான நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டிய அல்லாஹ்வின் பிரதிநிதி கலீபா மேலே கூறப்பட்ட கத்ர் கோட்பாட்டை சரி கண்டால் அவரது பணி என்னவாகும்- **'இல்லை'** என்ற இலக்கை நோக்கி **'முடியாது'** என்ற பாதையில் பயணிக்கும் **'இயலாமை'** மிக்க மனிதனாக அவன் இருப்பதைத் தவிர.

முஸ்லிம்களை நாலாபுறமும் இயலாமைகள் சூழ்ந்து கொண் டால் அவர்கள் மார்க்க விடயங்களில் மட்டும் வெற்றி பெற்ற வர்களாக மாறிவிட முடியுமா?

எனவே, இயலாமைகளின் பால் இட்டுச் செல்லும் மொழி பேசி இஸ்லாத்தையும் அதன் மகிமையையும் தாஇகள் கொச்சைப்படுத்தி விடாதிருக்க வேண்டும். அவர்கள் பேசும் மொழி இஸ்லாத்தையும் முஸ்லிம் சமூகத்தையும், ஏன் உலகத்தையும் கூட உன்னதமான வெற்றிப்படிகளில் இட்டுச் செல்வதாகவே இருக்க வேண்டும்.

# 04

## வணக்க வழிபாடுகளை வலியுறுத்தி நற்குணங்களைப் புறக்கணிக்காத மொழி

இஸ்லாமிய அழைப்பு மொழியின் மற்றுமொரு சிறப்புத் தன்மை, வணக்க வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அதே வேளை, நற்குணங்களையும் இஸ்லாமிய விழுமியங்களையும் மறந்து விடாதிருப்பதாகும்.

வணக்க வழிபாடுகளான தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்றவை இஸ்லாத்தின் தூண்களாகும். அல்லாஹ்வோடு அடியானை நெருக்கமாக வைத்திருக்கும் இந்த வணக்க வழிபாடுகளுக்கு உதவியாக திக்ர், துஆ, தவ்பா, இஸ்திஃபார், குர்ஆன் ஓதுதல், காலை மாலை ஓதல்கள், சந்தர்ப்ப துஆக்கள் போன்றவையும் இருக்கின்றன. ஒரு மனிதனை எந்நேரமும் அல்லாஹ்வுடன் தொடர்பில் வைத்துக் கொள்வதற்கு இஸ்லாம் செய்திருக்கும் ஏற்பாடுகள் அற்புதமானவை!

நாவுகள் அல்லாஹ்வின் திக்ருகளில் நனைந்த வண்ணமிருக்கும்... உள்ளங்கள் அல்லாஹ்வின் அன்பிலும் அச்சத்திலும் நிலைத்திருக்கும்... உறுப்புக்கள் குனிந்து, பணிந்து சிரம் தாழ்த்தி அல்லாஹ்வை வணங்கும்... ஒரு நாளைக்கு ஐந்து தடவைகள் அடியான் தனது நேரத்தை ஒதுக்கி அல்லாஹ்வை வணங்குவதற்காகப் பள்ளி செல்கிறான். அப்போது அவன் தனது பணிவையும் கட்டுப்பாட்டையும் அல்லாஹ்விடம் சமர்ப்பிக்கின்றான். அதற்குப் பகரமாக அல்லாஹ்வின் கூலியையும் நெருக்கத்தையும் அன்பையும் எதிர்பார்க்கிறான்.

அதுமட்டுமல்ல, இஸ்லாம் எந்நேரமும் ஒரு மனிதனை அல்லாஹ்வின் எண்ணத்தில் வாழுமாறு ஊக்குவிக்கின்றது.

உணவிலும் உறக்கத்திலும் நடை பாதையிலும் நடைமுறைகள் அனைத்திலும் துஆக்கள் ஓதி வந்த முன்னுதாரணத்தை நபிகளாரின் வாழ்க்கையில் காணும் ஒரு முஸ்லிம் எவ்வாறு அதனைப் பின் பற்றாமல் இருக்க முடியும்?

**வணக்க வழிபாடுகள் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகின்றன**

இஸ்லாம் வணக்கங்களுக்கான வெளித்தோற்றங்களை மட்டும் எமக்கு அறிமுகம் செய்யவில்லை. மாறாக, ஒவ்வொரு வணக்கமும் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி இறையுணர்வுகளையும் இஹ்ஸா னையும் நற்குணங்களையும் மனிதனுக்குள் வளர்க்க வேண்டுமென இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. கெட்டவையிலிருந்து மனிதனை அந்த வணக்கங்கள் பாதுகாக்க வேண்டுமென வலியுறுத்துகின்றது.

தொழுகை தீய மானக்கேடான விடயங்களிலிருந்து மனிதனைப் பாதுகாக்க வேண்டும் *(29: 45)*. பதட்டம், நம்பிக்கையின்மை, கஞ் சத்தனம் போன்றவை தொழுகையாளிகளிடம் இருக்காது *(70: 19-23)*. தொழுகையின் மிகப் பெரிய அடைவு இறை சிந்தனையே *(29: 45)*.

ஸகாத் செல்வத்தையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்து கின்றது *(9: 103)*.

ஸகாத்தைக் கொடுப்பவர்கள் மட்டுமல்ல, அதனை வாங்குப வர்களும் கூட அவர்களது தேவைகளை ஈடு செய்வதற்காக அல்லாஹ் விதித்த ஸகாத் கடமையை எண்ணி அவனுக்கு நன்றி செலுத்துப வர்களாக இருக்க வேண்டும். செல்வந்தர்கள் மீது ஏற்படும் பொறாமையும் அதனால் அவர்களது உள்ளத்திலிருந்து நீங்கிவிட வேண்டும்.

நோன்பு இறையச்சத்தை மனிதனுக்குள் வளர்த்து *(2: 183)* ஆசை களின் ஆதிக்கத்திலிருந்து மனித உள்ளத்தைப் பாதுகாக்கிறது. நோன்பு எனக்குரியது; நானே அதற்குக் கூலி கொடுப்பேன். எனக்காக (எனது அடியான்) தனது உணவையும் குடிப்பையும் மனைவியையும் விட்டு விடுகிறான் என்ற ஹதீஸ் குத்ஸி இதனையே சுட்டிக் காட்டுகிறது.

ஹஜ் பாவச் செயல்கள் மற்றும் விதண்டாவாதம் போன்றவை கலவாத கடமையாகும் (2: 197). ஹஜ்ஜின்போது அறுக்கப்படும் கால்நடைகளின் இறைச்சி, இரத்தம் என்பன அல்லாஹ்வைச் சென்றடைவதில்லை. மாறாக, அந்த வேளைகளில் ஒரு மனித உள்ளம் வெளிப்படுத்தும் இறையுணர்வே அல்லாஹ்வைச் சென்ற டைகின்றது. (22: 97)

இவ்வாறு குர்ஆனும் சுன்னாவும் எடுத்துக் கூறும் உளப்பக்கு வங்கள், இறையுணர்வுகள், பண்பாடுகள் என்பன இல்லாது போனால் நாம் செய்யும் வணக்க வழிபாடுகள் உயிரற்ற சடங்குகளாகவே காட்சியளிக்கும்.

வணக்க வழிபாடுகளை வலியுறுத்தும்போது அவற்றால் ஏற்படு கின்ற உளப்பக்குவங்கள், பண்பாடுகள், நற்குணங்கள் என்பவற்றைப் புறக்கணிப்பதாக எமது அழைப்பு மொழி இருத்தலாகாது.

**நற்குணங்கள் ஈமானின் பிரதிபலிப்புகளே**

வணக்க வழிபாடுகளுக்கு இஸ்லாம் கொடுத்த முக்கியத்துவத்தை சிறிதும் குறைக்காத வகையில் நற்குணங்களுக்கும் உன்னதமான இடத்தை இஸ்லாம் வழங்கியிருக்கின்றது.

ஈமான் எழுபதுக்கும் அதிகமான பகுதிகளைக் கொண்டது. அவற்றில் மிக உயர்ந்தது லா இலாஹ இல்லல்லாஹ். இறுதி நிலை யில் இருப்பது வீதியிலிருக்கும் ஓர் அழுக்கை அகற்றுவதாகும் என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய பொன்மொழி அனைவரும் அறிந்ததே.

ஈமானின் இத்தகைய பிரிவுகளை விளக்கும் வகையில் 'அல் ஜாமிஉ ஃபீ ஷிஅபில் ஈமான்' எனும் அற்புதமானதொரு நூலை இமாம் அல்பைஹகி அவர்கள் எழுதியுள்ளார்கள். பத்து வால்யூம் களுக்கும் அதிகமான அந்தத் தொகுப்பின் பெரும் பகுதியை நற்குணங்கள் உள்ளடக்கியுள்ளன.

பின்வரும் நபிமொழிகள் ஈமானுக்கும் நற்குணங்களுக்குமிடை யிலான நெருக்கத்தை வலியுறுத்துகின்றமை வெளிப்படையானதே.

''அல்லாஹ்வையும் மறுமையையும் எவர் ஈமான் கொள்கின் றாரோ அவர் தனது இரத்த உறவுகளை இணைத்து அனுசரிக்கட்டும். அல்லாஹ்வையும் மறுமையையும் எவர் ஈமான் கொள்கிறாரோ அவர் தனது அண்டை வீட்டாரைத் துன்புறுத்தாதிருக்கட்டும். அல்லாஹ்வையும் மறுமை நாளையும் எவர் ஈமான் கொள்கிறாரோ அவர் நல்லதைப் பேசட்டும் அல்லது அமைதியாக இருக்கட்டும்.'' (அல்புகாரி, முஸ்லிம்)

''தான் விரும்புவதை தனது சகோதரனுக்கு விரும்பாத வரை உங் களில் எவரும் ஈமான் கொள்ள முடியாது.'' (அல்புகாரி, முஸ்லிம்)

''எனது ஆன்மா எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! நீங்கள் ஈமான் கொள்ளாத வரை சுவனம் நுழைய முடியாது. நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்காத வரை ஈமான் கொள்ள முடியாது.'' (முஸ்லிம்)

''அண்டை வீட்டான் பசித்திருக்கும் போது வயிறு நிறைய உண்பவன் முஃமினாக முடியாது.'' (அத்தபாரானி, அல்ஹாகிம், அல்பைஹகீ)

முஃமின்கள், முத்தகீன்கள், ரஹ்மானின் அடியார்கள் போன் றோரின் பண்புகளை விபரிக்கும்போது அல்குர்ஆன் அவர்களது எண்ணற்ற நற்குணங்களை வணக்க வழிபாடுகளோடு இணைத்துப் பேசியிருக்கிறது. உதாரணமாக, 23: 1-8 வரையிலான வசனங்கள் தொழுகையில் இறையச்சம், ஸகாத்தில் பேணுதல், கேளிக்கை களைத் தவிர்த்தல், விபசாரத்தை நெருங்காதிருத்தல், நம்பிக்கை களையும் உடன்படிக்கைகளையும் பாதுகாத்தல் போன்ற உயர் குணங்களை வலியுறுத்துகின்றன.

அறிவுடையோர் பற்றிப் பேசுகின்ற 13: 20-22 வசனங்கள் உடன் படிக்கைகளை நிறைவேற்றுதல், இரத்த உறவைப் பாதுகாத்தல், மறுமையின் அச்சம், பொறுமை, தொழுகை, செலவு செய்தல் மற்றும் தீமைகளை நன்மைகளால் தடுத்தல் போன்ற உயர் குணங்களைப் பிரஸ்தாபிக்கின்றன.

25ஆம் அத்தியாயத்தில் ரஹ்மானின் அடியார்களது பண்புகள் பற்றியும் 76ஆம் அத்தியாயத்தில் சான்றோர்களது பண்புகள் பற்றியும் இதே விதமாகப் பேசியிருப்பதை நாம் காணலாம்.

ஈமான் எவ்வாறு நற்குணங்களை வெளிப்படுத்துகிறதோ, அதே போன்று இறை நிராகரிப்பும் நயவஞ்சகமும் மோசமான பண்புகளை வெளிப்படுத்துகின்றன எனும் உண்மையை அல்குர்ஆன் பல்வேறு இடங்களில் பிரஸ்தாபிக்கின்றது *(16: 105), (8: 22-23).*

நயவஞ்சகர்களின் நான்கு பண்புகளை விளக்கும் நபிமொழி (அல்புகாரி, முஸ்லிம்) பிரபல்யமானது. பேசினால் பொய்; நம்பினால் மோசடி; வாக்குறுதி அளித்தால் ஏமாற்று; தர்க்கித்தால் அசிங்கமான பேச்சு என்பனவே அவையாகும். இத்தகைய மனிதன் தொழுது, நோன்பு நோற்றாலும் ஒரு நயவஞ்சகனாகவே இருப்பான் என்று மற்றுமோர் அறிவிப்பில் வந்துள்ளது.

**அனைத்திலும் நற்குணங்கள்**

இஸ்லாம் கூறும் நற்குணங்கள் வாழ்க்கையின் ஓரிரு அம்சங்களோடு மட்டுப்படுத்தப்பட்டவையல்ல. மாறாக, வாழ்வு முழுவதிலும் நற்குணங்களை வலியுறுத்தும் மார்க்கமே இஸ்லாம்.

இஸ்லாம் அறிவு சார்ந்த நற்குணங்களைப் பேசியிருக்கின்றது. அறிவில் அமானிதம், விடயதானத்தில் கவனம், உண்மைக்குப் பணிந்துவிடல், அடுத்தவரின் கருத்துக்கு மதிப்பளித்தல், தவறை ஒப்புக் கொள்ளுதல், கண்மூடித்தனமான நம்பிக்கை மற்றும் பின்பற்றுதல் போன்றவற்றை வெறுத்தொதுக்குதல், அறிவுத் தேடலை வளர்த்தல், நல்லதை எங்கிருந்தாலும் கற்றல்...

குடும்பத்தில் இருக்க வேண்டிய நற்குணங்களை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. கணவன்-மனைவிக்கிடையிலான அன்பு, இருவரும் அடுத்தவரின் கடமைகளில் கருத்தாக இருத்தல், குடும்ப இரகசியங்களைப் பாதுகாத்தல், ஒருவர் மற்றவரால் ஏற்படுகின்ற அசௌகரியங்களைப் பொறுத்தல், குழந்தைகள் மீது அன்பு, பெற்றார் நலன் பேணல், இரத்த உறவை நனைத்தல், உறவினர்களின் தேவைகளைக் கவனித்தல்...

தனிமனிதனிடம் இருக்க வேண்டிய நற்குணங்களை இஸ்லாம் பிரஸ்தாபிக்கிறது. நீதி, பேருபகாரம், மனிதனிடத்திலும் உயிரினங் களிடத்திலும் கருணை, அர்ப்பணம், தியாகம், உண்மை, நேர்மை, வாக்குறுதி பேணல், உடன்படிக்கையை நிறைவேற்றுதல் நன்மைக்கு ஒத்துழைத்தல், ஒழுங்கு-நேர்த்தி-தூய்மை என்பனவற்றில் கண்டிப்பு, சூழலைப் பாதுகாத்தல்...

அரசியல் வாழ்க்கை வேண்டி நிற்கும் பண்புகளை இஸ்லாம் பேசுகின்றது. மார்க்கத்தின் மகிமையைப் புரிய வைத்தல், அநீதிகளை அகற்றி உண்மையை வாழவைத்தல், கலந்தாலோசனை, பாரபட்சம் காட்டாத நிர்வாகம், செல்வத்தை உரிய இடங்களிலிருந்து பெறு தலும் உரிய இடங்களில் செலவு செய்தலும், தனிமனித நலன் களையும் உரிமைகளையும் பாதுகாத்தல், முரண்படுவோருடன் தாராளத்தன்மை, நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல், கடும் உழைப்பை பண்பாகக் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்குதல்...

பொருளாதாரம் தொடர்பிலான உயர் குணங்களை இஸ்லாம் எடுத்துரைக்கிறது. பூமியை வளப்படுத்தல், தரிசு நிலங்களைப் பயன்படுத்துதல், வேளாண்மை, கைத் தொழில், வியாபாரம் போன்றவற்றை வணக்கமாகக் கருதுதல், பதுக்கல், மோசடி, வட்டி போன்றவற்றை இல்லாமல் செய்தல், வீண் விரயத்தைத் தவிர்த்தல், அநாதைகள் மற்றும் பொது உடமைகளுக்கு உரித்தான சொத்துக் களைப் பாதுகாத்தல்...

இவ்வாறு நற்குணங்களின் அத்தியாயங்கள் வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் விரிந்து செல்கின்றன. பத்திரிகைத்துறை, ஆய்வுத்துறை, மருத்துவத்துறை, நீதித்துறை என எத்துறையை எடுத்துக் கொண்டாலும் அங்கு இஸ்லாம் அவ்வத் துறைக்குத் தேவையான விழுமியங்கள், பெறுமானங்கள், நற்குணங்கள் என்பவற்றை வலியுறுத்தாமலில்லை.

### அனைவருக்கும் நற்குணங்கள்

அனைத்திலும் நற்குணங்கள் இருப்பதுபோல் அனைவருக்கும் நற்குணங்கள் அவசியம் என்பதையும் இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

அது மட்டுமல்ல, முஸ்லிம்களின் நற்குணங்களால் முஸ்லிமல்லா தவர்களும் பயன்பெற வேண்டும் என்பதில் கண்டிப்பாகவே இருக் கிறது இஸ்லாம். இஸ்லாம் போதிக்கும் நற்குணங்கள் அனை வருக்குமானதாகும் என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

நீதி, அன்பு, கருணை, உண்மை, வாக்குறுதி பேணல் போன்ற அனைத்துப் பண்புகளும் அனைவருக்குமானதே. அதேபோன்று தீய பண்புகளை எவர் மீதும் ஒரு முஸ்லிம் வெளிப்படுத்த முடியாது. பொய், மோசடி, அநீதியிழைத்தல், உரிமை மீறல், என்பன முஸ் லிம்கள் விடயத்தில் மட்டுமல்ல, அனைத்து மக்களது விடயத்திலும் அவை ஹராமாக்கப்பட்டே இருக்கின்றன.

மனிதர்களைத் தாண்டி ஏனைய உயிரினங்கள் விடயத்திலும் நற்பண்புகளைப் பேணுமாறு இஸ்லாம் வலியுறுத்துகின்றது. அல்லாஹ்வின் எந்தவொரு படைப்பையும் வீணாகத் துன்புறுத்து வதையோ துஷ்பிரயோகம் செய்வதையோ அவற்றின் பயன்பாட்டை விரயமாக்குவதையோ இஸ்லாம் அனுமதிக்கவில்லை. பூமியை வளப்படுத்தியதன் பின் அதன் பயன்பாட்டை சீர்குலைக்க வேண் டாம் என அல்குர்ஆன் (7: 85) கூறுகின்றது. **அல்லாஹ் அழகானவன்; அவன் அழகை நேசிக்கின்றான் (முஸ்லிம்)** எனும் நபிமொழி அனைத்தும் அழகாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதை வலி யுறுத்துகின்றது. **(தன்னலம் பாராமல்) பேருபகாரம் புரிவதை அல்லாஹ் அனைத்தின் மீதும் விதியாக்கியுள்ளான் (முஸ்லிம்)** என்பது மற்றுமொரு நபிமொழியாகும்.

நோக்கம் சிறந்ததாக இருந்தால் வழிமுறை எதுவாகவும் இருக் கலாம் என்ற கோட்பாட்டை இஸ்லாம் அங்கீகரிப்பதில்லை. இலஞ்சம், பதுக்கல், வட்டி போன்ற தவறான வழிகள் மூலம் ஈட்டப்பட்ட செல்வத்தைக் கொண்டு மஸ்ஜித்களைக் கட்டுவதும் சமூக சேவைகள் புரிவதும் இஸ்லாத்தின் பார்வையில் நன்மைகள் அல்ல. அல்லாஹ் தூய்மையானவன்; அவன் நோக்கத்திலும் வழி முறையிலும் தூய்மையையே விரும்புகின்றான்.

இவ்வாறு நற்குணங்கள் மற்றும் உன்னதமான விழுமியங் களுக்கும் பெறுமானங்களுக்கும் இஸ்லாம் கொடுத்திருக்கும்

அந்தஸ்த்து சாதாரணமானதல்ல. குர்ஆனை பண்பாகக் கொண்டு வாழ்ந்து காட்டிய மாநபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் முன்மாதிரிகள் அனைத்தும் அதற்குச் சான்றாகவே இருக்கின்றன.

இந்த வகையில் எமது அழைப்பு மொழி வணக்க வழிபாடுக ளுக்கும் நற்குணங்களுக்கும் உரிய இடத்தை வழங்குவதாக இருக்க வேண்டும். வணக்க வழிபாடுகள் இன்றைய இஸ்லாமிய அழைப் பில் பெற்ற முக்கியத்துவத்தை நற்குணங்கள் பெறவில்லை என்பதே உண்மை.

''ஒரு சமூகம் நற்குணங்களில் சரிந்து விட்டால் அந்த சமூகத்திற்கு மரணச் செய்தி கூறுங்கள்'' என ஒரு கவிஞர் பாடினார். ஒரு சமூகத்தை அழிவிலிருந்து காக்கும் வேலி நற்குணங்களாகும். பாதுகாப்பு வேலி உடைந்து விட்டால் ஆபத்து எந்நேரமும் அதை அணுகலாம். ஒரு சமூகம் தனது சுயத்தையும் தனித்துவத்தையும் பாதுகாத்து அது சுமந்திருக்கும் தூதை உலகிற்கு எட்டச் செய்ய வேண்டுமானால் அது நிச்சயமாக நற்குணங்களின் சமூகமாகத் திகழ வேண்டும்.

ஈமானின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தி, வணக்க வழிபாடுகள் அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படுவதற்கு ஏதுவாக இருக்கின்ற ஒரே காரணிதான் நற்குணங்கள் என்பதை முஸ்லிம் களின் அழைப்பு மொழி மறந்துவிடலாகாது.

## 05

# அகீதாவின் மகிமையை உயர்த்தி அன்பையும் தாராளத் தன்மையையும் மறந்து போகாத மொழி

இஸ்லாமிய அழைப்பு மொழி தன்னகத்தே கொண்டிருக்கும் மற்றுமொரு சிறப்புத் தன்மை யாதெனில், 'அகீதா' எனும் இஸ்லாத்தின் கோட்பாடுகளது உன்னதங்களைப் புரியவைக்கும் அதே வேளை, அவற்றைப் புரியாதவர்களுடன் அன்பு மற்றும் தாராள மனப்பான்மையை வற்றச் செய்யாமலுமிருப்பதாகும்.

ஒரு முஸ்லிம் தான் ஒரு முஸ்லிம் என்பதனை கௌரவமாகக் கருதும் அதேவேளை, முஸ்லிமல்லாத ஒருவரை இழிவுபடுத்த முடியாது என்பதே இந்தத் தத்துவத்தின் சுருக்கம் எனலாம்.

ஒரு முஸ்லிம் தனது மார்க்கத்தை விலைபேச மாட்டான். மார்க்கத்தில் விட்டுக்கொடுக்க முடியாத அடிப்படைகள் விடயத்தில் சமரசம் செய்துகொள்ள மாட்டான். உலகமே தனது காலடியில் வைக்கப்பட்டாலும் அதற்குப் பகரமாக மார்க்கத்தைத் தாரை வார்க்க மாட்டான். எத்தனை சோதனைகள் அவனை சூழ்ந்து கொண்ட போதிலும் மார்க்கத்தை விட்டு ஒருபோதும் அவன் விரண்டோட மாட்டான். மாறாக, அந்த சோதனைகள் மூலம் புடம் போடப்பட்ட பத்தரை மாற்றுத் தங்கமாக அவன் மாறுவான்.

அஹ்ஸாப் போரில் வரலாறு காணாத ஒரு பெரும் படை மதீனாவை முற்றுகையிட்டிருந்தது. மதீனா முழுவதும் அச்சம் நிலவிய அந்த சூழலில் இறை விசுவாசிகள் எப்படியிருந்தார்கள் என்று கூறுகிறது 23:22 வசனம்.

''முஃமின்கள் அந்தப் (பெரும்) படையைக் கண்ணுற்ற போது அல்லாஹ்வும் அவனது தூதரும் எமக்கு வாக்களித்தது

**இதனைத்தான். அல்லாஹ்வும் அவனது தூதரும் உண்மையையே உரைத்துள்ளனர் (என்று) கூறினர். அது அவர்களது ஈமானையும் கட்டுப்படும் தன்மையையும் மேலும் அதிகப்படுத்தி விட்டது.''**

இஸ்லாத்தின் கண்ணியம் மீதான இந்த உறுதி ஒவ்வொரு முஸ்லி மிடமும் இருக்க வேண்டும். குறைஷிகள் அபூ தாலிபினூடாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது பணியைத் தடைசெய்ய முற்பட்டபோது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வெளிப்படுத்திய உறுதி யாவரும் அறிந்ததே. வலது கையில் சூரியனையும் இடது கையில் சந்திரனையும் வைத்து இந்தப் பணியை விட்டு விடுங்கள் என்று கூறினாலும் நான் இதனை விடுவதற்கில்லை என்று மிகத் தெளிவாக அவர்கள் கூறிவிட்டார்கள்.

இதே உறுதி அன்னாரின் பாசறையில் வளர்ந்த தோழர்களிடமும் காணப்பட்டது. ஒரு சிலரிடம் ஏற்பட்ட தளர்ச்சியை ஒரு சந்தர்ப் பத்தில் கண்ணுற்ற உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: ''நாங்கள் அற்பர்களாக இருந்தோம். அல்லாஹ் இஸ்லாத்தின் மூலம் எங்களை மேன்மைப்படுத்தினான். நாங்கள் மேன்மையை வேறு ஒன்றில் தேடினால் மீண்டும் அல்லாஹ் எங்களை அற்பர்களாக ஆக்கிவிடுவான்.''

அல்லாஹ் தனது நபியைப் பார்த்து பின்வருமாறு கூறினான்: **''நபியே! உங்களுக்கு வஹியாக அருளப்பட்டதை நீங்கள் உறுதி யாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் நேரான பாதையிலேயே இருக்கின்றீர்கள்.''** *(43: 43)*

ஒரு முஸ்லிமிடம் தனது மார்க்கம் பற்றியோ, அதன் மாறாத அடிப்படைகள், கோட்பாடுகள் பற்றியோ அணுவளவும் சந்தேகம் எழ முடியாது. மார்க்கத்தின் மகிமைகள் குறித்து தளராத உறுதியுட னேயே அவன் சதாவும் செயல்பட்டுக் கொண்டிருப்பான்.

எனினும், அந்த உறுதி பிறருடன் மோதுகின்ற ஒரு முரட்டுத் தனத்தை அவனுக்குள் உருவாக்க மாட்டாது. இஸ்லாத்தில் தான் கொண்ட உறுதி காரணமாகப் பிறரை நிந்தனை செய்யவும் அவர் களை இழிவாக நோக்கவும் அவர்களுடன் வீணான முரண்பாடுகளை

வளர்த்துக் கொள்ளவும் ஒருவருக்கு இஸ்லாம் அனுமதி தரவில்லை. மாறாக, தனது கொள்கையில் கொண்ட தளராத உறுதியோடு அன்பும் தாராளத் தன்மையும் ஒரு மனிதனுள் இணைந்திட வேண்டும் என்பதையே இஸ்லாம் விரும்புகின்றது.

எனினும், இன்றைய முஸ்லிம்களின் தஃவா மொழி இஸ்லாம் விரும்புகின்ற இந்தப் பண்பினை வெளிப்படுத்தவில்லை. பிறருடன் கடுமையாக நடப்பதையும் அவர்களோடு முரண்படுவதையும் அவர்களை விமர்சிப்பதையும் பண்பாகக் கொண்ட மொழியாகவே இன்றைய தஃவா மொழி காணப்படுகிறது. பிறருடன் முரண்பட்டு, அவர்களை விமர்சித்து கடுமையை வெளிப்படுத்தாவிட்டால் அதனை இஸ்லாத்தின் பற்றுறுதியில் ஏற்பட்ட தளர்ச்சியாகவே அவர்கள் கருதுகின்றார்கள்.

**முரண்படுவோருடன் சகிப்புத்தன்மை**

முரண்படுவோருடன் சகிப்புத்தன்மை அவசியம் என்பதனை அல்குர்ஆன் விளக்கும் விதம் அற்புதமானது.

குறைஷித் தலைவர்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் சமரசம் செய்துகொள்ள முற்பட்டபோதே அந்த வசனங்கள் இறங்கின.

**''நிராகரிப்பாளர்களே! நீங்கள் வணங்குவதை நான் வணங்க மாட்டேன். நான் வணங்குவதை நீங்களும் வணங்க மாட்டீர்கள். நீங்கள் வணங்கியதை நான் வணகுபவனுமல்ல...''**

தனது கொள்கையில் வெளிப்படுத்த வேண்டிய தளராத உறுதியை இந்த வசனங்கள் பிரஸ்தாபிக்கின்றன. அதேவேளை, ஒரு முஸ்லிமிடம் இருக்க வேண்டிய சகிப்புத் தன்மையை உணர்த்துகிறது இறுதி வசனம்: **''உங்களுக்கு உங்களது மார்க்கம்; எனக்கு எனது மார்க்கம்.''**

உலகில் பலரும் பலவகையான கொள்கைகளைப் பின்பற்றுவார்கள் என்பது ஒரு யதார்த்தம். அது பற்றி அவர்கள் விசாரிக்கப்படும் ஒரு நாளை அல்லாஹ் ஏற்பாடு செய்திருக்கிறான். அந்த

யதார்த்தத்தை உணர்ந்த நிலையில் தனது கொள்கையோடு பற்றுடன் வாழ்வதற்கும் அதன் போதனைகளை ஏற்று நடப்பதற்கும் ஒரு முஸ்லிம் அறிந்திருக்க வேண்டும்.

**மத சகிப்புத்தன்மை பற்றிய கோட்பாடு**

மத சகிப்புத்தன்மை பற்றிய இஸ்லாத்தின் கோட்பாடு நான்கு அடிப்படைகளைக் கொண்டுள்ளது.

1. உலகிலுள்ள பல்வேறுபட்ட கொள்கைகள், அவற்றைப் பின்பற்றும் பல்வேறு சமூகங்கள் என்பன அல்லாஹ்வின் ஏற்பாடு களில் ஒன்றாகும். மனிதர்களை மலக்குகள் போன்ற இயல்பு கொண்டவர்களாக அல்லாஹ் படைக்கவில்லை. வேறுபடும் தன்மை கொண்டவர்களாகத்தான் மனிதர்களை அல்லாஹ் படைத்திருக் கிறான். எனவே, அவர்கள் உலகில் வேறுபட்டவர்களாகவே இருப் பார்கள். இந்த உண்மையை அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

**''நபியே! உமது இரட்சகன் நாடியிருந்தால் மனிதர்கள் அனை வரையும் அவன் ஒரே சமூகமாக ஆக்கியிருப்பான்; உமது இரட்சகன் அருள் புரிந்தவர்களைத் தவிர. (ஏனையோர்) வேறுபாடுள்ளவர் களாகவே தொடர்ந்துமிருப்பர். அதற்காகத்தான் அவர்களை (அவன்) படைத்திருக்கிறான்.'' *(11: 118-119)***

அல்லாஹ்வின் ஏற்பாட்டில் இருக்கின்ற இந்த வேறுபடும் தன்மையை எங்களால் இல்லாதொழிக்க முடியாது. மாறாக, அதன் நோக்கங்களைப் புரிந்து செயற்படுவதே எமக்கு முன்னாலுள்ள கடமையாகும்.

2. ஒவ்வொருவரும் பின்பற்றிய கொள்கை, கோட்பாடுகள், நடைமுறைகள் பற்றி விசாரிப்பதற்குரிய இடம் மறுமையாகும். அங்கு அல்லாஹ் அவன் படைத்த மனிதர்களை விசாரிப்பான். பகுத்தறிவோடு வாழ்ந்த ஒவ்வொருவருக்கும் தான் செய்தது சரியா, பிழையா என்பது அப்போது தெரியவரும். அறியாமல் பிழை செய்தவர்கள் யார்; வம்புத்தனமாக பிழை செய்தவர்கள் யார் என் பதும் அன்று தெரிந்துவிடும். அன்று வெளிப்படைகள் மட்டுமல்ல, இரகசியங்களும் பரிசோதிக்கப்படுகின்ற காரணத்தால் விசாரணை

மிக நுட்பமாகவும் முடிவு மிக மிக நீதியானதாகவும் இருக்கும். அத்தகைய இறுதித் தீர்ப்பை மறுமைக்கு ஒத்திவைத்திருப்பதா கவே அல்லாஹ் கூறுகின்றான்.

**''ஈமான் கொண்டவர்கள், யூதர்கள், மதம் மாறியவர்கள், கிறிஸ் தவர்கள், (நெருப்பு வணங்கிய) மஜூஸிகள், (அல்லாஹ்வுக்கு) இணை வைத்தவர்கள் போன்றவர்கள் அனைவர் மத்தியிலும் நிச்சயமாக அல்லாஹ் மறுமை நாளில் தெளிவான தீர்ப்பை வழங்கு வான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் கண்ணுற்றவனாகவே இருக்கிறான்.''** *(22: 17)*

**''ஒவ்வொரு சமூகத்திற்கும் அவர்கள் துயருகின்ற வழிமுறை களை நாம் ஏற்படுத்தியுள்ளோம். (அவர்கள் அவற்றை துயரட்டும்; உங்களது) விடயத்தில் அவர்கள் உங்களோடு மோத வேண்டிய தில்லை. நபியே! உமது இரட்சகனின்பால் நீர் அழைப்பு விடுப் பீராக! நிச்சயமாக நீர் நேரான பாதையிலேயே இருக்கிறீர். (இதற்கு மேலாக) அவர்கள் உம்முடன் தர்க்கித்தால் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக அல்லாஹ் இருக்கின்றான் என்றும் நீங்கள் வேறுபட்டிருந்த விடயத்தில் அன்றைய தினம் அவன் உங்களிடையே தீர்ப்பு வழங்குவான் என்றும் கூறிவிடுங்கள்.''** *(22: 67-69)*

வேறுபாடுகள் விடயத்தில் இறுதித் தீர்ப்பு வழங்கும் வேலையை மறுமை நாளுக்கு ஒத்திவைத்திருப்பதாகக் கூறும் வசனங்கள் இன்னும் பல *(42: 15, 2: 113)* உள்ளன.

அல்லாஹ் ஒத்திவைத்திருக்கும் தீர்ப்பை அவசரப்பட்டு சகிப்புத் தன்மையை இழந்து உலகில் வழங்க வேண்டிய அவசியம் எமக் கில்லை.

*3.* முஸ்லிம்கள் சட்டத்திற்கமைவாகவும் நீதியுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்ற இறை கட்டளை சகிப்புத் தன்மையை வலியுறுத்தும் மற்றுமோர் அடிப்படையாகும். ஒரு சமூகத்தோடு பகை ஏற்படுகின்ற நிலையிலும் கூட அந்த சமூகத்திற்கு அநீதியிழைக்க முடியாது என்பது அல்லாஹ்வின் கண்டிப்பான கட்டளையாகும். அது தக்வாவைச் சார்ந்தது என்றும் குர்ஆன் குறிப்பிடுகின்றது *(5: 8)*.

எதிரிகளுடனும் நீதி தவறாத இந்த அணுகுமுறைக்கு சிறந்த தோர் எடுத்துக்காட்டை அற்புதமான வகையில் அல்குர்ஆன் பதிவு செய்திருக்கிறது. முஸ்லிம்களால் அநீதியிழைக்கப்பட்ட ஒரு யூதனுக்காக அல்லாஹ் தனது திருமறையில் எட்டு வசனங்களை இறக்கி அவற்றை இறுதி நாள்வரை பாராயணம் செய்ய வைத்துள்ள அல்லாஹ்வின் மகிமையை எந்த முஸ்லிமும் மறந்துவிடலாகாது. *4: 105-112* வரையிலான வசனங்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களை யும் குழிதோண்டிப் புதைக்க விரும்பிய யூத சமூகத்தின் ஓர் அங் கத்தவனுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக வாதாடியிருக் கின்ற விதம் அற்புதமானது. எனவே, கொள்கை வேறுபாடு, மற்றொரு சமூகத்திற்கெதிராக வரம்பு மீறிச் செயற்படுவதற்கு அனுமதியளித் திருப்பதாக எந்த முஸ்லிமும் கருத முடியாது.

*4.* இஸ்லாம் கூறும் சகிப்புத்தன்மை மற்றுமொரு கோட்பாட்டி லும் பிரதிபலிப்பதை நாம் காணலாம். ''இஸ்லாம் மனிதர்களை கண்ணியப்படுத்தியிருக்கிறது; இழிவுபடுத்தவில்லை'' என்பதே அந்தக் கோட்பாடாகும்.

மனிதனை மனிதன் என்பதற்காகவே அல்லாஹ் கண்ணியப் படுத்தியிருக்கிறான்; முஸ்லிம் என்பதற்காக மட்டுமல்ல. **''ஆத முடைய மக்களை நாம் கண்ணியப்படுத்தியுள்ளோம்'' 17: 70** என்று அல்குர்ஆன் கூறும்போது அது ஆதமின் சந்ததிகள் அனை வரையுமே குறிக்கின்றது.

ஒரு யூதனின் பிரேதம் சுமந்து செல்லப்பட்டபோது எழுந்து மரியாதை செலுத்திய நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் ''அது ஒரு யூதனின் பிரேதமல்லவா?'' என்று ஆச்சரி யமாக ஒருவர் வினா எழுப்பினார். அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொன்ன பதில் வரலாற்றுச் சிறப்புமிக்கது. ''அது ஒரு (ஆன்மாவை சுமந்த) மனிதனல்லவா?'' (அல்புகாரி) எனக் கேட்டார்கள் நபியவர்கள்.

மனிதன் என்பதற்காக மனிதனுக்கு இஸ்லாம் கொடுத்த கண் ணியம் வாழ்வில் மட்டுமல்ல மாள்விலும்தான் என்பதை நிரூபிக் கின்றது மேலே நாம் கண்ட சம்பவம். போரிட்டு மடிந்த எதிரிகளின்

உடல்களை சிதைக்க வேண்டாம் என்ற நபிகளாரின் கட்டளையிலும் (முஸ்லிம்) நாம் இதனையே காண்கிறோம்.

முஸ்லிம்கள் பேசும் மொழி இந்த அடிப்படைகளை மறந்ததாக இருக்க முடியாது. மேலே கூறப்பட்ட வரையறைகளைத் தாண்டி ஏனையோரை விமர்சிக்கும் அல்லது நிந்திக்கும் மொழி இஸ்லாத்தின் மொழியல்ல.

### முஸ்லிமல்லாதோருடனான உறவின் சாசனம்

60ஆம் அத்தியாயத்தின் இரண்டு (8-9) வசனங்கள் முஸ்லிமல்லாதோருடனான உறவின் சாசனமாக அமைந்திருக்கிறது எனலாம். அந்த வசனங்களாவன:

''மார்க்கத்தைக் காரணமாக வைத்து உங்களோடு போரிடாத, உங்களை உங்களது இல்லங்களிலிருந்து வெளியேற்றாத மனிதர்களோடு நீங்கள் நல்ல முறையில் நடந்து அவர்களுக்கு நீதி செலுத்துவதை அல்லாஹ் தடுக்கவில்லை. மார்க்கத்தைக் காரணமாக வைத்து உங்களோடு போரிட்டு உங்களை உங்களது இல்லங்களிலிருந்து வெளியேற்றி அவ்வாறு வெளியேற்றுவதற்கு உதவியும் புரிகின்றவர்களை நீங்கள் உங்களது நேசர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டாம் என்றே அல்லாஹ் உங்களைத் தடுக்கிறான். அத்தகையவர்களை நேசர்களாக எடுத்துக்கொள்பவர்கள் (பெரும்) அநியாயக்காரர்களே.''

மக்காவிலிருந்த இணைவைப்பாளர்கள் தொடர்பில் இறங்கிய வசனங்களே (60: 8-9) இவை. முஸ்லிமல்லாதவர்களுடனான உறவின் சாசனமாக இந்த வசனங்கள் அமைந்திருந்த போதிலும் வேதத்தையுடையவர்களுடனான உறவை அல்குர்ஆன் சிறிது வேறுபடுத்தி நோக்கியிருப்பதைப் பார்க்கலாம். பல்வேறு அம்சங்களில் முஸ்லிம்களுக்கும் அவர்களுக்குமிடையில் காணப்படுகின்ற ஒற்றுமையைக் கருத்திற்கொண்டு ஒரு நெருக்கமான உறவை அல்குர்ஆன் அவர்களுடன் பேணி வந்திருக்கிறது. ''வேதத்தையுடையவர்களே!'' என்று அவர்களை அன்பாக அழைப்பதன் ஊடாக அந்த நெருக்கத்தை அல்குர்ஆன் வெளிப்படுத்தியிருக்கிறது. அவர்களோடு

தொடர்பான உறவுகளிலும் சில நெகிழ்வுத் தன்மைகளை அது அனுமதித்திருக்கிறது. எனினும், இன்றைய சூழலில் அவர்களும் (60: 8-9) வசனங்களுக்கேற்ப அணுகப்பட வேண்டியவர்களாகவே மாறியுள்ளனர்.

அந்த அணுகுமுறையிலும் அன்புதான் மேலோங்கியிருக்கிறது. மார்க்கத்தைக் காரணமாக வைத்து முஸ்லிம்களைத் துன்புறுத்துப வர்களோடு மட்டும் நேசம் கொள்ள வேண்டாம் என்று கட்டளை யிடுவதன் மூலம் ஏனைய அனைவரோடும் அன்பும் நல்லுறவும் பேணுவதற்குத் தடையில்லை என்பதையே (60: 8-9) வசனங்கள் கூறுகின்றன.

இஸ்லாம் அன்போடு பின்னிப் பிணைக்கப்பட்ட மார்க்கமாகும். அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசிப்பது ஈமான்... அடி யார்கள் தங்களுக்கிடையே அன்பைப் பரிமாறிக் கொள்வது ஈமான்... தான் விரும்புவதை தனது சகோதரனுக்கும் விரும்புவது ஈமான்... என எண்ணற்ற அன்புப் போதனைகளை தன்னகத்தே உள்ளடக்கிய மார்க்கமாக இஸ்லாம் திகழ்கிறது. அன்பு மனிதர்களோடு மட்டுமல்ல, இயற்கையோடும் ஏனைய உயிரினங்களோடும் அன்பு பரிணமிக்க வேண்டும் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது. நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உஹுத் மலையைப் பார்த் துக் கூறினார்கள்: **''உஹுத் எங்களை நேசிக்கும் ஒரு மலை. நாங் களும் அதனை நேசிக்கிறோம்.''** உயிருள்ள பகுத்தறிவுள்ள ஒரு படைப்பு போன்று உஹுதைப் பார்த்தார்கள் நபியவர்கள். உஹுத் எங்களை நேசிக்கிறது என்ற கூற்று நபிகளாரின் வரிகள் அன்பின் ஆழத்தை அழுத்தமாக வெளிப்படுத்துகின்றது.

முஸ்லிமாக ஒருவர் இருக்க வேண்டும் என்றால் அவர் முஸ்லி மல்லாதவரை வெறுக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் ஒரு பாரிய தவறைச் செய்கிறார்கள். 60: 8-9 வசனங்கள் கூறும் பண் பாட்டை அவர்கள் இழந்துவிடுகிறார்கள். மேலும் 58: 22 வசனத் தையும் அவர்கள் பிழையாக விளங்கியிருக்கிறார்கள். அந்த வசனம் கூறுகிறது: **''அல்லாஹ்வுடனும் அவனது தூதருடனும் போர் தொடுத்தவர்களோடு நேசம் பாராட்டுபவர்களாக அல்லாஹ்வையும்**

மறுமை நாளையும் ஈமான் கொண்ட சமூகம் இருப்பதை (நபியே!) நீர் காண மாட்டீர்.''

இந்த வசனம் அல்லாஹ்வுடனும் அவனது தூதருடனும் போர்ப் பிரகடனம் செய்தவர்களை மட்டுமே விதிவிலக்காகக் கருதுகிறது. ஏனைய அனைவரோடும் நேசமுடன் நடந்துகொள்வதை அது தடுக்கவில்லை.

இஸ்லாம் பேசுவோரது மொழி நாம் இதுவரை பார்த்த உண்மைகளுக்கு ஆப்பு வைப்பதாக அமையக் கூடாது. அவர்கள் இஸ்லாத்தின் கோட்பாடுகள் மற்றும் அடிப்படைகள் விடயத்தில் தளராத உறுதியை வெளிப்படுத்தும் அதேவேளை, பிறரை அனு சரிக்கும் பரந்த மனப்பான்மை, அரவணைக்கும் அன்பு போன்ற வற்றிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். எமது மார்க்கத்தில் நாம் கொண்ட தளராத உறுதி என்பது பிறர் மீது கடுமையையும் கோபத்தையும் வெளிப்படுத்துவதல்ல என்பதை அவர்கள் புரிந் திருக்க வேண்டும். இஸ்லாத்தை அவர்கள் எடுத்து முன்வைக்கின்ற போது மனித சமூகத்தைப் பொதுவாகவும் முரண்படுவோரை குறிப் பாவும் புண்படுத்துகின்ற, வெறுக்கச் செய்கின்ற, விரண்டோடச் செய்கின்ற மொழியை அவர்கள் வீர மொழி எனக் கருதாதிருக்க வேண்டும்.

இதன் பொருள்- எமது மார்க்கத்தை விட்டுக் கொடுத்து நாம் செல்கிறோம் என்பதல்ல. எமது மார்க்கம் எமது கண்ணியத்திற் குரியதாக என்றுமே இருக்கும். அதன் கண்ணியத்தை பிறர் புரிந்து கொள்வது எப்போது என்பதுதான் எமக்கு முன்னால் உள்ள வினா. அந்தப் புரிதல் வெறுப்பு, வீறாப்பு, பகை, கோபம், கடுமை என்பவற்றால் ஒருபோதும் வரப்போவதில்லை. மாறாக, இஸ்லாம் தீவிரவாதத்தையும் பயங்கரவாதத்தையும் போதிக்கும் மாரக்கம் என்ற புரிதல்தான் அதனால் அவர்களிடம் ஏற்படும். இது இஸ்லாத்திற்குச்செய்யும் நன்மை எனக்கடும்போக்குடையவர்கள் நினைக்கிறார்களா?

## 06

# உன்னதத்தின்பால் அழைத்து யதார்த்தத்தை மறந்துவிடாத மொழி

இஸ்லாமியப் பேச்சு மொழியின் மற்றுமொரு சிறப்பம்சம், ஒரு மனிதனிடம் இஸ்லாம் எதிர்பார்க்கும் அதி உன்னதமான நிலையை வலியுறுத்தி நாளும் பொழுதும் அனுபவிக்கின்ற அவனது யதார்த் தங்களை மறந்துவிடாதிருப்பதாகும்.

முன்மாதிரியான மனிதன், முன்மாதிரியான குடும்பம், முன் மாதிரியான சமூகம், முன்மாதிரியான உம்மத், முன்மாதிரியான ஆட்சி, முன்மாதிரியான உலகம் போன்றவற்றை வலியுறுத்தி எந்த வொன்றிலும் உன்னதத்தை அடைவதற்கு அழைப்பு விடுக்கின்ற மார்க்கமே இஸ்லாம். எனினும், மனிதர்களின் அன்றாட வாழ்க்கை, அதன் நடைமுறைகள், யதார்த்தங்கள், பிரச்சினைகள் என்பவற்றை மறந்த நிலையில் உன்னதங்களை மட்டுமே பேசிக் கொண்டிருக்கும் மார்க்கமல்ல இஸ்லாம். மாறாக, ஒரு சமூகத்தின் யதார்த்தங்களை எதிர்கொண்டு... அவற்றிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு.... மனிதனை உன்னதத்தை நோக்கி அழைத்துச் செல்லவே அது விரும்புகிறது.

ஒரு மனிதன் அடைய வேண்டிய உன்னதமான நிலை பற்றிப் பேசும்போது முஃமின்கள், ரஹ்மானின் அடியார்கள், முத்தகீகள், முஹ்ஸின்கள் போன்றவர்களின் உயர் பண்புகளை அல்குர்ஆன் விளக்கிப் பேசுகிறது *(8:2-4, 25:63-76, 51:17-19, 76:7-10)*. இந்த வச னங்கள் பேசுகின்ற உன்னதமான பண்புகளை அடைய ஒவ்வொரு வரும் முயற்சிக்க வேண்டும். அத்தகைய பண்புகளை உடையவர்கள் உலகில் வாழ்ந்திருக்கிறார்கள்; இன்னும் வாழ்கிறார்கள் என்ற உண்மையை வலியுறுத்துகின்றன இந்த வசனங்கள்.

இருந்த போதிலும் மனிதன் தவறு செய்கிறான்; உயர்ந்து செல்வதற்குப் பதிலாக தாழ்ந்து செல்கிறான். காரணம் அவன் மலக்குகளைப் போன்று தூய்மையானவன் அல்லன்; நபிமார்களைப் போன்று முன் பின் பாவங்கள் மன்னிக்கப்பட்டவனும் அல்லன். இவனிடத்தில் மண்ணின் குணமும் இருக்கின்றது; மாண்புமிக்க ரூஹின் குணமும் இருக்கிறது. அதிகமான சந்தர்ப்பங்களில் மண்ணின் குணங்கள் அவனை மிகைத்து விடுகின்றன. **''உள்ளத்தின் மீதும் அதனை செம்மைப்படுத்தியவன் மீதும் சத்தியமாக! அவனே அதனது தீமைகளையும் நன்மைகளையும் அதன் உள்ளுணர்வில் வைத்தான்.''**

மனிதனுக்குள் நன்மைகளும் இருக்கின்றன; தீமைகளும் இருக்கின்றன என்பதையே இந்த வசனம் உணர்த்துகின்றது. தீமைகளிலிருந்து பாதுகாத்து ''தன்னைத் தூய்மைப்படுத்தியவன் வெற்றியடைந்தான்'' என அடுத்த வசனம் கூறுகின்றது. அதுதான் மனிதனது யதார்த்தம். அவன் தீமைகளில் சிக்கியிருக்கிறான். அவன் தூய்மைப் படுத்தப்பட வேண்டும். அவனை மலக்குகளைப் பார்ப்பது போன்று பார்க்க முற்படக் கூடாது. தீமைகளுக்குள் அவன் புதைந்து விட்டால் அவன் தோல்வியடைவான்.

இந்த யதார்த்தத்தை உணர்த்தும் வகையில் அல்குர்ஆன் மனிதர்களை மூன்று வகையாகப் பிரிக்கின்றது. 1. தனக்குத் தானே அநீதி இழைப்பவன் 2. கடமைகளை நிறைவேற்றித் தடுக்கப்பட்ட (ஹராமான)வற்றைத் தவிர்ந்து கொள்ளும் இடைப்பட்ட மனிதன். 3. அனைத்து நன்மைகளிலும் போட்டியிட்டு முன்னேறும் முற்போக்கு மனிதன் *(35: 32)*.

வேதத்தை வாரிசாகப் பெற்ற முஸ்லிம்கள் மத்தியில் இத்தகையவர்கள் இருப்பதாகவே 35: 32 வசனம் கூறுகின்றது. ஆக, இஸ்லாமிய உம்மத்தில் நல்லவர்கள், தீயவர்கள் அனைவரும் அடங்குவர் என்ற யதார்த்தத்தை நாம் அங்கீகரித்தாக வேண்டும். படைத்தவன் அந்த யதார்த்தத்தைத் தெரிந்து வைத்திருப்பதனால் அவன் தவ்பாவின் வாயிலையும் திறந்து வைத்திருக்கிறான். **''விசுவாசிகளே! நீங்கள் அனைவரும் அல்லாஹ்விடம் தவ்பா செய்து மீளுங்கள். நீங்கள் வெற்றி பெறலாம்''** *(24: 31)*, **''நிச்சயமாக அல்லாஹ் தூய்மையான**

வர்களையும் தவ்பா செய்பவர்களையும் நேசிக்கிறான்'' (2: 222) என தவ்பாவின் பக்கம் அழைப்பையும் அவன் விடுக்கிறான்.

அது மட்டுமல்ல, தவறு செய்பவர்கள் தங்களது தவறுகளைக் கழுவி சுத்தம் செய்வதற்கு எத்தனையோ நதிகளை இஸ்லாம் ஓடச் செய்திருக்கிறது. வுழூ, தொழுகை, தர்மம், நோன்பு, ஸகாத், ஹஜ், உம்ரா, திக்ர், துஆ என இத்தகைய நதிகள் பல.

**''பகலின் இரண்டு (ஆரம்ப, இறுதி) பொழுதுகளிலும் இரவின் ஒரு பகுதியிலும் தொழுகையை நிலைநாட்டுங்கள். நிச்சயமாக நன்மைகள் தீமைகளைப் போக்கிவிடுகின்றன. நல்லுணர்வு பெறுப வர்களுக்கு இது ஓர் அறிவுறுத்தலாகும்.''** *(11: 114)*

**''ஒரு ஜுமுஆ அடுத்த ஜுமுஆ வரை, ஒரு ரமழான் அடுத்த ரமழான் வரை மற்றும் ஐந்து நேரத் தொழுகைகள் ஒவ்வொன்றும் அதற்கிடைப்பட்ட பாவங்களுக்கு மன்னிப்பாக இருக்கின்றன. பெரும் பாவங்கள் தவிர்க்கப்பட்டால்...''** *(முஸ்லிம்)*

**''ஆதமுடைய மக்கள் அனைவரும் தவறு செய்பவர்களே. தவறு செய்பவர்களுள் சிறந்தவர்கள், தங்களது தவறுகளுக்காக தவ்பா செய்து மன்னிப்புக் கோருபவர்களாகும்.''** *(அஹ்மத்)*

இவ்வாறு மனிதனுடைய யதார்த்தங்களை உணர்ந்து அவனுக்கு வழிகாட்டும் போதனைகளை உள்ளடக்கிய மார்க்கமே இஸ்லாம். இன்னும் சொன்னால், மனிதனது பலவீனமான நிலையை அங்கீ கரித்து அவனை படிப்படியாக மேல் நோக்கி அது அழைத்துச் செல்கிறது.

இஸ்லாம் எதிர்பார்க்கின்ற ஒரு முழுமையான மனிதனை குர் ஆனிலும் சுன்னாவிலும் தேடினால் அவன் தெளிவான சிந்தனை... ஆழமான ஈமான்... நேரிய பண்பு... நடுநிலையான போக்கு... மார்க் கத்தில் பற்று... அழைப்புப் பணியில் அர்ப்பணம்... பிறர் நலனில் ஆர்வம்... உலக இன்பங்களில் துறவறம்... படைத்தவனோடு நெருக்கம்... படைப்பினங்களோடு அன்பு... எப்போதும் உற்சாகம்... நேரத்தில் கவனம்... போன்ற உயர் குணங்களைக் கொண்டவனாக இருப்பான்.

இந்த உயரிய நிலை நோக்கி தாழ்ந்த நிலையிலிருந்து ஒரு மனிதனை அழைத்துச் செல்லும் வகையில் தாஇகளின் அழைப்பு மொழி பக்குவப்பட்டிருக்க வேண்டும். எனினும், களத்தின் நிலைமை வேறு விதமாகவே இருக்கிறது. சிலர் உன்னதங்களை மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு யதார்த்தங்கள் விளங்கு வதில்லை. இன்னும் சிலர் யதார்த்தங்களில் அதிகம் கவனம் செலுத்தி யதனால், மனிதர்களை இஸ்லாத்தின் ஆரம்பப் பாடசாலையிலேயே வைத்திருக்கிறார்கள்; உன்னதங்களை நோக்கி அழைத்துச் செல்வ தில்லை. இந்த இரண்டு தவறுகளும் நடப்பது இஸ்லாம் பற்றிய அறியாமையைப் பிரதிபலிக்கும் அவர்களது அழைப்பு மொழியி னால்தான்.

ஷரீஆ சட்டங்கள்... அவற்றிலுள்ள கருத்து வேறுபாடுகள்... 'தய்ஸீர்' எனும் இலகுபடுத்தல்கள்... 'ருஹ்ஸா' எனும் சலுகைகள்... நிர்ப்பந்தங்களின் போதான விலக்களிப்புக்கள்.... போன்றவை மனிதனின் யதார்த்தங்களையும் பலவீனங்களையும் கருத்திற் கொள்கின்றன. இவற்றுக்கு மேலாக தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற பர்ழான கடமைகள், வியாபாரம், திருமணம், சொத்துப் பங்கீடு மற்றும் குற்றவியல் தொடர்பான சட்டங்கள் என்பனவும் மனிதனது யதார்த்தங்களையும் பலவீனங்களையும் பிரச்சினைக ளையும் கருத்திற் கொண்டே விதியாக்கப்பட்டுள்ளன.

ஐம்பது நேரத் தொழுகை ஐந்து நேரமாகக் குறைக்கப்பட்டமை, ஹஜ் ஆயுளில் ஒரு முறை விதியாக்கப்பட்டமை, பழிக்குப் பழி சட்டமாக்கப்பட்டமை, தலாக் அனுமதிக்கப்பட்டமை, வட்டி தடுக்கப்பட்டமை முதலானவை மனிதனது யதார்த்தங்களை கருத்திற் கொண்டமைக்கு சில உதாரணங்களாகும். யுத்தம் கடமையாக்கப் பட்டதும் கூட ஒரு யதார்த்தத்தை எதிர்கொள்வதற்காகவே என்பதை (ஹஜ்: 39-40) வசனங்கள் கூறுகின்றன. தொடர்ச்சியாக அநீதி இழைக்கப்பட்டதன் காரணமாக அதனைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் யுத்தம் விதியாக்கப்பட்டதாக அந்த வசனங்கள் கூறுகின்றன. எனினும், அது உங்களுக்கு வெறுப்பாகவே இருக்கும் என்ற யதார்த்தத்தையும் அல்குர்ஆன் அங்கீகரிக்கின்றது (22: 16).

யதார்த்தங்களை இவ்வாறு கருத்தில் கொள்கின்ற நிலையில்தான் மனிதனை உன்னதங்களின்பால் அழைத்துச் செல்வதற்கும்

விரும்புகிறது இஸ்லாம். ஆழமான அறிவு, இறையச்சம், ஈமான், தவக்குல், அல்லாஹ்வை முற்றிலும் சார்ந்திருத்தல், தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் என்பவற்றில் இன்பம் காணுதல்... சுன்னத் தான அமல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுதல்... திக்ர், துஆ, தவ்பா, இஸ்திஹ்பார் என்பவற்றில் தொடர்ச்சியான ஈடுபாடு... மனிதர் களை மதித்து, மன்னித்து, அவர்களால் ஏற்படும் சிரமங்களை சகித்து, மென்மை, பணிவு, உபகாரம் போன்ற உயர் குணங்களால் மனிதர்களுடனான உறவைப் பலப்படுத்தல்... அன்பு, கருணை, நடுநிலை என்பவற்றால் ஆளுமையை விருத்தி செய்தல்... அர்ப் பணம், தியாகம், செலவு செய்தல், கடுமையாக உழைத்தல், வீணான பயன்தராத அனைத்திலிருந்தும் விலகியிருத்தல், மறுமை நலனையே தனது நலனாகக் கருதுதல், உலக நலன்களை பிறருக்கு உவந்தளித் தல், மனித சமூகத்தின் அவலங்களைப் போக்க வேண்டும் என்ற ஆழ்ந்த கவலை, அனைவரது சுபிட்சத்துக்காகவும் தன்னை அர்ப்பணிக் கும் தியாகம்... என உன்னதத்தை நோக்கிச் செல்லும் பயணம் நீண்டு செல்கிறது.

யதார்த்தங்களை எதிர்கொள்வதோடு நின்றுவிடாமல், உன்ன தம் நோக்கிய பாதையிலும் பயணிக்க வேண்டும். உன்னதம் நோக்கி அழைத்து யதார்த்தங்களை மறந்துவிடாதிருக்கவும் வேண்டும். இவ்வாறு உன்னதங்களுக்கும் யதார்த்தங்களுக்குமிடையில் மக்களின் நிலைவரங்களைக் கவனித்து அவர்களை வழிநடத்திக் கொண்டி ருக்கும் பொறுப்பு தாஇகளைச் சார்ந்தது.

இது விடயத்தில் இறைத்தூதரின் முன்மாதிரி அளப்பரியது. தனது சமூகத்திலிருந்த பல்வேறுபட்ட மனிதர்களை அன்னார் வழிநடத்திய விதம் பற்றி தாஇகள் கற்றிருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் அவருடைய இடத்தையும் அந்தஸ்த்தையும் வழங்கி... அவரிடம் இருக்கும் நல்லவற்றைப் பாராட்டி... அவரிடம் இல்லாதவற்றை அவருக்கு உபதேசித்து... அவரது யதார்த்தங்களையும் மறந்து விடாமல்... உன்னதம் நோக்கி அவரை நகர்த்தவும் பின்நிற்காமல்... நபிகளார் செயற்பட்ட விதம் அற்புதமானது. நபிகளாரின் இந்த அணுகுமுறை காரணமாக அன்னாருடனான சகவாசத்தில் அவர்களது தோழர்கள் இங்கிதத்தையும் சௌகரியத்தையும்

உணர்ந்தார்கள். முட்புதருக்கு மத்தியில் அல்லது விஷ ஜந்துக்கள் வாழுமிடத்தில் இருப்பது போன்ற உணர்வை அந்த சகவாசம் அவர்களுக்குக் கொடுக்கவில்லை.

எனினும், இன்றைய அழைப்பாளர்களுடனான சகவாசத்தில் மக்கள் விலகி நிற்கவே விரும்புகிறார்கள். காரணம், மக்களின் யதார்த்தங்களை அவர்கள் விளங்கிக் கொள்வதுமில்லை; எந்த உன்னதத்தை யாருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்; எப்படிக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பது அவர்களுக்குப் புரிவது மில்லை. இதனால் அழைப்பாளருக்கும் அழைக்கப்படுபவர் களுக்குமிடையிலான தூரம் அதிகரிக்கின்றது. இஸ்லாம் பேச்சள வில் நின்று விடுகின்றது. இஸ்லாமிய விழுமியங்கள் நடைமுறை வாழ்வில் கீழ்நோக்கியே செல்கின்றன.

தாஇகள் இதுபற்றி ஆழமாக சிந்திக்க வேண்டும். அவர்களது அழைப்பு மொழியை அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். யதார்த்தங்களுக்கும் உன்னதங்களுக்கும் உரிய இடத்தை வழங்கி வழிகாட்டத்தக்கவகையில் தமது அழைப்பு மொழி இருக்கிறதா என்பதை அவர்கள் கண்காணிக்க வேண்டும்.

## 07

# சீரியஸ்னஸின் பால் அழைத்து உல்லாசத்தை மறந்துவிடாத மொழி

சீரியஸ்னஸ் (அதீத கவனம்) தேவைப்படுகின்ற மார்க்கமே இஸ்லாமாகும். கண்டிப்பான போக்கு என்றும் இதனைக் குறிப் பிடலாம். நிலைகுலையாமையும் தொடர்ச்சியான ஈடுபாடும் இந்த சீரியஸ்னஸ் உடன் நெருக்கமாக இருக்கும் பண்புகளே.

சுத்தம், நேர்த்தி என்பவற்றில் கண்டிப்பாக இருக்க வேண்டும். கற்பொழுக்கம், அதற்கான பயிற்சிகள், ஹலாலைப் பேணி, ஹராம் களைத் தவிர்த்துக் கொள்ளுதல், ஆடம்பரங்களையும் வீண்விரயங் களையும் தவிர்த்தல், ஐவேளைத் தொழுகையில் நேரம் தவறாமை, நற்குணங்களைக் கடைப்பிடித்தல், மோசமான குணங்களை விட்டு விடுதல், இஸ்லாமிய சட்ட வரம்புகளை வாழ்வின் அனைத்து விவ காரங்களிலும் பேணுதல் போன்றவற்றில் சீரியஸான, கண்டிப்பான போக்கு இருக்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் விருப்பமாகும்.

இஸ்லாத்தைப் பேணி வாழும் ஒரு முஸ்லிம் இத்தகைய விவ காரங்களில் தெளிவான சிந்தனையும் உறுதியான தீர்மானமும் கொண்டவனாக இருப்பான். இல்லாவிட்டால் ஒரு ஸாலிஹான மனிதனையும் சிறந்த குடும்பத்தையும் சீரிய சமூகத்தையும் உரு வாக்கும் பணியில் அவனது பங்கு பூச்சியமாகவே இருக்கும்.

சுத்தம் என்பது தொழுகைக்கு மட்டுமான ஒரு நிபந்தனையல்ல. மாறாக, அது ஒரு வாழ்க்கைக் கோட்பாடு ஆகும். உணவில்.... குடிப்பில்... பேச்சில்... நடத்தையில்... செல்வத்தில்... உழைப்பில்... செலவு செய்தலில்... என வாழ்வின் சகல விவகாரங்களிலும் இந்தத் தூய்மை மற்றும் பரிசுத்தம் பேணப்பட வேண்டும்.

நிச்சயமாக அல்லாஹ் அந்தரங்கத்திலும் வெளிப்படையிலும் தூய்மையாக இருப்பவர்களை விரும்புகிறான்.

அதேபோன்று, நிலைகுலையாமை, தளராமை என்பன ஈமானின் பிரதிபலிப்புகளாக இருக்கின்றன. இந்தப் பண்புகளை உடைய வர்களுக்கு உலகிலும் மறுமையிலும் மலக்குகள் பக்கபலமாக இருப்பார்கள் என அல்குர்ஆன் கூறுகிறது. (புஸ்ஸிலத்: 30-32)

நிலைகுலையாமையின் முதல் அம்சம் அல்லாஹ்வின் வழி காட்டலை எப்போதும் சார்ந்திருத்தலாகும். அல்லாஹ்வின் வழி காட்டல் குர்ஆன் மற்றும் சுன்னாவினூடாக தெளிவுபடுத்தப்பட்டு விட்டது.

அந்த வழிகாட்டலில் ஒவ்வொரு மனிதனும் தனது இரட்சகனுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள்... தனக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள்... தனது குடும்பத்திற்கு நிறைவேற்ற வேண்டிய கட மைகள்... தனது சமூகத்திற்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் என அனைத்துக் கடமைகளும் தெளிவாக வரையப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு விடயத்திலும் ஆகுமாக்கப்பட்டவை (ஹலால்) எவை; தடுக்கப்பட்டவை (ஹராம்) எவை என்பதும் அந்த வழி காட்டலில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இத்தகைய தெளிவுகளை அனைத்து விடயங்களிலும் வழங்கி வழிகாட்டியிருக்கின்ற அல்லாஹ், அவற்றைப் பின்பற்றுகின்ற ஆற்றலையும் மனிதனுக் குள் வைத்திருக்கின்றான்.

மனிதர்கள் தமது ஆசைகளுக்குக் கட்டுப்படாமல் உறுதியான தீர்மானத்தோடு அல்லாஹ்வின் வழிகாட்டல்களுக்கு அடிபணிந்து வாழ்வதே அந்த ஆற்றலாகும். அதனையே நிலைகுலையாமை என்றும் தளராமை என்றும் 'சீரியஸ்னஸ்' என்றும் கூறுகின்றோம்.

ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பின்பற்றுவதிலும் அதற்கு மாறு செய்யாதிருப்பதிலும் திடசங்கற்பம் பூண்டவனாக இருக்க வேண்டும். எந்த அச்சுறுத்தலும் அந்தத் திடசங்கற்பத்திலி ருந்து அவனைத் தளர்த்திவிட மாட்டாது. எத்தகைய ஆசைக்கும்

இலாபங்களுக்கும் அடிபணிந்து அவன் மார்க்கத்தை விற்றுவிட மாட்டான். ஹராமானதொரு வழியில் பல கோடிகளை ஈட்ட முடியுமானதொரு வாய்ப்பு அவனிடம் வந்தபோதிலும் அவன் அதனை ஏற்கத் தயாராக இருக்க மாட்டான்.

இவ்வாறு, நேர்வழியில் தெளிவோடும் கொள்கையில் உறுதி யோடும் இலட்சியத்தில் அர்ப்பணத்தோடும் வாழுகின்ற ஒரு முஸ்லிம் தனது வாழ்வில் மற்றும் சில அம்சங்களின்பால் கவனம் செலுத்துவதை இஸ்லாம் தடுக்கவில்லை என்பதை உணர்ந்திருக்க வேண்டும். அவைதான் உல்லாசம், விளையாட்டு மற்றும் பொழுது போக்குகள் என்பனவாகும். ஆகுமாக்கப்பட்ட எல்லைகளுக்குள் போதுமாக்கப்பட்ட அளவுகளையும் அறிந்த நிலையில் ஒரு முஸ்லிம் தனது வாழ்வில் உல்லாசங்களையும் பொழுதுபோக்குகளையும் அனுபவிப்பதற்கு இஸ்லாம் எப்போதும் தடையாக இருந்ததில்லை.

காரணம், அவன் ஒரு மனிதனாக இருக்கின்றான். மனிதன் தேவைகளால் சூழப்பட்டவன். களைப்பு, அயர்வு, சோர்வு போன் றவையும் அவனைப் பீடிக்கின்றன. எத்தனை சீரியஸான விடயங் களில் அவன் ஈடுபட்டாலும் அவற்றில் அலுப்பு ஏற்படுவது இயல் பானதொன்றாகும். எனவே, களைப்பு, அலுப்பு, அயர்வு, சோர்வு என்பவற்றிலிருந்து விடுபடுவதற்கும் மீண்டும் உற்சாகமாகத் தனது பணிகளில் ஈடுபடுவதற்கும் அவனுக்கு இடைவேளைகள் தேவைப் படுகின்றன. அதன்போது பௌதிக ரீதியாகவும் மானசீகமாகவும் அவனது களைப்பு மற்றும் அலுப்புகளைப் போக்க வழிகள் தேவைப் படுகின்றன.

ஹன்ழலா என்ற நபித் தோழர் ஒரு சீரியஸான மனிதர். அதன் காரணமாக தனது நிலை பற்றி அவர் தீவிரமாக சிந்தித்தார். நபி களாரோடு இருக்கின்ற வேளை நல்லதோர் ஆன்மிக நிலையில் தான் இருப்பதாகவும் விட்டுச் சென்றால் மனைவி பிள்ளைகளோடு கொஞ்சும் வேளை அது இல்லாமல் போவதையும் உணர்ந்தார். இது ஒரு நயவஞ்சகம் என அவர் கருதினார். நபிகளாரிடம் இதனை முறையிடவும் செய்தார். அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பின்வருமாறு பதில் கூறினார்கள்:

“ஹன்ழலாவே! நீங்கள் என்னோடு அமர்ந்திருக்கின்ற வேளையில் காணப்படுகின்ற மனநிலையோடு தொடர்ந்தும் இருப்பீர்களாயின் (நீங்கள் நடமாடும்) பாதையில் மலக்குகள் உங்களோடு முஸாபஹா செய்து கொள்வார்கள். (அவ்வாறிருப்பது உங்களால் முடியுமான தல்ல) எனவே, (அந்நிலையை ஏற்படுத்திக் கொள்வதற்கு தொடர்ந் தேர்ச்சியாகவன்றி) அவ்வப்போது அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள்.’’

ஆம், மனித உள்ளத்துக்கு ஸீரியஸ்னஸூம் தேவைப்படுகிறது. மனைவி, பிள்ளைகளோடு உல்லாசமும் தேவைப்படுகிறது என்பதை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சுட்டிக் காட்டு கிறார்கள். அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘இடையிடையே உங்களது உள்ளங்களை களைப்பு நீக்கிக் கொள் ளுங்கள். உள்ளம் பிடிவாதமாக ஒன்றின்பால் நிர்ப்பந்திக்கப்பட்டால் உணர்விழந்து போய்விடும்.’’

மேலும் சொல்கிறார்கள்: ‘‘உடல்கள் களைத்துப் போவது போன்று உள்ளமும் களைப்படைகின்றது. அதனை நீக்குவதற்கு சுவையான அறிவுத் துணுக்குகளைத் தேடிக் கொள்ளுங்கள்.’’

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நபித் தோழர்களோடு பரிகாசம் செய்பவர்களாக இருந்திருக்கிறார்கள். அந்தப் பரிகாசங்களில் உண்மைகளும் அறிவுத் துணுக்குகளுமே யன்றி வேறு ஒன்று இருந்ததில்லை. தமது தோழர்கள் தமக்கிடையே பரிகாசம் செய்வதை அவர்கள் ஆட்சேபித்ததுமில்லை. அது மட்டு மல்ல, ஒவ்வொரு சமூகமும் அவர்களுக்கேயுரிய பொழுது போக்குகளையும் விளையாட்டுக்களையும் கொண்டிருப்பதை மறுக்கவுமில்லை. ஹபஷிகள் பெருநாள் தினத்தில் மஸ்ஜித் முற்றத்தில் ஆடிப் பாடியதை கண்ட உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கல்லெறிந்து அதனைத் தடுக்க முற்பட்டார்கள். உடனே “அவர்களை விட்டுவிடுங்கள் உமரே!” எனக் கூறி அவர்கள் செய்ததை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அனுமதித்ததைப் பார்க்கிறோம்.

ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களது வீட்டில் இரண்டு பெண்கள் பாடிக்கொண்டிருந்த சந்தர்ப்பமொன்றில் அங்கு வந்த

அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அல்லாஹ்வின் தூதரது வீட்டில் ஷைத்தானின் ரீங்காரமா எனக் கேட்டு தடுக்க முற்பட்ட போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அபூ பக்ரைப் பார்த்துச் சொன்னார்கள்: "அபூ பக்ரே! அவர்களை விடுங்கள். ஒவ்வொரு சமூகத்துக்கும் ஒரு பெருநாள் இருக்கிறது (அவர்கள் அதனைக் கொண்டாடுகிறார்கள்). இது எங்களது பெருநாள். யூதர்கள் தெரிந்து கொள்ளட்டும் எங்களது மார்க்கத்தின் விசாலத்தன்மையை. நான் தாராளத்தன்மையுடைய இப்றாஹீமின் மார்க்கத்தில் அனுப் பப்பட்டுள்ளேன்.''

திருமண வீடொன்றில் உல்லாசம் இருக்க வேண்டும் என்பதை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) விரும்பியிருக்கிறார்கள். அன்னாரது பின்வரும் கேள்வியில் அது தொனிக்கிறது. ஒரு அன்சாரி மணமகனின் வீட்டில் இடம்பெற்ற திருமணத்தின்போது அவர் கள் இந்த வினாவைத் தொடுத்தார்கள். ''ஏன் அங்கு கேளிக்கை, உல்லாசம் எதுவும் இல்லையா? அன்ஸாரிகளுக்கு உல்லாசம் பிடிக்குமே!''

நீந்துதல், அம்பெய்தல், குதிரையோட்டம், சிலம்படி, ஆபா சங்கள் இல்லாத பாட்டுக்கள், நடனங்கள், போட்டிகள் என உல் லாசங்கள் பல இருக்கின்றன. அவற்றை இஸ்லாம் தடைசெய்ய வில்லை.

விரயங்கள் இல்லாத, ஹறாம்கள் கலக்காத, சூது போன்றவற்றிற்கு இட்டுச்செல்லாத அனுமதிக்கப்பட்ட உல்லாசங்களால் உள்ளங்கள் களைப்பைப் போக்கிக் கொள்கின்றன; புத்துணர்வைப் பெறுகின்றன. எனினும், இன்றைய எமது அழைப்பு மொழியில் இவற்றிற்கு உரிய இடம் வழங்கப்படுவதில்லை. சிலபோது அவை இழிந்துரைக்கப் படவும் செய்கின்றன.

இத்தகைய உல்லாசங்கள் இல்லாத... இறுக்கமான... கடுமை யான... வரண்ட வாழ்க்கைதான் இஸ்லாத்திற்கு மிகவும் நெருக்க மானது என்று கருதுபவர்களும் எம்மில் பலர் இருக்கிறனர். அவர்கள் தமது முகத்தில் ஒரு சிரிப்பைக் கூட வரவழைத்துக் கொள்வதில்லை. அவர்களது வார்த்தைகள் சுவாரஷ்யம்மிக்கதாக இருக்காது என்பதை விட அவர்கள் அதனை ஹறாமாக்கிக் கொண்டார்கள் என்று கூறலாம்.

மகிழ்ச்சியை வெளிப்படுத்தாத உள்ளம், சிரிக்காத வாய், தட்டாத கைகள், கவலையால் இறுகிப்போன முகம், சுருங்கிய நெற்றி இவைதான் தூய இஸ்லாத்தின் வெளிப்பாடுகள் என்பது அவர்களது எண்ணமாக இருக்கலாம்.

இஸ்லாத்தின் சீரியஸ்னஸ் (கண்டிப்பான போக்கு) எவற்றில் எல்லாம் தேவை என்பதை ஆரம்பத்தில் பார்த்தோம். அவற்றில் ஒரு முஸ்லிம் விளையாட்டுத்தனமாக இருப்பதற்கு அனுமதியில்லை. எனினும், கண்டிப்பான போக்கை ஒவ்வொரு நிமிடமும் கடைப் பிடிக்க வேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்தவில்லை. மனித இயல்புக்கு அது உகந்ததல்ல. மனித இயல்பு அதனை ஏற்கும் விதத்தில் படைக்கப்படவில்லை.

எனவே, தேவையான இடங்களில் கண்டிப்பு; உள்ளம் சலிப் படையும் வேளைகளில் (அனுமதிக்கப்பட்ட) உல்லாசம் என நடுநிலையான வாழ்க்கையையே எமது பிரசார மொழி பிறருக்கு எடுத்துக்கூற வேண்டும். இந்த விடயத்தில் எமது முன்மாதிரிகள் நபிகளாரும் அன்னாரின் தோழர்களுமே தவிர, இன்று எம்மத்தியில் நடமாடும் இறுக்கமான முகங்கள் அல்ல.

# 08

## சர்வதேசத் தன்மையைப் பேசி வாழும் சூழலை மறுத்துவிடாத மொழி

இஸ்லாம் சர்வதேசத்துக்குமானது; சகல மக்களுக்குமானது என்பது அதன் சிறப்பம்சங்களுள் ஒன்று. அதன் காரணமாக அந்த மார்க்கம் ஒரு கிராமச் சூழலையும் அதன் பிரச்சினைகளையும் புறக்கணித்து விடுவதில்லை. இஸ்லாத்தின் சர்வதேசத் தன்மையைப் பேசி அழைப்பாளர்கள் தாம் வாழும் சூழலை மறந்து விட்டால், அவர்களது அழைப்பு மொழி இஸ்லாமாக இருக்காது. அதேபோன்று, தனது சூழலின் பிரச்சினைக்குள்ளேயே முடங்கி உலகைப் பார்க்கத் தெரியாத அழைப்பாளர்களின் மொழியும் இஸ்லாத்தின் சிறப்பை இழந்து விடும்.

முதலில் இஸ்லாத்தின் சர்வதேசத் தன்மை குறித்துப் பார்ப்போம். இஸ்லாத்தின் அழைப்பு முழு உலகத்திற்குமானது. அது ஒரு பிரதேசத்திற்காக அல்லது குறிப்பிட்ட காலத்திற்காக அதன் பிரச்சினைகளது தீர்வுக்காக வந்த மார்க்கமல்ல. இஸ்லாத்தின் இந்த சர்வதேசத்தன்மையை அல்லாஹ் மக்காவின் மிக ஆரம்ப காலப் பகுதியிலேயேபிரகடனம்செய்துவிட்டான். **''இ(ந்த வேதமான)து அகிலத்தார் அனைவருக்குமான அறிவுறுத்தலாகும் *(38: 87)*. அகிலத்தார் அனைவருக்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக தனது அடியாருக்கு புர்கான் எனும் வேதத்தை இறக்கியருளியவன் பாக்கியம் பொருத்தியவனாவான்.''** *(25: 1)* **''நபியே! அகிலத்தில் அனைவருக்கும் அருட்கொடையாகவன்றி உங்களை நாம் அனுப்பவில்லை''** *(21: 107)*. **''மனிதர்களே! உங்கள் அனைவருக்குமாக அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதர் நிச்சயமாக நான் தான் என்று (அம்மக்களுக்கு எடுத்துக்) கூறி விடுங்கள்.''**

முன்னைய தூதர்களைவிட தனக்குள்ள சிறப்பம்சங்களை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறும்போது அவர்கள் தத்தமது சமூகங்களுக்கென விஷேடமாக அனுப்பப் பட்டார்கள். நான் முழு மனித சமுதாயத்திற்குமாக அனுப்பப்பட்டேன் என்றார்கள். (அல்புகாரி, முஸ்லிம்)

அறபுத் தேசத்தின் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரு வதற்கான வாய்ப்பு ஹுதைபிய்யா உடன்படிக்கையின் மூலம் கிடைக்கப்பெற்றதையடுத்து உடனடியாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தன்னைச் சூழ இருந்த அன்றைய உலகத் தலைவர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்தமை நாங்கள் அறிந்ததே. நபிகளாரின் அந்த முன்னெடுப்பு இஸ்லாத்தின் சர்வதேசத் தன்மையை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான சான்றாகத் திகழ்கிறது. அதனைத் தொடர்ந்து இஸ் லாம் உலகின் பிரச்சினைகளைத் தீர்க்கும் மார்க்கமாகப் பரிண மிக்கிறது.

இஸ்லாம் சர்வதேசத்திற்குமானது என்பதை கோட்பாட்டிலும் ஹுதைபிய்யாவின் பின்னரான நடைமுறையிலும் தெளிவாகக் காட்டுகின்ற சான்றுகள் எண்ணற்றவை. அந்தச் சான்றுகள் ஒரு புறமிருக்க, நாம் வாழும் இன்றைய சூழலும் சர்வதேசத்தன்மை வாய்ந்ததாகவே இருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. பூகோளக் கிராமம் என்றாகிவிட்ட இன்றைய உலகில் எந்தக் கரு மத்தையும் உலகம் அறியாவண்ணம் ஒதுங்கி நின்று நாம் செய்து விட முடியாது. உலகம் இன்று நெருங்கிவிட்டது; சுருங்கி விட்டது. தகவல் தொழில்நுட்பப் புரட்சி விண்ணையும் மண்ணையும் இணைத் திருக்கின்ற இக்காலத்தில் உலகின் ஒரு மூலையில் நடக்கின்ற தொரு சம்பவம் அந்த நிமிடமே உலகின் மற்றுமொரு மூலையில் தாக்கம் விளைவிப்பதை நாம் பார்க்கிறோம்.

எனவே, எமது அழைப்பாளர்கள் எதைப் பேசினாலும் இன்றைய சூழலில் நாம் உலகத்தை விளித்தே பேசுகிறோம் என்பதையும் எதைச் செய்தாலும் நாம் அதனை உலக அரங்கில் செய்கிறோம் என்பதையும் உணர்ந்திருத்தல் வேண்டும்.

இதற்காக நாம் இரண்டு இஸ்லாம்களை வைத்திருக்கவும் முடியாது. ஒரு இஸ்லாம் எமக்குரியது. அதனை நாம் எமது சுவர்களுக்கு மத்தியில் பேசுவோம்; மற்றுமொரு இஸ்லாம் உலகத்திற்கானது. அதனை சுவர்களுக்கு வெளியே பேசுவோம். அழைப்பாளர்கள் இவ்வாறு இரண்டு இஸ்லாம்களை வைத்துக்கொண்டு இடத்திற்கிடம் நிறம் மாற்றிப் பேசுவது இஸ்லாத்தின் இயல்புக்கும் பொருத்தமற்றது; இன்றைய உலகத்திற்கும் பொருந்தாதது. இஸ்லாம் ஒரு மூடு மந்திரமல்ல. அது வெளிப்படையானது; தெளிவானது; மனிதர்கள் அனைவருக்குமானது. எனவே, அதனைப் பேசும் மொழியும் அவ்வாறே இருக்க வேண்டும்.

அதாவது, நாங்கள் பேசும் இஸ்லாத்தின் மூலாதாரம் குர்ஆனும் சுன்னாவுமாகும். எங்களது பேச்சு, நடத்தை, அழைப்பு அனைத்தும் அதிலிருந்து வெளிவர வேண்டும். குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் முரணாக எமது உணர்வுகள் வெளிப்படலாகாது; நாம் பேசும் மொழியும் அவ்வாறு அமைந்துவிடக் கூடாது. இதனை விளங்கிக் கொள்வதற்குப் பின்வரும் இரண்டு பிரயோகங்களையும் அவற்றில் காணப்படுகின்ற வேறுபாடுகளையும் நம் அறிந்திருத்தல் அவசியம்.

### அ) உலகமயமாக்கல் மற்றும் இஸ்லாத்தின் சர்வதேசத் தன்மை

சர்வதேசத் தன்மை என்பது இஸ்லாத்துக்குச் சொந்தமானது. அதனை நாம் ஏற்கனவே விளக்கியுள்ளோம். அதன் நோக்கம் யாதெனில், மனிதர்கள் அனைவரையும் கௌரவிப்பதாகும். **நாங்கள் ஆதமுடைய மக்களை கௌரவித்திருக்கிறோம் (அல் இஸ்ரா: 70)** என அதனை அல்லாஹ் குறிப்பிடுகிறான். அந்த கௌரவம் பல்வேறு வழிகளில் வெளிப்படுகிறது.

அல்லாஹ்வின் பிரதிநிதி அந்தஸ்த்து மனிதனுக்கு வழங்கப்பட்டிருப்பது அந்த கௌரவங்களில் ஒன்றாகும். அந்தப் பிரதிநிதிக்கு அல்லாஹ் அறிவைக் கொடுத்ததன் மூலம் வானம், பூமியையும் அவற்றிலுள்ள அனைத்தையும் அவன் வசப்படுத்தியும் கொடுத்தான். அது கௌரவத்தின் மற்றுமொரு பகுதியாகும். மனிதர்கள் அனைவரும் ஒரு தாய் தந்தையின் வழித்தோன்றல்கள் என்பது மற்றுமொரு கௌரவமாகும். ஒரே இறைவனின் படைப்புகள்

என்பதும்; அந்த வகையில் அனைவரும் சமமானவர்கள் என்பதும்; அவர்களில் கறுப்பன்-வெள்ளையன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், கௌரவமானவன்-தீட்டுள்ளவன் என்பன போன்ற ஏற்றத்தாழ்வு களுக்கு இடமில்லை என்பதும் மற்றுமொரு கௌரவம். இந்த கௌரவங்கள் பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தமது இறுதிப் பேருரையில் குறிப்பிட்டமை இன்னுமொரு கௌரவமாகும். அன்னார் எடுத்துரைத்தார்கள்:

**''மனிதர்களே! அறிந்து கொள்ளுங்கள். உங்களது இரட்சகன் ஒருவன்; உங்களது தந்தை ஒருவர். அறிந்து கொள்ளுங்கள். அறபி யல்லாதவன் மீது அறபிக்கு எந்த கௌரவமும் கிடையாது. அதே போன்று, அறபியின் மீது ஓர் அறபியல்லாதவனுக்கு எந்த மகிமை யும் கிடையாது. சிவப்பன் கறுப்பனை விட உயர்ந்தவனல்லன்; கறுப்பன் சிவப்பனை விட உயர்ந்தவனுமல்லன். வேறுபாடு இறை யுணர்வு அடிப்படையில் மாத்திரமே.''** *(அஹ்மத்)*

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இந்தக் கூற்று மூலம் பின்வரும் அல்குர்ஆன் வசனத்தையே உண்மைப் படுத்தியுள்ளார்கள். அல்குர்ஆன் கூறுகிறது:

**''மனிதர்களே! நாங்கள் உங்களை ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். மேலும் நீங்கள் பரஸ்பரம் அறி முகமாவதற்காக பல்வேறு கோத்திரங்களாகவும் சமூகங்களாகவும் உங்களைக் கட்டமைத்தோம். அல்லாஹ்விடம் உங்களில் அதிக மகிமையுடையவர் அதிகம் அவனை அஞ்சி நடப்பவரே.''** *(அல்ஹுஜுராத்: 13)*

இந்த வசனம் மனிதர்கள் அனைவரும் சமமே என்பதை வலியுறுத்துவதோடு ஒவ்வொரு சமூகத்திற்குமுரிய தனித்தன்மை களையும் அங்கீகரிக்கின்றது. அந்தத் தனித்தன்மைகள் ஊடாகவே பரஸ்பர அறிமுகம் நடக்க வேண்டும்.

இஸ்லாத்தின் சர்வதேசத் தன்மைக்கான அடிப்படைகளே இவை. அதேநேரம், உலகமயமாக்கல் என்ற ஒரு புதிய பிரயோகமும்

எம்மிடம் இன்று புழக்கத்திலிருக்கின்றது. அதன் விளக்கம் வேறு என்பதை அழைப்பாளர்கள் புரிந்திருக்க வேண்டும்.

உலகமயமாக்கல் என்பதன் பொருள் (இதுவரை நாமறிந்த பிரகாரம்) மேற்கின் அரசியல், பொருளாதார, கலாசார மற்றும் சமூகவியல் மேலாதிகத்தைப் பரவலாக்குதல் என்பதையே குறிக்கிறது. குறிப்பாக, மத்திய கிழக்கு மற்றும் மூன்றாம் உலக நாடுகள் மீது இந்த ஆதிக்கத்தைப் பரவச் செய்வது அதன் நோக்கமாகும். அந்த நோக்கத்தில் பிரதிபலிப்பது ஒரு சகோதரத்துவ வாஞ்சையல்ல; ஒரு சரிநிகர் உறவுமல்ல. மாறாக, எஜமானர்கள் அடிமைகளைப் பராமரிக்கும் தன்மைதான் அதில் பிரதிபலிக்கிறது. வேறொரு வார்த்தையில் சொன்னால், அது உலகை மேற்காக மாற்றும் ஒரு முயற்சி. அதுவும் பொருளாதார ரீதியில் அல்ல; அறிவியல் தொழில்நுட்ப ரீதியிலுமல்ல. மாறாக, அவர்களின் அரசியல், பொருளாதார, கலாசார நலன்களுக்கு உடன்பாடான சூழலை உலகில் உருவாக்குவதே உலகமயமாக்கலின் நோக்கமாகும்.

உலகமயமாக்கல் என்பது நவீன ஆக்கிரமிப்பிற்கு அவர்கள் இட்டுவைத்துள்ள செல்லப் பெயராகும். பழைய போர்வையைக் களைந்துவிட்டு நவீன ஆக்கிரமிப்பைப் போர்த்துவதற்கு அவர்கள் கண்டுபிடித்த புதிய அலங்கார ஆடையே இந்த உலகமயமாக்கல். உலகமயமாக்கல் திட்டத்திற்கு உடன்படாதவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அதன்பால் இழுத்து வருவது அவர்களது கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்வார்கள். ஆப்கான், ஈராக், சூடான், லிபியா, சிரியா போன்ற முஸ்லிம் நாடுகளில் இன்று நடப்பவை உலகம் அறிந்ததே. உலகமயமாக்கல் திட்டத்திற்கு மற்றொருவகையில் பணிபுரிகின்ற நிறுவனங்கள்தாம் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், சர்வதேச மன்னிப்புச் சபை போன்றனவாகும். இந் நிறுவனங்கள் உலகமயமாக்கல் திட்டத்தின் முகவர்களாக செயல்படுகின்றன.

சுதந்திரம் என்ற பெயரால் குடும்பக் கட்டமைப்பை சீர்குலைத்து, பெண்களை போதைப் பொருட்களாக மாற்றி, ஒருபால் திருமணத்தை ஊக்குவித்து அவர்கள் நினைத்த கலாசாரமொன்றை உலகமயப்படுத்துவதற்கான திட்டங்களை பெரும் நிதிகளோடு சுமந்து வருகின்றனர். மேற்கூறப்பட்ட நிதி நிறுவனங்களினூடாக அவர்கள்

முதலீடு செய்வது இந்த சீர்கேடுகளை நேரடியாக வளர்ப்பதற்கல்ல. மாறாக அபிவிருத்தி, வலுவூட்டல் போன்ற பெயர்களால்தான் அவர்கள் இதனை மேற்கொள்கிறார்கள்.

அனைத்து மத விழுமியங்களையும் குழிதோண்டிப் புதைத்து விட்டு மேற்கின் சீரழிவிற்குக் காரணமாக இருந்த அசிங்கங்களை உலகில் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவச் செய்வதற்கு அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளில் ஒன்றுதான் 1994இல் கெய்ரோவில் நடந்த சனத்தொகை மாநாடும் 1995இல் பீஜிங்கில் நடந்த மகளிர் மாநாடுமாகும். வத்திக்கான் உட்பட அனைத்து மதங்களைச் சேர்ந்த வர்களும் இந்த இரு மாநாட்டுத் தீர்மானங்களையும் கடுமையாக எதிர்த்து நின்றார்கள். இருப்பினும், வேறு வழிகளால் அந்த முயற் சிகளை மேற்கொண்டு அவர்கள் நினைத்ததை அவர்கள் சாதிக் கத்தான் செய்கிறார்கள்.

ஒவ்வொரு சமூகத்தினதும் தனித்துவங்களை அழித்துவிட்டு அனைவர் மீதும் தமது அவலட்சணங்களைத் திணிப்பதுதான் இவர்கள் விரும்புகின்ற உலகமயமாக்கலாகும்.

இஸ்லாம் அவ்வாறல்ல. அது என்றுமே திணிக்கப்படவில்லை. முஸ்லிமல்லாதவர்களின் தனித்துவங்கள் எதனையும் சதிகள் மூலமாகவோ, அதிகாரங்கள் மூலமாகவோ அழிக்க முற்பட்ட வரலாறும் அதற்கில்லை. இஸ்லாத்தை ஒரு மனிதனின் பகுத்தறிவு ஏற்காத நிலையில் அதனை அவன் மீது திணிக்க எந்த அனுமதியும் யாருக்கும் வழங்கப்படவில்லை.

மனிதர்கள் மட்டுமல்ல, ஏனைய படைப்புகளும் அவற்றின் தனித்துவங்களோடு வாழ்வதை இஸ்லாம் அங்கீகரித்தே இருக்கிறது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு முறை கூறினார்கள்: **“நாய்களும் (அல்லாஹ்வின் படைப்புகளிலுள்ள) ஒரு சமூகம். இல்லாவிட்டால் அவற்றைக் கொன்று விடுமாறு நான் ஏவியிருப்பேன்.” (அபூ தாவூத்)** அல்லாஹ் பூமியில் ஒவ்வொரு படைப்பையும் அதற்குரிய தனித் தன்மைகளோடு வெவ்வேறாகப் படைத்திருக்கிறான் என்ற உண்மையை அல்குர்ஆனும் பிரஸ்தாபித் திருக்கிறது. 6: 38 வசனம் அதனைப் பின்வருமாறு கூறுகிறது.

"பூமியில் ஊர்ந்து திரியும் ஒவ்வொரு பிராணியும் (வானத்தில்) சிறகடித்துப் பறக்கும் ஒவ்வொரு பறவையும் உங்களைப் போன்ற தொரு சமூகமேயன்றி வேறில்லை."

அல்லாஹ் வெவ்வேறு சிறப்புத் தன்மைகளோடு படைத்திருக் கும் ஒவ்வொரு படைப்பும் ஒரு நோக்கத்தின் அடிப்படையிலேயே இந்தப் பூமியில் சஞ்சரிக்கின்றது. அந்த வகையில் ஒரு படைப் பையோ அதன் தனித் தன்மைகளையோ அழிக்கும் அதிகாரம் எவருக்கும் கொடுக்கப்படவில்லை; தீங்கு விளைவிக்கின்ற ஒன்றி லிருந்து தன்னைப் பாதுகாப்பதற்காகப் போராடுவதைத் தவிர.

**ஆ) தனது சூழலில் கவனம்**

இஸ்லாத்தின் சர்வதேசத் தன்மை குறித்தும் அதற்கு நேர் எதிரான உலகமயமாக்கல் தத்துவம் குறித்தும் இதுவரை பார்த்தோம். இஸ்லாம் சர்வதேசத் தன்மை வாய்ந்தது என்பதால் அது ஒரு மனிதனின் வாழும் சூழலை மறந்துவிடுவதில்லை.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறுகின் றார்கள்: "உன்னிலிருந்து துவங்கு. பின்னர் உனது பராமரிப்பிலுள்ள வர்களைக் கவனி..." (முஸ்லிம்)

செலவு செய்வது பற்றி நபிகளாரிடம் வினவப்பட்டபோது அல்லாஹ் அதற்கு பின்வருமாறு பதில் கூறுகின்றான்.

"நபியே! அவர்கள் செலவு செய்வது பற்றி உம்மிடம் வினவு கின்றனர். நீங்கள் கூறுங்கள். நீங்கள் செலவு செய்யும் நல்ல செல்வம் பெற்றோர்கள், உறவினர்கள், அநாதைகள், ஏழைகள், வழிப்போக்கர்கள் என்போருக்கு வழங்கப்படுவதே." (2: 215)

இந்த வசனத்தில் பெற்றோர்கள் முதலிலும் அடுத்து உறவினர் களும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளனர். தனது சூழலைக் கவனிப்பதற்கு முதலிடம், மிக நெருக்கமானவர்களுக்கு முன்னுரிமை என்பவற்றை இந்த வசனம் எமக்குணர்த்துகின்றது.

அதேபோன்று, ஒரு பிரதேசத்தில் சேகரித்த ஸகாத்தை அந்தப் பிரதேச ஏழைகளுக்கு வழங்குவதற்கே இஸ்லாம் முதலிடம்

கொடுக்கிறது. யமனுக்கு கவர்னராக அனுப்பப்பட்ட முஆத் பின் ஜபல் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு அங்குள்ள ஸகாத்தை சேகரித்து மதீனாவுக்கு அனுப்புமாறு நபியவர்கள் கூறவில்லை. அவர்களுடைய பணக்காரர்களிடம் வசூலித்து அவர்களது ஏழை களுக்கு வழங்குமாறே உத்தரவிட்டார்கள்.

இதன் மூலம் (Decentrelized எனும்) நவீன உத்தியை இஸ்லாம் தனது ஆரம்பப் பொழுதுகளிலேயே அறிமுகம் செய்துவிட்டது எனலாம்.

சொத்துக்களைப் பங்கிடுகின்றபோதும் மிக நெருங்கியவர்களின் பங்குகளுக்குப் பிறகே தூரத்து உறவினர்களின் பங்குகள் பற்றிப் பேசப்படுகின்றன. உறவினர்களுக்குப் பின் அண்டை வீட்டார் களுக்குள்ள உரிமைகள் அடுத்த அந்தஸ்த்தைப் பெறுகின்றன. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: **''அண்டை வீட்டான் பசியோடு இரவைக் கழிக்கும்போது வயிறு நிறைய உண்டுவிட்டுத் தூங்குபவன் இறைவிசுவாசியல்ல.''** **(அல்ஹாகிம்)** அண்டை வீட்டார் தொடர்பிலான உரிமைகள் பற்றி இஸ்லாமிய சட்ட நூல்கள் மிக விரிவாகப் பேசியிருக்கின்றன.

அவ்வாறே ஊர், சமூகம், தேசம், சர்வதேசம் என்று ஒவ் வொன்றிற்குமுரிய கடமைகள், உரிமைகள் விரிவடைந்து செல் கின்றன. இறுதியாக, கால வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து (நேற்று, இன்று, நாளைகளைத் தாண்டி) நிற்கும் சர்வதேச இஸ்லாமிய உம்மத்தைப் பற்றி குர்ஆன் பேசுகிறது:

**''நிச்சயமாக இந்த உங்களது உம்மத் ஓர் உம்மத்தாகவே இருக் கிறது. நான் உங்களது (ஒரே) இரட்சகன் என்னையே நீங்கள் வணங்கி வழிபடுங்கள்.''** *(23: 52, 21: 52)*

ஆக, இஸ்லாத்தின் அழைப்பு மொழி அதன் சர்வதேசத் தன்மைக் கும் வாழும் சூழலுக்கும் இணைப்புப் பாலமாக இருக்க வேண்டும். உலக நிலைவரங்கள், சர்வதேசப் பிரச்சினைகள் என்றெல்லாம் பேசி காலடியில் இருப்பவர்களின் பசியை, வேதனைகளை, பிரச் சினைகளை ஒரு தாஇ மறந்துவிட இயலாது. உலக முஸ்லிம்களின்

அவலங்களைப் பேசி உள்ளூர் முஸ்லிம்களின் சீர்திருத்த முயற் சியைக் கிடப்பில் பேட்டுவிட முடியாது. இது அகிலத்தாருக்கு ஓர் அறிவுறுத்தலன்றி வேறில்லை (ஸாத்: 87) என்று இஸ்லாத்தின் சர்வதேசத் தன்மையைப் பேசியதால், உமது நெருங்கிய உறவினர் களுக்கு எச்சரிக்கை செய்வீராக என்ற காலடிப் பிரச்சினையை அல்குர்ஆன் மறக்கவில்லை. பிறந்து, மூச்சுவிட்டு, உண்டு, குடித்து, வாழுகின்ற மண்ணை மறந்துவிட்டு சர்வதேச விவகாரங்களில் ஒரு தாஇ மூழ்கிவிட முடியுமா?

அதேபோன்று, உலகில் என்ன நடக்கிறது; உலக அரங்கில் இன்று பேசப்படும் முக்கிய விவகாரம் எது; அனைவரது கவனங் களையும் ஈர்க்கும் வகையில் அனைத்து ஊடகங்களும் முக்கியத்து வம் கொடுத்திருக்கும் சூடான இன்றைய செய்தி என்ன என்பதை யெல்லாம் அலட்டிக்கொள்ளாமல் ஜனாஸாவின் சட்டங்களையும் தொழுகையின் அசைவுகள் மற்றும் ஓதல்களிலுள்ள கருத்து வேறு பாடுகளையும் பேசிக் கொண்டிருப்பதும் எப்படிப் பொருந்தும்! இங்கே இவர்கள் இந்தக் கருத்து வேறுபாடுகளைப் பேசி விவா தித்துக்கொடிருக்கும்போது அங்கே அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவை முற்றுகையிட்டு பல நூறு அப்பாவிகளை சுட்டுத் தள்ளியிருப் பார்கள்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சி யுகத்தில் உலகத்தை மறந்து உள்ளங்கையினுள் வாழ்வது கிணற்றுத் தவளைத் தனமாகும். பருந்தொன்று அகன்று விரிந்த வானத்தில் சஞ்சரித்துக் கொண்டே மண்ணில் ஊர்ந்து செல்லும் ஒரு பிராணியில் கண் வைத்திருப்பது போல் இரண்டிலும் கவனமுள்ளவர்களாக வாழ்வதும் பேசுவதும் தாஇகளின் அழைப்பு மொழிக்கு இன்றியமையாதவையாகும். அதாவது, தாஇயின் ஒரு கண் உலகிலும் ஒரு கண் காலடியிலும் இருக்க வேண்டும்.

## 09

# பூர்வீகத்தைப் பற்றிப் பிடித்து சமகாலத்தை மறுத்துவிடாத மொழி

எமது மார்க்கத்தின் அடிப்படைகள், கொள்கைகள், கோட்பாடுகள் என்பன காலத்தால் மாறக்கூடியவை அல்ல. அல்லாஹ்விடமிருந்து அல்லாஹ்வின் தூதர்கள் மூலமாக மனித சமூகத்திற்கு அருளப் பட்டு இறுதி நபியோடு முத்திரையிடப்பட்ட மார்க்கமே இஸ்லாம். அதுதான் எமது பூர்வீகம். நாங்கள் எமது பூர்வீகத்தில் உறுதியாக இருப்போம். அதிலிருந்து அணுவும் பிசக மாட்டோம். அதிலிருந்து யாராவது எம்மைத் தூரமாக்க முயன்றால் எமது உயிர் போனாலும் நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்ற எமது பூர்வீகத்தின் மீதான பற்று பாராட்டத்தக்கது; போற்றத்தக்கது. எனினும், எதில் நாங்கள் மாற மாட்டோம்; எதனை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்பதில் எமக்குத் தெளிவிருக்க வேண்டும். இஸ்லாத்தில் இருக் கின்ற அனைத்துமே மாறாதவை; பூர்வீகமானவை; விட்டுக்கொடுக்க முடியாதவை என்று ஒருவர் நினைத்தால் அவர் இஸ்லாம் பற்றி அறியவில்லை என்பது பொருளாகும். இஸ்லாத்தில் கால மாற்றங் களுக்கேற்ப மாறுபவையும் உண்டு; எக்காலத்திலும் மாறாதவை யும் உண்டு.

மாறாதவைக்கு உதாரணம் இஸ்லாத்தின் அடிப்படைக் கோட் பாடுகள், வணக்க வழிபாடுகள், ஷரீஆவின் நோக்கங்கள், இஸ் லாத்தின் இலக்குகள், உன்னதமான உயர் குணங்கள், தூய்மை யான அணுகுமுறைகள். இவற்றை நாங்கள் எங்களது விருப்பு வெறுப்புகளுக்கேற்பவோ அல்லது காலமாற்றத்திற்கேற்பவோ மாற்றிட முடியாது.

இதன் பொருள், கால மாற்றங்கள், புதிய சூழல்கள், அவற்றின் பிரச்சினைகள் எதனையும் நாம் அலட்டிக்கொள்ள மாட்டோம்; எது வந்தாலும் ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட நூல்களை வரி வரியாகப் படித்துப் பாடமாக்கி அங்கிருந்துதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தேடுவோம்; இன்றைய உலகில் புதிதாக சிந்திப்பதற்கு ஒன்றுமே இல்லை; அனைத்தையும் எமது முன்னோர்கள் ஆய்ந்து அறிந்து எழுதிவைத்துவிட்டுப் போய் விட்டார்கள்; அவற்றைப் படித்தால் போதுமானது என்பதல்ல.

நாங்கள் மாற்றங்களுக்குட்படாத எமது பூர்வீகத்தில் உறுதியாக இருப்பது போலவே எமது சமகாலத்திலும் நாம் வாழ்ந்தாக வேண்டும். எமது அடிப்படைக் கோட்பாடுகள், ஷரீஆவின் நோக் கங்கள், இஸ்லாமிய வாழ்வியல் பண்புகள், இஸ்லாத்தின் இலட் சியங்கள் என்பவற்றிற்கு முரண்படாமல் சமகாலத்தை அணுகி அதன் பிரச்சினைகளுக்கு வழிகாட்டல்களையும் பரிந்துரைகளை யும் தீர்வுகளையும் வழங்க வேண்டும். இன்றைய தாஇகள் பேசும் மொழி இந்த இரண்டு அம்சங்களையும் ஒன்றிணைக்காதபோது அது இன்றைய சூழலுக்குப் பொருத்தமான அழைப்பு மொழியாக இருக்க மாட்டாது.

தாஇகள் பேசும் மொழியில் பூர்விகத்தின் ஆழம் தொனிக்க வேண்டும். சமகாலத்தின் அனுபவம் பிரதிபலிக்க வேண்டும். அழைப்புப் பணியில் ஈடுபட்டாலும் கற்பித்தலாக இருந்தாலும் மார்க்கத் தீர்ப்புகள் வழங்கினாலும் அனைத்திலும் இந்த இரண்டு அம்சங்களும் ஒன்றிணைக்கப்படாதபோது இன்றைய சூழலுக்குப் பொருத்தமான அழைப்பு மொழியாக அது இருக்க மாட்டாது.

நவீன உலகம் அதற்கே உரிய விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலை, கலாசாரம், தத்துவம் என்பவற்றோடு இக்காலத்திற்கேயுரிய வழிகேடுகள், ஜாஹிலிய்யத்துக்கள், பிரச்சினைகள் போன்றவற் றையும் கொண்டிருக்கின்றன. இவற்றைக் கவனத்தில் கொள்ளாமல் ஏழாம் நூற்றாண்டு நூல்களுக்குள் மூழ்கிப் போனவர்களால் இந்தக் காலத்தை நோக்கி எப்படிப் பேச முடியும்!

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் தனது பிரசாரத்தின் ஆரம்ப காலத்தில்

மக்காவிலும் இறுதி அரைப் பகுதியில் மதீனாவிலும் வாழ்ந்தார்கள். அந்த இரு காலப்பகுதியிலும் அவர்கள் சந்தித்த சூழல்கள், பிரச் சினைகள் அனைத்தும் வேறுபட்டிருந்தன. அந்த வேறுபாடுகளுக் கேற்ப இறக்கப்பட்ட வழிகாட்டல்கள், சட்டங்கள் என்பன வேறு பட்டன; பேசுபொருளும் வேறுபட்டது. பேசும் மொழியிலும் அதற்கேற்ப மாற்றங்கள் இருக்கத்தான் செய்தன. மக்கா சூராக் களின் பேசு மொழியும் மதீனா சூராக்களின் பேசு மொழியும் பேசும் விடயதானங்களும் அந்தக் கிட்டிய இரு காலப்பகுதியி லேயே வேறுபட்டிருந்தனவாயின் ஏழாம் எட்டாம் நூற்றாண்டு காலப் பகுதிக்கும் 14ஆம் நூற்றாண்டுக்குமிடையில் எத்தனை வேறுபாடுகள் இருக்கும்!

இமாம்கள் தாம் வாழ்ந்த காலப் பகுதியிலேயே தமது பத்வாக் களை புதிய சூழல்களுக்கும் பிரச்சினைகளுக்குமேற்ப மாற்றியிருக் கிறார்கள் என்பது வரலாறு. இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் எகிப்துக்குப் போவதற்கு முன்னால் வழங்கிய மார்க்கத் தீர்ப்புக்களைப் பழையது என்றும் எகிப்துக்குப் போன பிறகு வழங்கிய தீர்ப்புக்களைப் புதியது என்றும் வேறுபடுத்திப் பார்த் தார்கள். இமாம் அபூ ஹனீபா அவர்களது தீர்ப்புகள் பலவற்றிற்கு முரணாக அன்னாரது மாணவர்களான அபூ யூஸுப், முஹம்மத் ஆகியோரது பத்வாக்கள் இருக்கின்றன. இஸ்லாமிய சட்ட உலகில் பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நியதிதான் கால மாற்றங்களால் சட்டங்கள் மாறும் என்பதாகும்.

### சம காலத்தின் பண்புகள்

நாம் வாழும் இக்காலத்திற்கேயுரிய சில பண்புகள் இருக்கின்றன. எமது பேச்சிலும் எழுத்திலும் உபதேசத்திலும் கற்பித்தலிலும் சட்டத் தீர்ப்புகளிலும் பத்வாக்களிலும் நாம் அவற்றைக் கருத்திற் கொண்டே செயற்பட வேண்டும்.

அவற்றில் ஒன்று:

*1.* **விஞ்ஞானபூர்வமான நோக்கு:** நாம் வாழும் காலத்தில் அனைத்தையும் விஞ்ஞானபூர்வமாக அளந்து, நிறுத்தி, சீர்தூக்கிப் பார்க்கும் தன்மை மேலோங்கியிருக்கின்றது. ஆதாரமில்லாத கதைகள்,

மிகையான கூற்றுக்கள் கண்மூடித்தனமான பின்பற்றுதல்கள், மக்களின் அறியாமைகளோடு விளையாடும் புராணங்கள், சாஸ்திரங்கள் அனைத்தையும் விஞ்ஞானபூர்வமான நோக்குடையவர்கள் நிராகரிக்கின்றார்கள். இது உண்மையில் விஞ்ஞானம் வளர்ந்ததால் வந்ததொரு விளைவல்ல. மாறாக, இதுதான் குர்ஆன் வலியுறுத்துகின்ற போக்குமாகும். குர்ஆன் அறிவுபூர்வமாக அணுகுவதை எங்காவது தடை செய்திருக்கிறதா? அதற்குப் பதிலாக ஊகங்களின் அடிப்படையில் செயல்படுவதையே அது சாடியிருக்கிறது. அல்லாஹ் கூறுகிறான்: "**அவர்கள் (வெறும்) ஊகங்களையே பின்பற்றுகிறார்கள். நிச்சயமாக ஊகங்கள் சத்தியத்தின் பங்கை சிறிதும் வகிக்க முடியாது (அந்நஜ்ம்: 28)**. மற்றுமொரு மறை வசனம் இப்படிக் கூறுகிறது: "**அல்லாஹ்விடமிருந்து வந்த நேரான வழியை விடுத்து தனது மனோ இச்சையைப் பின்பற்றுபனைவிட வழிகெட்டவன் யார்? (அல்கஸஸ்: 50)** மேலும், அல்குர்ஆன் கண்மூடித்தனமாக ஒரு சமூகம் தனது முன்னோர்களைப் பின்பற்றுவதையும் வன்மையாகக் கண்டிக்கிறது. அது தெளிவான வழிகேடு என்றும் கூறுகிறது.

தாஇகளின் மொழி விஞ்ஞானபூர்வமானதாக, அறிவுபூர்வமானதாக இல்லாவிட்டால் அது எக்காலத்திற்கும் பொருந்தாது. இக்காலத்திற்குப் பொருந்தவே பொருந்தாது!

2. **புனருத்தாரணம்:** சமகாலத்திற்குரிய மற்றுமொரு விஷேட தன்மை புனருத்தாரணம் செய்தலாகும். இன்றைய உலகம் சிந்தனையிலும் செயல்பாட்டிலும் அறிவியலிலும் ஆராய்ச்சிகளிலும் புதுமைகளைப் புகுத்திக்கொண்டே இருக்கின்றது. அனைத்திலும் மாற்றம் காண விழைகிறது. வேகத்தையும் இயங்கு தன்மையையும் துரிதப்படுத்துகின்றது.

இயற்கையிலும் இதுதானே நடக்கிறது! பிரபஞ்சம் விரிவடைகிறது... சூரியன் பயணிக்கிறது... பூமி சுற்றுகிறது... இயற்கையின் அனைத்து வடிவங்களும் நாளுக்கு நாள் மாற்றம், புதுமை, அழகு, என்பவற்றால் பொலிவூட்டப்படுகின்றன. தேக்கம், ஸதம்பிதம் போன்றவற்றை வானத்திலோ பூமியிலோ நாம் காண்பதற்கில்லை.

எனினும், தாஇகளில் அதிகமானோர் இந்த உண்மையை உணரவில்லை. அவர்கள் ஒரு சிலரின் வார்த்தைகளை வேதமாகக் கருதி

புதுமைகளையும் மாற்றங்களையும் வெறுக்கின்றனர் அல்லது நிராகரிக்கின்றனர்.

''பின்னோர்கள் புதிதாக சிந்தித்து செயல்படும் சிரமத்தை எமது முன்னோர்கள் வைத்துவிட்டுச் செல்லவில்லை'' ''பழையவர்கள் செய்ததை விட புதியவர்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை'' போன்ற சிலரது கூற்றுக்களை தாஇகளில் பலர் வேதமாகக் கருதியிருக் கின்றனர்.

**''நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இந்த உம்மத்திலிருந்து அதன் மார்க்கத்தைப் புனருத்தாரணம் செய்யும் ஒருவரை (அல்லது ஒரு சமூகத்தை) அனுப்புவான்''** (அபூ தாவூத்) என்ற நபிமொழி அந்த வேத அந்தஸ்த்தை அவர்களி டம் பெறவில்லை என்பது கவலையானதே.

தாஇகள் புனருத்தாரணம் பற்றிய தெளிவும் சிந்தனையும் இல் லாதவர்களாக இருந்தால், அவர்களது அழைப்பு மொழி இக்காலத் திற்குப் பொருந்தும் வகையில் இருக்காது. அவர்களது பேச்சு சமகால மக்களைச் சென்றடையவும் மாட்டாது.

*3.* **வளர்ச்சியும் நெகிழ்ச்சியும்:** சமகாலத்திற்குரிய மற்றுமொரு தன்மை அனைத்தும் வளர்ச்சி காண்பதாகும். கருத்துக்கள், பழக்க வழக்கங்கள் முதல் வாழ்க்கையோடு தொடர்புள்ள அனைத்துத் துறைகளும் பாரிய வளர்ச்சி கண்டுள்ள ஒரு காலத்தில் நாம் வாழ் கின்றோம். எழுத்துத் துறை, ஊடகங்கள், போக்குவரத்துகள், யுத்த முறைமைகள், ஆயுதங்கள், தொடர்பு சாதனங்கள், தகவல் பரிமாறும் நுட்பங்கள் என மனிதனைச் சூழவுள்ள அனைத்திலும் பாரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தாஇகள் சமூகத்தை விழித்துப் பேசும்போதும் மார்க்கத்தை விளக்கிப் பேசும்போதும் இந்த உண்மைகளை கருத்திற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர்களது பேச்சுக்கள் மக்களைப் பிழையான திசையிலேயே வழிநடத்தும். மக்கள் சிலபோது இன் றைய உலகம் எமக்குரியதல்ல; இன்றைய உலகில் மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியமும் எமக்கில்லை; அதனை எதிரிகள் தம் கைவசம் வைத்திருக்கிறார்கள். அதனை அவர்கள் வைத்துக்

கொள்ளட்டும்; அல்லாஹ் அதனை மாற்ற விரும்பும் நேரத்தில் மாற்றுவான். நாங்கள் எமது மூதாதையர்களால் எழுதப்பட்ட வற்றை படித்துப் பாடமாக்கி ஒப்புவித்து விட்டுப் போனால் போதுமானது என்று கருதுவார்கள்.

இந்த மனநிலையைப் பிரதிபலிக்கும் ஓர் உதாரணம் வருமாறு:

இன்றைய தேர்தல் முறைமைகளை நிராகரிக்கிறார்கள் சில தாஇகள். காரணம் அவ்வாறானதொரு தலைவர் தெரிவு முறை முன்னோர் களிடம் இருக்கவில்லை என்பதே.

தேர்தலை நிராகரித்துவிட்டு அவர்கள் செய்யும் கைங்கரியம் என்னவென்றால், அனைத்து அதிகாரங்களையும் தமது கைகளில் முடக்கி வைத்துக்கொண்டு தமது மக்களையே ஆட்டிப்படைக்கும் உலகின் மிகப் பெரும் சர்வாதிகாரிகளுக்கு சாமரம் வீசுவது தான். கலந்தாலோசனை முறைமையை முற்றாக நிராகரித்துவிட்டு எதேச்சாதிகாரமாக ஆட்சி புரியும் சர்வாதிகாரிகளின் இருப்பு இவர் களுக்கு ஒரு பொருட்டல்ல. மக்கள் விரும்பும் ஒரு நேர்மையான தலைவர் தற்காலத் தேர்தல் முறைமையினூடாக வந்துவிடக் கூடாது என்பதே இவர்களது கவலை. காரணம் தேர்தல் முறை மையை இஸ்லாம் கற்றுத்தரவில்லை என்பது மட்டும்தான்.

அதேநேரம், மற்றொரு சாரார் இருக்கிறார்கள். அவர்கள் அனைத் தையும் மாற்ற வேண்டும் என்கிறார்கள். அடிப்படைகளையும் மாற்றி, நோக்கங்களையும் மாற்றி, நடைமுறைகளையும் மாற்றி அவர்கள் விரும்பும் ஒரு புதிய இஸ்லாத்தை உலகுக்கு அறிமுகம் செய்ய எத்தனிக்கிறார்கள். மார்க்கம் என்பது அவர்களைப் பொறுத்த மட்டில் சமையல்காரன் கையிலிருக்கும் பிசைந்த மாவாகும். அவன் அதன் உருவத்தை எப்படி வேண்டுமானாலும் மாற்றலாம்.

இந்த இரு சாராரின் தீங்குகளிலிருந்தும் மார்க்கம் பாதுகாக்கப் பட வேண்டும். இரு சாராரின் அழைப்பு மொழியும் மார்க்கத்தைக் கொச்சைப்படுத்தவே உதவுகின்றது. தாஇகளின் அழைப்பு மொழி இந்த இரு துருவங்களிலிருந்தும் விலகி பூர்வீகத்தையும் சமகாலத் தையும் இணைக்கும் மொழியாக இருக்க வேண்டும்.

## 10

# நேற்றுக்குள் மூழ்கி நாளையை மறந்துவிடாத மொழி

நேற்றுக்கள் (இறந்தகாலம்) எமக்கு மிக முக்கியமானவை. காரணம், நாளைகளைக் கட்டியெழுப்புவதற்கான பாடங்களை நாம் அங்குதான் படிக்க வேண்டும். எனவே, படிப்பினைகளுக்காக நேற்றுகளும் சாதனைக்காக நாளைகளும் எமக்கு இன்றியமையாத வையாகும்.

நாம் எமது இறந்த காலத்தில் மண்ணை அள்ளிப் போட்டு மூடி விட முடியாது. எம்மில் பலர் இறந்த காலத்தை முற்றாக மறந்து விட்டார்கள். அவர்கள் தமது வாழ்நாளில் ஒரு பகுதியை அறுத்துப் பலியிட்டு விட்டார்கள் என்றுதான் கூற வேண்டும். அல்லது தங்களது விருட்சத்தின் ஆணிவேரைத் தறித்து விட்டார்கள் எனலாம். அதனால் எமது சிந்தனையில் பெரும் ஓட்டைகள் ஏற்பட்டிருக்கின்றன. பார்வைகள் மங்கி ஒளியிழந்திருக்கின்றன. விவகாரங்களை சரியாக மட்டிடும் ஆற்றலை நாம் இழந்திருக்கிறோம்.

சிலர் எமது இறந்த காலத்தை வெறும் கதைகளாக ஆக்கி விட்டார்கள். இல்லை, கதைகளுக்கு சுவை சேர்க்கும் சுவையூட்டிகளாக மாற்றி விட்டார்கள். புராணம் பாடுவது தவிர எமது வரலாறு களிலிருந்து அவர்கள் எதனையும் எடுத்துக் கொள்ளவில்லை.

*அல்லாஹ் என்ன கூறுகின்றான்?*

**''(முன்னோர்களான) அவர்களின் சரித்திரங்களில் அறிவுள்ளவர்களுக்கு படிப்பினைகள் இருக்கின்றன.''** *(12: 111)* மேலும் கூறுகின்றான்: **''நபியே உமது உள்ளத்தை உறுதிப்படுத்தும்**

வகையிலான நபிமார்களின் செய்திகளை நாம் உங்களுக்கு சரித்திரமாகச் சொல்கிறோம்.'' *(ஹூத்: 120)*

படிப்பினைகளோடு மனோதிடத்தையும் உறுதியையும் வழங்கும் ஆற்றல் எமது வரலாறுகளுக்கு உண்டு என்பதை மேற்கூறப்பட்ட வசனங்கள் உணர்த்துகின்றன. பனூ கைனுகா யுத்தம், அஹ்ஸாப் போர், பத்ர் யுத்தம் ஆகிய சந்தர்ப்பங்களில் அல்லாஹ்வுடைய அருள்களும் உதவியும் இஸ்லாமிய அணியின் பக்கம் இருந்தது பற்றி முறையே பின்வரும் வசனங்கள் நினைவூட்டுகின்றன. *அல்மாஇதா: 11, அல்அஹ்ஸாப்: 9, அல்அன்பால்: 26*

வெற்றிகளையும் அதற்கான காரணங்களையும் கற்றுத்தருகின்ற இத்தகைய வசனங்களைப் போன்றே கடந்த கால வரலாறுகள் மூலமாக தோல்விகளையும் அல்லாஹ் கற்றுத்தருகின்றான். உஹுதிலும் ஹுனைனிலும் ஏற்பட்ட தோல்விகளை இந்த வகையில் அல்லாஹ் கற்பிக்கிறான். ஆல இம்ரான் 165 மற்றும் தவ்பாவின் 25ஆம் வசனங்களில்.

இவ்வாறு இறந்த காலத்தோடும் வரலாறுகளோடும் எங்களைத் தொடர்புபடுத்துவது நேற்றைய பாடங்களைக் கற்று நாளைய வரலாற்றைச் செப்பனிடுவதற்கே.

எனவே, எமது கடந்த காலத்தை... அதிலே பொதிந்துள்ள வரலாறுகளை... அவற்றிலுள்ள பாடங்களை... நாம் அலட்சியம் செய்ய முடியாது; மறந்து வாழவும் முடியாது. அதேநேரம், மறுபக்கமாக இறந்த காலத்தினுள் மூழ்கி, எமது பாரம்பரியங்களை அரவணைத்த வண்ணம் எதிர்காலத்தை மறந்தவர்களாக வாழ்ந்து நாம் மரணித்துப் போகவும் முடியாது.

காலம் சுழன்று கொண்டே இருக்கின்றது. நேற்றைய பலவீனன் நாளைய பலசாலியாகின்றான். நேற்றைய வெற்றியாளன் நாளைய தோல்வியாளனாக மாறுகின்றான். உலகிலுள்ள அனைவரும் தங்களது எதிர்காலத்தைக் கனவு காண்கிறார்கள்... திட்டமிடுகிறார்கள்... உழைக்கிறார்கள்... சிலர் முன்னேறுகிறார்கள்; சிலர் தோல்வியடைகிறார்கள். இவ்வாறு உலகின் எதிர்காலம் குறித்து சிந்திப்பதும்

திட்டமிடுவதும் உலகவாதிகளின் பண்பா? முஸ்லிம்கள் தங்களது எதிர்காலம் குறித்து சிந்திக்க வேண்டியதில்லையா? அல்லாஹ் எதிர்காலத்தைப் பார்த்துக் கொள்வானா?

அத்தியாயம் யூஸுபைப் படித்துப் பாருங்கள். எதிர்காலம் பற்றி அல்லாஹ் என்ன கூறுகிறான் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

யூஸுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் சிறுவராக இருக்கும் போது கண்ட கனவு வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத துன்பங்களை அன்னாரின் வாழ்வில் கொண்டு வந்து சேர்க்கிறது. பொறுமையாக அவற்றை எதிர்கொண்டு முன்னேறுகின்றார்கள். இறுதியில், எகிப்து நாட்டின் திறைசேரிக்குப் பொறுப்பாளராக மாறுகின்றார்கள். அந்த நாட்டில் அப்போது இறையாட்சி இருக்கவில்லை. எகிப்தின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தில் முஸ்லிம்கள் வாழவுமில்லை. இருப்பினும், அன்று வாழ்ந்த மக்களின் பாரிய பிரச்சினையொன்றைத் தீர்க்கும் வெற்றிகரமான அனர்த்த முகாமையாளராகத் தொழிற்படுகிறார்கள் யூஸுப் (அலைஹி வஸல்லம்) அவர்கள்.

அவர்களுடைய வரலாறு முழுவதும் அத்தியாயம் யூஸுபின் பிரகாரம் ஒரு கனவின் எதிர்காலம் பற்றியதாகவே இருக்கிறது.

குர்ஆன் கூறும் மற்றுமொரு நபியின் வரலாற்றை நோக்குங்கள். மூஸா (அலைஹிஸ்ஸல்லாம்) அவர்களது எதிர்காலம் எத்தகைய சாதனைகளையும் வெற்றிகளையும் ஈட்ட வேண்டும் என்ற திட்டத்தை தெளிவுபடுத்திய பின்னரே மூஸா (அலைஹிஸ்ஸல்லாம்) அவர்களது பிறப்பு, சிறுபராயம், வாலிபம் மற்றும் அந்தப் பருவங்களோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் என்பவற்றை அல்லாஹ் விபரிக்கிறான். இதனை நீங்கள் தெரிந்துகொள்வதாயின் அத்தியாயம் 'அல்கஸஸ்' ஐப் படியுங்கள்.

பலவீனப்பட்டவர்கள், நசுக்கப்பட்டவர்கள், அவர்கள் வாழ்ந்த பூமியின் அனந்தரக்காரர்களாக மாறவேண்டும். அவர்களை அல்லாஹ் தலைவர்களாக மாற்ற வேண்டும். அது மட்டுமல்ல, பிர்அவ்னின் பரிவாரங்களும் படைகளும் எது நடக்கக்கூடாது என அஞ்சினார்களோ அதனை அவர்களது கண்களுக்கு முன்னால்

நடத்திக் காட்ட வேண்டும். இதுதான் திட்டம். இந்த எதிர்காலத் திட்டத்தை செயற்படுத்துவதற்கே மூஸா (அலைஹிஸ்ஸலாம்) பிறந்து வளர்வதாக அத்தியாயம் அல்கஸஸ் தெளிவுபடுத்துகிறது.

ஆக, திட்டமிட்டு வேலை செய்வதை எமது சமகாலத்தின் ஒரு சிறப்புத் தன்மையாக மட்டும் கூற முடியாது. மாறாக, நபிமார்களது பணிகள் திட்டமிடப்பட்டதாகவே இருந்துள்ளன என்பதை அவர் களது சரித்திரங்கள் எடுத்தியம்புகின்றன. அது மட்டுமல்ல, வானம்-பூமியைப் படைத்தது முதல் அனைத்தையும் ஒரு திட்டத்தின் வழியாகவே அல்லாஹ் இயங்கச் செய்திருக்கின்றான் என்பதும் குர்ஆன் கற்றுத்தருகின்ற மற்றுமோர் உண்மையாகும்.

அவ்வாறாயின், முஸ்லிம்கள் எதிர்காலம் பற்றிச் சிந்திக்காமல், திட்டமிடாமல் நாளைய தினத்தை விடிந்தால் பார்ப்போம் என்ற மனோபாவத்துடன் எப்படிக் கழிக்க முடியும்? இன்றைய தாஇகளில் சிலர் எதிர்காலத்தைத் திட்டமிடுவது கழா கத்ரை மறுக்கும் செய லாகும் என்று பேசுகிறார்கள். அல்லாஹ் அனைத்தையும் எழுதி வைத்துவிட்டான். அந்த எழுத்தின்படி அனைத்தும் நடக்கும் என்ற நம்பிக்கை இல்லாதவர்களே எதிர்காலம் குறித்து சிந்திப்பார்கள்; திட்டமிடுவார்கள் என்று அவர்கள் பேசுவது உண்மையில் மார்க் கத்தின் போதனையா? அவ்வாறாயின் அவர்களில் பலரும் தங்களது பொருளாதாரத்தின் எதிர்காலம் குறித்து... தங்களது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து... தங்களது வீட்டை எப்படி நிர்மாணிக்க வேண்டும் என்பது குறித்து... வியாபாரத்தை விஸ்தரிப்பது குறித்து... வியாபாரத்தில் இருக்கும் சக போட்டியாளர்களை எப்படி மிகைப் பது என்பது குறித்து... நன்றாகவே சிந்திக்கிறார்கள், திட்டமிடு கிறார்களல்லவா? அது எந்த மார்க்கத்தின் போதனை!?

மார்க்கத்தின் எதிர்காலம் குறித்து... சமூகத்தின் எதிர்காலம் குறித்து சிந்திக்க முற்பட்டால் மாத்திரமே அவர்களுக்கு கழா கத்ர் விளங்குகின்றது. அவற்றை எதிர்கொள்வதற்காகத் திட்டமிட வேண்டும் என்று கூறினால் மட்டும் கழா கத்ரை மறுக்க எம்மால் முடியாது என்கிறார்கள். உண்மையில் அவர்கள் ஈமான் கொண்ட கழா கத்ர் யாதெனில், நாளைகளை (எதிர்காலத்தை) எதிரிகளின்

கைகளில் கொடுத்துவிட்டு முஸ்லிம்களுடைய விவகாரங்களை அல்லாஹ்வின் கையில் கொடுத்துவிட்டு தீர்வுகளுக்காக வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதாகும். அல்லாஹ்வுடைய கத்ரின்படி வானத்திலிருந்து மழை பொழியுமே தவிர, 'மாஇதா' எனும் பேழையில் வைத்து ரெடிமெட் தீர்வுகள் இறக்கப்பட மாட்டாது.

எதிர்காலம் பற்றிய அற்புதமான தீர்க்கத்தரிசனம் அல்குர்ஆனில் வருகிறது. அது கழா கத்ரை பிழையாக விளங்கியவர்களுக்கு ஒரு நல்ல பாடமாகும்.

**''அலிப்லாம்மீம் அண்மைத் தேசமான ரோம் வெற்றிகொள்ளப் பட்டு விட்டது. அவர்கள் ஒரு சில வருடங்களில் (இந்த) தமது தோல்விக்குப் பின் வெற்றியீட்டுவார்கள். முன்னரும் பின்னரும் அதிகாரம் அல்லாஹ்வின் கைவசமே...''**

அரபுத் தேசத்திற்கு வெளியே அன்றிருந்த இரு பெரும் வல்லரசுகள் பற்றிய ஒரு விவகாரம் குறித்தே இங்கு அல்லாஹ் பேசியிருக்கிறான். உரோமர்களுக்கும் பாரசீகர்களுக்குமிடையிலான ஒரு யுத்தத்தில் உரோமர்கள் தோல்வியடைந்திருக்கிறார்கள். வேதத்தையுடைய உரோமர்களின் தோல்வி வேதத்தை நிராகரிக்கும் குறைஷிகளுக்கு மகிழ்ச்சி தருகிறது. நபிகளாரைப் பார்த்து இந்தக் கதிதான் வேதம் பற்றிப் பேசுகின்ற உங்களுக்கும் நேரும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அப்போது இந்த விவகாரத்தில் அல்லாஹ்வும் சம்பந்தப்படுகிறான். வேதத்தை நிராகரிக்கும் குறைஷிகளுக்கு தக்க பதில் கொடுக்க அல்லாஹ் முன்வருகின்றான். குறைஷிகளை வாயடைக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் அல்லாஹ்வின் மறுப்பில் பிரதிபலிக்கின்றது.

எதிர்காலம் நீங்கள் நினைப்பது போன்றதல்ல. நீங்கள் யாருடைய தோல்வியால் மகிழ்ச்சியடைகிறீர்களோ அவர்கள் நாளை வெற்றி பெறுவார்கள் என்ற சுபசெய்தி அந்த மறுப்பில் தொனிக்கிறது.

இந்தச் செய்தி அப்போதைக்கு ஒரு செய்தி மட்டுமே. எனினும், எதிர்காலம் குறித்த செய்தி அது. அந்தச் செய்தி எதிரிகளின் நாளைய

எதிர்பார்ப்பு தவிடுபொடியாகப் போகிறது என்ற அதிர்ச்சித் தகவலாகவே இருந்தது. உண்மையில் அது நடக்கவும் செய்தது. வேதத்தையுடைய ரோமர்கள் சில ஆண்டுகளின் பின் பாரசீகர்களைத் தோற்கடிக்கின்றனர். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் சில ஆண்டுகளின் பின் பத்ரில் எதிரிகளைப் புறமுதுகு காட்டி ஓடவைக்கின்றார்.

இந்த வெற்றிகளும் தோல்விகளும் அற்புதங்களாலோ மந்திரங்களாலோ நடக்கவில்லை. மாறாக, மனிதர்கள் மேற்கொண்ட முயற்சிகள், வரைந்த திட்டங்கள் என்பவற்றாலும் வெற்றி தோல்விக்கான இறை நியதிகள் மூலமாகவுமே அவை நடந்தேறின.

அது மட்டுமல்ல, அன்றைய உலக சர்வதேச விவகாரங்களில் முஸ்லிம்களுக்கிருந்த கரிசனை மற்றும் ஈடுபாடு என்பவற்றையும் இந்த சம்பவம் உணர்த்துகிறது. கள நிலைமைகள் யாருக்கு சாதகமாக இருந்தால் நல்லது என அன்றைய முஸ்லிம்கள் அபிப்பிராயப்பட்டார்களோ அந்த அபிப்பிராயத்தில் அல்லாஹ்வும் பங்கெடுத்துக் கொண்டான். ஏதோ தங்களுக்குத் தொடர்பில்லாத விடயம் என்று அன்றைய வல்லரசுகள் விவகாரத்தை அவர்கள் தட்டிக் கழிக்கவில்லை. அந்த விவகாரத்தில் எதிர்காலம் குறித்து அல்லாஹ்வும் கருத்துச் சொல்லுமளவு அதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பது, கழா கத்ர் பற்றிக் கொச்சையாகப் பேசும் இன்றைய தாஇகளுக்கு நல்லதொரு பாடமாகும்.

### நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் எதிர்காலமும்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வரலாறைப் படிக்கின்ற ஒருவர் எதிர்காலம் பற்றிய நபிகளாரின் நோக்கையும் நடைமுறைகளையும் நன்றாகப் புரிந்து கொள்வார்.

தனது அழைப்புப் பணியில் மிக ஆரம்ப காலத்திலேயே எதிர்காலம் குறித்து தனது தோழர்களுக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கொடுத்த பார்வை அற்புதமானது. ஒரு முறை கூறினார்கள்:

''அல்லாஹ்வின் மீது சத்தியமாக! ஒரு நாள் வரும். இந்த மார்க்கத்தை அல்லாஹ் நிறைவு செய்வான். ஒரு மனிதன்

**(மற்றுமோர் அறிவிப்பின்படி ஒரு பெண்) ஸன்ஆவிலிருந்து ஹழ்ர மௌத் வரை (இரவு பகல் என்று பாராமல்) தனிமையாகச் செல்வான். அல்லாஹ்வின் அச்சம் தவிர அவனது உள்ளத்தில் வேறு அச்சங்கள் இருக்காது.'' (அல்புகாரி)**

எதிர்கால அரபுத் தேசம் பற்றிய கற்பனை மட்டுமல்ல இது. அரபுத் தேசத்திலேயே மிக மோசமான வன்முறைகள் இடம்பெறும் குறித்த பிரதேசத்தை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொன்னது போல ஓர் அமைதித் தேசமாக மாற்றிய பின்னர்தான் நபிகளார் இந்த உலகிலிருந்து விடைபெற்றிருக்கிறார்கள்.

குறைஷித் தலைவர்களுக்கு ஒரு முறை சொன்னார்கள்: **''நீங்கள் லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறுங்கள். அரபிகளை ஆட்சி செய்வீர்கள்; அஜமிகள் உங்களுக்கு வரி செலுத்துவார்கள்.''**

இப்படி எதிர்காலம் பற்றி நபிகளார் சொன்ன பல்வேறு செய்திகள் நபிகளாரின் தீர்க்கதரிசனம் என்ற பெயரில் உலா வருகிறதே தவிர, எதிர்கால நோக்குள்ளவர்களாக நபிகளார் இருந்தார்கள் என்ற பாடத்தை எமக்குக் கற்றுத் தருவதில்லை.

நபிகளாரின் எதிர்காலம் பற்றிய நோக்குகள் எமக்கு இரண்டு அடிப்படைகளை அன்னாரிடமிருந்து கற்றுத் தருகின்றன.

1. சமகால சூழல் மாற வேண்டும்; மாற்றப்பட வேண்டும். ஜாஹிலிய்யத்தின் இருள்கள் அகன்று இஸ்லாத்தின் விடியல் ஒன்றை உலகம் சந்திக்க வேண்டும். அதற்காக இறை விசுவாசிகள் பொறுமையோடும் நிலைகுலையாமலும் நேரத்திற்கு முன் விளைவைத் தட்டிக் கனியவைக்கும் அவசரமில்லாமலும் தொடர்ந்து பணியாற்ற வேண்டும்.

2. எதிர்காலக் கனவுகள், இலட்சியங்கள் என்பன ஜெபங்களாலும் மந்திரங்களாலும் அற்புதங்களாலும் ஈடேறுவதில்லை. வெற்றிக்கான காரணிகளைத் தயார் செய்தல், திட்டமிடுதல், தடைகளை வெற்றிகரமாகத் தாண்டும் சாணக்கியம் என்பன போன்ற இறை நியதிகளை கௌரவித்து, முடியுமான அனைத்து முயற்சி

களையும் மேற்கொண்டதன் பின்னால் விளைவுகளை அல்லாஹ் விடம் ஒப்படைத்து விட்டு துஆ செய்வதன் மூலமே எதிர்கால வெற்றிகள் ஈட்டப்படலாம்.

ஹிஜ்ரத் உட்பட நபிகளார் மேற்கொண்ட ஒவ்வொரு நகர்விலும் அசைவிலும் மேற்கூறப்பட்ட இரண்டு அடிப்படைகளையும் அன் னார் பேணி வந்திருக்கிறார்கள் என்பது கண்கூடு. நபியவர்களும் அன்னாரது தோழர்களும் மேற்கொண்ட தொடர்ச்சியான தியாகங் கள், பொறுமை, நிலைகுலையாமை, தவக்குல், தக்வா என்பவற் றோடு, நிலைமைகளை சாதகமாக்கிக் கொள்வதற்காகக் கையாண்ட உத்திகள், சாணக்கியம், விட்டுக்கொடுப்பு போன்றவையும் இணைந்துதான் அவர்கள் எதிர்பார்த்த இலக்கை வெற்றிகரமாக அடைந்து கொள்ளும் சூழலைத் தோற்றுவித்தன. ஜெபங்களும் மந்திரங்களும் அவர்களுக்கு வெற்றிகளை ஈட்டித்தரவில்லை.

**ஹிஜ்ரத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கு வகுத்த திட்டமும் அதில் அன்னார் அனுபவித்த சிரமங்களும்**

இஸ்லாமிய தேசத்தின் முதல் மத்திய நிலையமாகவும் அல் லாஹ்வை வணங்கி வழிபடும் இல்லமாகவும் மஸ்ஜிதுந் நபவியை நிர்மாணித்தல்.

யூதர்களான பனூ கைனுகா கோத்திரத்தின் கட்டுப்பாட்டிலேயே மதீனாவின் சந்தை இருந்தது. அதற்குப் பதிலாக நபிகளாரின் கட்டுப்பாட்டிலான சந்தையொன்று ஸ்தாபிக்கப்பட்டமை.

மதீனாவின் சூழலையும் வாழ்க்கையையும் சுமுகமாக வைத் திருப்பதற்கான சாசனம் ஒன்றை யூதத் தலைவர்களுடன் இணைந்து தயாரித்தல்.

மதீனாவின் இருப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் வெளிச் சக் திகளின் நடமாட்டங்களை அவதானிக்கும் ஒற்றர் அணிகளை மதீனாவைச் சூழ நிறுத்தியமை.

மதீனாவில் இருந்த முஸ்லிம்கள் பற்றி சனத்தொகைக் கணிப் பொன்றை செய்தமை. (1500 முஸ்லிம் ஆண்கள் இருந்தனர்)

இவ்வாறு எதிர்காலம் நோக்கி நபிகளார் முன்னேறிய பாதை அன்னாரின் வரலாற்றில் மிகத் தெளிவாக இருக்கிறது. அந்தப் பாதையில் சென்றுதான் தனது எதிர்காலக் கனவுகளை அன்னார் நனவாக்கினார்கள்.

இவற்றையெல்லாம் ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டு.... வரலாற்றில் நாம் வாழும் காலம் எப்படிப்பட்டது என்பதையும் மறந்துவிட்டு.... தாஇகள் சமூகத்தை விளித்து இஸ்லாம் பேசினால் எப்படியிருக்கும்? கொச்சைப்படுத்தப்பட்ட.... காலத்துக்குப் பொருந்தாத.... பேசுபவர்களின் மரியாதையையும் காற்றில் பறக்க விடுகின்ற பேச்சாக தாஇகளின் பேச்சு மொழி இருக்கக் கூடாது.

# 11

## தீர்ப்பை இலகுபடுத்தி அழைப்பை அழகுபடுத்தும் மொழி

இஸ்லாத்தின் அழைப்பு மொழியில் பிரதிபலிக்க வேண்டிய மற்றுமொரு முக்கியமான அம்சம், மார்க்கத் தீர்ப்புக்களை இலகு படுத்தி மார்க்கத்தின்பால் விடுக்கப்படும் அழைப்பை நற்செய்திக ளால் அழகுபடுத்துவதாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் **''இலகு படுத்துங்கள்; சிரமப்படுத்தாதீர்கள். நற்செய்தி கூறுங்கள்; விரண் டோடச் செய்யாதீர்கள்'' (அல்புகாரி, முஸ்லிம்)** என்று கூறினார்கள்.

முஆத் பின் ஜபல் மற்றும் அபூ மூஸா அல்அஷ்அரி (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இருவரையும் யமனுக்கு அனுப்பியவேளை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவ்விரு வரையும் பார்த்து **''நீங்கள் இருவரும் இலகுபடுத்துங்கள்; சிரமப் படுத்தாதீர்கள். நற்செய்தி கூறுங்கள்; விரண்டோடச் செய்யாதீர்கள்'' (அல்புகாரி, முஸ்லிம்)** என்று கூறினார்கள்.

இந்த நபிமொழிகளில் காணப்படும் இரு உபதேசங்களும் இஸ்லாத்தின் இரண்டு விதமான துறைகளுக்கு வழிகாட்டுவதாக நான் கருதுகின்றேன்.

1. சட்டத் தீர்ப்பு (பத்வா) விடயத்தில் இலகுபடுத்தல்; சிரமப்படுத் தாதிருத்தல்.
2. அழைப்புப் பணியில் நற்செய்தி கூறல்; விரண்டோடச் செய்யா திருத்தல்.

**சிரமப்படுத்துவதைவிட இலகுபடுத்துவது மேலானது**

தனி மனிதன், குடும்பம், சமூகம், அரசியல், பொருளாதாரம், சட்டம், நிர்வாகம் போன்ற பல்வேறு துறைகளில் சட்டத் தீர்ப்புகள் வழங்கும்போது 'இலகுபடுத்துதல்' என்ற கோட்பாட்டையே நாம் பின்பற்ற வேண்டும். 'சிரமப்படுத்தல்' என்ற அணுகுமுறையைத் தவிர்க்க வேண்டும். இதனை நியாயப்படுத்தும் காரணிகள் பல.

1. இஸ்லாமிய ஷரீஅத்தின் அடிப்படை சிரமம் தவிர்ப்பதே ஆகும். இலகுபடுத்தல், சிரமத்தை அகற்றுதல், பளுவைக் குறைத்தல், தாராளத்தன்மை, நெகிழ்வுத்தன்மை போன்றவை இஸ்லாமிய ஷரீஆவின் சிறப்பியல்புகளாகும். இதனை விளக்குகின்ற பல்வேறு வசனங்கள் குர்ஆனிலும் ஸுன்னாவிலும் காணப்படுகின்றன.

நோன்பு பற்றிய சட்டங்களை விளக்கும் வசனத்தில், **''அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதையே விரும்புகிறான்; அவன் சிரமத்தை உங்களுக்கு நாடவில்லை'' (2: 185)** என்றும் சுத்தம் பற்றிய சட்ட வசனத்தில், **''உங்கள் மீது எந்த சிரமத்தையும் ஏற்படுத்துவதற்கு அல்லாஹ் நாடவில்லை'' (5: 6)** என்றும் திருமணம் பற்றிய சட்டங்களை விளக்கிவிட்டு, **''அல்லாஹ் உங்களது சுமையைக் குறைக்க விரும்புகின்றான். (காரணம்) மனிதன் பலவீனமாகப் படைக்கப்பட்டுள்ளான்'' (4: 27)** என்றும் பழிக்குப்பழி வாங்குதல், மன்னித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் பேசிய பின் **''...இது உங்களது இரட்சகனிடமிருந்து கிடைக்கப்பெற்ற அருளும் இலகுபடுத்தலுமாகும்'' (2: 178)** என்றும் இஸ்லாமிய ஷரீஆவின் இந்த இயல்பு பற்றி அல்குர்ஆன் தெளிவுபடுத்திக் கொண்டே இருக்கிறது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: **''நான் தாராளத்தன்மை கொண்ட (இப்றாஹீம் நபியின்) வழியில் அனுப்பப்பட்டுள்ளேன்.'' (அஹ்மத்)**

மேலும் சொன்னார்கள்: **''மார்க்கம் இலகுவானது. ஒருவர் அதனை சிரமப்படுத்தினால் (அதனை அவர் செயற்படுத்த முடியாதளவு) அது அவரை மிகைத்து விடும்.''**

அம்ர் இப்னுல் ஆஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் குளிர் அதிகமாக இருந்த ஓர் இரவில் பெருந்தொடக்கு ஏற்பட்டு பின்னர்

குளித்துக் கொள்ளாமல் தயம்மும் செய்து தொழுகையில் ஈடுபட்டார். அது பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடத்தில் ஒரு முறையீடு வந்தபோது அம்ர் பின்வருமாறு கூறினார்:

**"நிச்சயமாக அல்லாஹ் உங்களது விடயத்தில் கருணையுள்ளவனாக இருக்கிறான். நீங்கள் உங்களையே கொலை செய்து கொள்ள வேண்டாம்"** ***(4: 29)*** என்ற வசனத்தைப் பார்த்தே நான் அவ்வாறு செய்தேன்.

இதனைக் கேட்ட நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் புன்முறுவல் செய்தார்கள். அதேவேளை காயமுற்றிருந்த மற்றும் ஒருவர் பெருந்தொடக்கு ஏற்பட்ட நிலையில் ஒரு சிலரால் வற்புறுத்தப்பட்டு குளிப்புக் கடமையை நிறைவேற்றியபோது மரணமடைந்த செய்தி நபிகளாருக்கு எட்டிய சந்தர்ப்பத்தில் **"அவர்கள் அவரைக் கொலை செய்து விட்டார்கள். அல்லாஹ்வும் அவர்களைக் கொலை செய்வானாக! (மார்க்கத்தில் சட்டம் பற்றி) அறியாதிருந்தால் அவர்கள் அது பற்றி கேட்டிருக்க வேண்டாமா? அறியாமைக்குப் பரிகாரம் கேள்வி கேட்பதாகும். காயத்திற்கு மருந்திட்டுக் கொண்டு தயம்மும் செய்திருந்தால் அதுவே அவருக்குப் போதுமானது" என்று கூறினார்கள். (அபூதாவூத், அஹ்மத், அல்ஹாகிம்)**

2. 'இலகுபடுத்தல்' என்பது ஷரீஆவின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும் என்பதை இதுபோன்ற எண்ணற்ற உதாரணங்கள் உணர்த்திக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று 'இலகுபடுத்தலின்' தேவையை இன்றைய சூழலும் வேண்டி நிற்கின்றது.

இன்றைய சூழல் நன்மைகளில் ஆர்வத்தைக் குறைத்து தீமைகளை நோக்கி மனிதனை விரையச் செய்கின்றது. சிந்தனா ரீதியான மற்றும் கலாசார ரீதியான படையெடுப்புக்கள் இன்றைய உலகை ஆக்கிரமித்திருக்கின்றன. உலகம் ஒரு கிராமமாக ஆக்கப்பட்டு அதனுள் இரண்டறக் கலந்து கரைந்து செல்கின்ற அபாயம் இஸ்லாமிய உம்மத்தைப் பீடித்திருக்கின்றது. இவற்றோடு இஸ்லாம் பற்றிய அறியாமை, மிகையான உலகியல் கவர்ச்சிகள், பொழுது போக்குகள் என்பனவும் இணைந்து மார்க்க உணர்வுகளைப்

பலவீனப்படுத்தியிருக்கின்றன. இந்நிலையில் மார்க்க நடைமுறைகளை அமுலுக்கு கொண்டு வருவதில் இறுக்கமான போக்கைத் தவிர்த்து 'இலகுபடுத்தல்' எனும் அணுகுமுறையைக் கையாள்வதே சிறந்தது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் பலவீனமான புதிய முஸ்லிம்கள் விடயத்தில் இவ்வாறான அணுகுமுறைகளைக் கையாண்டுள்ளார்கள். ''பர்ளுகளை மட்டுமே செய்வேன்; அதிகப்படுத்த மாட்டேன்'' என்று கூறிய ஒருவரைப் பார்த்து ''அவர் உண்மை சொல்லியிருந்தால் வெற்றி பெற்று விட்டார்'' எனப் பாராட்டியமை இதற்கோர் உதாரணமாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய மஸ்ஜிதில் சிறுநீர் கழித்த ஒரு நாட்டுப்புற அறபியின் விடயத்தில் நபியவர்கள் நடந்து கொண்ட முறை இதனை மேலும் தெளிவுபடுத்துகிறது. அவர் சிறுநீர் கழிப்பதைத் தடை செய்யாமல் பின்னர் அதிலே ஒரு வாளி நீரை ஊற்றி விடுமாறு தனது தோழர்களுக்கு ஏவிய நபியவர்கள், மார்க்கத்தின் எளிய அணுகுமுறையையும் பின்வருமாறு விளக்கினார்கள்:

**''நீங்கள் இலகுபடுத்துபவர்களாகவே அனுப்பப்பட்டுள்ளீர்கள்; சிரமப்படுத்துபவர்களாக அனுப்பப்படவில்லை.'' (அல்புகாரி)**

3. ஒரு தனிமனிதன் தனது சொந்த விவகாரத்தில் இறுக்கமான போக்கைக் கடைபிடிக்கலாம். மார்க்கத்தில் இருக்கின்ற இலகுபடுத்தல்களையோ சலுகைகளையோ அவர் தனது விடயத்தில் அமுல்படுத்தாமலும் இருக்கலாம். ஒருவர் தன்னைப் பயிற்றுவிக்கும் நோக்கில் இவ்வாறு செய்வதை அனுமதித்தாலும், பிறரது விடயங்களில் இறுக்கமான போக்கைக் கையாள்வதற்கு நாம் மேலே கண்ட விளக்கங்கள் இடம் தரவே மாட்டா. எவ்வாறாயினும், இறுக்கமான போக்கைவிட நடுநிலையான அணுகுமுறையே சாலச் சிறந்தது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

**''நிச்சயமாக அல்லாஹ் சலுகைகள் கொடுக்கப்படுவதை விரும்புகின்றான். பாவங்கள் நடைபெறுவதை அவன் வெறுப்பது போன்று...'' (அஹ்மத், இப்னு ஹிப்பான், அல்பைஹகி)**

சலுகைகள் எங்களது இரட்சகனிடமிருந்தே கிடைக்கின்றன. எனவே, அவற்றைக் கண்ணியத்தோடு பெற்றுக் கொள்ள வேண்டும். அவை அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானவை. அவற்றைப் புறக்கணிக்கின்றபோது அல்லாஹ் விரும்பித் தரும் ஒன்றை நாம் தட்டிக் கழிக்கின்றோம் என்று பொருள்பட மாட்டாதா? அந்த உணர் வைத் தருகிறது மேலே கூறப்பட்ட நபிமொழி.

இந்த வகையில் சமூகத்தை வழிநடத்தும் சட்டத்துறை அறிஞர்கள், சமூகத்திலிருக்கின்ற பாமரர்கள், பலவீனர்கள், முதியவர்கள், இயலாதவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் போன்ற அனைவரையும் கருத்தில் கொண்டே கருமமாற்ற வேண்டும். அவர்கள் மார்க்க நடைமுறைகள் விடயத்தில் இறுக்கமான, கடுமையான அணுகு முறைகளைக் கையாண்டால் அதிகமான மக்கள் மார்க்கத்தைப் புறக்கணிக்கும் சூழ்நிலையே தோற்றம் பெறும்.

இஸ்லாமிய சட்டத்துறையில் பின்பற்றப்படும் விதிகள்கூட இந்த உண்மைகளையே உணர்த்துகின்றன. ஹலால், ஹராம் தொடர் பான விதிகளில் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது: ''அனைத்தும் அனுமதிக்கப்பட்ட (ஹலால்) வகையைச் சேர்ந்தவையே. விதி விலக்காக அல்லாஹ்வும் அவனது தூதரும் தடுத்தவை தவிர.''

இந்த விதியின்படி அனைத்தும் ஹலால் ஆகும். ஹராம்கள் சொற்பமானவை; விதிவிலக்கானவை என்பதே முடிவு. எனவே, தொட்டதையெல்லாம் 'ஹராம்' என்று தீர்ப்பு வழங்கி மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் போக்கை தாஇகள் தவிர்க்க வேண்டும். அந்த இறுக்கமான போக்கை இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

அதேபோன்று, சட்டவாக்கத்தின் மற்றுமோர் அடிப்படை இந்த அணுகுமுறையை மேலும் உறுதிப்படுத்துகிறது. சட்டங்களை வெறும் சட்ட வசனங்களிலிருந்து பெற முயற்சிக்காமல் 'மகாஸித்' எனும் ஷரீஆவின் நோக்கங்களைக் கருத்திற் கொண்டு சட்டங்களைப் பெற வேண்டும் என்பதே அந்த அணுகுமுறை.

இறைதூதரின் அணுகுமுறைகள் அற்புதமானவை. ஒருமுறை நபியவர்கள் கூறினார்கள்:

''ஒருவர் இமாமாக நின்று மக்களுக்குத் தொழுகை நடத்தினால் அவர் தொழுகையை (நீட்டித் தொழுது மக்களை சிரமப்படுத்தாது) இலகுபடுத்தட்டும். காரணம் தேவையுடையவர்கள், பலவீனர்கள், நோயாளிகள் அவரின் பின்னால் இருக்கக் கூடும்.'' (அல்புகாரி, முஸ்லிம்)

தொழுகைக்கான இந்த விதி வாழ்க்கைக்கும் பொருந்துவதா கவே இருக்கிறது. காரணம், தொழுகையின் ஒழுங்குமுறைகள் வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளுக்கு வழிகாட்டுகின்றன.

'இலகுபடுத்தல்' எனும் விடயத்திற்கான மகுட வாசகம் ஒன்றை இமாம் ஸுப்யான் அஸ்ஸவ்ரி அவர்களிடமிருந்து பெறலாம் என நான் கருதுகின்றேன். இமாமவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

''நம்பிக்கை மிக்க அறிஞர் ஒருவரால் தரப்படுகின்ற சலுகை தான் (சட்டம் பற்றிய) சரியான விளக்கமாகும்.''

இஸ்லாம் பற்றிய ஆழமான, தெளிவான விளக்கமுள்ள ஓர் அறிஞரோ அல்லது அறிஞர் குழுவோ 'இதில் உங்களுக்கு அல்லாஹ் ஒரு சலுகை வைத்திருக்கின்றான்' என்று கூறுவது 'சலுகைக்கு இட மேயில்லை' என்று கூறுவதை விட சிறந்த மார்க்க விளக்கமாகும் என்பதே இதன் பொருள்.

இலகுபடுத்த வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தும்போது அனைத்தையும் இலகுபடுத்தி மார்க்கத்திற்கு அநீதியிழைப்பதாக ஒருவரும் கருத வேண்டியதில்லை. 'புரூஃ' எனும் கிளையம்சங் களிலேயே 'இலகுபடுத்தல்' என்ற அணுகுமுறை பற்றி நாம் பேசுகின்றோம். 'உஸூல்' எனும் அடிப்படைகள் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் இலகுபடுத்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை. உஸூல்களில் கண்டிப்பான அணுகுமுறையையே அனைவரும் பின்பற்ற வேண்டும்.

இஜ்திஹாதுக்கும் இஹ்திலாப் எனும் கருத்து வேறுபாட்டுக்கு முரிய விடயங்களிலேயே தாராளத்தன்மை மற்றும் இலகுபடுத் தலுக்கு இடமுண்டு. எனினும், இஸ்லாத்தின் அத்திவாரமாகிய உஸூல்கள் விடயத்தில் அதற்கிடமில்லை. அங்கு 'இலகுபடுத்தல்'

என்ற அணுகுமுறையைக் கையாண்டால் இஸ்லாமிய உம்மத் தனது இருப்பையே இழந்து விடும். இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் நெகிழும் தன்மை இருப்பதாக ஒருவர் கூறினால் அல்லது கால மாற்றங்களுக்கேற்ப அவையும் மாறுபடலாம் என வாதிட்டால் அவர் தனது ஈமானை இழந்தவராகிறார். இன்னும் சொன்னால், அவர் நிராகரித்து விட்டார் என்றே கூற முடியும்.

இஜ்திஹாதுக்குரிய கிளை அம்சங்களில் அவ்வாறல்ல. அங்கு இஜ்திஹாத் செய்பவர் தவறு செய்தாலும் அவருக்கு நன்மை கிடைப்பதாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது உண்மையில் அல்லாஹ்வின் பேரருளாகும். அவன் அருளாளன். அவனது மார்க்கம் அருள் நிறைந்ததாகவன்றி வேறு எப்படியிருக்கும்?

**அழைப்புப் பணியின்போது நற்செய்தி கூறல்**

கருத்து வேறுபாடுகளையுடைய கிளை அம்சங்களில் மார்க்கத் தீர்ப்பு வழங்குபவர்கள் 'இலகுபடுத்தல்' எனும் அணுகுமுறையைக் கையாள்வது போன்று இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடுபவர்கள் 'நற்செய்தி கூறல்' எனும் வழிமுறையை அதிகமாகப் பின்பற்ற வேண்டும்.

மக்கள் இஸ்லாத்தை செவிமடுக்கும்போது வெறுப்படையாதிருக்கும் வகையில் அவர்களுக்கு மார்க்கம் முன்வைக்கப்படல் வேண்டும். அளவுக்கு அதிகமாக அச்சமூட்டி... தண்டனைகள், கொடிய வேதனைகள் பற்றியே தொடர்ந்தும் வலியுறுத்தி... கடுமையாக எச்சரிக்கை செய்யும் தொனியில் மார்க்கத்தை முன்வைத்தால் அழைக்கப்படுவோருக்கு இஸ்லாம் ஓர் அருளாக விளங்க மாட்டாது. மனித உள்ளமும் கடுமையான... கண்டிப்பான... இறுக்கமான அணுகுமுறைகளால் ஈர்க்கப்படும் தன்மை கொண்டதாகப் படைக்கப்படவில்லை. மனித உள்ளம் நேரிய, சீரிய பயிற்சிகளைப் பெறுவதற்கு ஊக்குவிப்பு, பாராட்டு மற்றும் நற்செய்தி என்பன அத்தியவசியமாகின்றன. நபிமார்கள் அச்சமூட்டுபவர்களாகவும் அதேவேளை நற்செய்தி கூறுபவர்களாகவுமே அனுப்பப்பட்டனர்.

புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்கள்... பருவமடையும் வயதில் இருக்கின்ற சிறுவர்கள்... பாவங்கள் அதிகமாக நடக்கின்ற சூழலில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள்... பல்வேறு சிந்தனைத் தாக்கங்களுக் குட்பட்டவர்கள்... போன்ற அனேகருக்கு மென்மையான... படி முறையான... இலகுவான அணுகுமுறையே தேவைப்படுகிறது.

இஸ்லாத்தின்பால் கவர்ச்சியும் அதன் கடமைகளில் இன்பமும் அதன் உபதேசங்களில் இனிமையும் தென்படும்போதுதான் எந்த வொரு மனிதனுக்கும் அதில் ஈடுபாடு அதிகரிக்கின்றது. எனவே, அழைப்பாளர்கள் 'பயமுறுத்தல்' எனும் சாட்டையைக் கையில் எடுத்தவர்களாக அன்றி... அன்பு எனும் கடிவாளத்தைக் கையில் பிடித்தவர்களாக மக்களை இஸ்லாத்தை நோக்கி... அல்லாஹ்வை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும். அவர்களது அழைப்பு மொழி அன்பும் அறிவும் செறிந்ததாக இருக்க வேண்டும்; மென் மையும் பாசமும் கலந்ததாக இருக்க வேண்டும்; சீரியஸான விட யங்களைக்கூட நாகரிகமாக முன்வைக்கும் தன்மை கொண்டதாக அது இருக்க வேண்டும்.

இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் மற்றும் இஸ்ராஈலிய்யாத் கதைகள் என்பவற்றை அதிகம் தமது பேச்சில் சேர்த்துக் கொள்ப வர்களே கடுமையான பயமுறுத்தல்கள் மூலம் இஸ்லாத்தை நோக்கி மக்களை அழைத்து வந்து விடலாம் என நினைக்கிறார்கள். இந்த சரக்குகள் அனைத்தும் இஸ்லாத்தின் இனிமையையும் சுவையையும் கெடுத்துவிடக் கூடியவை என்பதை அவர்கள் உண்மையில் அறிய வில்லை.

இத்தகையவர்களின் அகராதியில் மிகவும் பிரபல்யமான, அதே நேரம் அவர்களது நாவுகளுக்கு இலேசான வார்த்தை ஒன்றிருக்கிறது எனின், அது 'ஹராம்' என்ற வார்த்தைதான். இந்த வார்த்தை மிகவும் பாரதூரமானது. குர்ஆனில் அல்லது ஸுன்னாவில் இருக்கும் தெளிவான சட்ட வசனம் ஒன்று 'ஹராம்' எனத் தீர்ப்பு வழங்கிய ஒரு விடயத்தைத் தவிர மற்றொன்றின் மீது இந்த வார்த்தையைப் பிரயோகிக்கும் அதிகாரம் அல்லாஹ்வின் படைப்புக்களில் எவருக் கும் கொடுக்கப்படவில்லை. அல்லாஹ்வும் அவனது தூதரும்

'ஹராம்' என்று தெளிவாகக் கூறாத ஒன்றை ஹராமாக்கும் கைங் கரியம் இலேசானது அல்ல. தெய்வீக அந்தஸ்து தனக்கிருப்பதாக வாதிடும் ஒரு விவகாரமே அது. எனினும், இன்று பலரைப் பார்க்கி றோம் எடுத்ததெற்கெல்லாம் 'ஹராம்' 'ஹராம்' என்று பொரிந்து தள்ளிவிடுவார்கள். மார்க்கத்தை தமது குலச் சொத்தாக்கிக் கொள்ளும் செயல் இது என்பதை அவர்கள் உணரவில்லை.

கால, இட மாற்றங்களுக்கேற்ப சட்டத் தீர்ப்புக்கள் மாறும் என்ற விதியை இவர்கள் வாயளவில் ஏற்றுக் கொண்டாலும் நடை முறையில் இவர்கள் கடும் போக்குடையவர்களாகவே காணப்படு கின்றனர்.

இந்நிலை மாறி இஸ்லாத்தின் இனிமை, சுவை, இன்பம், மென்மை, இலகுதன்மை, தாராளத்தன்மை என்பவற்றைப் புரிந்து கொண்டவர்களாக தாஇகள் திகழ வேண்டும். இஸ்லாம் பிழை யாகப் புரிந்து கொள்ளப்பட்ட ஒரு காலப் பகுதியில் இஸ்லாமிய அழைப்பாளர்கள் இஸ்லாத்திற்குச் செய்யும் அரும் பணிகளில் ஒன்று இது என்பதை அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். இஸ் லாத்தின் மகோன்னதம் இத்தகையவர்களால்தான் ஒவ்வொரு காலத் திலும் அவ்வக் காலத்திற்கேற்ற விதமாக புரிய வைக்கப்படுகிறது.

எனவே, தாஇகளின் மொழி தீர்ப்பை இலகுபடுத்துவதாகவும் அழைப்பை அழகுபடுத்துவதாகவும் இருக்க வேண்டும். இஸ்லாத் தின் எளிமையையும் அதன் அழகையும் உலகுக்கு எடுத்துக் காட்டு கின்ற மொழிக்கு இந்தச் சிறப்பியல்பு இன்றியமையாதது.

# 12

# மாறாத அடிப்படைகள் மீது உறுதியாக நின்றவண்ணம் மாறுகின்ற அனைத்திலும் இஜ்திஹாதுக்கு அழைப்பு விடுக்கும் மொழி

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் காலம் முதல் இன்று வரை கோட்பாடுகளிலோ நடைமுறைகளிலோ ஷரீஅத்தில் இறுதியாகவும் உறுதியாகவும் முடிவு செய்யப்பட்ட ‘கதஈ’யான (قطعي) விடயங்கள் இருக்கின்றன. அவற்றில் இஜ்திஹாத் செய்வதற்கு அனுமதியே இல்லை. அத்தகைய முடிவு செய்யப் பட்ட அம்சங்களில் பிறரின் கருத்து (எந்த அல்லாமாவுடையதாக இருப்பினும்) செல்லுபடியற்றது.

அதேநேரம், குர்ஆனுடைய சுன்னாவுடைய சட்ட வசனங்களை இடம் மற்றும் கால சூழல் வேறுபாடுகளுக்குப் பொருந்தும் வகையில் சட்ட வியாக்கியானம் செய்வதற்கும் குர்ஆனிலோ, சுன்னாவிலோ சட்ட வசனங்கள் கிடைக்காத புதிய பிரச்சினை களுக்கான தீர்வுகளை குர்ஆன் சுன்னாவின் அடிப்படைகளுக்கு முரணாகாமல் வழங்கி மக்களை வழிநடத்துவதற்கும் சட்ட வச னங்களை ஷரீஆவின் நோக்கங்களுக்கு (மகாஸிதுஷ் ஷரீஆவிற்கு) முரண்படாமல் விளக்கி தீர்ப்புக்களை வழங்குவதற்கும் இஜ்திஹாத் இன்றியமையாதது என்பதை தாஇகள் புரிந்துகொள்ள வேண்டும்.

இஜ்திஹாதின் வாசல் மூடப்பட்டு விட்டது; எமது முன்னோர் கள் செய்ய வேண்டிய இஜ்திஹாத்கள் அனைத்தையும் செய்து முடித்து விட்டார்கள் என்ற கதை வரலாற்றின் ஒரு கட்டத்திற்கு தேவைப்பட்டது உண்மைதான். பிழையான வழியில் சென்ற மன் னர்களுக்கும் கவர்ணர்களுக்கும் அவர்களுக்கு சார்பாக பத்வாக்கள்

வழங்கிய ஒட்டுண்ணி உலமாக்களின் வாய்களை அடைப்பதற்கு இப்படியொரு கூற்று அன்று பயன்பட்டிருக்கலாம். அதன் பொருள் காலமெல்லாம் இஜ்திஹாதின் வாயில்கள் மூடப்பட்டு விட்டன என்பதல்ல.

இஸ்லாமிய வரலாறை உற்றுநோக்கும்போது முஜ்தஹிதுகள் இல்லாத ஒரு காலப்பகுதி எப்போதும் இருந்ததில்லை. மத்ஹபு களைச் சேர்ந்த முஜ்தஹிதுகள், அவர்களை விட உயர்ந்த தரத்தில் இருந்த சகல துறை முஜ்தஹிதுகள் (முஜ்தஹித் முத்லக்) என முஜ்தஹித்கள் எல்லாக் காலப்பகுதிகளிலும் இருந்துள்ளனர்.

உதாரணமாக, ஹிஜ்ரி எட்டாம் நூற்றாண்டின் முஜ்தஹிதுகளான இமாம் இப்னு தைமியா, இப்னுல் கையிம் போன்றவர்களைக் குறிப்பிடலாம். தலாக் மற்றும் அது போன்ற பல இஸ்லாமிய நடை முறைகள் தொடர்பில் அவர்களது இஜ்திஹாத்கள் அவர்களுக்கு முன்பிருந்தவர்களின் இஜ்திஹாத்களுடன் பெருமளவு வேறுபட்டன. தங்களது பத்வாக்கள் மூலமாக இஜ்மாவையே அவர்கள் புறக் கணித்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் அவர்கள் சிறை செல்லவும் நேரிட்டது.

இதே காலப்பகுதியில் ஸ்பெய்னில் வாழ்ந்த இமாம் ஷாதிபி அவர்கள் ஒரு முஜ்தஹிதாக இருந்திருக்கிறார்கள். அவர் 'முவாபகாத்' 'இஃதிஸாம்' போன்ற பிரபல்யமான நூல்களின் ஆசிரியராவார். உஸூல்கள் பற்றிய ஆராய்ச்சிகளில் அவர் பிரபல்யமுற்றிருந்தார்.

அல்லாமா இப்னு கல்தூன் (ஹி: 808) அதுவரை முஸ்லிம் உலகம் அறிந்திராத ஒரு புதிய துறையின் முன்னோடியாகவும் முஜ்தஹிதாகவும் இருந்திருக்கிறார். அவர் ஒரு சமூகவியல் தத்து வஞானி. சமூகவியல் எனும் துறையின் ஸ்தாபகர் என அவரைக் குறிப்பிடலாம்.

7ம் நூற்றாண்டு காலப்பகுதியில் எகிப்தின் முஜ்தஹித்களுள் ஒருவராக இருந்த இமாம் ஸுயூத்தி குறிப்பிடத்தக்க மற்றுமொரு மாமனிதராவார். அவர் மத்ஹபுகளுக்குள் சுருங்கிவிடாமல் இஜ் திஹாத் (முத்லக்) செய்யலாம் என்று வாதிட்டவர். அவரது சம காலத்து அறிஞர்கள் இதனை மறுத்தார்கள். அந்த மறுப்புகளுக்கு ஒரு தெளிவான பதிலையும் இமாமவர்கள் முன்வைத்தார்கள்.

அந்த நூலில் தங்களது மத்ஹப்களுக்கு முரணாக மார்க்கத் தீர்ப்புக்கள் வழங்குமளவு இஜ்திஹாத் துறையில் முன்னேறிய பலரை அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மேலும் கூறுகிறார்கள்: ''மக்கள் ஒரு இஜ்திஹாதைப் பற்றித்தான் பேசுகிறார்கள். நான் மூன்று இஜ்திஹாத்கள் இருப்பதாகக் கூறுகிறேன். 1. ஃபிக்ஹில் இடம்பெற வேண்டிய இஜ்திஹாத் 2. ஹதீஸில் இடம்பெற வேண்டிய இஜ்திஹாத் 3. மொழியிலான இஜ்திஹாத்

ஹி. 12ஆம் நூற்றாண்டில் தோன்றிய இந்திய உபகண்டத்தின் முஜ்தஹித் அல்லாமா ஷாஹ் வலியுல்லாஹ் திஹ்லவி மற்றுமொரு வராவார். உலூமுல் ஹதீஸ் எனும் ஹதீஸ் ஆய்வுக் கலைகளை உயிர்ப்பித்த இமாமவர்கள், இந்தியத் துணைக்கண்டத்தில் இஸ்லாமிய சட்டக்கலையை கறை நீக்கியவர் என்று குறிப்பிட லாம். மத்ஹப் வெறி மிகைத்திருந்த காலம் அது. ஹனபி மத்ஹப் மீதிருந்த அளவுக்கதிகமான பற்றை அவர் கண்டித்தார். அது பற்றி எழுதவும் செய்தார். அன்னாரின் பிரபல்யமான நூல்களுள் ஒன்று 'ஹுஜ்ஜதுல்லாஹில் பாலிஃகா.' ஹதீஸ்களில் பொதிந்து கிடக்கும் நுட்பங்களையும் ஷரீஆவின் சட்ட நுணுக்கங்களையும் உள்ளடக் கிய ஒரு நூல் அதுவாகும்.

இதே காலப்பகுதியில் யெமனில் வாழ்ந்த மூதறிஞர் முஜ்தஹித் அல்லாமா முஹம்மத் இப்னு இஸ்மாயில் குறிப்பிடத்தக்கவர். சன்ஆனி என அழைக்கப்பட்ட இவர் முஜ்தஹித் முத்லக் என்ற அந்தஸ்திற்குரியவர்.

18ஆம் நூற்றாண்டின் முஜ்தஹித்களுள் ஒருவரான அல்லாமா முஹம்மத் இப்னு அலீ ஷவ்கானீ இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியங் களுக்கு பாரிய பங்களிப்பை செய்தவராவார். அவரது நூல்கள் ஒவ் வொன்றும் ஒவ்வொரு துறையிலான இஜ்திஹாதுக்கு உதாரணங் களாகத் திகழ்கின்றன. மத்ஹப்களைத் தாண்டி நின்று இஜ்திஹாத் செய்தவர் அவர். குர்ஆனினதும் சுன்னாவினதும் ஆதாரங்களின் அடிப்படையில் தனது இஜ்திஹாத்கள் அனைத்தையும் அமைத்துக் கொண்ட அவர்களையும் ஒரு முஜ்தஹித் முத்லக் எனலாம். பத்ஹுல் கதீர் அவரது பிரபல்யமான தப்ஸீராகும். 'நைய்லுல் அவ்தார்' அவரது மற்றுமொரு நூலாகும்.

ஷரீஆவை விளங்குவதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) திறந்துவிட்டதொரு வாயில்தான் இஜ்திஹாத். இஜ்தி ஹாதின் வாயிலை உலகில் எவரும் மூடிவிட முடியாது. அது அதற் குரியவர்களுக்கு எப்போதுமே திறந்திருக்கிறது. அந்த வாயிலால் நினைத்தவர் எல்லாம் நுழைய முடியாது என்பது சரிதான். குர்ஆன் மற்றும் குர்ஆனியக் கலைகள், ஹதீஸ் மற்றும் ஹதீஸ் ஆய்வுக் கலைகள், ஆழமான மொழிப்புலமை, சட்டத்துறை மற்றும் அதன் உஸூல்கள் என இஜ்திஹாத் களத்தில் நுழைவதற்குத் தேவையான அறிவுப் பின்புலங்கள் பல இருக்கின்றன. சில ஹதீஸ் கிரந்தங் களையும் பிக்ஹு நூல்களையும் வாசித்து முடித்தவர்களுக்குரிய தல்ல இந்த மைதானம்.

எனினும், புலமையற்றவர்கள் இருப்பதனால் இந்த வாயிலை மூடிவிடுவோம் என யாரும் தீர்மானித்துவிட முடியாது. இன்று இஜ்திஹாதின் தேவை நிறையவே இருக்கிறது.

அதேநேரம், ஆதாரங்களில் பலமானதும் சட்டங்களில் தெளி வானதுமான குர்ஆன் மற்றும் சுன்னாவின் வசனங்களில் இஜ்தி ஹாதின் வாயில் எப்போதும் மூடப்பட்டே இருக்கும். அவற்றை இறுதியும் உறுதியுமாக முடிவு செய்யப்பட்ட 'கதஈ' (قطعي) வகையைச் சேர்ந்தவை என்றும் நாம் குறிப்பிடுவோம்.

சட்ட வசனங்களில் 'ழன்னீ' (ظني) வகையைச் சேர்ந்தவையே இஜ்திஹாதுக்குரியவை. குர்ஆனிலும் சுன்னாவிலும் காணப்படு கின்ற, பல்வேறு கருத்துகளுக்கும் அனுமானங்களுக்கும் இடம் தருகின்ற சட்ட வசனங்களும் அதேபோன்று சுன்னாவில் இருக் கின்ற ஆதார பலம் குறைந்த சட்ட வசனங்களும் 'ழன்னீ' எனும் வட்டத்திற்குள் வருகின்றன.

இங்கு ஒரு முஜ்தஹிதின் வேலை யாதெனில் காலம், இடம், சூழல் என்பவற்றுக்குப் பொருந்தும் விதமாகவும் குர்ஆனினதும் சுன்னாவினதும் அடிப்படைகளுக்கு முரணாகாத வகையிலும் புதிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுத் தருவதாகும். அவ்வாறு ஒரு சூழலில் அந்த சூழலுக்குப் பொருத்தமாக பெறப் பட்ட முடிவுகள் சூழல் மாறும்போதும் காலம் மாறும்போதும்

புதிய முடிவுகளை வேண்டி நிற்கலாம். அப்போது புதிய இஜ்தி ஹாத்களும் அவசியப்படலாம். எனவே, இஜ்திஹாத் என்பது முடிவடையும் ஒரு பயணமல்ல.

**கால சூழல் மற்றங்கள் + மூன்னியான ஆதாரங்கள் + முஜ்தஹித்கள்**
**= மார்க்கத் தீர்ப்புகள்**

என்று இந்த சமன்பாட்டை நாங்கள் இடமுடியும். இவற்றுள் முதலாவதும் மூன்றாவதும் எப்போதும் மாறிக்கொண்டே இருப் பதால் மார்க்கத் தீர்ப்புகளும் மாறிக்கொண்டே இருக்கும்- இறுதி நாள் வரை.

இந்த மாற்றம் மார்க்கத்தை சீர்குலைக்கும் மாற்றமல்ல. புதிய குர்ஆனையும் புதிய ஹதீஸ் கிரந்தங்களையும் அறிமுகம் செய்யும் மாற்றமல்ல. இஸ்லாத்தின் அத்திவாரங்களைத் தகர்த்துவிட்டு புதிதாக அத்திவாரமிடும் வேலையுமல்ல, வணக்க வழிபாடுகளில் புதுமைகளைப் புகுத்துகின்ற கைங்கரியமுமல்ல. இஸ்லாமிய சட்ட அடிப்படைகளைத் திருத்தியமைக்கும் முயற்சியுமல்ல. 'ஹுதூத்' (حدود) எனப்படும் இஸ்லாத்தின் தண்டனைகளை நீக்கிவிடும் வேலையும் அல்ல.

மாறாக, வாழ்க்கையின் வெளித்தோற்றங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. அவற்றால் வரும் பிரச்சினைகளும் அதிகரிக்கின்றன. அந்தப் பிரச்சினைகளில் சிக்கித் தவிப்போரும் அதனால் மார்க்கத் திலிருந்து தூரமாகிக் கொண்டிருப்போரும் ஏராளம்! இவர்களை உலகம் போகின்ற போக்கிலேயே விட்டுவிடாமல்... அல்லது 7ஆம் 8ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்லாமல் வாழுமிடத்திலேயே அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு வழிகாட்டி இஸ்லாம் அனைத்து சூழல்களுக்கும் பொருந்துகின்ற மார்க்கம் என்பதை நிறுவுவதற்குப் பெயர்தான் இஜ்திஹாத். இந்த இஜ்திஹாத் பணி கியாமநாள் வரை நடந்துகொண்டே இருக்காவிட்டால் இஸ்லாம் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமானது என்ற கோஷம் அர்த்தமற்ற தாகி விடும்.

காலங்களிலேயே நாம் வாழும் காலம் வேகமான, விரைவான மாற்றங்கள் நிகழும் காலமாக இருக்கிறது. அந்த மாற்றங்களுக்கு

ஈடுகொடுக்கும் சக்தி இஜ்திஹாதுக்குத்தான் இருக்கிறது என்பதை தாஇகள் ஏற்காதவரை நாம் காலத்தின் கைதிகளாகவே இருப்போம். நடைபெறுகின்ற இஜ்திஹாத்களையும் நிராகரிப்போம். அப்போது எமது மார்க்கம் எமது மைந்தர்களின் உள்ளங்களாலேயே நிராகரிக் கப்பட்டு விடும்.

இந்த உண்மையைப் புரியாதவர்கள் மார்க்கம் பேசினால் அவர் களது பேச்சுக்கள் முஸ்லிம்களின் காதுகளையே எட்டாது. காரணம், அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகள் வேறு; அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்ற மார்க்கம் வேறு!

இன்றைய தாஇகளில் பலர் பேசுகின்ற பேச்சுக்கும் சமகால நடைமுறைகளுக்கும் தொடர்புகள் குறைவாவே இருக்கின்றன. அதனால்தான் அவர்களது பேச்சுக்கள் எடுபடுவதில்லை. முஸ்லிம் கள் மத்தியிலேயே அந்தப் பேச்சுக்கள் எடுபடாவிட்டால் முஸ்லிம் அல்லாதவர்களின் காதுகளில் இந்த மார்க்கம் எப்படி ஏறப் போகிறது!

இஜ்திஹாத் என்பதை மற்றொரு வார்த்தையில் சொன்னால் அறிவியல் உலகத்தையும் அதன் பிரச்சினைகளையும் குர்ஆன்,

---

நாட்டில் பிரதான நீரோட்டத்தில் பங்கெடுக்கின்ற... நாட்டின் விவகாரங்களைத் தீர்மானிப்பதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒரு பௌத்த பிக்கு தன்னோடு பேசவந்த ஒரு முஸ்லிமிடம் கூறுகின்றார்:

''இஸ்லாம் இன்றைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று கூறுகிறீர்கள். சமகாலப் பிரச்சினைகள் பற்றி எண்ணற்ற கேள்விகள் என்னிடம் இருக்கின்றன. அவற்றுக்கு தெளிவான பதில்களைத் தரக்கூடியவர்கள் உங்களிடம் இருக்கிறார் களா? இருந்தால் அழைத்து வாருங்கள். நீங்கள் அழைத்து வருகின்றவர் எனது நேரத்தை வீணாக்காது சரளமான சிங்களத்தில் தெளிவான பதில்களைத் தந்து எனது சந்தேகங்களைத் தீர்க்கக் கூடியவராக இருக்க வேண்டும். உங்களில் பலர் இஸ் லாம் பற்றிப் பேசுவதையும் எழுதுவதையும் நான் அறிவேன். அவை அனைத்தும் உங்களது சமூகத்தை விளித்து நீங்கள் பேசுகின்ற விடயங்களே தவிர, எங்களது மனநிலையையும் சிந்தனைகளையும் நாம் நாட்டில் அனுபவிக்கும் பிரச்சினைக ளையும் புரிந்து பேசுகின்ற பேச்சுக்களாக அவை இல்லை. அவ்வாறு பேசுகின்ற வர்களை தயவு செய்து அழைத்துவர வேண்டாம்.''

தாஇகளே புரிகிறதா? நாம் பேசுகின்ற இஸ்லாத்தின் தரம் பற்றி முஸ்லிம் அல்லாத ஒருவரின் மதிப்பீடு?! (மொழி பெயர்ப்பாளர்)

சுன்னாவின் வழியில் நின்று அறிவுபூர்வமாக அணுகும் முயற்சி எனலாம். மிம்பரில் ஏறியவர்... ஏறிய பிறகு வரும் யோசனைகளை அங்கிருப்பவர் மத்தியில் கொட்டிவிட்டுச் செல்வதற்குப் பெயர் இஜ்திஹாத் அல்ல.

நாங்கள் எங்களது சமூகத்தைத் திடீரெனப் பெய்யும் மழையில் (குத்பாவில்) நனைத்துவிட்டுச் செல்வதற்குப் பழக்கியிருப்பதால் தாஇகள் ஆழ்ந்து எதனையும் கற்க வேண்டியதில்லை... தலைப் பில் பேசவேண்டியதில்லை... சமூகத்தில் இருக்கும் ஒரு பிரச்சினை குறித்து தகவல்களோடும் ஆய்வுகளோடும் தயாராக வேண்டிய தில்லை... மொத்தத்தில் அறிவுபூர்வமாகப் பேச வேண்டிய அவசிய மேயில்லை...!

அறிவு வாசத்தையே விரும்பாத, உணர்ச்சிகளால் அவ்வப்போது உந்தப்படுகின்ற, ஒரு சமூகத்தை நாம் பராமரித்து வருவதால் இஜ்தி ஹாதின் தேவை சமூகத்திற்குப் புரிவதுமில்லை; தாஇகளுக்கு வருவதுமில்லை.

அதுதான் நிலை என்றால் ஓரளவு அதனை சகித்துக் கொள்ளலாம். அதனைவிடப் பாரதூரமானது யாதெனில், தாஇகளில் சிலர் கூறு கிறார்கள் ''ஷைத்தானும் பெரிய அறிவாளிதான்... அறிவு இருந் தென்ன பயன் இறையச்சம் இல்லாவிட்டால்...'' இந்தக் கூற்று உண்மையானதுதான். எனினும், இந்தக் கூற்றின் மூலம் நாடப் படுவது அறிவும் இறையச்சமும் ஒருங்கே அமையப்பெற்ற மனி தர்களையும் சமூகத்தையும் நாங்கள் உருவாக்குவோம் என்பதல்ல. மாறாக, அறிவு எமக்குத் தேவையில்லை; இறையச்சம் இருந்தால் போதும் என்பதே. ''அறிவுடையோர்தான் அல்லாஹ்வின் அடியார் களில் அவனை அதிகம் அஞ்சுவார்கள்...'' என்ற குர்ஆனின் கூற்று அவர்களைப் பொறுத்தமட்டில் ஒரு செய்தியல்ல.

இஜ்திஹாத் எமது சமூகத்தில் மழுங்கடிக்கப்படுவதற்கான இன்னுமொரு பின்புலம் மற்றும் சிலரால் வேறுவிதமாகத் தோற்று விக்கப்படுகிறது. அவர்கள் அறிவுப் பாரம்பரியங்களையும் அறிஞர் பெருமக்களையும் அப்படியே ஒரு சுருட்டுச் சுருட்டி வரலாற்றின் குப்பைத் தொட்டிக்கு அனுப்பி விடுகிறார்கள். அவர்கள் கூறு கிறார்கள்: ''நாங்களும் மனிதர்கள்; அவர்களும் மனிதர்கள்

மனிதர்கள் சொல்வதை மனிதர்கள் கேட்க வேண்டியதில்லை. அல்லாஹ்வும் அல்லாஹ்வின் தூதரும் சொல்வது மட்டுமே எங்களுக்குப் போதுமானது. அதாவது, குர்ஆனும் சுன்னாவும் எங்களுக்குப் போதும். அவை இரண்டையும் எங்களால் விளங்கி செயல்படுத்த முடியும்.''

இங்கும் ஒரு சரியான வார்த்தை பிழையான நோக்கத்தில் பயன்படுத்தப்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் அப்பால் ஒரு முஸ்லிம் செல்ல முடியாது என்பதில் மற்றுமொரு கருத்து இல்லை. அதன் பொருள், குர்ஆனையும் சுன்னாவையும் அடிப்படையாக வைத்து எமது முன்னோர்கள் தந்துவிட்டுப் போன அறிவுப் பாரம்பரியங்களை குப்பையில் எறிவதா? ''அவர்களும் மனிதர்கள் நாங்களும் மனிதர்கள்'' என்ற வார்த்தை அதற்குப் பயன்படுமாயின் அவர்கள் பாரியதொரு தவறைச் செய்கிறார்கள்.

மனிதர்கள் என்பதனால் அனைவரும் ஒரே தரத்தில் இருக்க வேண்டும் என்ற நியதி எங்கே இருக்கிறது? அன்றைய முஜ்தஹித்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதற்கான உதாரணங்கள் பலதை இந்தத் தலைப்பின் ஆரம்பத்தில் பார்த்தோம்.

இவர்கள் யார்? இவர்களுள் அரபு இலக்கணத்தைத் துறை போகக் கற்றவர்கள் யார்? உஸூலுல் பிக்ஹ் எனும் சட்டக் கலை பற்றிய ஒரு நூலையேனும் முழுமையாக இவர்கள் வாசித்திருப்பார்களா? தப்ஸீர் கலைகள், ஹதீஸ் கலைகள் அனைத்தும் இவர்களைப் பொறுத்தவரை முன்னோர்களின் மேல் மிச்சமான வேலைகள். இவை எதுவுமின்றி குர்ஆனையும் ஹதீஸையும் இவர்கள் விளங்கி விடுவார்களா?

''நீங்களும் மனிதர்கள்தானே நீங்கள் சொல்வதை நாங்கள் கேட்க வேண்டுமா?'' என்ற அவர்களது கேள்வியை அவர்களிடமே நாங்கள் திருப்பிக் கேட்டு விட்டாலோ கோபம் அவர்களைப் பொத்துக் கொண்டு வந்து விடும். உடனே வசைமாரி பொழியத் தொடங்கி விடுவார்கள். அவர்களது வாய்களில் மிக இலேசாகத்

தவழும் வார்த்தைகள்தான் முனாபிக்குகள், முஷ்ரிக்குகள், வழி கேடர்கள், பித்அத்வாதிகள், முஃதஸிலாக்கள்.

அது மட்டுமல்ல, தங்களது கருத்தை நியாயப்படுத்துவதற்காக உடனே போரிடத் தயாராகிவிடுவார்கள். மார்க்கத்தில் செய்யக் கூடாதது எது; செய்ய முடியுமானது எது என்ற வேறுபாடு அப்போது அவர்களுக்குப் புரிய மாட்டாது. இந்தப் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு அவர்கள் பயன்படுத்தும் ஆயுதம் தங்களை அங்கீ கரிக்காதவர்களை இஸ்லாமியப் பண்பாடுகளுக்காப்பால் சென்று கீழ்த்தரமாக விமர்சிப்பதாகும். அப்போது இஸ்லாமிய விழுமியங் களை மதிப்பவர்கள், அந்த விழுமியங்களைத் தாரைவார்த்துவிட்டு அதே பாணியில் பதில் தர முன்வர மாட்டார்களல்லவா? அப்போது நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம் என்று முழங்கலாம். விவாதத் திற்கு அழைத்தோம்... எழுதினோம்... கேள்வி கேட்டோம்... பதிலில்லை. வாயடைத்துப் போனார்கள் என்று தம்பட்டம் அடிக் கலாம். இது அறிவையும் அறிஞர்களையும் மட்டம் தட்டி இஜ்தி ஹாதை நசுக்குவதற்கு மேற்கொள்ளப்படும் மற்றுமோர் உத்தி எனலாம்.

இவர்களிடம் இருக்கும் ஒரே ஒரு நல்லம்சம், உலக நோக் கங்கள், ஆதாயங்களைத் துறந்துவிட்டு தாம் எடுத்துக்கொண்ட வேலையை இரவு பகலாக அர்ப்பணிப்போடு செய்வார்கள். அவர்கள் மார்க்கம் என்று போட்டுக் கொண்ட வட்டத்திற்குள் அவர்கள் உறுதியாக இருப்பார்கள். எனினும், அவர்களது கூரிய நாவுகளின் விபரீதங்களிலிருந்து யாரும் தப்ப முடியாது. அவர்கள் பேசுகின்ற விடயங்களை விடாமல் பேசிக் கொண்டிருப்பதிலும் மார்க்கத்தின் நுட்பங்கள், ஷரீஆவின் நோக்கங்கள் போன்றவற்றை அறியாத மக்களிடம் ஏனையோரை விமர்சித்து சிந்தனைக் குழப் பத்தை உருவாக்குவதிலும் இவர்களுக்குள் ஓர் அலாதியான திறமை இருக்கும். கவர்ச்சியான இவர்களது வெட்டுப் பேச்சுக்கள் பாமர மக்கள் மத்தியில் இவர்கள்தான் இஸ்லாமியப் போராளிகள் என்ற பிரமையை ஏற்படுத்தும். இவர்களால் சில தீமைகள் அகன்று வெளிப்படையாக சில நன்மைகள் மலர்ந்தாலும் ஷரீஆவின் நோக்கங்கள் இறுதியில் புதைக்கப்பட்டு விடும்.

இவ்வாறு ஒரு பின்புலத்தை உருவாக்கி இஜ்திஹாதை மழுங்கடிக்கும் முயற்சி முஸ்லிம் உம்மத்தில் நடக்கிறது என்பது மற்றுமோர் அவலமாகும்.

இஸ்லாத்தின் மூலம் உலகம் அடைந்து கொள்ள முடியுமான நன்மைகள் பல இருக்கின்றன. நீதி, பரோபகாரம், கருணை, அன்பு, சகோதரத்துவம், பரஸ்பர ஒத்துழைப்பு, பாதுகாப்பு, கூட்டமைப்பு, சமூக அநீதிகளின் பிடியிலிருந்து விடுதலை, பிற சமூகங்களோடு மனித நேயம், நல்லுறவு, புரிந்துணர்வு...

இந்த உன்னதமான நோக்கங்கள் அனைத்தும் இவர்களது கைகளால் பச்சையாகப் புதைக்கப்பட்டு விடும். நோக்கங்களைப் புதைத்துவிட்டு வெளி உலகில் அரங்கேற்றப்பட்ட சில நன்மைகளால் அவர்கள் பெருமையடைவார்கள். அந்த நன்மைகளை வேறு எவரும் செய்வதைக்கூட அவர்கள் விரும்ப மாட்டார்கள். அந்த நன்மைகளுக்கு அவர்களே சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும் என்பது அவர்களது ஆசை.

இஸ்லாத்தின் நோக்கங்கள் நிறை வேறும்போது உள்ளங்கள் தூய்மை பெறுகின்றன... குடும்பங்கள் சீர்பெறுகின்றன... சமூகங்கள் ஒன்றிணைகின்றன... உம்மத் உயர்வடைகிறது... மனிதம் பாதுகாக்கப்படுகிறது...

இவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் இவை அனைத்தும் தலைகீழாகப் புரளுகின்றன... வெறுப்புகளும் குரோதங்களும் வளருகின்றன... குடும்பங்கள் சீரழிகின்றன... சமூகம் பிளவுபட்டு சின்னாபின்னமாகிறது... இறுதியில், பசித்த பிராணியின் வாயில் அகப்பட்ட உணவாக முஸ்லிம் உம்மத் அதன் எதிரிகள் விரித்த வலையில் வீழ்ந்து இழிவுறுகின்றது!

இஜ்திஹாத் எமது சமூகத்தில் மழுங்கடிக்கப்படும் கண்ணீர்க் கதை இது. எதிரிகள் எங்களை சம்மட்டியால் அடித்துக் கொல்வதை விட எமது உடன் பிறப்புகளாலேயே இஸ்லாம் எனும் உன்னத மார்க்கத்திற்கு இந்த நிர்க்கதி ஏற்பட்டிருப்பது கவலையானது.

இந்த நிர்க்கதியிலிருந்து மீளுவதற்கு இஜ்திஹாத் இன்றியமை யாதது. இஜ்திஹாதின் பக்கம் நாம் மீள்வதானால் தற்காலத்தில் அதனை நெறிப்படுத்துகின்ற காரணிகள் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

**சமகால இஜ்திஹாத் வேண்டி நிற்கும் வரையறைகள்**

எமது காலத்தில் 'இஜ்திஹாத்' எனும் கடமையை சிறப்பாக மேற்கொள்வதற்கு பின்வரும் அம்சங்கள் இன்றியமையாதவை என நான் கருதுகிறேன். இவற்றை 'அல்இஜ்திஹாதுல் முஆஸிர் பைனல் இன்ழிபாத் வல்இன்பிராத்' எனும் நூலில் நான் விரிவாக விளக்கியிருக்கிறேன். அவையாவன:

**1. அர்ப்பணத்துடன் கூடிய முழு மூச்சான அறிவியல் ஈடுபாடு**

ஷரீஆ துறையில் இத்தகையதோர் அறிவியல் ஈடுபாடும் உழைப் பும் இல்லாமல் இஜ்திஹாத் இல்லை.

சட்டத்துறை வல்லுனர்களின் கருத்துப்படி இஜ்திஹாத் என்பது ''சட்ட மூலாதாரங்களை முடியுமானவரை ஆய்வு செய்து... குறித்த ஆதாரங்களின் பலம் பலவீனம் என்பவற்றை சீர்தூக்கிப் பார்த்து... அந்த ஆதாரங்களிடையே முரண்பாடுகள் இருப்பின் அவற்றிற்கு மத்தியில் உடன்பாடு காண்பதன் மூலமோ அல்லது சட்ட வல்லுனர்கள் வகுத்து வைத்திருக்கும் விதிகளுக்கமைய அந்த ஆதாரங்களில் சிலதைத் 'தர்ஜீஹ்' செய்வதன் மூலமோ சட்டத் தீர்ப்பைப் பெறுவதற்கான இறுதிக் கட்டத்தை அடைவதாகும்.

குறித்த பிரச்சினை தொடர்பில் இனி ஆய்வு செய்வதற்கு ஒன்று மில்லை என ஒரு முஜ்தஹித் நினைக்குமளவு ஆழமாக மேற் கொள்ளப்படவேண்டிய இத்தகைய அறிவியல் ஈடுபாட்டையே இஜ்திஹாத் எனலாம்.

அதேநேரம், சட்டத் தீர்ப்பை வேண்டி நிற்கும் மனிதர்கள் அவர் களது சூழ்நிலைகள், அவர்களது பிரச்சினைகள் மற்றும் அவற்றின் பின்புலங்கள் என்பனவும் இடத்துக்கிடம் சட்டத் தீர்ப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்தவல்லன என்பதை இஜ்திஹாதின்போது புறக்கணித்துவிட முடியாது.

நிலைமை இவ்வாறிருக்க, தனது மேலோட்டமான வாசிப்பு மற்றும் கேள்வி ஞானம் என்பவற்றின் மூலமாகப் பெற்ற சிறு அறிவை வைத்து, எடுத்ததற்கெல்லாம் அவசரப்பட்டு பத்வா கொடுப்பவர்கள் இஜ்திஹாத் செய்வதாகக் கூற முடியுமா? அவர்கள் உண்மையில் மார்க்கத்தை விளக்குவதற்கு அவசரப்படவில்லை; நரகத்தை விலைக்கு வாங்குவதற்கே அவசரப்படுகிறார்கள்.

**2. 'கதஈ'யான விடயங்களில் இஜ்திஹாத் இல்லை**

தர்க்கத்திற்கு இடமில்லாமல்... கருத்து வேறுபாடுகளுக்கு இடம் தராமல்... இறுதியாகவும் உறுதியாகவும் குர்ஆன் மற்றும் சுன்னாவினது தெளிவான ஆதாரங்களால் முடிவு செய்யப்பட்ட விடயங்களுக்கே 'கதஈ' என்கிறோம் இத்தகைய விடயங்களில் இஜ்திஹாத் செய்வதற்கு அனுமதியில்லை. உதாரணங்களாக இதற்குப் பலவற்றைக் கூறலாம். பர்ழான தொழுகைகள் மற்றும் நோன்புகள், வட்டி-மது-பன்றியிறைச்சி போன்ற ஹராம்கள் என இன்னும் பல.

இத்தகைய விடயங்களில் முழு உம்மத்தும் ஒரு கருத்தினைக் கொண்டிருக்கிறது. இன்றியமையாதவை என மார்க்கத்தில் பிரபல்யம் பெற்ற விடயங்களாக இவை கருதப்படுகின்றன. அது மட்டுமல்ல, சிந்தனையிலும் செயல்பாட்டிலும் முஸ்லிம் உம்மத்தின் ஒருமைப்பாட்டைப் பிரதிபலிப்பவையாகவும் இவை இருக்கின்றன. இவற்றிலும் சந்தேகங்களை ஏற்படுத்தினால் முஸ்லிம் உம்மத்தின் ஒருமைப்பாட்டுக்குரிய அடையாளங்களும் அழிந்து விடலாம்.

**3. 'ழன்னி'யை 'கதஈ'யாக மாற்ற முடியாது**

'ழன்னி' எனும் ஆதாரங்களின் அடிப்படையில் முடிவுசெய்ய வேண்டிய விடயங்களில் மட்டுமே இஜ்திஹாத் ஏற்புடையதாகும் என முன்னர் பார்த்திருக்கிறோம். பல கருத்துக்களுக்கு இடம்பாடான அல்லது உறுதியான முடிவுகளுக்கு இடமளிக்காத ஆதாரங்கள் குர்ஆனிலும் சுன்னாவிலும் காணப்படுகின்றன. அதே போன்று, ஆதார பலம் குறைந்த நபிமொழிகளும் 'ழன்னி' வட்டத்துக்குள் வருகின்றன. இவற்றில் அல்லாஹ் இந்த உம்மத்திற்கு ரஹ்மத்தை வைத்திருக்கிறான். கால மாற்றங்கள் மற்றும் புதிய பிரச்சினைகளுக்கேற்ப நெகிழ்ந்து கொடுக்கும் வகையில் அமைந்த

இந்த ஆதாரங்களை வைத்தே இஜ்திஹாத் என்ற வாயில் திறக்கப் படுகிறது.

எனினும், 'ழன்னி'களை சிலர் 'கதஈ'யாக்கி இஜ்திஹாத் அங்கு அவசியமில்லை என்ற முடிவுக்கு வருகின்றனர். இன்னும் சிலர் கருத்து வேறுபாடுகள் நிறைந்த ஒரு விடயத்தில் தமது கருத்தை இஜ்மாவாக மாற்ற முனைகின்றனர். இமாம் அஹ்மத் (ரஹிம ஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ''எடுத்ததற்கெல்லாம் இஜ்மாஃ என்று கூறுபவன் பொய்யுரைக்கிறான். அவன் அறியாமல் அவற் றில் வேறு கருத்தை கூறியவர்கள் பலர் இருக்கலாமல்லவா?''

### 4. சட்டக்கலையும் நபிமொழியும் வேறுபடாதிருத்தல்

இஜ்திஹாதுக்கு இன்றியமையாத ஒரு வரையறை இதுவாகும். இன்று பலர் ஹதீஸ் துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கிறார்கள். எனினும், அவர்கள் சட்டக்கலை குறித்து அலட்டிக் கொள்வதில்லை. சட்ட விதிகள் மற்றும் உஸூல்களில் அவர்களுக் குப் பாண்டித்தியம் இல்லை. ஷரீஆவின் நோக்கங்களை தமது பத்வாக்களில் அவர்கள் அலட்சியம் செய்கிறார்கள். எமது முன் னோர்களில் சட்டத்துறை அறிஞர்கள் ஏன் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தார்கள் என்பது இவர்களுக்குப் புரிவதில்லை. எமது முன்னோர்களில் சட்டத்துறை அறிஞர்கள் கொண்டிருந்த கருத்து வேறுபாடுகளையும் அதற்கான காரணங்களையும் அறியாதவர் இஜ்திஹாதின் வாசலில் காலை எடுத்துவைக்காமலிருப்பதே சிறந்தது.

அது போன்று மறுபக்கமாக சட்டத்துறையில் ஈடுபாடு கொண் டிருக்கும் பலர் ஹதீஸ் துறையில் பலவீனமாக இருக்கிறார்கள். அவர்கள் சிலபோது ஆதார அந்தஸ்த்தே இல்லாத ஹதீஸ்களை மேற்கோள் காட்டுகிறார்கள். ஆதாரபூர்வமான சில ஹதீஸ்களை மறுக்கிறார்கள்.

சட்டத்துறை ஈடுபாடும் ஹதீஸ்துறை ஈடுபாடும் சமாந்தரமாக அமையாதவர்கள் இஜ்திஹாத் செய்வதற்கு உகந்தவர்களல்லர். அத்தகையவர்கள் ஒன்றில் மருத்துவம் தெரியாத பாமஸிஸ்டுகளாக

இருப்பார்கள். அல்லது மருந்துகளைக் கலக்கத் தெரியாத வைத்தியர்களாக இருப்பார்கள். இருவருமே பிரச்சினைகளைத் தீர்க்க உகந்தவர்கள் அல்லர்.

### 5. சூழல் கைதியாகிவிடாதிருத்தல்

இஜ்திஹாத் செய்பவர் சூழலின் தாக்கங்களுக்கும் அதன் பாதிப்புகளுக்கும் உட்படாதவராக இருக்க வேண்டும். அவ்வாறு சூழலால் பாதிக்கப்பட்டவர்கள் ஷரீஅத்தை சூழலுக்கேற்ப மாற்றியமைக்கவே முயற்சிப்பார்கள். அவர்கள் சூழலை நியாயப்படுத்தி அதில் வாழ்ந்துவிட்டுப் போவதற்கே ஆதாரம் தேடுவார்கள். அவர்கள் சூழலுக்குப் பொருந்தாதவற்றை விட்டு விலகி நிற்கவே விரும்புவார்கள்.

சூழலுக்குப் பொருந்தும் விதமாகவும் அதேநேரம், குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் முரண்படாமலும் தீர்வுகளை முன்வைப்பது வேறு; சூழலுக்கேற்ப மார்க்கத்தையே வளைக்க முயற்சிப்பது வேறு என்பதை இந்த இடத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சிலர் சூழலுக்கேற்ப ஷரீஆவை மாற்ற முயல்கிறார்கள். இல்லை, ஷரீஆவுக்கேற்பவே சூழலை மாற்ற வேண்டும். இன்றைய ஜாஹிலிய்ய சூழல் நாம் உருவாக்கியதல்ல. அது எம்மீது திணிக்கப்பட்டிருக்கிறது. எமது பலவீனங்களும் எதிரிகளின் பலங்களும் ஒரே நேர்கோட்டில் வந்ததனால் ஏற்பட்ட விளைவே இன்றைய சூழல். எனவே, சூழலை மாற்றி ஷரீஆவை நடைமுறைப்படுத்த முயல்பவர்களே இன்றைய களத்தில் இஜ்திஹாதுக்குத் தேவையானவர்கள்; சூழலுக்கேற்ப ஷரீஆவை மாற்றுவோரல்ல.

### 6. பயனுள்ள புதியவற்றை உள்வாங்குதல்

பயனுள்ளதாக இருந்தாலும் புதியவை வேண்டாம்; பொருத்தமாக இருந்தாலும் அறிமுகமற்றவை வேண்டாம் என்போர் இஜ்திஹாதுக்குப் பொருத்தமற்றவர்களாவர்.

ஒரு முஜ்தஹித் எந்த சூழலிலும் நல்லதைக் கெட்டதிலிருந்தும் தடுக்க வேண்டியதைத் தடுக்கக் கூடாதவற்றிலிருந்தும் வேறுபடுத்தி உரியவற்றிலிருந்து பயன்பெறத் தெரிந்திருக்க வேண்டும். அதே போன்று உறுதியும் கடுமையும் எதில் வேண்டும்; நெகிழ்வும்

விட்டுக்கொடுப்பும் எதில் வேண்டும் என்பதையும் அவரால் பிரித்தறிய முடியுமாக இருக்க வேண்டும்.

இவ்வாறான இடங்களில் தலைகீழாக செயல்படுபவர்கள் இஜ்திஹாத் எப்படிப் போனாலும் குறித்த விடயங்களில் நாவை நீட்டாமல் இருப்பதே சிறந்தது.

அடிப்படைகளையும் கிளையம்சங்களையும் வேறுபடுத்தத் தெரியாதவர்கள், நோக்கங்களையும் வழிமுறைகளையும் பிரித்தறிய முடியாதவர்கள் இரண்டையும் நிச்சயம் குழப்பிக் கொள்வார்கள். அந்தக் குழப்பம் காரணமாக கண்டிப்பானவற்றில் அசமந்தமாக இருப்பார்கள். விட்டுக் கொடுக்கவேண்டியவற்றில் கண்டிப்பாக இருப்பார்கள். இவர்கள் இஜ்திஹாத் என்ற சொல்லை சுவாசிக்கவும் தகுதியற்றவர்கள்.

**7. சமகால நாடித்துடிப்பையும் அதன் தேவையையும் அறிந்திருத்தல்**

இன்றைய இஜ்திஹாத் சமகாலத்தைப் புறக்கணித்துவிட்டு 5ஆம், 6ஆம், 10ஆம் நூற்றாண்களுக்குச் செல்ல முடியாது அல்லது எமது காலத்திற்கான இஜ்திஹாதை 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் செய்து தர முடியாது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். உண்மை யாதெனில், 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் எமது காலத்தை அடைந்திருந்தால் அவர்கள் தங்களது 10ஆம் நூற்றாண்டு முடிவுகளை வாபஸ் பெற்றுக் கொண்டு சமகாலத்திற்கான இஜ்திஹாத்களை செய்திருப்பார்கள்.

நாங்கள் பல இமாம்களின் வரலாற்றில் பார்க்கிறோம். அந்த இமாம்களின் மாணவர்களே பிற்காலத்தில் தங்களது இமாம்களின் கருத்துக்களோடு முரண்பட்டிருக்கிறார்கள். மாணவர்கள் என்ன, ஒரு இமாம் தனது வாழ்நாளிலேயே தனது கருத்துக்களை மாற்றிய ஓர் சரித்திரம் நடந்துதானிருக்கிறது. இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் எகிப்துக்குச் செல்வதற்கு முற்பட்ட தனது இஜ்திஹாத்களை தனது பழைய மத்ஹப் என்றும் எகிப்துக்குப் பிற்பட்ட தனது இஜ்திஹாத்களை புதிய மத்ஹப் என்றும் வகுத்திருக்கிறார்கள்.

அவ்வாறிருக்கும்போது, எமது காலம் பற்றிக் கூறுவதற்கு என்ன இருக்கிறது! கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பப் புரட்சிகளைத்

தொடர்ந்து நட்சத்திரப் போர் நடக்கும் ஒரு காலப் பகுதிக்குள் நாம் நுழைந்திருக்கிறோம். பல்வேறு புரட்சிகள் ஒன்றிணைந்து உலகைத் தலைகீழாகப் புரட்டிப் போட முனையும் ஒரு காலத்தில் நாம் வாழ்கிறோம். இக்காலப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இஜ்திஹாத்களின் மூலம் நாம் முன்வைக்காவிட்டால் நாம் இன்றைய உலகை அதற்குரியவர்களிடம் ஒப்படைப்பதே சிறந்தது. ஏனையோர் 10ஆம் நூற்றாண்டு நோக்கிப் பயணமாகலாம்.

### 8. கூட்டு இஜ்திஹாதை நோக்கி...

பாரிய சமூக, சர்வதேசப் பிரச்சினைகளில் ஒரு தனி மனிதனது இஜ்திஹாதை விட பல அறிஞர்கள் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் கூட்டு இஜ்திஹாத் இன்றைய சூழலில் அவசியமாகின்றது. தகுதிகளும் தகைமைகளும் கொண்ட பேரறிஞர்கள் சர்வதேச அளவில் இம்முயற்சிக்காக ஒன்று சேர்க்கப்படல் வேண்டும். அத்துடன் எந்த அணியையும் முகாமையும் சார்ந்து நிற்காமல் சுதந்திரமாக செயல்படுவதற்கான ஒரு ஷரீஆ ஆய்வு மையமும் அவர்களுக்காகத் தயார் செய்யப்படல் வேண்டும்.

ஏற்கனவே அல்அஸ்ஹர், ராபிததுல் ஆலமில் இஸ்லாமி போன்ற நிறுவனங்கள் இத்தகையதொரு பணியை பாராட்டத்தக்களவில் செய்திருந்த போதிலும் கூட்டு இஜ்திஹாதின் பரப்பும் சுதந்திர எல்லையும் இன்னும் விஸ்தரிக்கப்பட வேண்டியிருக்கிறது.

இதன் பொருள் தனிமனிதர்களது இஜ்திஹாத்கள் அவசியமற்றவை என்பதல்ல. தனிமனிதர்கள் இஜ்திஹாத் துறையில் வளர்ச்சி பெற்றால்தான் கூட்டு இஜ்திஹாத் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படலாம். அது மட்டுமல்ல, நாட்டுக்கு நாடு பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடும் பிரச்சினைகளுக்கான இஜ்திஹாத்களை அவ்வச் சூழலுக்குப் பொருந்தும் வகையில் மேற்கொள்வதற்கு அச்சூழலில் வாழுகின்ற அறிஞர்களே தேவைப்படுகின்றனர்.

### 9. முஜ்தஹிதின் தவறை மன்னிக்கும் தாராளத் தன்மை

ஒரு முஜ்தஹித் எத்துணை ஆற்றலுடையவராக இருந்த போதிலும் சிற்சில சந்தர்ப்பங்களில் தவறிழைக்கலாம். அவரது இஜ்திஹாத்

பிழைத்துவிடலாம். அப்போது ஏனையோர் அவரைப் பெருமன தோடு மன்னிக்கும் தன்மை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

**மன்னிக்கப்பட வேண்டிய முஜ்தஹித் யார்?**

1. அவர் இஜ்திஹாதுக்கான அத்தனை தகுதிகளையும் பெற்றிருத்தல்.
2. அவர் வாழும் சூழலில் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றவராக இருத்தல்.

இந்தத் தகுதிகள் இல்லாதவர்கள் இஜ்திஹாத் செய்வது முதல் தவறு. அதில் பிழை வருவது அடுத்த தவறு. இஜ்திஹாத் செய்யும் தகுதியுடையவர் இஜ்திஹாத் செய்தால் அவரது இஜ்திஹாத் நற்கூலி பெறத் தகுதியானது. அவர் தவறிழைத்தால் ஒரு நன்மையுண்டு. அவரது இஜ்திஹாத் சரியான முறையில் செய்யப்பட்டிருந்தால் இரண்டு நன்மைகள் அவருக்குண்டு.

இஸ்லாம் வழங்கிய இந்த அங்கீகாரத்தை கௌரவித்து ஒரு முஜ்தஹிதின் தவறை மன்னிக்கும் பண்பாட்டையும் இஜ்திஹாத் களத்தில் நாம் பேணி வளர்க்க வேண்டும். யாருக்குத் தெரியும்? நாம் அனைவரும் பிழை என்று கருதுகின்ற இஜ்திஹாத் உண்மை யில் பொருத்தமான இஜ்திஹாதாகவும் இருக்க முடியுமல்லவா?

எமது காலத்தைப் பொறுத்தவரை இத்தகைய வரையறைகளை யும் நிபந்தனைகளையும் பேணும்போதுதான் சமகால இஜ்திஹாத் முயற்சிகள் வெற்றி பெறலாம்.

எனினும், எமது அழைப்பு மொழி இஜ்திஹாத் பற்றிய இந்த உண்மைகளைப் பிரதிபலிப்பதாக இல்லை என்பதை மிக்க மன வேதனையோடு கூறித்தான் ஆக வேண்டும்.

சிலர் இதுவரை எமது முன்னோர்கள் செய்து முடித்திருக்கும் இஜ்திஹாத்கள் போதும் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் மேற்கொண்ட இஜ்திஹாத்களுக்கு முரணாக சமகாலப் பிரச்சினைகளுக்கான தீர்வொன்றை முன்வைக்கும் எந்தப் பேரறிஞருடனும் போர் தொடுக்காமல் அவர்கள் விடுவதில்லை.

இன்னும் சிலரோ அனைத்தையும் மாற்றியமைக்க முயற்சிக் கின்றார்கள். அவர்களை விட்டால் ஒரு புதிய மார்க்கத்தையே கொண்டுவந்து விடுவார்கள் போலும். ஹலாலை ஹராமாக்கி... வாஜிபை சுன்னத்தாக்கி... அனுமதிக்காததை சட்டமாக்கி... ஷரீ அத்தையே சரிபார்க்கும் கைங்கரியம் அவர்களுடையது.

இந்த இரு துருவங்களிலிருந்தும் விடுபட்டு இஜ்திஹாத் தொடர் பில் நாம் ஏற்கனவே விபரித்த நடுநிலையான போக்கை எமது அழைப்பு மொழிக்குள் நாம் உள்வாங்க வேண்டும். இல்லாவிட் டால் எமது அழைப்பு காலத்துக்கும் பொருந்தாது; மாரக்கத்துக்கும் உதவாது.

## 13

# அனுமதிக்கப்பட்ட போராட்டத்திற்கும் தடுக்கப்பட்ட வன்முறைக்கும் இடையில் அழைப்பு மொழி

எமது அழைப்பு மொழி பயங்கரவாதத்தையும் வன்முறை களையும் மறுப்பதாகவும் ஜிஹாதையும் அதன் உன்னதங்களை யும் வெளிப்படுத்துவதாகவும் திகழ வேண்டும். இரண்டையும் நுட்பமாக வேறுபடுத்தத் தெரியாத மொழியால் நாம் இன்றைய சூழலில் இஸ்லாத்தை முன்வைப்போமானால் அது இஸ்லாத்துக்கு அபகீர்த்தியையே ஏற்படுத்தும்.

### மறுக்கப்பட வேண்டிய பயங்கரவாதம்

முஸ்லிம் உம்மத்தின் மீது திணிக்கப்பட்ட, முஸ்லிம் உம்மத் மறுத்துரைக்க வேண்டிய பயங்கரவாதம் ஒன்று உலகில் இருக்கின்றது.

அமெரிக்கா பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தைப் பிரகடனம் செய்துள்ளமை அனைவரும் அறிந்ததே. அந்த யுத்தத்திற்காக அது உலகை தனது அணியில் சேர்க்க விரும்புகிறது. அதேநேரம், ''எது பயங்கரவாதம்?'' என்பதைத் தனது வசதி கருதி அது வரைவிலக் கணப்படுத்தாமலே விட்டு வைத்திருக்கிறது. காரணத்துடனோ, காரணிகளின்றியோ பயங்கரவாதப் பட்டியலில் தான் நினைத்த வர்களை சேர்த்துக் கொள்வதற்கும் பயங்கரவாதப் பட்டியலில் ஒரு தனிநபரையோ அல்லது ஒரு நாட்டையோ சேர்த்து விட்டால் இழைக்க வேண்டிய கொடுமைகள் அனைத்தையும் இழைப்பதற்கு அது வசதியாக இருக்குமல்லவா? அமெரிக்கா சார்பு அணி செய்து கொண்டிருக்கும் கொடுமைகளுக்குள்ளாவோர் அப்பாவிகளா, குற்றவாளிகளா என்பது அமெரிக்காவுக்கு ஒரு பொருட்டல்ல. பயங்கரவாதத்திற்கெதிரான போர் என்ற பெயரில் இன்னுமொரு

பயங்கரவாதத்தை நாம் கட்டவிழ்த்து விடுகிறோம் என்பதும் அமெரிக்காவுக்கு ஒரு பிரச்சினையல்ல. இந்த அமெரிக்க பாணியைப் பின்பற்றி இன்றைய உலகின் அரசுகளும் இராணுவங்களும் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் பயங்கரவாதங்கள் ஏராளம்! அவற்றைத் தட்டிக் கேட்போரும் உலகில் இல்லை; தட்டிக் கேட்டால் பதிலுமில்லை.

உலகின் பொலிஸ்காரனாகிய அமெரிக்காவின் இந்தப் போக்கு முஸ்லிம்களாகிய எமக்கு அந்நியமானது. அப்பாவிகளையும் குற்றமற்றோரையும் கொன்று குவிக்கும் பயங்கரவாதத்தை இஸ்லாம் அங்கீகரித்ததே இல்லை. பயங்கரவாதம் என்பது எமது பார்வையில் நீதியின் சுதந்திரத்தைப் பறிப்பதாகும்; குற்றம் செய்தவர் இருக்க நிரபராதிகளைத் தண்டிப்பதாகும்; இரத்தம் ஆறாக ஓடுவதையும்... குடியேற்றங்கள் அழிக்கப்படுவதையும்... உரிமைகள் பறிக்கப்படுவதையும்... கற்புகள் சூறையாடப்படுவதையும் பொருட்படுத்தாமல் தமக்கு வேண்டாதவர்களை ஈவிரக்கமின்றித் தண்டிப்பதாகும்.

இஸ்லாம் எமக்குக் கற்றுத்தந்த யுத்தத்தில் ஆயுதமேந்திப் போராடும் எதிரிகளை மட்டுமே தாக்கலாம். அவர்களை விடுத்து ஒரு அற்ப உயிரைக் கூட காரணமின்றிக் கொலை செய்வதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கவில்லை. யுத்த களத்தைப் பார்வையிடச் சென்ற நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு எதிரணிப் பெண் கொலை செய்யப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ந்தார்கள். போராட்டத்தில் ஈடுபடாத இந்தப் பெண் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்தார்கள். இனி யுத்தங்களின் போது பெண்களையும் சிறுவர்களையும் கொலை செய்ய வேண்டாம் என்று தடுத்தார்கள்.

''நோக்கம் நல்லதாக இருந்தால் வழிமுறை எப்படியும் இருக்கலாம்'' என்ற அமெரிக்காவின் தத்துவத்தை இஸ்லாம் நிராகரிக்கின்றது. இஸ்லாம் தூய்மையான நோக்கத்தை தூய்மையான வழிமுறை மூலமாகவே அடையச் சொல்கிறது. போதைப்பொருள் வியாபாரத்தால் கிடைத்த பணத்தைக் கொண்டு மஸ்ஜித் கட்ட

இஸ்லாம் அனுமதிப்பதில்லை. ''அல்லாஹ் தூய்மையானவன்; தூய்மையானதை மட்டுமே அவன் ஏற்றுக்கொள்வான்'' என்ற நபித்துவப் போதனை எங்களை நெறிப்படுத்தும் விதம் அதுதான்.

எமது பார்வையில் வன்முறை என்பது ''அர்த்தமற்ற பலப்பிர யோகமாகும்'' அதன்போது எந்த மனித விழுமியங்களும் பேணப் படுவதில்லை. வார்த்தைகளால் பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினை களை வாள்களால் தீர்த்துக்கட்டுவதே வன்முறை. நீதிமன்றம், பொலிஸ், சிறைச்சாலை போன்ற அனைத்தினதும் அதிகாரங்களை ஒரு காடையர் குழு கையிலெடுக்கும்போது வன்முறை வெடிக்கிறது.

இத்தகைய வன்முறைகளை குற்றமற்றோர், அப்பாவிகள், பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் மீது பிரயோகிப்பது பயங் கரவாதமாகும். தங்களது கோரிக்கைகள் சிலவற்றை அடைந்து கொள்ள இந்த வழிமுறையை எந்தக் குழு பயன்படுத்தினாலும் சரியே.

பணயக் கைதிகளை வைத்திருப்பது, விமானங்களைக் கடத்துவது, உல்லாசப் பிரயாணிகளைக் கொலை செய்வது போன்றவை இந்த பயங்கரவாதச் செயல்களுக்கான உதாரணங்களாகும்.

எந்தக் குற்றமுமற்றவர்கள் தீய நோக்கங்கள் கொண்ட சிலரின் ஆசாபாசங்களுக்கு இரையாக்கப்படும் இந்த ஈனச் செயலை முஸ் லிம்களாகிய நாம் ஒரு முறைக்கு இரு முறை கண்டிக்கிறோம். அந்த அநீதி யாரால் யாருக்கு இழைக்கப்பட்ட போதிலும் சரியே.

உலகில் முதன் முதலாக கண்டிக்கப்பட வேண்டிய பயங்கரவாதம் யூத ஸியோனிஸப் பயங்கரவாதமாகும். யூத ஸியோனிஸ அரசின் தோற்றம், வளர்ச்சி அனைத்தும் பயங்கரவாதத்தினால் சாதிக்கப் பட்டதே. இன அழிப்பு, இரத்த வெள்ளம், குடியிருப்புகளைத் தகர்த்துத் தரைமட்டமாக்குதல், விவசாய நிலங்களைத் தீக்கிரை யாக்குதல், விவசாயத்திற்கான நீர் வளங்களை வற்றிப் போகச் செய்தல், குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என்று பாராமல் சுட்டுத்தள்ளுதல் என யூதப் பயங்கரவாதத்தின் கொடுமைகள் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவை.

அதேநேரம், இத்தகைய பயங்கரவாதங்களுக்கு முகம்கொடுக்கும் அநீதி இழைக்கப்பட்ட அப்பாவி சமூகம் தனது பாதுகாப்புக்காகவும் தனது உரிமைகளை மீட்டெடுப்பதற்காகவும் ஆக்கிரமிக்கப்பட்ட தனது பூமியிலிருந்து எதிரிகளை வெளியேற்றுவதற்காகவும் போராடுவது பயங்கரவாதமல்ல.

இன்றைய உலகம் உண்மைக்கும் நீதிக்கும் பக்க பலமாக இருந்து அநீதியை இல்லாதொழிப்பதற்கு உறுதிபூண்டிருக்குமாயின், அதன் முதலாவது வேலை ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் மக்களை அந்த ஆக்கிரமிப்புகளிலிருந்து விடுதலை செய்வதாகும். அவர்கள் மீது திணிக்கப்பட்ட பயங்கரவாதங்களை பூண்டோடு ஒழித்து விடுவதாகும். எனினும், அது இன்று நடப்பதில்லை. காரணம், அநீதியும் அத்துமீறலும் அடக்குமுறையும் ஆதிக்க சக்திகளின் இயல்பாக மாறியிருப்பதே. பயங்கரவாதத்தின் ஆணிவேர் இந்த மூலங்களிலிருந்துதான் முளைவிடுகின்றமையால் பலவீனர்கள் இன்றைய உலகின் அநாதைகளாக மாறி விட்டார்கள்.

**பயங்கரவாதம் ஒரு சர்வதேசத் தோற்றப்பாடு**

பயங்கரவாதம் முஸ்லிம்களின் உற்பத்தியல்ல. அதன் ஏக போக உரிமையாளர்களும் முஸ்லிம்களல்ல. எனினும், அதனை இஸ்லாத்தோடும் முஸ்லிம்களோடும் மட்டுமே தொடர்புபடுத்துகின்றன மேற்கின் மீடியாக்கள்.

உண்மை யாதெனில், கடந்த நூற்றாண்டில் இடம்பெற்ற உலக மகா யுத்தங்கள் முதல் அதற்கு முற்பட்ட பிற்பட்ட போராட்டங்கள், அழிவுகள், இன அழிப்புகள் வரை அத்தனைக்கும் பின்னால் இருப்பவர்கள் முஸ்லிம் அல்லாதவர்களே. அவர்கள் மேற்கொண்ட பயங்கரமான அழிவுகளோடு ஒப்பிடுகையில் முஸ்லிம் தரப்பினரின் பயங்கரவாத செயல்பாடுகள் மிகச் சொற்பம். அதிலும், முஸ்லிம்களிடம் தோற்றம்பெற்ற பயங்கரவாதக் குழப்பங்களை உருவாக்குவதில் எதிரிகளே மறைகரமாக செயல்பட்டுள்ளனர். இன்றைய ஐ.எஸ்.ஐ.எஸ், நேற்றைய தாலிபான், அல்காஇதா அனைத்தும் அவர்களது உற்பத்திகளே. இத்தகைய பயங்கரவாதக் குழப்பங்களை முஸ்லிம் உம்மத் ஆதரிக்கவும் இல்லை; அந்தக் குழப்பங்களின்

உருவாக்கத்திற்குப் பின்னால் இருந்தவர்களை முஸ்லிம் உம்மத் போஷிக்கவுமில்லை.

**அனுமதிக்கப்பட்ட யுத்தம் என்றால் என்ன?**

இஸ்லாத்தின் அழைப்பு மொழி மேலே கூறப்பட்ட பயங்கர வாதத்தைத் தோலுரித்துக் காட்டுவதோடு இஸ்லாம் அனுமதித்த யுத்தத்தை அதன் சிறப்பம்சங்களோடு எடுத்துரைப்பதாகவும் இருக்க வேண்டும்.

எனினும், இஸ்லாமிய வட்டாரங்களிலேயே ஜிஹாத் என்ற பிரயோகம் பிழையாகப் புரியப்பட்டிருக்கிறது. முஸ்லிம்களில் அனேகர் எதிரிகளை வாள் கொண்டு அடக்கும் போராட்டமாகவே ஜிஹாதை அர்த்தப்படுத்துகின்றனர். எதிரிகளுக்கு வால் பிடிக்கும் தமது தலைவர்களைக் கொலை செய்வதும் இவர்களது பார்வையில் ஜிஹாதாகவே இருக்கிறது.

இந்தக் கருத்தியல் காரணமாக இஸ்லாத்தின் பெயரால் முஸ் லிம்களைக் கொன்று குவித்த தீவிரவாதக் குழுக்களை நாம் பார்க்கி றோம். ஜிஹாத் என்ற சொல்லையும் இணைத்தே அவர்கள் தமக்குப் பெயர் சூட்டியும் இருக்கிறார்கள்.

இஸ்லாமிய வட்டாரங்களுக்கு வெளியே உள்ளவர்கள் ஜிஹா தைக் கற்பனை செய்யும் விதம் வேறு. முஸ்லிமல்லாதவர்களைப் பலவந்தமாக இஸ்லாத்தில் நுழைவிப்பதற்காகவே ஜிஹாத் செய் யப்படுவதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

**ஜிஹாதுக்கும் யுத்தத்திற்குமிடையிலான வேறுபாடுகள்**

ஜிஹாத் என்ற அரபுப் பதத்தினை இஸ்லாம் மிக விரிவானதொரு கருத்திலேயே பயன்படுத்தியிருக்கிறது. ''சத்தியத்துக்கும் நீதிக்கும் உதவும் வகையில் சிரமம் பாராது அர்ப்பணத்தோடு உழைப்பதே ஜிஹாத்'' எனக் கூறுகிறது இஸ்லாம்.

இந்த வகையில் ஒவ்வொரு முஸ்லிமும் ஜிஹாத் செய்யக் கட மைப்பட்டிருக்கிறான். எனினும், ஒவ்வொரு முஸ்லிமும் யுத்தம் செய்யுமாறு வேண்டப்படவில்லை. ஆயுதம் ஏந்தி யுத்தம் செய்வது

இஸ்லாமிய வழியில் பயணம் செய்வோர் அனைவரினதும் கட்டாயக் கடமையல்ல. மாறாக, அதற்கேயுரிய காரணிகள் அமையப்பெற்ற சூழலுக்கு மாத்திரம் மட்டுப்பட்டதொரு கடமையே அது. அந்தப் பிரத்தியேகமான சூழலில் யுத்தத்திற்கான இஸ்லாமிய ஒழுங்குகள், வரையறைகள் அனைத்தையும் கண்டிப்பாகப் பேணவேண்டும் என முஸ்லிம்கள் நிச்சயம் வலியுறுத்தப்படுவார்கள். ''ஆயுதம் சுமந்தால் ஆயிரம் செய்யலாம்' என்ற பாணியில் செயல்பட இஸ்லாம் அனுமதிப்பதில்லை. ஒரு சத்திர சிகிச்சைக்குப் பயன்படுகின்ற வைத்தியரின் கத்தி போன்று போரில் உயர்த்தப்பட்ட ஆயுதம் அதற்குரிய நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அதில் தான் அல்லாஹ்வின் திருப்தி இருக்கிறது என்று கூறும் மார்க்கமே இஸ்லாம்.

### ஜிஹாதின் படித்தரங்கள்

இமாம் இப்னுல் கையிம் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஜிஹாதை 13 படித்தரங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவற்றுள் முதல் நான்கு ஜிஹாத்கள் உள்ளத்தோடு சம்பந்தப்பட்டவை; இரண்டு ஜிஹாத்கள் ஷைத்தானுக்கு எதிரானவை; இன்னும் மூன்று ஜிஹாத்கள் சமூகத்தளத்தில் காணப்படுகின்ற பாவம் மற்றும் குற்றச் செயல்களை அகற்றுதலுடன் தொடர்பானவை; ஏனைய நான்கும் இஸ்லாத்தின் எதிரிகளோடும் முஸ்லிம் சமூகத்தினுள் மறைந்திருக்கும் நயவஞ்சகர்களுடனும் நடத்தப்படவேண்டியவையாகும். அதிலும் நயவஞ்சகர்களுக்கெதிராக ஆயுதம் ஏந்துமாறு இஸ்லாம் கூறவில்லை. எதிரிகள் சமாதானமாக வாழ விரும்பினாலும் ஆயுதம் ஏந்துவதை இஸ்லாம் தடுக்கின்றது. அவர்கள் முஸ்லிம்களை அழிக்க ஆயுதமேந்தினால் மட்டுமே அவர்களுடன் போரிடுமாறு இஸ்லாம் கூறுகிறது. அதுவும் எல்லா சூழ்நிலைகளிலுமல்ல.

மக்காவில் 13 வருடங்கள் அனுபவிக்க முடியுமான துன்பங்கள் அனைத்தையும் அனுபவித்தவர்கள் நபிகளாரும் அண்ணலாரின் தோழர்களுமாவர். எனினும், தங்களுக்குத் துன்பமிழைத்த எதிரிகளுக்கெதிராக ஆயுதமேந்தி அவர்கள் போராடவில்லை. தொழுகையையும் பொறுமையையுமே அவர்கள் கடைப்பிடித்தார்கள். ஹிஜ்ரத்தின் பின்னரே அந்தப் போராட்டத்திற்கு அல்லாஹ்வால் அனுமதி வழங்கப்பட்டது.

அதுவரை அழைப்புப் பணி என்ற ஜிஹாதிலேயே அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். குர்ஆனை ஆதாரமாகக் கொண்டு இந்த அழைப்புப் பணி எனும் ஜிஹாதை செய்யுமாறு அல்லாஹ்வும் கட்டளையிட்டான் (அல்புர்கான்: 52). இந்த ஜிஹாத் இறுதிநாள் வரை தொடர்ந்திருக்கும். அதற்கான சாதனங்களும் நிறையவே இருக்கின்றன.

அழைப்புப் பாதையில் எதிர்கொள்ளும் சோதனைகளை பொறுமையோடும் உறுதியோடும் தாங்கிக் கொள்வது மற்று மொரு ஜிஹாதாகும். அவ்வாறு தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் சுவனம் நுழையலாமா எனக் கேட்கிறது அன்கபூத் அத்தியாயத்தின் முதலாவது வசனம்.

**வாழ்வாதாரத்தைத் தேடுவதும் ஜிஹாத்**

ஜிஹாத் பற்றிய தலைப்பில் இது ஓர் அற்புதமான செய்தியாகும். இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஜிஹாதின் எல்லையை எந்தளவு விரிவுபடுத்தியுள்ளார்கள் என்பதைக் காட்டுகிறது பின்வரும் சம்பவம்.

கஅப் இப்னு அஜஸா (ரழியல்லாஹு அன்ஹு) கூறுகிறார்கள். நபியைக் கடந்து ஒரு மனிதர் சென்று கொண்டிருந்தார். நபித் தோழர்கள் அவரது உடற்கட்டையும் உற்சாகத்தையும் பார்த்து விட்டுக் கூறினார்கள்: **''அல்லாஹ்வின் தூதரே இவரது உடற்கட்டும் உற்சாகமும் அல்லாஹ்வின் பாதையில் பயன்படுமாயின் எத்துணை சிறப்பாக இருக்கும்!''** அதனை செவிமடுத்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். **''ஒருவர் தனது சிறுவயது குழந்தைக்காக உழைப்பதும் வயோதிபமடைந்த தனது தாய் தந்தையருக்காக உழைப்பதும் தன்னைப் பாவங்களிலிருந்து பாதுகாப்பதற்காக உழைப்பதும் அல்லாஹ்வின் பாதையைச் சார்ந் தவையே. போட்டி மனப்பான்மையோடு பெருமைக்காக உழைப் பவன்தான் ஷைத்தானின் பாதையில் இருக்கிறான்.''** (அத்தபரானி)

**சமூகத்தின் கல்வி, பொருளாதார மேம்பாட்டுக்காக உழைப்பதும் ஜிஹாத்**

ஒரு சமூகத்தின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் யுத்தத்தால் மட்டும் பங்களிப்புச் செய்துவிட முடியாது. மாறாக, அந்த சமூகம்

கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளில் முன்னேற வேண்டிய அவசியம் எமது காலத்தின் தேவையாக மாறியுள்ளது. அந்த வகையில், ஒரு சமூகத்தின் பலத்தை அதிகரிக் கச் செய்யும் துறைகள் அனைத்திலும் முஸ்லிம் சமூகம் கவனம் செலுத்தியே ஆக வேண்டும். ஒவ்வொரு காலத்திலும் பலத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் வேறுபடுகின்றன. ''பலத்தைத் திரட்டிக் கொள்ளுங்கள்'' என்ற குர்ஆனின் கட்டளையை சிரமேற்கொள் வதாயின் இந்த வகையான ஜிஹாதை எப்படிப் புறக்கணிக்க முடியும்?

### யுத்தம் எனும் ஜிஹாத்

மேற்கூறப்பட்ட ஜிஹாத்களில் இறுதியில்தான் ஆயுதமேந்திப் போரிடுதல் எனும் ஜிஹாத் இடம்பெறுகிறது. அதிலும் பலவகை உண்டு. தற்காப்பு அடிப்படையில் மேற்கொள்ளும் ஜிஹாத், ஆக் கிரமிப்பாளர்களிடமிருந்து தமது உயிர்களையும் உடமைகளையும் பாதுகாக்கும் ஜிஹாத், அச்சுறுத்தும் எதிரிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கான ஜிஹாத் என இவை பலதரப்படுகின்றன.

இந்த ஜிஹாத்களை எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற ரீதியில் எவரும் மேற்கொள்ள முடியாது. விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேற்கொள்ள வேண்டிய இந்த ஜிஹாத்கள் நீண்ட கற்றல்கள், ஆய்வுகளை அடுத்தே முடிவு செய்யப்படல் வேண்டும். ஷரீஆ துறை நிபுணர்கள், புத்திஜீவிகள் மற்றும் அறிஞர்களை உள்ளடக்கிய குழுக்களின் ஆலோசனைகள் இத்தகைய முடிவுகளைப் பெறுவதற்கு இன்றியமையாதவையாகும்.

### இஸ்லாத்தின் விருப்பம் சமாதானமே

விதிவிலக்கான சூழ்நிலைகளில் யுத்தம் இஸ்லாத்தின் ஓர் அம் சமாக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் சமாதானமே இஸ்லாத் தின் அடிப்படை... சமாதானமே விதி... சமாதானமே இலக்கு... சாமாதானமே வாழ்வு!

யுத்தம் விதியாக்கப்பட்டது விருப்பத்தோடு அல்ல. **''உங்களுக்கு வெறுப்பாக இருக்கும் நிலையில்தான் உங்கள்மீது யுத்தம் கடமை யாக்கப்படுகிறது...''** ***(2: 216)*** என அல்குர்ஆன் கூறுகிறது.

நடக்கவிருந்த யுத்தம் தவிர்க்கப்பட்ட சந்தர்ப்பங்களை அல்குர்ஆன் வரவேற்றுப் பேசியிருக்கிறது. அகழி யுத்தம் எதிரிகள் எதிர்பார்த்தவாறு அவர்களுக்கு சாதகமாக அமையவில்லை. அவர்கள் யுத்தம் செய்யாமலே திரும்பிச் சென்றார்கள். அதுபற்றி பாராட்டிப் பேசுகின்றது ஸூரதுல் அஹ்ஸாப்இன் 25ஆம் வசனம். அதே போன்று ஹுதைபியாவில் முஸ்லிம்கள் ஒரு யுத்தத்தை ஆர்வத்தோடு எதிர்பார்த்தனர். எனினும், அது யுத்தமாக அன்றி பேச்சுவார்த்தை மற்றும் உடன்படிக்கையுடன் கூடிய சமாதானமாக அமைந்தது. அதனை அல்குர்ஆன் ''**நாம் உங்களுக்குத் தெளிவான வெற்றியைத் தந்தோம்**'' என்று கூறுகின்றது. ஹுதைபியாவில் சமாதானத்தை விரும்பாத சிலர், இதில் என்ன வெற்றி இருக்கிறது என்று கேட்டார்கள். அது அல்லாஹ்வின் பார்வையிலும் அல்லாஹ்வின் தூதரது பார்வையிலும் வெற்றியே என்பதுதான் இங்கு முக்கியம்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் யுத்தம் பற்றி ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: **''எதிரிகளைப் போரில் சந்திக்க வேண்டும் என்று நீங்கள் ஆசை வைக்க வேண்டாம். (யுத்த அவலத்திலிருந்து விலகி நிற்கும்) ஆரோக்கியத்தையே அல்லாஹ்விடம் கேளுங்கள். எனினும், (யுத்த களத்தில்) எதிரிகளை சந்திக்க நேரிட்டால் நிலைகுலையாது பொறுமையுடன் போரிடுங்கள். அந்நேரத்தில் வாள்களின் நிழலில் சுவனம் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள்...''**

இந்த நபிமொழி ஒரு முஸ்லிமுடைய அன்றாட மனநிலை சமாதானமே என்பதையும் விதிவிலக்கான மனநிலையே போராட்ட மனநிலை என்பதனையும் தெளிவாக விளக்குகிறது. அது மட்டுமல்ல, நிர்ப்பந்த நிலையில் யுத்த களத்திற்குச் சென்ற பிறகு எதிரிகள் மனம் மாறி சமாதானத்தைக் கோரினால் யுத்தத்தைக் கண்டிப்பாக விடுமாறும் சமாதானத்திற்குச் செல்லுமாறும் அல்குர்ஆன் கூறுகின்றது. 8: 61-62 வது வசனங்களைப் படித்துப் பாருங்கள்.

### எமது அழைப்பு மொழியில் ஜிஹாத்

ஜிஹாத் தொடர்பில் எமது அழைப்பாளர்களின் பேச்சுக்கள் இஸ்லாத்தைப் பிறருக்கு எவ்வாறு காட்சிப்படுத்துகின்றன என்பது

இங்கு நாம் சிந்திக்க வேண்டியதொன்றாகும். சிலர் ஜிஹாத் பற்றிப் பேசுகிறார்கள். கேட்பவர்களுக்கு இஸ்லாம் வாளோடு பிறந்து வாளோடு இறக்கச் சொல்வதாகவே தென்படுகிறது. கருணையை அடகு வைத்து கடுமையை விலைக்கு வாங்குமாறு இஸ்லாம் அழைப்பு விடுப்பதாக அவர்கள் நினைக்கும் வண்ணம் அந்தப் பேச்சுக்கள் காணப்படுகின்றன. சமாதானமே விதி; யுத்தம் விதி விலக்கு என்ற கருத்தை அந்தப் பேச்சுக்கள் அவர்களுக்குப் புரிய வைப்பதில்லை.

வேறு சிலரது பேச்சு ஜிஹாதைக் கொச்சைப்படுத்துமளவு நேர் எதிர்த் திசையில் செல்கிறது. ஜிஹாதை உரிய முறையில் மேற் கொள்பவர்களை இவர்கள் கொச்சைப்படுத்துகிறார்கள். தீவிர வாதத்தைப் போஷித்து வளர்ப்பவர்களையும் கடும்போக்கைக் கடைப்பிடிப்பவர்களையும் இவர்கள் விட்டு விடுகிறார்கள். ஆக் கிரமிக்கப்பட்ட தங்களது தேசத்தையும் இஸ்லாத்தின் புனிதப் பிர தேசங்களையும் மீட்கப் போராடுகின்றவர்களை இவர்கள் பயங்கர வாதிகள் என்று பேசுகிறார்கள். ஜிஹாத் என்ற பெயரால் தங்களது சொந்த மண்ணில் தங்களது உடன் பிறப்புக்களைக் கொன்றொழிப்ப வர்களைப் பற்றி வாய் திறக்காதவர்கள் ஆக்கிரமிப்பாளர்களுக் கெதிராகத் தாக்குதல் மேற்கொள்பவர்களைப் பயங்கரவாதிகள் என முத்திரை குத்துகின்றார்கள்.

இவ்வாறு இஸ்லாத்தின் அழைப்பு மொழி அதனைப் பிரசாரம் செய்ய முன்வந்தவர்களாலேயே அசிங்கப்பட்டுப் போயிருப்பது வேதனை தருவதாக இருக்கிறது.

மேற்கூறப்பட்ட இரு சாராரும் இஸ்லாத்தின் உருக்குலைந்த தோற்றமொன்றையே உலகுக்குக் காட்டுகின்றார்கள். அவர்கள் தங்களது பேச்சுக்களில் வரிக்கு வரி குர்ஆனையும் சுன்னாவையும் சேர்த்திருக்கலாம். எனினும், அவர்களது பேச்சுக்கள் இஸ்லாம் பற்றி எத்தகைய தோற்றமொன்றை மனித உள்ளங்களில் பதிக்கிறது என்பதே முக்கியம். அந்தத் தோற்றம் இஸ்லாத்தின் இயல்புக்குப் பொருந்தாததாக இருந்தால் அவர்கள் இஸ்லாத்திற்குச் செய்வது சேவையல்ல; மாறாக, அநீதியும் கொடுமையுமாகும்.

சிலர் இந்தப் பிழைகளை விளங்கி உண்மைகளை உணருகிறார் கள்; திருந்தி விடுகிறார்கள். தங்களது பேச்சுக்களும் அணுகுமுறை களும் பிழையானவை அவற்றால் விளைந்தவை விபரீதங்களே; சாதித்தவை பூச்சியங்களே என்பதை அனுபவ ரீதியாக விளங்கிக் கொள்கிறார்கள். எனினும், அவர்களைப் பின்பற்றிச் சென்றவர்களின் படை பட்டாளங்கள் திரும்பி வருவதில்லை. அவர்கள் பூச்சியத் திலிருந்து துவங்கி பூச்சியத்தையே அடைந்திருக்கிறோம் என்று தாமாக உணரும் வரை பிறரது அனுபவங்களால் பயன் பெறுவ தில்லை.

இஸ்லாத்தின் அழைப்பு மொழி அதற்கேயுரிய தண்டவாளத் தில் பயணம் செய்தால் மட்டுமே இஸ்லாத்தின் எதிர்காலம் பிரகா சிக்கும் என்பதை தாஇகள் உணராதவரை இந்தக் கோளாறுகள் தொடரவே செய்யும். எனினும், அவர்களது பேச்சுக்களினதும் நடத் தைகளினதும் தீங்குகளிலிருந்து நிரபராதியாகவே இஸ்லாம் திகழ்கிறது. அதனை இந்த உலகிற்கு எடுத்துச் சொல்பவர்கள் சுப சோபனத்திற்குரியவர்களே!

## 14

# ஆண்களை மேன்மைப்படுத்தி பெண்களைத் தாழ்த்தாத மொழி

*(அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி அவர்கள் இந்தத் தலைப்பை மறு திசையிலேயே இட்டிருக்கிறார்கள் ''பெண்ணுக்கு நீதி செலுத்தி ஆணுக்கு அநீதியிழைக்காத மொழி'' என்பதே அவரது தலைப்பாகும். மத்திய கிழக்கிற்கும் மேற்கு நாடுகளுக்கும் பொருந்துகின்ற விதத்திலேயே அந்தத் தலைப்பு இருக்கிறது. நான் ஆசிய நாடுகளுக்குப் பொருந்தும் வகையில் ''ஆண்களை மேம்படுத்தி பெண்களைத் தாழ்த்தாத மொழி'' என மாற்றியுள்ளேன்.)*

இஸ்லாம் அநீதிகளிலிருந்து பெண்களை விடுதலை செய்கிறது. எனினும், அதன் அழைப்பாளர்களது மொழி அவர்களுக்கு அந்த விடுதலையைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

பெண் இரண்டு அநீதிகளுக்குட்பட்டிருக்கிறாள். ஒன்று, இஸ்லாமிய நாகரிகத்தின் வீழ்ச்சிக் காலத்தில் அவளுக்கிழைக்கப்பட்ட அநீதிகள். மற்றையது, மேற்கு நாகரிகத்தின் வளர்ச்சிக் காலத்தில் அவளுக்கிழைக்கப்பட்ட அநீதிகள். முதல் வகை அநீதிகள் முஸ்லிம்களால் இழைக்கப்பட்டவை; இரண்டாவது வகை நவீன பெண் விடுதலைப் போராளிகளால் இழைக்கப்பட்ட அநீதிகளாகும்.

இஸ்லாம் என்பது சில வணக்க வழிபாடுகளும் சில தனியார் சட்டங்களும் மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை முறை; அது ஒரு நாகரிகம். அது உன்னதமான விழுமியங்களையும் நடைமுறைகளையும் கொண்ட ஒரு கலாசாரம்.

அந்த இஸ்லாமிய கலாசாரமும் நாகரிகமும் அதிஉச்ச நிலையிலிருந்த நபிகளார் காலத்தில் பெண்கள் மார்க்கப்பற்று, ஈமானிய

உணர்வு, செயற்திறன், சமூக ஈடுபாடு, வாழ்க்கைப் போராட்டத்தில் பங்கெடுக்கும் உயிர்த்துடிப்பு, இஸ்லாமியப் போர்க் களங்களில் பங்குபற்றும் வீரம் கொண்டவர்களாக இருந்தனர்.

இஸ்லாம் விதித்த வரையறைகளோடும் கட்டுப்பாடுகளோடும் ஒழுக்கங்ளோடும் அவர்கள் மேற்கூறப்பட்ட பங்களிப்புகளைச் செய்தனர். படைத்தவன் வகுத்த நியதிகளோடும் பின்பு நபிகளார் தந்த சுதந்திரங்களோடும் அவர்கள் தமது உரிமைகளை நிறைவாக அனுபவித்தனர்.

எனினும், பிற்கால முஸ்லிம்கள் இஸ்லாத்தின் இயல்புக்கு முரணாக வாழ்க்கையின் பல்வேறு தளங்களில் செயல்பட ஆரம்பித்தனர். பெண்கள் விடயத்திலும் அவர்கள் அவ்வாறே நடந்து கொண்டனர்.

பெண்களை வீட்டில் அடைத்து வைத்தனர். அவர்கள் மஸ்ஜிதுக்கும் கல்விக்கூடங்களுக்கும் செல்ல அனுமதி மறுத்தனர். பெண்ணுடைய அனுமதியின்றியே அவளுக்குத் திருமணத்தையும் செய்து வைத்தனர். சில நாடுகளில் அவளுடைய வாரிசுரிமையைக் கூட அவளுக்கு வழங்காதிருக்கும் நிலையை ஏற்படுத்தினர். பெண்களை வாழ்க்கை நீரோட்டத்திலிருந்து ஒதுக்கி வைப்பதற்கென்றே இஸ்லாம் கூறாத பல்வேறு செய்திகளை அவளது விடயத்தில் பிரபல்யப்படுத்தினர். உதாரணம்: ''பெண்களிடம் ஆலோசனை கேட்டு அதற்கு மாற்றமாகச் செயல்படுங்கள்.''

இவ்வாறு பெண்கள் உயிர்த்துடிப்புமிக்க வாழ்க்கை நீரோட்டத்திலிருந்து ஓரமாக்கப்பட்டனர். விளைவாக, பெண்கள் வாழ்க்கை நீரோட்டத்தில் பங்கெடுக்காத நாகரிகமொன்று உதயமாகியது. அது இஸ்லாத்தின் மூலமாகவே நியாயப்படுத்தப்பட்டது. அதற்கு மக்கள் மத்தியில் அங்கீகாரமும் கிடைத்தது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது கால பெண் நடைமுறைகள் இதனால் மறுக்கப்பட்டன... நிராகரிக்கப்பட்டன என்று கூறினாலும் அது மிகையல்ல.

இது முஸ்லிம்களால் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும். பெண்களின் உரிமைகளைத் தர மறுத்து அவர்களை அடக்கி

வைத்த வரலாறுகள் ஏனைய சமூகங்களில் நிறையவே இருக்கின்றன. குறிப்பாக, ஐரோப்பிய சமூகங்கள் பெண்களை நடத்திய விதம் ஆன்மா உள்ள ஒரு ஜீவனை நடத்துவதுபோல் இருக்கவில்லை. உண்மையில் பெண்ணுக்கு ஆன்மா இருக்க முடியாது என்றே அவர்கள் கருதினார்கள்.

இந் நிலையில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அறிவியல் மறுமலர்ச்சி மதங்களுக்கெதிராக தனது தீவிர பிரசாரத்தை ஆரம்பித்தது. குறிப்பாக, கிறிஸ்தவ ஐரோப்பாவும் அதன் திருச்சபைகளும் இந்த எதிர்ப் பிரசாரத்தை சந்திக்க நேர்ந்தன. அவற்றின் அதி தீவிர கட்டுப்பாடுகளிலிருந்து பெண்களை விடுதலை செய்ய இயக்கங்கள் உருவாகின.

அந்தப் பெண் விடுதலை இயக்கங்கள் பெண்ணை அனைத்துக் கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலை செய்தன. தாய்மையின் பொறுப்புக்கள், மனைவியின் கடமைகள் ஏன், பெண்மையின் சிறப்பம் சங்கள் அனைத்திலிருந்தும் அவளை அவை கழற்றிவிட்டன. குடும்பப் பொறுப்புகள் எதனையும் சுமக்கத் தயாரில்லாதவளாக அவளை அவர்கள் மாற்றி விட்டனர். நிர்வாண நாகரிகத்தின் சின்னமாக இறுதியில் அவள் ஆக்கப்பட்டாள். இன்று பெண்கள் பெண்களைத் திருமணம் செய்யும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதனை சுதந்திரம் என்றும் பெண்ணுரிமை என்றும் அவர்கள் சிலாகித்தார்கள். வரலாற்றில் இந்தளவு சுதந்திரம் பெண்ணுக்கு எக்காலத்திலும் கொடுக்கப்படவில்லை எனப் பெருமிதப்பட்டுக் கொண்டார்கள்.

உண்மையில் இந்த சுதந்திர வேட்கை ஐரோப்பாவிலிருந்த பெண் அடக்கு முறைகளுக்கெதிராக வெளிப்பட்டதாகும். இது ஐரோப்பியப் பெண்ணைப் பொறுத்தமட்டில் சுதந்திரமாகக் கருதப்பட்டாலும் பெண்மையின் இயல்போடு இணைத்துப் பார்க்கையில் இது விடுதலையல்ல; இது மற்றுமொரு சிறைப்படுத்தலே! அதாவது, ஐரோப்பா தனது பெண்ணை வீட்டுச் சிறையிலிருந்து வீதிச் சிறைக்குள் தள்ளிவிட்டது என்பதே உண்மை.

இந்த இரு அநீதிகளிலிருந்தும் இஸ்லாம் பெண்ணைப் பாதுகாத்திருக்கிறது. அவளை அடைத்து வைத்து அவளது ஆளுமையை

வஞ்சிக்கவுமில்லை; முற்றாகத் திறந்துவிட்டு அவளைப் பாதுகாப் பற்ற போகப்பொருளாக வீதியில் விட்டுவிடவுமில்லை.

### இஸ்லாம் பெண்ணுக்கு வழங்கிய அந்தஸ்த்து

பெண் ஆணிலிருந்து வெளிப்பட்ட கிளையாகும். அதாவது, ஒரு மரத்தின் இரண்டு கிளைகளாகவே ஆணும் பெண்ணும் இருக்கிறார்கள். அந்தக் கிளைகள் இரண்டிலிருந்தும் கிளைகள் விட்டுப் பரவிய விருட்சமே முழு மனித சமுதாயமுமாகும் *(4: 1)* என்பது ஆண் பெண் பற்றிய குர்ஆனின் கண்ணோட்டம்.

பெண் இல்லாமல் ஆணுக்கு அமைதி இல்லை. ஆணில்லாது பெண்ணுக்கு வாழ்க்கையில்லை *(7: 189)*. பெண் தாயாக, மனை வியாக, சகோதரியாக, மகளாக, மருமகளாக, சிற்றம்மையாக, மாமி யாக மனித வாழ்க்கையின் பாத்திரங்களில் பங்கேற்கிறாள். இந்த வகையில் பெண் ஆணினதும் ஆண் பெண்ணினதும் பங்காளிகள். அதனைத்தாத்தான் போலும் இந்த நபிமொழி உணர்த்திக் கொண் டிருக்கிறது. **“பெண்கள் என்போர் ஆண்களின் சரிபாதி.” (அபூ தாவூத், அத்திர்மிதி)** அதுமட்டுமல்ல, சரித்திரத்திலும் அவள் பாதிதான்.

எனவே, மார்க்கத்திலும் வணக்கத்திலும் கடமைகள் பொறுப் புக்களிலும் அவளை இஸ்லாம் ஆணுக்கு சமமாகவே கருதுகின்றது *(அல்அஹ்ஸாப்: 35)*. இஸ்லாமியப் பணியிலும் சமுதாயக் கடமை யிலும் ஆணுக்குள்ளவற்றில் பெண்களையும் அது இணைத்திருக் கிறது *(9: 71)*.

முதல் மனிதர்களான ஆதம் ஹவ்வா இருவரையும் விளித்தே அவர்கள் ஆரம்பிக்க வேண்டிய வாழ்க்கைக்கான முதல் கட்டளை களை அல்லாஹ் பிறப்பிக்கின்றான் *(2: 35)*. இருவரது வாழ்விலும் நடந்த முதல் தவறு குறித்து திரிபுபடுத்தப்பட்ட தவ்றாத் குறிப் பிடுவது போல பெண்ணை மட்டும் அல்லாஹ் கண்டிக்கவில்லை. மாறாக, அந்தத் தவறுக்கு இருவருமே பொறுப்பு என்று அல்லாஹ் கூறுகின்றான் *(2: 36)*. அந்தத் தவறு குறித்து கவலைப்பட்டதும் இருவருமாகத்தான் *(7: 23)*.

அது மட்டுமல்ல, குர்ஆன் பல இடங்களில் பெண்ணைத் தொடர்புபடுத்தாமல் ஆணை மட்டுமே முதல் தவறு குறித்து

கண்டித்திருக்கிறது (தாஹா: 115, தாஹா: 120, தாஹா: 121, 122). இந்த வசனங்களில் ஆதம் (அலைஹிவஸல்லம்) அவர்கள் தவறு செய்ததாகவே அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

கடமைகளைச் செய்வதிலும் அதற்கான கூலிகளைப் பெறுவ திலும் சுவனம் நுழைவதிலும் ஆணுக்கு எந்த இடமோ அதே இடம் குறைவின்றி பெண்ணுக்கும் இருப்பதாகக் கூறுகிறது 3: 195ஆம் வசனம். 4: 124, 16: 97ஆம் வசனங்களும் இதனை மேலும் வலி யுறுத்துகின்றன.

வாரிசுரிமை, பொருளீட்டும் உரிமை, தான் தேடிய சொத்துகளுக்கு உரித்துடையவராக இருக்கும் உரிமை, பணக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் உரிமை, மனைவியின் சொத்தில் கணவன் கூட கைவைக்க முடியாத உரிமை என இஸ்லாம் சொத்துக்கள் விடயத்தில் பெண்ணை ஆணுக்கு எந்த வகையிலும் குறைவில்லாத உரிமைகளோடு வாழ வைத்திருக்கிறது.

அது மட்டுமல்ல, அறிவுத் தேடலிலும் பெண்ணை இஸ்லாம் ஒதுக்கிவிடவில்லை. அறிவைத் தேடிப் பெறுகின்ற உரிமையை ஆணுக்கு நிகராக பெண்ணுக்கும் கொடுத்திருக்கிறது இஸ்லாம். ''அறிவைத் தேடிப்பெறுதல் ஒவ்வொரு முஸ்லிமின் மீதுமுள்ள பர்ழான கடமை'' என்ற நபிமொழி ஆண்களை மட்டுமல்ல, பெண் களையும் உள்ளடக்கியதே என்பது இஜ்மாவான முடிவாகும்.

அதேபோன்று தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற வணக்க வழிபாடுகள் இருபாலாருக்கும் கடமையாக்கப்பட்டதே. தொழுகைக்காக பெண்கள் மஸ்ஜித் செல்லலாம்... பெருநாள் தொழுகைக்காக மைதானம் செல்லலாம்... ஹஜ்ஜுக்காக மக்கா செல்லலாம்... இந்தக் கடமைகள் விடயத்தில் ஆண்களை ஓர் இடத்திலும் பெண்களை வேறோர் இடத்திலும் இஸ்லாம் வைக்க வில்லை.

சமூக விவகாரங்களிலும் சீர்திருத்தப் பணிகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் கடமைப்பாடுள்ளவர்கள் என்பதை 9: 71வது வசனம் தெளிவுபடுத்துகிறது.

அடைக்கலம் கோரும் ஒருவருக்கு அடைக்கலம் கொடுக்கும் உரிமையை பெண்ணுக்கும் வழங்கி அவளை கண்ணியப்படுத்தியிருக்கிறது இஸ்லாம். அன்னை உம்மு ஹானி மக்கா வெற்றியின் போது ஓர் இணைவைப்பாளருக்கு அடைக்கலம் கொடுத்தார். அந்த இணை வைப்பாளரை அவரது சகோதரர் கொலை செய்ய முற்பட்டபோது அதனை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் உம்மு ஹானி (ரழியல்லாஹு அன்ஹா) முறையிட்டார். அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். **"நீங்கள் அடைக்கலம் கொடுத்தவருக்கு நாங்களும் அடைக்கலம் கொடுப்போம்."** (அல்புகாரி, முஸ்லிம்)

### மகள் பற்றி இஸ்லாம்

பெண் குழந்தை பிறப்பது ஒரு துர்ச்சகுனம் என்ற மௌட்டீகம் நிலவிய காலத்தில் அதனை வன்மையாகக் கண்டித்த இஸ்லாம் (16: 58-59), அந்தக் குழந்தை என்ன குற்றத்திற்காக கொலை செய்யப்பட்டது என விசாரிக்கப்படும் என்று கூறுகிறது (81: 89).

அது மட்டுமல்ல, பெண் குழந்தை ஆண் குழந்தையைப் போன்றதோர் அருளே. அல்லாஹ் தான் நாடியோருக்கு அந்த அருளை வழங்குவான் எனக் கூறுகிறது 42: 49 ஆம் வசனம்.

எந்த மகளையும் அவளது தந்தை அவளது அனுமதியின்றித் திருமணம் செய்துவைக்கக் கூடாது என்பது, மகளுக்கு இந்த மார்க்கம் கொடுத்த மற்றுமொரு கண்ணியமாகும்.

மூன்று அல்லது இரண்டு பெண் மக்களை அல்லது ஒரு பெண்ணைப் பெற்று வளர்த்து அறிவும் ஒழுக்கமும் கற்பித்து சிறந்த கணவன்மாரைத் தேடித் திருமணம் செய்து வைத்த தாய் தந்தையருக்கு சுவர்க்கம் உண்டு என்ற நுபுவ்வத்தின் செய்தி பெண் பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்ட மற்றுமொரு கண்ணியமாகும்.

### மனைவி பற்றி இஸ்லாம்

அல்லாஹ்வின் அத்தாட்சிகளுள் ஒன்று என ஆணுக்குரிய பெண் சோடி பற்றிக் கூறும் அல்குர்ஆன், அந்த சோடியில் அன்பையும் கருணையையும் மன அமைதியையும் வைத்திருப்பதாகவும் குறிப்பிடுகிறது (30: 21).

சோடிகளில் ஒருவர் மற்றுமொருவருக்கு எத்தகைய வாழ்க்கைப் பங்களிப்புகளை வழங்க வேண்டும் என்று வர்ணிக்கின்றது 2: 187 ஆம் வசனம். ''ஆண் பெண்ணுக்கும் பெண் ஆணுக்கும் ஆடை'' என்று கூறுகின்றது இந்த வசனம். ஆடை எத்தனை பங்களிப்புகளை ஒரு மனிதனுக்கு வழங்குகிறது என்பது எங்களுக்குத் தெரியும். அலங்காரம், மறைப்பு, பாதுகாப்பு, கண்ணியம், சூடு, இணைப்பு, நெருக்கம் என அவற்றை எண்ணிக்கொண்டே போகலாம். இந்த விடயங்கள் அனைத்திலும் கணவனையும் மனைவியையும் சம அந்தஸ்த்துக்கு அருகதையாக்கியுள்ளது இஸ்லாம்.

மனைவிக்கு கடமைகள் போன்று உரிமைகள் உண்டெனவும் 2: 228 ஆம் வசனம் குறிப்பிடுகின்றது. எனினும், ஆண் மகன் குடும்பத்தில் பிரதான நிர்வாகி என்பதனால் சில இடங்களில் அவனுக்குரிய அந்தஸ்துக்களை அல்லாஹ் மேம்படுத்தியிருப்பதாகவும் அந்த வசனம் கூறுகின்றது.

இருப்பினும், குடும்ப விவகாரங்களில் மனைவியுடன் கலந்தாலோசனை செய்ய வேண்டிய பொறுப்பை வலியுறுத்துகிறது 2: 233 ஆம் வசனம்.

மனைவியரிடமுள்ள விரும்பத்தகாத விடயங்களைப் பொறுமையோடு கையாளுமாறு கூறுகிறது 4: 19 வது வசனம். எனினும், ஒரு மனிதன் விரும்புவதெல்லாம் அவனுக்குக் கிடைத்துவிடுவதில்லை. உடன்பாட்டுக்கு இடம்பாடே இல்லாமல் செல்லும் நிலையும் சிலரது வாழ்க்கையில் ஏற்படத்தான் செய்கிறது. அந்த நிலை கணவனுக்கு ஏற்பட்டுவிட்டால் தலாக் சொல்லும் உரிமையை இஸ்லாம் அவனுக்குக் கொடுக்கிறது. அதேபோன்று, உடன்பட முடியாது என்ற நிலைக்கு மனைவி வந்துவிட்டால் கணவன் விரும்பாவிட்டாலும் அவனை விட்டுப் பிரிவதற்கு அனுமதி கோரும் உரிமையைப் பெண்ணுக்கும் இஸ்லாம் வழங்கியிருக்கிறது.

இதற்கான நியாயத்தை ஒரு அறிஞர் பின்வருமாறு கூறுகிறார்: ''வேதனைகளில் மிக மோசமானது உன்னோடு உடன்படாதவர் உன்னை விட்டுப் பிரியாதிருப்பதாகும்.''

இந்த உடன்பாட்டைப் பாதிக்குமளவு விவகாரங்கள் சென்று விடாதிருப்பதற்கே இறுதிவரை நல்ல முறையில் நடக்குமாறு வலியுறுத்துகிறது இஸ்லாம் (4: 19). எனினும், அந்த நல்ல முறை களை விளங்கிக் கொள்ளாதவர்கள் ஓர் ஆணுக்கோ அல்லது பெண் ணுக்கோ வாய்த்து விடலாம். அவ்வாறு நடந்தால் இருவரும் தீர்வைப் பெறுவதற்கான வழிகாட்டலே தலாக்.

**தாய் பற்றி இஸ்லாம்**

தந்தையை விட மூன்று முன் அந்தஸ்த்துக்களைப் பெறும் பாக்கியத்தை இஸ்லாம் தாய்க்கு வழங்கியிருக்கிறது. நான்காவது இடமே தந்தைக்கு வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, குழந் தைகள் தாய்க்கு அந்த அந்தஸ்த்துக்களை வழங்குவதன் மூலமே சுவனத்தை அடைய முடியும். சுவனம் தாயின் பாதத்தடியில் இருக்கிறது என்றுணர்த்துகிறது இஸ்லாம். ஜிஹாதுக்கு அனுமதி கேட்டு வந்த ஒரு நபித்தோழரிடம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வினவுகிறார்கள்: ''உனது தாயார் உயிரோடு இருக்கின்றாரா? அவ்வாறாயின் அவரோடிருப்பீராக. அவரது பாதத் தடியில் சுவனம் இருக்கிறது.''

ஆம், ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் தாயின் பங்குக்கு நிகராக யாருடைய பங்கு இருக்க முடியும்! 31: 14ஆம் வசனத்தில் ஒரு தாய் குழந்தைக்காகப் படும் துயரங்களை அல்லாஹ் விபரிக்கிறான். அந்தத் துயரங்களுக்குப் பிரதியுபகாரம் செய்ய ஒரு பிள்ளையால் முடியுமா?

**ஒரு சமூக உறுப்பினரின் அந்தஸ்த்தில் பெண்**

பெண்ணை ஒரு குடும்ப உறுப்பினராகப் பார்க்கும் குர்ஆன், அவளை ஒரு சமூக உறுப்பினராகப் பார்க்கவும் தவறவில்லை. எந்தளவுக்கு இந்தப் பார்வையை அல்குர்ஆன் பெண்ணின் மீது செலுத்தியிருக்கிறது என்பதை சிந்திக்கும்போது ஆச்சரியம் மேலிடு கிறது. ஆண்களுக்கு மட்டுமே உரிய சமுதாயப் பொறுப்புக்கள் என நாம் கருதும் விவகாரங்களில் கூட பெண்ணுக்கும் சம பங்கு இருப்பதாக அல்குர்ஆன் தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. அல்லாஹ் கூறுகின்றான்:

''முஃமினான ஆண்களும் முஃமினான பெண்களும் நன்மையை ஏவித் தீமையைத் தடுத்து, தொழுகையை நிலைநாட்டி ஸகாத்தைக் கொடுத்து அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுகின்ற நேசர்களாக ஒருவருக்கொருவர் இருக்கின்றனர்.'' *(9: 71)*

இந்த வசனத்தில் ஈமான் கொண்டவர்கள் என்று பொதுப்படையாக அல்லாஹ் குறிப்பிடவில்லை. மாறாக, ஈமான் கொண்ட ஆண்கள், ஈமான் கொண்ட பெண்கள் என இரு சாராரையும் தனித்தனியாகக் குறிப்பிடுகின்றான். அவ்வாறு குறிப்பிட்டு நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் சமுதாயப் பொறுப்பில் இரு சாராருக்கும் சம பங்குண்டு என்பதையும் அல்லாஹ் வலியுறுத்துகின்றான்.

அல்குர்ஆன் பொதுவாக ஈமான் கொண்டவர்களே என ஆண், பெண் இரு சாராரையும் ஒன்றாகவே விளிக்கிறது. அவ்வாறு அல்குர்ஆன் விழிப்பதை நபித்தோழர்கள் ஆண்களுக்கான அழைப்பாகக் கருதவில்லை. பெண்களும் அந்த அழைப்புக்கு உட்பட்டிருப்பதாகவே கருதினர்.

உம்மு ஸலமா (ரழியல்லாஹுு அன்ஹா) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் வீட்டிலிருந்தார்கள். ஒரு பெண் அவரது தலைமுடியை வாரிவிட்டுக் கொண்டிருந்தார். அப்போது ''மனிதர்களே!'' என்று நபி (ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம்) அவர்கள் விளித்துப் பேசுகின்ற சப்தம் கேட்டது. உடனே உம்மு ஸலமா தலைவாரி முடிக்கும் வேலையை விட்டு விட்டு எழுந்து நின்றார்கள். அப்போது அங்கிருந்த பெண் ''மனிதர்களே!'' என்றுதானே நபி (ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம்) அவர்கள் விளித்தார்கள் (நீங்கள் ஏன் எழுந்து செல்கிறீர்கள்?) எனக் கேட்டாள். அதற்கு உம்மு ஸலமா (ரழியல்லாஹுு அன்ஹா) ''நானும் மனிதர்களுள் ஒருத்திதான்'' என்றார்கள்.

மனிதர்களே என்ற அழைப்பைக் கேட்டு அன்றைய பெண்கள் எழுந்து சென்றார்கள். பெண்களே என்ற அழைப்பைக் கேட்டாலும் இன்றைய ஆண்கள் அவர்களை எழுந்து செல்ல விடுவதில்லை. பெண்களும் அதுபற்றி அலட்டிக் கொள்வதுமில்லை.

இன்று இஸ்லாம் பேசுபவர்களின் அழைப்பு மொழி பெண்ணுக்கு இஸ்லாம் வழங்கிய இந்த அந்தஸ்த்துகள், கௌரவங்கள் எதனையும் வழங்குவதாக இல்லை. அவளது சமூக ஈடுபாட்டையும் பங்களிப்பு களையும் அங்கீகரிப்பதாகவும் இல்லை.

பெண்களின் அந்தஸ்த்தும் கண்ணியமும் பற்றி இதுவரை நாங் கள் பார்த்த, பார்க்காத நூற்றுக்கணக்கான செய்திகள் குர்ஆனிலும் சுன்னாவிலும் நிறைந்து காணப்படுகின்றன. எனினும், இன்றைய அழைப்பாளர்கள் அவற்றையெல்லாம் கண்டுகொள்ளாதவர்கள் போன்று செயல்படுகின்றனர். அவர்கள் தங்களது அழைப்பு மொழியில் சேர்த்துக் கொள்வதற்கென்றே ஒரு சில செய்திகளைத் தெரிவு செய்திருக்கின்றார்கள். அவற்றிற்கு உதாரணங்கள் வருமாறு:

''பெண் வளைந்த விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டாள்...''

''ஒரு ஆணின் சாணக்கியத்தை மிகைப்பதற்கு மார்க்கத்திலும் சிந்தனையிலும் குறைவுள்ள பெண்களை விட நான் எவரையும் காணவில்லை.'' ✱

இவ்வாறான செய்திகளை வைத்து பெண்ணின் கண்ணியத்தை யும் அவளது சமூக ஈடுபாடுகளையும் குறைத்துப் பேசும் நிலையே இன்றைய காலத்தில் இருக்கின்றது. எந்தளவுக்குப் பெண்ணின் நிலையை அவர்கள் குறைத்துவிட்டார்களெனில் ''ஒரு பெண் தனது வாழ்வில் இரண்டு முறைகள்தான் வீட்டைவிட்டு வெளியேறுவாள். ஒன்று, தந்தையின் வீட்டிலிருந்து கணவரின் வீட்டுக்கு; இரண்டு புதைகுழிக்கு...'' இதுதான் ஸாலிஹான பெண்ணின் நடத்தை என்பது அவர்கள் போதிக்கும் மார்க்கமாகும். ஸாலிஹான பெண் நபிகளாரின் காலத்தில் இவ்வாறுதான் இருந்தாளா?

அதுமட்டுமல்ல, பெண் முகத்தையும் மறைத்துக் கொள்வாள்; வீட்டிலிருந்து வெளியேறவும் மாட்டாள் என்பதால் அவள் கல்வி கற்க வேண்டிய அவசியமில்லை என அவர்கள் முடிவு செய்தார்கள்.

---

✱ 'பெண் நீதமும் நிதர்சனமும்' என்ற நூலில் இந்த நபிமொழிகளுக்கான விளக் கங்கள் விரிவாக ஆராயப்படுகின்றன.

இவ்வாறான சிந்தனைகளின் மீது பெண் பற்றிய புதிய கண்ணோட்ட மொன்றை அவர்கள் உருவாக்கினார்கள். அது ஒரு சிலரின் கண் ணோட்டமாக மட்டும் இருக்கவில்லை. மாறாக, அதுதான் இஸ்லாம் என்றும் அதுதான் ஒழுக்கம் என்றும் ஓர் அழைப்பையே அவர்கள் முன்வைத்தார்கள். அதனால் தாஇகளின் அழைப்பு மொழி இஸ் லாத்தின் நடுநிலை இயல்பை இழந்தது.

ஆண்களுக்கு சார்பாகவும் பெண்களுக்கு எதிராகவும் காலா கால மாக சட்டம் இயற்றியவர்கள் ஆண்களே. உலகில் சட்டமியற்றும் வர்க்கம் எப்போதும் தனக்கு சார்பாகவே சட்டமியற்றியிருக்கிறது. இந்த நடைமுறையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட, பாதுகாக்கப் பட்ட, தூய்மையான சட்டமே அல்லாஹ்வின் சட்டமாகும். பெண் களுக்கெதிராக சட்டம் இயற்றுவதற்கு அல்லாஹ் ஆண் வர்க்கத்தைச் சேர்ந்தவனல்லன். மாறாக, அவனே ஆணையும் பெண்ணையும் படைத்தவன். அவனது சட்டங்கள் நடுநிலையானவை. அந்த நடுநிலைத் தன்மை தாஇகளின் அழைப்பு மொழியில் தொனிக்க வேண்டும். அவர்கள் அல்லாஹ்வின் சட்டங்களை தமது சட்டங் களாகக் கருதிவிடக் கூடாது.

# 15

## சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்து பெரும்பான்மையைப் புறக்கணிக்காத மொழி

*(இந்த அத்தியாயம் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருக்கும் நாடுகளை மையமாக வைத்து எழுதப்பட்டது. முஸ்லிமல்லாத வர்கள் பெரும்பான்மையாக இருக்கும் நாடுகளில் அவர்களும் இதிலிருந்து பயன் பெறலாம். முஸ்லிம்கள் தங்களது அழைப்பு மொழியையும் இதிலிருந்து நெறிப்படுத்தலாம்.)*

இஸ்லாமியத் தேசத்தில் வாழும் முஸ்லிமல்லாத சிறுபான்மை யினர் விடயத்தில் இஸ்லாம் தனியான கவனம் செலுத்துகிறது. அவர்களின் மார்க்கத்தையும் கிரியைகளையும் நடைமுறைகளையும் இஸ்லாம் தடுப்பதுமில்லை; முஸ்லிம்களுடைய நம்பிக்கைகள், வணக்க வழிபாடுகள் மற்றும் கிரியைகளை அவர்கள் மீது இஸ்லாம் திணிப்பதுமில்லை.

எனினும், இஸ்லாத்தின் எதிரிகள் தங்களது தீய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இன முரண்பாடுகளைத் தூபமிட்டு வளர்க்கிறார்கள். முஸ்லிம் தேசத்தில் முஸ்லிமல்லாத சிறுபான் மையினருக்கு நெருக்குதல்களை ஏற்படுத்துகின்ற கும்பல்களை கூலிக்கமர்த்துகிறார்கள். உதாரணமாக, எகிப்தின் பூர்வீகக் கிறிஸ்த வர்கள் மீது சில முஸ்லிம் காடும்போக்குவாதிகள் மேற்கொண்ட தாக்குதல்களைக் குறிப்பிடலாம். இது எகிப்து வரலாற்றில் என்றுமே நடவாத ஒரு நிகழ்வு. கூலிக்காரப் படைகள் இல்லாதிருந்தால் இது அங்கு நடைபெற்றிருக்க மாட்டாது.

முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளில் முஸ்லிமல்லாத சிறு பான்மையினர் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழ்வதை

இஸ்லாத்தின் எதிரிகள் சகித்துக் கொள்வதில்லை. இஸ்லாத்தின் மகிமையை உலகம் உணரக்கூடாது என்பதே அவர்களது விருப்பம். அவர்கள் இஸ்லாத்தின் பெயருக்கு இழுக்கேற்படுத்த முயல்பவர்கள். எனவே, அவர்கள் கடும் போக்காளர்களை ஊக்குவிப்பதில் ஆர்வ மாகவே இருப்பர்.

முஸ்லிம் நாடுகளில் தீவிரவாதத்தை வளர்ப்பதன் மூலம் இஸ் லாமிய சட்டங்கள் முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினருக்குப் பெரும் அச்சுறுத்தல் என்ற கருத்தை வளர்ப்பது அவர்களது பிரதான நோக்கமாகும். முஸ்லிம் நாடுகளில் குழப்பங்களையும் ஸ்திரமற்ற தன்மையையும் ஏற்படுத்தினால் அதன் மூலம் அவர்கள் இன்னும் பல அரசியல் பொருளாதார நோக்கங்களையும் அடைந்து கொள்ளலாம்.

இதுதான் இன்று அரபு முஸ்லிம் நாடுகளில் உருவாகியுள்ள தோற்றப்பாடாகும். இது இஸ்லாத்தின் எதிரிகளுக்கு சாதகமாக உருவாக்கப்பட்ட ஒரு முஸ்லிம் சூழல் எனலாம். இந்த சூழலைப் பயன்படுத்தி உலகளாவிய ரீதியில் இஸ்லாத்தினதும் முஸ்லிம் களினதும் கண்ணியத்தை வீழ்த்த இன்றைய மேலாதிக்க சக்திகளால் முடிந்துள்ளது.

எனினும், நீண்ட காலம் முஸ்லிம் நாடுகளில் கௌரவமாக வாழ்ந்த முஸ்லிமல்லாத நேர் சிந்தனையாளர்கள் இந்தப் புதிய சூழலையும் அதன் உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்திருப்ப வர்களையும் நன்கறிவர். இருப்பினும், முஸ்லிமல்லாத சிறுபான் மையினர் பொதுவாக இந்த சூழலை விளங்காமலேயே செயற் படுகின்றனர். அவர்கள் இஸ்லாத்தின் மீதும் இஸ்லாமிய சட்ட அமுலாக்கத்தின் மீதும் வீணான அச்சம் கொண்டிருக்கிறார்கள். அது தேவையற்றதும் அறிவுக்குப் பொருந்தாததுமாகும்.

ஜனநாயக மரபுகளின் அடிப்படையில் சிந்தித்தாலும் இந்த அச்சம் வீணானது; இஸ்லாமிய மரபுகளின் அடிப்படையில் சிந் தித்தாலும் இந்த அச்சம் வீணானது.

ஜனநாயக ரீதியில் ஒரு நாட்டின் பெரும்பான்மையானவர்க ளது விருப்பத்திற்கேற்ப ஓர் ஆட்சி அமையலாம். அது எந்தக்

கொள்கையைப் பின்பற்றுகின்ற ஆட்சிமுறையாக இருப்பினும் சரியே. அமைந்தது வலதுசாரிகளின் ஆட்சியாயின் இடதுசாரிகள் அதனை சகித்துக் கொள்கிறார்கள்; இடதுசாரிகள் ஆட்சியாயின் வலதுசாரிகள் அதனை சகித்துக் கொள்கிறார்கள்.

அவ்வாறாயின், ஒரு முஸ்லிம் நாட்டில் பெரும்பான்மையினர் விரும்பும் ஓர் ஆட்சி அமைவதை அங்கிருக்கும் சிறுபான்மையினர் ஏன் எதிர்க்க வேண்டும்? ஏன் ஏற்றுக்கொள்ளாதிருக்க வேண்டும்?

இஸ்லாமிய ஆட்சி அமைந்து விட்டால் அது தமது சுதந்திரத்திற்கும் உரிமைகளுக்கும் அச்சுறுத்தலாகி விடும் என்பதுதான் அதற்கு அவர்கள் கூறும் நியாயம். எனில், அவர்கள் மற்றுமொரு நியாயத்தை மறந்து விடுகிறார்கள். ஜனநாயக மரபுகளின் பிரகாரம் பெரும் பான்மை சமூகமொன்று தமது உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாத்துக்கொள்ள என்ன தடை இருக்கிறது?

எனவே, ஜனநாயக மரபுகளை செயல்படுத்துவதற்கு முதலில் இடமளியுங்கள். முஸ்லிமல்லாத நாடுகளில் ஜனநாயக மரபுகளை கௌரவிக்கும் நீங்கள் முஸ்லிம் நாடுகளில் மட்டும் அந்த மரபுகளைப் பின்பற்ற வேண்டாம் என்று எப்படிக் கூறுவீர்கள்!

அது மட்டுமல்ல, முஸ்லிம் நாடொன்றில் பெரும்பான்மை மக்களுடைய விருப்பத்தின் பிரகாரம் ஓர் இஸ்லாமிய ஆட்சி அமையுமாயின் அது சிறுபான்மையாக இருக்கும் முஸ்லிமல்லாத வர்களைப் பாதிக்கும் என்பது மேற்கின் சங்குகளது முழக்கமே தவிர, அதில் உள்ளமை எதுவுமில்லை. உலகில் அன்று முதல் இன்று வரை இஸ்லாமிய ஆட்சியொன்றில் மட்டும்தான் சிறுபான்மை சமூகங்கள் சகல சௌபாக்கியங்களையும் சுதந்திரங்களையும் பாது காப்பையும் அனுபவித்து வந்துள்ளன. இனியும் உலகில் அமையப் போகின்ற இஸ்லாமிய ஆட்சிகளில் முஸ்லிமல்லாத சிறுபான் மையினர் சகல சௌபாக்கியங்களையும் பெற்றே வாழ்வர்- ஐ.எஸ். ஐ.எஸ் போன்ற தீவிரவாதிகள் அமைக்கும் ஆட்சிகளில் தவிர. அவ்வாட்சிகளில் முஸ்லிமல்லாதவர் கொடுமைகளுக்குள்ளாக் கப்படுவர். காரணம், அவ்வாட்சிகள் இஸ்லாமிய ஆட்சியல்ல. அவை இஸ்லாத்தின் எதிரிகள் விரும்புகின்ற ஆட்சிகள். அவர்களால் முஸ்லிம் உலகில் திணிக்கப்படுகின்ற ஆட்சிகள்.

**இஸ்லாமிய ஆட்சி முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினர் மீது இஸ்லாத்தைத் திணிக்குமா?**

1. அகீதா (கோட்பாடுகள்) 2. இபாதா (வணக்க வழிபாடுகள்)

3. அக்லாக் (நற்குணம்) 4. ஷரீஆ (சட்டங்கள்)

இந்த நான்கில் முதலிரண்டு பகுதிகளையும் இஸ்லாம் எவர் மீதும் திணிப்பதில்லை. இதனை அல்குர்ஆன் ஆட்சியதிகாரம் இல்லாதிருந்த மக்கா சூழலிலும் வலியுறுத்தியிருந்தது. ''நபியே **மக்கள் இறை விசுவாசிகளாக மாறும் வரை நீர் அவர்களை நிர்ப் பந்திப்பவரா? (நிச்சயம் இல்லை)'' (10: 99)**. இது மக்காவில் இறக்கப்பட்ட வசனம். அதே போன்று ஆட்சியதிகாரம் கிடைக்கப் பெற்ற மதீனா சூழலிலும் அல்குர்ஆன் இதனை மேலும் உறுதிப் படுத்துகிறது. ''**மார்க்கத்தில் பலவந்தம் இல்லை.'' (2: 256)**

அல்லாஹ்வின் தூதரது காலத்தில் ஒரு மனிதரையாவது பல வந்தமாக இஸ்லாத்தில் இணைத்த வரலாறு எங்குமில்லை. அடுத்து வந்த அபூபக்ர், உமர் (ரழியல்லாஹுு அன்ஹுுமா) ஆகியோரின் ஆட்சியில் சிறுபான்மையாக இருந்த முஸ்லிமல்லாதவர்களோடு மத சுதந்திரம் மற்றும் அவர்களது பாதுகாப்பு குறித்து செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளைக் காணுகின்றோம். அவற்றுள் பிரபல்யமானது உமர் (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்களுக்கும் பலஸ்தீனக் கிறிஸ்தவர்களுக்குமிடையில் எழுதப்பட்ட உடன் படிக்கையாகும்.

இஸ்லாத்தில் சில கடமைகள் இருக்கின்றன. அவை முஸ்லிம் களைப் பொறுத்தவரை உன்னதமான வணக்கங்களாகக் கருதப்பட் டாலும் முஸ்லிமல்லாதவர்களும் அவற்றை நிறைவேற்றலாம். உதாரணமாக ஸகாத். அது ஒரு வணக்கமாயினும் மறுபக்கத்தில் அது ஒரு வரி அறவீடாகும். அதேபோன்று ஜிஹாதும் ஓர் உன்ன தமான வணக்கமே. இருப்பினும் வெளிப்பார்வைக்கு அது ஓர் இராணுவ நடவடிக்கை. எனவே, இந்த வரி மற்றும் இராணுவ நடவடிக்கைகள் முஸ்லிம்- முஸ்லிமல்லாதோர் அனைவருக்கும் பொதுவானதாக ஆக்கப்பட்டிருக்கலாம். ஆனால், வரலாற்றின் எந்தக் காலப் பகுதியிலும் இவை முஸ்லிமல்லாதோர் மீது

திணிக்கப்படவில்லை. மாறாக, முஸ்லிமல்லாதோருக்கு ஜிஸ்யா எனும் ஒரு பாதுகாப்பு வரி விதிக்கப்பட்டது. எனினும், பெண்கள் வயோதிபர்கள், சிறுவர்கள், ஏழைகள், அங்கவீனர்கள் போன்றோருக்கு இந்த வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

இஸ்லாத்தின் மூன்றாவது பகுதி நற்குணங்களாகும். நற்குணங்களைப் போதிப்பதிலும் அமுல்படுத்துவதிலும் இஸ்லாத்திற்கு ஒரு தனியான இடம் இருந்தாலும் நற்குணங்களை உலகில் போதித்த மார்க்கம் இஸ்லாம் மட்டுமல்ல. உலகில் தோன்றிய அனைத்து மதங்களும் நற்குணங்களைப் பாராட்டியே இருக்கின்றன. இந்த வகையில் இஸ்லாம் போதிக்கும் நற்குணங்கள் எந்த மதத்திற்கும் எதிரானதாக கொள்ளப்படுவதற்கில்லை. மாறாக, ஏனைய மதங்களின் போதனைகளுக்கு வலுச் சேர்க்கும் வகையிலேயே இஸ்லாம் கூறும் நற்குணங்கள் காணப்படுகின்றன.

இந்த வகையில் நற்குணங்களை இஸ்லாம் திணிக்க முயல்வதாக எவரும் கூறமுடியாது. நற்குணங்கள் அனைத்தும் அன்பு, சகோதரத்துவம், மனிதநேயம் என்பவற்றோடு பின்னிப் பிணைந்தவை. அது மட்டுமல்ல, நற்குணங்கள் மனித சமூகத்தின் சர்வதேச மொழி என்று கூடச் சொல்லலாம். காரணம், அனைத்து எல்லைகளையும் கடந்து மனிதனை மனிதனோடு பிணைக்கும் வல்லமையை நற்குணங்கள் கொண்டிருக்கின்றன.

எனவே, மிஞ்சுவது ஷரீஆ எனும் இஸ்லாத்தின் சட்டங்கள் மட்டும்தான். ஒரு முஸ்லிம் நாடு ஷரீஆ சட்டங்களை அமுல் செய்கிறது எனின், அதன் பொருள் இஸ்லாமிய சட்டங்களை அந்நாடு மக்கள் மீது திணிக்கின்றது என்பதா? அப்படித்தான் இஸ்லாத்தின் எதிரிகள் உரத்துப் பேசுகிறார்கள். முஸ்லிம் நாடுகளில் நீண்ட காலமாக வாழ்ந்துவரும் சிறுபான்மையினரும் இன்று அந்த உரத்துப் பேசும் குரலுக்கு செவிசாய்க்கிறார்கள். நேற்றுவரை ஷரீஆ சட்டங்கள் அமுலிலிருந்ததையும் அந்த சட்டங்கள் அமுல் செய்யப்பட்டதனால் விளைந்த நன்மைகளையும் கண்டும் கேட்டும் அங்கீகரித்தும் தாம் வாழ்ந்திருந்ததை இப்போது அவர்கள் மறக்க முயற்சிப்பது ஏனென்று தெரியவில்லை.

**ஷரீஆ சட்டங்கள் அமுல்செய்யப்படுகின்றன என்றால் என்ன?**

ஷரீஆ ஒரு சட்டம் என்ற வகையில் சட்டங்களால் நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமையை அதுவும் நிறைவேற்றுகிறது. சட்டம் உண்மையில் மனித வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகின்றது. வாழ்க்கையோடு சம்பந்தப்படுகின்ற கூறுகள் (அந்தக் கூறுகள் மனிதர்களாக இருக்கலாம்; பணம் பொருள் மற்றும் அதிகாரம் எது வாகவும் இருக்கலாம்.) ஒன்றோடொன்று மோதாமல் ஒன்றினால் மற்றொன்று பாதிக்கப்படாமல் இருப்பதற்கு சட்டமும் ஒழுங்கும் அவசியமாகிறது.

இந்த வேலையைச் செய்வதற்கு உலகில் எத்தனையோ வகை யான சட்டங்கள் இருக்கின்றன. அந்த சட்ட வகைகளில் ஒன்றை ஒரு சமூகம் விரும்பினால் அவர்கள் தமது நாட்டில் அதனை அமுல் படுத்தலாம். எனினும், முஸ்லிம் நாடொன்றில் அங்கிருக்கும் அதி கமான மக்கள் இஸ்லாமிய சட்டத்தை அமுல்நடத்த விரும்பினால் அது கூடாது என்று இன்றைய உலகம் நியாயவாதம் பேசுவது எந்தவகையில் பொருந்தும்!?

இஸ்லாமிய சட்டம் அமுலில் இருக்கும்போது அங்குள்ள சிறு பான்மை சமூகத்தினர் விவாகம், விவாக விலக்கு மற்றும் வாரிசுரிமை போன்ற விடயங்களில் தங்களது மதங்களின் வழிகாட்டல்கள் பிரகாரம் செயல்படுவதற்கு முழுச் சுதந்திரமும் உடையவர்களா கவே இருப்பர். அவர்கள் இது போன்ற விடயங்களில் விரும்பி இஸ்லாமிய சட்டங்களை ஏற்றுக் கொண்டாலேயன்றி அவர்கள் மீது எந்த நிர்ப்பந்தமும் இஸ்லாமிய அரசுத் தரப்பிலிருந்து பிர யோகிக்கப்பட மாட்டாது. அவ்வாறு இன்றுவரை எங்கும் நடந்த தில்லை.

சில மத்ஹப்களின் பிரகாரம் இஸ்லாமிய குற்றவியல் சட்டங் களைக் கூட அங்குள்ள முஸ்லிமல்லாத சிறுபான்மையினர் மீது அமுல்படுத்த வேண்டியதில்லை. மாறாக, சட்ட ஒழுங்கைப் பேணும் வகையில் நீதிமன்றம் தீர்மானிக்கும் வேறு தண்டனைகளை குற்றவாளிகள் மீது அமுல்படுத்தலாம் என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இன்றைய சூடான் இஸ்லாமிய அரசு முஸ்லிமல்லாதவர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் இந்த ஒழுங்கையே பின்பற்றுகின்றது.

இவை தவிரவுள்ள சமூகவியல் மற்றும் நிருவாக, வியாபார ஒழுங்குகளைப் பேணுவதற்கு மற்றைய நாடுகளில் போலவே எல்லோருக்கும் பொதுவான சட்டங்கள் முஸ்லிம் நாடுகளிலும் அமுலில் இருக்கும். அவற்றில் ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் இடையில் வேறுபாடுகள் இருப்பது சாதாரண ஒரு விடயமாகும். இத்தகைய சட்டங்களுக்குக் கட்டுப்படாமல் ஒரு நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேண முடியாது. இத்தகைய சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதை எந்தவொரு நாட்டிலும் திணிப்பு என்று யாரும் கூறுவதில்லை. மாறாக, நாடு மாறும்போது அங்குள்ள சட்டங்களுக்குக் கட்டுப்படும் பழக்கத்தையும் மக்கள் மாற்றிக் கொள்கிறார்கள். இந்த மாற்றத்தின் மூலம் ஏற்படும் சில அசௌகரியங்களையும் மக்கள் சகித்துக் கொள்கிறார்கள். அது பற்றி சில போது சிலர் அலட்டிக் கொண்டாலும் எங்களால் இந்த சட்டங்களுக்குக் கட்டுப்பட முடியாது என்று எந்த நாட்டிலும் எவரும் போர்க் கொடி தூக்குவதில்லை. எனினும், இஸ்லாமிய சட்டம் என்றவுடன் தீயை மிதித்தது போன்று துள்ளிக் குதிக்கிறார்கள். இது சட்டப் பிரச்சினையல்ல; வாழையடி வாழையாக வந்த காழ்ப்புணர்வுப் பிரச்சினை.

இஸ்லாமிய சட்டத்தில் அவர்கள் காணும் மற்றுமொரு பிரச்சினை இஸ்லாம் ஹராமாக்குகின்ற (தடை செய்கின்ற) மது, சூது, பன்றி இறைச்சி போன்றவையாகும். இவற்றை முஸ்லிமல்லாதவர்கள் ஆகுமானதாகக் கருதுகிறார்கள். இஸ்லாம் அவற்றைத் தடை செய்திருக்கிறது.

என்னைப் பொறுத்தவரை மதுவுக்கு ஆசீர்வாதம் வழங்கி மது அருந்துபவர்களைப் போற்றிப் புகழ்ந்த மதம் ஒன்று உலகத்தில் இருப்பதாகத் தெரியாது. சூதினால் பட்டவர்களைவிட கெட்டவர்களே அதிகம். பன்றி இறைச்சி சாப்பிடுவது உலகில் உதித்த எந்த நபியினதும் வழிமுறையல்ல.

அவ்வாறிருந்தும் கூட இஸ்லாமிய சட்ட அறிஞர்களில் பலர் மது, பன்றி இறைச்சி போன்றவற்றை சிறுபான்மையாக வாழும் முஸ்லிமல்லாதவர்கள் தங்களது கிராமங்களில் விற்பனை செய் வதற்கும் வாங்குவதற்கும் உட்கொள்வதற்கும் அனுமதிக்கிறார் கள் ஒரு நிபந்தனையோடு...

அவற்றை அவர்கள் முஸ்லிம்களுக்கு மத்தியில் விற்பனை செய்யவோ, முஸ்லிம்களுக்கு மத்தியில் பரிமாறவோ கூடாது என்பதே அந்த நிபந்தனை.

இது மத சகிப்புத்தன்மையின் உச்ச கட்டமாகும். இந்த நடை முறை அமுலிலிருக்கும் நாடுகளில் முஸ்லிமல்லாத சிறுபான்மை யினருக்கெதிராக அங்கு வாழும் முஸ்லிம்களில் எவரும் மத வெறியையோ இன வெறியையோ கிளப்புவதில்லை. அவர்கள் உட்கொள்ளும் உணவுகளைத் தடை செய்யுமாறு ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதுமில்லை; எதிர்ப் பிரசாரங்களில் ஈடுபடுவதுமில்லை.

ஷரீஆ சட்டம் இவ்வாறுதான் அமுல் நடத்தப்படுகின்றது எனின், ஒரு முஸ்லிம் நாட்டில் வாழும் முஸ்லிமல்லாத சிறுபான்மை யினருக்கு என்ன சிரமம் ஏற்படப் போகிறது? ஏன் அவர்கள் 'திணிப்பு' 'தவிப்பு' என்று கூக்குரல் எழுப்ப வேண்டும்? அந்தக் கூக்குரல்கள் நாம் மேலே குறிப்பிட்டது போல ஜனநாயக மரபுகளுக் கும் முரணானவை; இஸ்லாமிய மரபுகளுக்கும் பொருந்தாதவை.

முஸ்லிம் நாடுகள் ஓரிரண்டில் நாம் மேலே குறிப்பிட்டதன் பிரகாரம் இஸ்லாமிய சட்டங்கள் அமுல் செய்யப்படுவதற்குப் பதிலாகசிலகண்டிப்புகளும்கடுமைகளும்பிரயோகிக்கப்படுவது உண்மைதான். அது அங்குள்ள ஆட்சியாளர்களது பிரச்சினையே தவிர இஸ்லாத்தில் உள்ள பிரச்சினையல்ல.

இஸ்லாமிய சட்டம் அமுலில் இருக்கும் நாடுகளில் அங்கு பூர் வீகமாக வாழும் முஸ்லிமல்லாதவர்களுக்கு அந் நாடுகள் பிரஜா உரிமைகளையோ வாக்குரிமைகளையோ மற்றும் உலகம் ஏற்றுக் கொண்ட அடிப்படை உரிமைகளையோ மறுத்ததாக வரலாறு இல்லை. அந் நாட்டில் ஒரு முஸ்லிம் பிரஜைக்கிருப்பதை விட

அதிகமான உரிமைகளை அந் நாட்டில் இருக்கின்ற முஸ்லிமல்லாத வர்கள் அனுபவிக்கிறார்கள் என்றே கூற வேண்டும். உதாரணமாக, முஸ்லிம் மது அருந்த முடியாது; முஸ்லிமல்லாதவர் மது அருந் தலாம். ஒரு முஸ்லிம் ரமழான் மாதத்தில் பகிரங்கமாக உண்ணு வதும் குடிப்பதும் விசாரணைக்குட்படுத்தப்படும்; முஸ்லிமல்லா தவருக்கு அந்த விசாரணை இல்லை.

அவ்வாறிருக்கும்போது ஷரீஆ சட்டத்தில் உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்பதே எமது கேள்வி.

இந்தக் கேள்வியைக் கேட்டதும் மனித உரிமைப் போராளிக ளுக்கு திடீரென முஸ்லிம்களோடு அன்பு பிறந்துவிடும். அவர்கள் திரும்பிக் கேட்பார்கள். ஷரீஆ சட்டத்தின் மூலம் முஸ்லிம்களை ஏன் அவ்வாறு சிரமப்படுத்துகிறீர்கள்; அதனால்தான் ஷரீஆ சட்டம் வேண்டாம் என்கிறோம் என்று கண்ணீர் வடிப்பார்கள்.

முஸ்லிம்களே! அவர்களுக்குச் சொல்லுங்கள். உங்களுக்கு முஸ்லிம்கள் மீது உண்மையான பரிவும் கவலையும் இருந்தால் ஷரீஆ சட்டத்தால் சிரமப்படும் எங்களைவிட இஸ்ரேலினதும் இஸ்லாத்தின் எதிரிகளினதும் காட்டுமிராண்டித் தனங்களால் அன் றாடம் அழிந்து கொண்டிருக்கும் அப்பாவி வயோதிபர்கள், பெண்கள், பச்சிளம் குழந்தைகளை முதலில் காப்பாற்றுங்கள். அவர்களுக்காக போர்க் கொடி தூக்குங்கள். ஷரீஆ சட்டத்தால் வரும் சிரமங்களை நாங்கள் பொறுத்துக் கொள்கிறோம் என்று!

உண்மை என்ன தெரியுமா? முஸ்லிம் நாடுகளில் இருக்கின்ற முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாத சிறுபான்மையினருக்கும் மத்தி யில் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்கும் அந்தப் பெயரால் முஸ்லிம் நாடுகளில் மூக்கை நுழைப்பதற்கும் தருணத்தை எதிர் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் தீட்டும் சதியே இதுவாகும்.

முஸ்லிம் தீவிரவாதிகளைப் போஷிப்பது ஒரு சதி; முஸ்லிமல் லாத சிறுபான்மையினரை இஸ்லாத்திற்கெதிராகத் தூண்டுவது மற்றுமொரு சதி; தீவிரவாதிகளை ஆத்திரமூட்டி முஸ்லிமல்லாத நாடுகளில் தாக்குதல்களைத் தொடுக்கவைப்பது மற்றுமொரு சதி.

இத்தகைய சதிகள் மூலம் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் உலகின் பிரதான நீரோட்டத்திலிருந்து ஓரமாக்கிவிடுவதற்கே அவர் கள் விரும்புகிறார்கள். அதில் அவர்கள் முனைப்பாகவே என்று மிருப்பார்கள்.

அது அவர்கள் கெட்ட கேடு! அதனால் எங்களுக்கு எண்ணற்ற பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றைவிட நாம் கெட்ட கேடுதான் எங்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது. எமது அழைப்பாளர்களில் சிலர் சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை யினர் விடயத்தில் தெளிவற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களது பேச்சுக்களிலும் அழைப்புகளிலும் அந்தத் தெளிவின்மை பிரதி பலிக்கிறது.

அதனால் இஸ்லாத்தின் மகிமையை அவர்களே கேள்விக்குறி யாக ஆக்கிவிடுகிறார்கள். முஸ்லிம்களையே காபிர்கள் என பத்வா கொடுப்பவர்கள், முஸ்லிமல்லாதவர்கள் விடயத்தில் என்ன பேசு வார்கள் என்பதை வரையறுக்க முடியுமா?

இவர்கள் குர்ஆனினதும் சுன்னாவினதும் செய்திகளை இடம் மாற்றி வைக்கிறார்கள். அவற்றின் நோக்கங்களையும் பின்னணி களையும் புறக்கணித்துவிட்டு வார்த்தைகளை மொழிபெயர்த்து தீர்ப்புக்களைக் கொடுத்து வருகிறார்கள். முஸ்லிமல்லாத சிறு பான்மையினர் விடயத்தில் கடும்போக்குடையவர்களாக செயல்படு கிறார்கள். ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற தீவிரவாத அமைப்புக்கள் ஷரீஆ அமுலாக்கம் என்ற பெயரில் நாம் மேலே பார்த்த இஸ்லாத்தின் விளக்கங்களை உணராமல் ஈவிரக்கமின்றி இஸ்லாமிய தண்ட னைச் சட்டங்களையும் அமுல் செய்கிறார்கள்.

இஸ்லாம் இந்தக் கடும்போக்காளர்களது மார்க்கமல்ல. அது தனது இலட்சியங்களிலும் வழிமுறைகளிலும் தனித்துவமானது; தூய்மையானது என்பதை உலகுக்குப் புரியவைக்க வேண்டியவர் கள் அழைப்பாளர்களே.

இஸ்லாத்தின் தனித்துவத்தையும் மகத்துவத்தையும் புரியவைப் பதற்கு இஸ்லாம் ஒரு நடுநிலை மார்க்கம் என்பதை விளங்கினாலே

போதும்; அதன் நடுநிலையான போக்கு அனைவரையும் கவர்ந்து விடும். எனினும், பலரது பேச்சில்... அழைப்பு மொழியில் நடு நிலைத்தன்மை பிரதிபலிப்பதில்லை. மாறாக, அவர்களது பேச்சுக்கள் தீவிரவாதத்தின் பக்கமோ அல்லது அலட்சியவாதத்தின் பக்கமோ சார்ந்தவையாகவே இருக்கின்றன.

முஸ்லிம் சமூகத்தினுள்ளிருந்து எழுகின்ற தீவிரவாதக் குரல்களை மேற்கின் மீடியாக்கள் ஊதிப் பெருப்பித்து மொத்த முஸ்லிம் சமூகத்தின் குரலாக அதனைக் காட்ட முனைவதையும் இங்கு எமது அழைப்பாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்கின் தீவிரவாதங்களால் அல்லோலகல்லோலப்படும் முஸ்லிம் தேசங்களது அவலங்களை அந்த மீடியாக்கள் அந்தளவு வெளிச்சம் போட்டுக் காட்டுவதில்லை.

இவ்வாறானதொரு சூழலில் வீறாப்புக்காக இஸ்லாம் பேசாமல் அறிவுபூர்வமாகவும் நடுநிலை தவறாமலும் இஸ்லாத்தை முன் வைக்கும் குரல்கள் எல்லா மட்டங்களிலும் ஓங்கியொலிக்க வேண்டும். அதற்கான வழிகாட்டல்களையே இந்த நூலில் தெளிவு படுத்தியிருக்கிறோம்.

தாஇகள் தங்களது மொழியை சீராக்கினால் மக்கள் அதன் வெளிச்சத்தில் பார்க்க வேண்டியதை சரியாகப் பார்ப்பார்கள். தாஇகளின் அழைப்பு மொழி இஸ்லாத்தின் சிறப்பம்சங்களைப் பிரதிபலிக்கா விட்டால் மக்கள் அரை குறையான அல்லது உருக்குலைந்த இஸ்லாத்தின் தோற்றமொன்றையே கண்டு கொள்வார்கள்.

ஆக, இஸ்லாத்தின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணமானவர்கள் யாராக இருக்க முடியும், தாஇகளைத் தவிர...?



இஸ்லாமிய மொழி அல்லது பாஷை என்பது அறபு மொழியல்ல. இஸ்லாத்தை எந்த மொழியில் பேசினாலும் அது இஸ்லாத்தின் மொழிதான். இஸ்லாத்தின் சிறப்பம்சங்களைப் பிரதிபலிக்கும் வகையில் ஒருவர் பேச வேண்டும்; எழுத வேண்டும்; உரையாட வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும். கதை, கவிதை, கட்டுரை, நாடகம் என எந்த வடிவத்தை அது பெற்றாலும் அதில் இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள் பிரதிபலிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவற்றின் மொழிகளை நாம் இஸ்லாத்தின் மொழி எனக் கூற முடியாது.

மனிதனைப் பற்றிப் பேசும்போது அவனது சிந்தனை, அறிவு, ஆன்மா, உடல் என்பவற்றில் ஒன்றைப் புறக்கணித்து ஒன்றை உயர்த்திப் பேசுவது இஸ்லாமியப் பேச்சு அல்ல.

குடும்பத்தைப் பற்றிப் பேசும்போது ஆண்களை மறந்து விட்டு பெண்களின் ஒழுக்கம், கற்பு போன்றவற்றை மட்டும் பேசுவது இஸ்லாமியப் பேச்சு அல்ல. சமூகத்தைப் பற்றிப் பேசும்போது தலைமைத்துவம், கட்டுப்பாடு, கட்டமைப்பு, அன்பு, சகோதரத்து வம், நல்ல பண்புகள், வியாபாரம் திருமணம், குடும்ப வாழ்க்கை, அரசியல் போன்றவற்றில் சிலவற்றை நல்லடக்கம் செய்து விட்டு சிலதை மட்டுமே தொடர்ந்தும் உயிர்ப்பிப்பது இஸ்லாமியப் பேச்சு அல்ல.

ஒரு பேச்சில் ஆன்மிகம்... மற்றொரு பேச்சில் சட்டம்... மற்றொன்றில் தத்துவம்... மற்றொன்றில் தஃவா... என பேசுபொருள்கள் ஒன்றுக்கொன்று வேறுபடலாம். அவ்வாறு வேறுபடும்போது ஒரு துறையை உயர்த்தி மற்றொரு துறையைத் தாழ்த்தும் வகையில் பேசுவது இஸ்லாமிய மொழியல்ல.

- அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி -

ISLAMIC BOOK HOUSE
Rs. 250.00
00032571-1
Thaihalin Alaippu Moliyil Islam-SLJI
27.10.2016

Printed by: IPC Printing Press, 25, De Waas Lane, Grandpass, Colombo -14, Sri Lanka.